வனத்துறை நிலம், அறநிலையத்துறைக்கு சேர்த்தல். 151-154

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நினைவுச் சின்னங்கள்—

திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி 327-328

பல்லவர் கோட்டம், மாமல்லபுரத்தில் அமைத்தல். 150-151

ப

பாசனம்—

கீழ்பவானி அணைத் தண்ணீர், அனுமதியின்றி எடுத்தல். 316-318

நம்பியாற்றில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைவது (க.ஈ.). 200-203

நொய்யல் நீர்த்தேக்கம், தண்ணீர் விடல் .. 168-169

பாரம்தூக்கி முறைகேடுகள் 15

மலட்டாறு, தென்னாற்காடு 11-12

வாணியாறு அணை, பாசனத்திற்கு நீர் விடாதது (க.ஈ.). 352-354

பாலங்கள்—

தன்ரப்பாலத்தை மேம்பாலம் ஆக்குதல் குன்றத்தூர்-அனகாபுத்தூர். 13

போக்குவரத்து—

பெரியார் பேருந்து நிலையம் விரிவுபடுத்தல், மதுரை. 314-316

மண்டலப் போக்குவரத்து அலுவலகம், ஆயிரம் விளக்குத் தொகுதி, இடமாற்றம். 149-150

ம

மருத்துவ மனைகள்—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், இட்டமொழி, நாங்குனேரி தொகுதி. 322-323

தரம் உயர்த்தல், பெரியகுளம் 324-325

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி, புதுக்கட்டிடம். 177-179

	பக்கங்கள்
மருத்துவமனைகள்—தொடர்ச்சி.	
மாவட்ட மற்றும் வட்ட அளவில் அவசர தீவிர சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.	323-324
விரிவாக்கம், ஸ்ரீவைகுண்டம்	23-25
விரிவுபடுத்தல், திருமங்கலம், ...	175-177
மின்சாரம்—	
அனல்மின் நிலையம், கன்னியாகுமரி	13-14
காடம்பாறை மின் திட்டம்	319-320
தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம், கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை.	321-322
பற்றாக்குறை, மத்திய அரசு உதவி,	318-319
மின் விநியோகம் முறைப்படுத்தல், திருவாரூர்.	320-321
மீன்வளம்—	
மீன்வளத்துறை ஆலோசனைக்குழு	182-183
வ	
வாரியங்கள்—	
மாசுக்கட்டுப்பாடு வாரியம், ஆணையமாக தரம் உயர்த்தல்.	179-182
வேலைவாய்ப்பு—	
பத்திரம் நகல் எடுக்க லைசென்ஸ்	304-305
வேளாண்மை—	
ஆராய்ச்சிப், பண்ணை விரிவாக்கம், பையூர், கிருஷ்ணகிரி வட்டம்.	165-167
துணை விவசாயக் கிடங்கு, குளித்தலை ஒன்றியம்.	11

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. பி. சி. அலெக்சாண்டர்.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை.

2. கல்வி அமைச்சர் — மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் — மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.
5. போக்குவரத்துத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி.
6. அறநிலையத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா.
7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை.
8. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.
9. வேளாண்மைத்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

10.	பொதுப்பணித் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் மின்சாரம்.
11.	சமூக நலம்—ஊரகத் தொழிற் துறை அமைச்சர்.	மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக் காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.
12.	ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் எ. இராம கிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.
13.	மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப் படுத்தல்.
14.	செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால்வளம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

15.	கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.
16.	கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம்.
	முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்.	திரு. எல். கணேசன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU—Thiru P. C. ALEXANDER.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister	**The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise.
2. Minister for Education	**The Hon. Dr. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology.
3. Minister for Law	**The Hon. Thiru S. J. SADIQ PASHA :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf.
4. Minister for Revenue	**The Hon. Thiru NANJIL K. MANOHARAN:** Revenue, District Revenue, Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.
5. Minister for Transport	**The Hon. Thiru M. KANNAPPAN :** Transport, Nationalised Transport. Motor Vehicles Act, Ports and Housing.
6. Minister for Hindu Religious and Charitable Endowments.	**The Hon. Thiru K. P. KANDASAMY :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration.	**The Hon. Thiru KO. SI. MANI :** Municipal Admintstration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness.
8. Minister for Food and Co-operation.	**The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM :** Food, Police Control and Civil Supplies, Co-operation and Statistics.
9. Minister for Agriculture.	**The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service, Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.
10. Minister for Public Works.	**The Hon. Thiru DURAIMURUGAN :** Public Works, Minor Irrigation (including Special Minor Irrigation), Programme Works, Highways and Electricity.
11. Minister for Social Welfare and Rural Industries.	**The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN :** Social Welfare (including Children and Women's Welfare), Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries (including Village, Cottage and Small Industries,) Khadi Board, Bhoodan and Gramadan.
12. Minister for Adi-Dravidar Welfare.	**The Hon. Dr. E. RAMAKRISHNAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.
13. Minister for Public Health.	**The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI :** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

14. Minister for Information and Labour.	**The Hon. Thiru K. N. NEHRU :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing, Government Press and Milk.
15. Minister for Animal Husbandry.	**The Hon. Dr. K. CHANDRASEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.
16. Minister for Handlooms and Urban Development.	**The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board.
Parliamentary Secretary to Chief Minister.	**Thiru L. GANESAN.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்

திரு. பெ. சு. திருவேங்கடம்

திரு. இரா. மோகன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

திரு. குமரி அனந்தன்.

திரு. உ. ரா. வரதராசன்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி).

ஜானகிராமன், திரு. செ. சு., பி. ஏ., பி. எல்.	..	இணைச் செயலாளர்
டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்.		இணைச் செயலாளர்
இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்.)
ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ.		துணைச் செயலாளர்
கோவிந்தராஜன், திரு. ஆர்.	..	குழு அலுவலர்
அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல்.		சார்புச் செயலாளர்
கேசவராம், திரு. சு., பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
முனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி.		சார்புச் செயலாளர்
ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
ஜான், திரு. வ. சா., பி.ஏ.	—	சார்புச் செயலாளர்
ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்.	...	சார்புச் செயலாளர்
ஜோசப், திரு. மா. கு., பி.ஏ.	—	சார்புச் செயலாளர்
வெங்கட்டராமன், திரு. கோ.	—	பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்
அரங்கநாதன், திரு. சு., பி.ஏ., பி.எல்.	...	தலைமை நிருபர் (குழுக்கள்)
ஜெயதேவ், திரு. பி.சி.	—	தலைமை நிருபர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'அ'	
1 அங்கமுத்து, திரு. கே. ..	உளுந்தூர்பேட்டை (செ. வ.)
2 அசேன், திரு. ஜெ. ..	இராணிப்பேட்டை
3 அண்ணாதுரை, திரு. கா. ..	பட்டுக்கோட்டை
4 அண்ணாதுரை, டாக்டர் கே. ..	வரகூர் (செ.வ.)
5 அண்ணாநம்பி, திரு. ஆர். ..	அவிநாசி (செ.வ.)
6 அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.)
7 அதியமான், திரு. அ. ..	சேடப்பட்டி
8 அப்துல் சமத், திரு. பா. ..	வாணியம்பாடி
9 அப்துல் லத்தீப், திரு. எம். ..	சேப்பாக்கம்
10 அர்ஜுனன், திரு. கே. ..	தாரமங்கலம்
11 அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி
12 அழகுவேலு, திரு. ச. ..	கண்டமங்கலம் (செ.வ.)
13 அறிவழகன், திரு. ஆ. ..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
14 அன்பழகன், டாக்டர் க. ..	அண்ணாநகர்
15 அன்பழகன், திரு. வ. ..	செய்யாறு
16 அன்பில் பொய்யாமொழி, திரு.	திருச்சிராப்பள்ளி-2
'ஆ'	
17 ஆசையன், திரு. பெ. ..	ஆண்டிப்பட்டி
18 ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்
19 ஆறுமுகம், திரு. த. ..	அரியலூர்
20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி. சோ.	சேலம்-2

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)

'இ'

21	இரகுமான்கான், திரு. அ. ..	பூங்கா நகர்
22	இராசமாணிக்கம், திரு. இரெ...	குத்தாலம்
23	இராசமாணிக்கம், திரு. க. வெ .வீ. ..	மேலூர்
24	இராசன், திரு. வி. பி. ..	ராஜபாளையம் (செ.வ.)
25	இராசு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.)
26	இராசு, திரு. வெ. ..	குளத்தூர் (செ.வ.)
27	இராசேந்திரன், திரு. அ. ..	போளூர்
28	இராதா, திரு. எஸ். ஆர். ..	மதுரை கிழக்கு
29	இராதாகிருஷ்ணன், திரு. டி. ..	சோழவந்தான்
30	இராமகிருஷ்ணன், டாக்டர் எ.	அச்சரப்பாக்கம் (செ.வ.)
31	இராமகிருஷ்ணன், திரு. நா. ..	கம்பம்
32	இராமச்சந்திரன், திரு. எம். ..	திருவோணம்
33	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	விளாத்திகுளம்
34	இராமச்சந்திரன், திரு. ந. ..	செஞ்சி
35	இராமசாமி, திரு. ஏ. எம். ..	ஆத்தூர்
36	இராமசாமி, திரு. கே. வி. ..	கரூர்
37	இராமசாமி, திரு. வி. ..	திருச்செங்கோடு
38	இராமசாமி, திரு. கே. ஆர். ..	திருவாடானை
39	இராமநாதன், திரு. மு. ..	கோவை மேற்கு
40	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்
41	இராஜேந்திரன், திரு. கே. ஆர்.	பர்கூர்
42	இராஜேந்திரன், திரு. பி. வி. ..	வேதாரண்யம்
43	இளம்வழுதி, திரு. ..	எழும்பூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ஈ'		
44 ஈஸ்வரன், திரு. ஆர்.	..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
'உ'		
45 உகம்சந்த், திரு. எஸ். டி.	..	மதுராந்தகம்
46 உதயசூரியன், திரு. தா.	..	சின்னசேலம்
47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம்.		தஞ்சாவூர்
'ஏ'		
48 ஏகாம்பர ரெட்டி, திரு. எ.	..	பள்ளிப்பட்டு
'க'		
49 கண்ணப்பன், திரு. மு.	..	பல்லடம்
50 கண்ணன், திரு. எஸ். பி.	..	அணைக்கட்டு
51 கணபதி, திரு. என்.	..	மயிலாப்பூர்
52 கணேசமூர்த்தி, திரு. என்.	..	குறிஞ்சிப்பாடி
53 கணேசமூர்த்தி திரு. ஏ.	..	மொடக்குறிச்சி
54 கணேசன், திரு. எல்.	..	ஒரத்தநாடு
55 கணேசன், திரு. க. சொ.	..	ஜெயங்கொண்டம்
56 கணேசன், திரு. சா.	..	தியாகராய நகர்
57 கணேசன், திரு. வே.	..	மங்களூர் (செ.வ.)
58 கந்தசாமி, திரு. கே.	..	கிணத்துக்கடவு
59 கந்தசாமி, திரு. கே. பி.	..	திருச்செந்தூர்
60 கரீம், திரு. எம். கே.	..	கூடலூர்
61 கருணாநிதி, டாக்டர் மு.	..	துறைமுகம்
62 கருப்பசாமி, திரு. எஸ். எஸ்.	..	சாத்தூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)

'க'—தொடர்ச்சி.

63 கருப்பையா மூப்பனார், திரு. ஜி.	பாபநாசம்
64 கண்ணையன், திரு. க. ...	தொட்டியம்
65 கஜபதி, திரு. டி.ஆர். ...	ஆற்காடு
66 காஞ்சனா, டாக்டர் க. ...	கிருஷ்ணகிரி
67 காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ்.	முதுகுளத்தூர்
68 காளியப்பன், திரு. பி. ...	ஒட்டன்சத்திரம்
69 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து.	சிதம்பரம்
70 கிருஷ்ணன், திரு. சி. ...	ஓமலூர்
71 குணசேகரன், திரு. எஸ். ...	தலைவாசல் (செ.வ.)
72 குமரி அனந்தன், திரு. ..	சாத்தான்குளம்
73 குருநாதன், திரு. சு. ..	பாளையங்கோட்டை
74 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. ...	பவானி
75 கோதண்டம், திரு. ஏ. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
76 கோபாலகிருஷ்ணன், திரு. வெ.	மேட்டுப்பாளையம்
77 கோவிந்தசாமி, திரு. சி. ...	திருப்பூர்
78 கோவிந்தசாமி, திரு. வி. சி. ..	காவேரிப்பட்டினம்
79 கோவிந்தராஜன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்
80 கோவிந்தன், திரு. வெ. ...	பேரணாம்பட்டு (செ.வ.)

'ச'

81 சண்முகம், திரு. சி. ...	ஆலந்தூர்
82 சந்திரசேகர், திரு. வி. பி. ...	பொள்ளாச்சி
83 சந்திரசேகரன், டாக்டர் க. ...	ஆலங்குடி
84 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. ..	கடையநல்லூர்

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'ச'—தொடர்ச்சி	
85 சம்பத், திரு. ஏ. ஜி. ..	முகையூர்
86 சற்குணம், திருமதி எஸ். பி. ..	இராதாகிருஷ்ணன் நகர்
87 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	உடுமலைப்பேட்டை
88 சாந்தகுமாரி, டாக்டர் த. ..	தாராபுரம் (செ.வ.)
89 சாமிநாதன், திரு. இரா. ..	திருமங்கலம்
90 சிங்காரம், திரு. ஆர். ..	பேராவூரணி
91 சிவசுப்பிரமணியன், திரு. சா.	ஆண்டிமடம்
92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். ..	பனைமரத்துப்பட்டி
93 சின்னக்குழந்தை, திரு. மு. ..	பெரணமல்லூர்
94 சிவலோகம், திரு. எஸ். ..	புவனகிரி
95 சின்னசாமி, திரு. கே. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
96 சின்னசாமி, திரு. ரா. ..	தர்மபுரி
97 சின்னசாமி, திரு. வி. கே. ..	பவானி சாகர்
98 சீரங்கன், திரு. எம். ..	மேட்டூர்
99 சீனிவாசன், திரு. பெ. ..	சிவகாசி
100 சுந்தர், திரு. கே. ..	உத்திரமேரூர்
101 சுந்தரதாஸ், திரு. மா. ..	விளவன்கோடு
102 சுந்தரம், திரு. க. ..	பொன்னேரி (செ.வ.)
103 சுந்தரம், திரு. கே. ஆர். ..	குடியாத்தம்
104 சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்
105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். ..	பரமக்குடி (செ.வ.)
106 சுப்பிரமணிய பிள்ளை, திரு.கே.	கன்னியாகுமரி
107 சுப்பிரமணியம், திரு. தா. க...	சத்தியமங்கலம்
108 சுப்பிரமணியன், திரு. அ.லெ...	திருநெல்வேலி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ச'—தொடர்ச்சி.		
109	சுப்பிரமணியன், திரு. வே. நா.	பெருந்துறை
110	சுப்பு, திரு. ஏ. ..	ராசிபுரம்
111	சுப்புலட்சுமி செகதீசன், திருமதி.	ஈரோடு
112	சுப்பையா, திரு. ஆலவயல் ..	திருமயம்
113	செங்குட்டுவன், திரு. ஏ. ..	மயிலாடுதுறை
114	செங்கைசிவம், திரு. ..	பெரம்பூர் (செ.வ.)
115	செங்கோட்டையன், திரு. கே. ஏ. ..	கோபிச்செட்டிபாளையம்
116	சேட்டு, திரு. எம். ..	செங்கம் (செ.வ.)
117	சொக்கர், திரு. ரா. ..	விருதுநகர்
118	சௌந்திரபாண்டியன், திரு .ந.	சமயநல்லூர், (செ.வ.)
'ட'		
119	டேனியல்ராஜ், திரு. எஸ். ..	ஸ்ரீவைகுண்டம்
'த'		
120	தங்கபாண்டியன், திரு. வே. ..	அருப்புக்கோட்டை
121	தங்கம், திரு. அ. ..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
122	தங்கராஜன், திரு. எஸ். ஏ. ..	திண்டுக்கல்
123	தங்கராஜு, திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோயில் (செ.வ.)
124	தங்கவேல், திரு. எம். ..	முசிறி
125	தங்கவேல், திரு. என். ..	குன்னூர் (செ.வ.)
126	தங்கவேலு, திரு. ச. ..	சங்கரநாயனார்கோவில் (செ.வ.)
127	தம்புசாமி, திரு. வி. ..	திருவாரூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'த'—தொடர்ச்சி		
128 தமிழ்க்குடிமகன், முனைவர் மு.		இளையான்குடி
129 தமிழ்மணி, திரு. வீ.	...	செங்கல்பட்டு
130 தயாளன், திரு. ஏ. சி.	...	ஆரணி
131 தனபாலன், திரு. கே.ஆர்.ஜி.	...	சேலம்-1
132 தனராஜ், டாக்டர் வி.	...	வந்தவாசி (செ.வ.)
133 திருநாவுக்கரசு, திரு. எஸ்.	...	அறந்தாங்கி
134 திருமூர்த்தி, திரு. து.	...	திருப்போரூர் (செ.வ.)
135 திருவேங்கடம், திரு. பெ. சு.		கலசப்பாக்கம்
136 துரை சந்திரசேகரன், திரு.	...	திருவையாறு
137 துரைசாமி, திரு. வீ. பெ.	..	நாமக்கல் (செ.வ.)
138 துரைபாண்டியன், டாக்டர் பெ.		மானாமதுரை (செ.வ)
139 துரைமுருகன், திரு.	...	காட்பாடி
140 துரை ராமசாமி, திரு.	...	வெள்ளக்கோவில்
141 தென்னரசு, திரு. எஸ். எஸ்.	...	திருப்பத்தூர்
142 தேவராஜ், திரு. வி. எம்.	...	வேலூர்
'ந'		
143 நஞ்சப்பன், திரு. ந.	...	பெண்ணாகரம்
144 நடராசன், திரு. ஆ.	...	பேரூர்
145 நடராசன், திரு. பொ.	...	திருத்தணி
146 நடேசன், திரு. எகால். மு.	...	ரிஷிவந்தியம்
147 நடேசன், திரு. ஆர்.	...	திருவட்டாறு
148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ.	...	பண்ருட்டி
149 நாராயணன், திரு. ராம.	...	காரைக்குடி
150 நூர்முகமது, திரு. செ.	...	பத்மநாபபுரம்
151 நேரு, திரு. கே. என்.	...	லால்குடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ப'		
152 பஞ்சாட்சரம், திரு. ஆர்.	..	மேல்மலையனூர்
153 பழனிச்சாமி, திரு. டி. கே.		திருவொற்றியூர்
154 பழனிச்சாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
155 பழனிசுவாமி, திரு. க.	..	எடப்பாடி
156 பழனிவேல், திரு. என்.	..	பழனி (செ.வ.)
157 பன்னீர்செல்வம், டாக்டர் மா.		சீர்காழி (செ.வ.)
158 பாண்டியன், திரு. பி. எச்.	..	சேரன்மாதேவி
159 பாப்பா உமாநாத், திருமதி	..	திருவரம்பூர்
160 பாப்பா சுந்தரம், திரு. அ.	..	குளித்தலை
161 பால்ராஜ், திரு. சோ.	..	மதுரை-மத்திய
162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே.	..	திருநாவலூர்
163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர்.	..	பொங்கலூர்
164 பாலையா, திரு. ஆ.	..	கொளச்சல்
165 பிச்சாண்டி, திரு. கே.	..	திருவண்ணாமலை
166 பிச்சைமுத்து திரு. ரெ.	..	பெரம்பலூர் (செ.வ.)
167 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா.		தென்காசி
168 புகழேந்தி, திரு. இ.	..	கடலூர்
169 பூவராகன், திரு. கோ.	..	விருத்தாசலம்
170 பெரியசாமி, திரு. என்.	..	தூத்துக்குடி
171 பெரியசாமி, திரு. ஐ.	..	ஆத்தூர்
172 பெரியசாமி, திரு. வே.	..	அந்தியூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ப'—தொடர்ச்சி.		
173 பெரியண்ணன், திரு. அ.	...	புதுக்கோட்டை
174 பெருமாள், திரு. செ.	..	ஏற்காடு (ஆ.வா.)
175 பொன்முடி, திரு. டி.	..	தண்டராம்பட்டு
176 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க.		விழுப்புரம்
177 பொன். முத்துராமலிங்கம், திரு.	..	மதுரை மேற்கு
178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.		நிலக்கோட்டை (செ.வ.)
179 பொன்னுசாமி, பேராசிரியர் க.		மருங்காபுரி
180 பொன்னுபிள்ளை, திரு. ஜி.	..	தேனி
'ம'		
181 மகேந்திரன், திரு. ஆர்.	...	நாட்றாம்பள்ளி
182 மணி, திரு. ஆச்சியூர் எம்.	...	நாங்குநேரி
183 மணி, திரு. கே. ஏ.	...	கபிலர்மலை
184 மணி, திரு. கோ. சி.	...	கும்பகோணம்
185 மணிமாறன், திரு. மா.	..	நன்னிலம் (செ.வ.)
186 மதிவாணன், திரு. இரா.	..	இராயபுரம்
187 மலர்மன்னன், திரு.அ.	..	திருச்சிராப்பள்ளி-1
188 மனோகரன், திரு. நாஞ்சில் கி.		திருவல்லிக்கேணி
189 மனோகரன், திரு. பா.	...	சிவகங்கை
190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா.		திண்டிவனம்
191 மாசிலாமணி, திரு. தி. ரா.	...	பூந்தமல்லி
192 மாதப்பன், திரு. கொ.	...	பாலக்கோடு
193 மாரப்பன், திரு. பி.	...	காங்கேயம்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)

'ம'—தொடர்ச்சி

194 மாரிமுத்து, திரு. அ.	..	வானூர் (செ.வ.)
195 முகமது சித்திக், திரு. எம்.	..	பூம்புகார்
196 முத்துசாமி, திரு. ப.	..	வேடசந்தூர்
197 முத்தையன், திரு. எம்.	..	சங்கராபுரம்
198 முத்தையா, திரு. எம்.	..	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
199 முருகேசன், திரு. பொ.	..	காஞ்சிபுரம்
200 முல்லைவேந்தன், திரு. வ.	..	மொரப்பூர்
201 முனிரத்தினம், திரு. ஆ. மு.	..	சோளிங்கர்
202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர்.		திருவள்ளூர்
203 மூக்கன், திரு. ஆர்.	..	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
204 மூக்கையா, திரு. எல்.	..	பெரியகுளம்
205 மோகன், திரு. இரா.	..	சிங்காநல்லூர்
206 மோசஸ், டாக்டர் எம்.	..	நாகர்கோவில்

'ய'

207 யசோதா செல்லப்பா, திருமதி		வலங்கைமான் (செ.வ.)

'ர'

208 ரமணி, திரு. கே.	..	கோவை (கிழக்கு)
209 ரமணி நல்லதம்பி, திருமதி	..	ராதாபுரம்
210 ரவி அருணன், திரு. கே.	..	அம்பாசமுத்திரம்
211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.		ஓசூர்
212 ராமச்சந்திரன், திரு. கே.	..	மன்னார்குடி
213 ராமச்சந்திரன், திரு. சி.	..	திருப்பரங்குன்றம்

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
'ர'—தொடர்ச்சி		
214 ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப.	..	அரவக்குறிச்சி
215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.	...	ஆலங்குளம்
216 ராஜு, திரு. எச். எம்.	...	உதகமண்டலம்
217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே.		இராமநாதபுரம்
'ல'		
218 லட்சுமி, திருமதி பி.	...	வால்பாறை (செ.வ.)
'வ'		
219 வரதராஜன், திரு. ஆர்.	...	சங்கரி (செ.வ.)
220 வரதராசன், திரு. உ. ரா.	...	வில்லிவாக்கம்
221 வல்லரசு, திரு. பி. என்.	...	உசிலம்பட்டி
222 விஜயராகவன், திரு. பொன்.		கிள்ளியூர்
223 விஜயேந்திரையா, திரு. டி. சி.		தளி
224 வீராசாமி, திரு. ஆற்காடு நா.		புரசைவாக்கம்
225 வீரையன், திரு. கோ.	...	நாகப்பட்டினம்
226 வெங்கடாசலம், திரு. பெ.	..	வீரபாண்டி
227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.		ஸ்ரீரங்கம்
228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே.	...	தொண்டாமுத்தூர்
229 வேணு, திரு. கி.	...	கும்மிடிப்பூண்டி
230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ.	...	தாம்பரம்
'ஸ'		
231 ஸ்டாலின், திரு. மு. க.	...	ஆயிரம் விளக்கு

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'ஜ'	
232 ஜெயலலிதா, செல்வி ஜெ. ..	போடிநாயக்கனூர்.
'ஹ'	
233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு.	கடலாடி.
'ஸ்ரீ'	
234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். ...	சைதாப்பேட்டை
235 ஆஸ்கார், சி. நிக்லி, திரு. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி ... தலைமை வழக்கறிஞர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 25, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மே 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை."

உண்பவர்களுக்குத் தக்க உணவுப் பொருட்களை விளை வித்துத் தருவதோடு, பருகுவதற்குத் தானே ஒரு உணவாக இருப்பதும், மழையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 2659 மற்றும் 5814 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

திருவாரூர் அரசினர் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல்

* 4283 திரு.மா. மணிமாறன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவாரூர் அரசினர் கல்லூரிக்கு மான்யக்குழு நிதியுதவியுடன் ரூ. 5.6 லட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட பொதுப்பணித்துறை மதிப்பீடு தயாரித்து வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், திருவாரூர் அரசினர் கல்லூரிக்கு மான்யக்குழு நிதியுதவியுடன் ரூ. 5.6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட பொதுப் பணித் துறையால் மதிப்பீடு தயாரிப்பதற்குச் சில அலுவலக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்ததால் இடையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியளித்துப் பல ஆண்டுகள் ஆகியும், பொதுப் பணித் துறையினால் மதிப்பீடு செய்வதில்தான் தேக்கம் ஏற்படுகிறது. எனவே, இதுபோல நிதி பெற்றதற்குப் பின்னால், மதிப்பீடு தயார் செய்வதில், பொதுப்பணித் துறையினால் ஏற்படுகிற இந்த மந்தனத்தைப் போக்கு வதற்கு ஏதேனும் அதிகபட்சமான தொகை வருகிற நேரத்தில், பொதுப் பணித்துறையிலிருந்து 'டெப்புடேஷன்' ஆகப் பெற்று, மதிப்பீடு மட்டுமாவது தயார் செய்வதற்கு தனித் துறையை, இந்தக் கல்வித் துறை ஏற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்கு வதற்கான கோரிக்கை 27-1-1989 அன்று செயற் பொறியாளர் அவர்களால் பெறப்பட்டது என்பதிலேதான் தொடங்குகிறது. ஆனால், திட்ட மதிப்பீடு வட்டார அலுவலகத்திலிருந்து, துணை வட்டார அலுவலகத்திற்கு குறிப்புரை பெறுவ தற்கு இரு முறை திருப்பியனுப்பப்பட்டது. சில காரணங்களுக்காகத் திருப்பியனுப்பப்பட்டது என்றும், மண் பரிசோதனை மற்றும் முதல்வரின் கையொப்பம்— முதல்வர் என்பது அங்கே கல்லூரி பிரின்சிபால், அவருடைய கையொப்பம் பெறுவதற்குச் சில நாட்கள் ஆனபோதிலும், திருச்சி, செயற் பொறியாளர் 1-6-1989 அன்று திட்ட மதிப்பீட்டினை திருச்சி, கண்காணிப்புப் பொறியாளருக்கு அனுப்பி, அவர் அத் திட்ட மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர் அவலகத் திற்கு 27-6-1989 அன்று அனுப்பியுள்ளார் என்றும், அதனுடைய தொடர்ச்சியாக 4-7-1989 அன்று, நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது என்றும் விவரங்கள் இருக் கின்றன. இடையிலே ஒவ்வொரு விவரமும் பெறுவதி லேயும், 10 நாட்கள், 20 நாட்கள் என்பதற்குப் பதிலாக, 2 மாதங்கள், 3 மாதங்கள் ஆகின்றன. இது வழக்கமாக நடைபெறுகின்ற ஒரு முறையாகத்தான் இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டு அளவிற்கு அதில் சுணக்கம் ஏற்பட் டிருக்கிறது. அந்த மூன்றாண்டுகளுக்குப் பிறகு, நாங்க ளெல்லாம் அவர்களிடத்திலே அணுகிக் கேட்டதற்குப் பின்னாலேதான், வேலையே நடந்திருக்கிறது. இவ்வளவு பணத்தைப் பெற்றதற்குப் பின்னாலேகூட, பொதுப் பணித் துறையினால் ஏற்பட்டிருக்கிற இந்தச் சுணக்கத்தைப் போக்குவதற்கு வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டு காலமாகத்தான் இது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கல்லூரிக்குத் தமிழக முதலமைச்சர் கலைஞரின் பெயர் மீண்டும் சூட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுடைய பெயரை, கலைஞர் பெயருக்குப் பதிலாக சூட்டியிருக்கிற காரணத்தினால், அதையே கலைஞர் வரவேற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது இந்தத் திட்ட மதிப்பீட்டுக்கான தயாரிப்புகள் என்பது, பொதுப் பணித் துறையிலே வழக்கமாக இருக்கக்கூடிய காலங்களை விட, 2, 3 மாதங்கள் அதிகம் ஆகிறது. இதனால் இதுவும் வழக்கமாக இருக்கக்கூடிய ஒன்றுதான் என்று சொன்னார். திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்குச் சில நாட்களிலே மாற வேண்டிய அந்தத் தபால்கள், 2 மாதம், 3 மாதம் காலதாமதம் ஆகிறது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படித் தாமதம் ஆவதன் விளைவாக, ஒரு மதிப்பீடு ரூபாய் 5.6 லட்சத்திற்கு ஆரம்பித்து, கடைசியாக திட்ட மதிப்பீடு தயாரிப்பு என வரும்போது, அதன் மதிப்பீட்டுத் தொகை கூடுதலாகி, மறுபடியும் பின்னால் அதற்கு அதிகமான ஒதுக்கீடு கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, அந்த வேலைகள் நடைபெறுவதே பின்னுக்குப் போய் விடுகின்றன. எனவே, இந்த நீண்ட காலத் தாமதம் என்பது வழக்கமாக இருக்கக்கூடிய இந்த வழக்கத்தை மாற்றி ஒரு புதிய பழக்கத்தைக் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை, முயற்சிக்கலாம் என்ற விடையோடு முடியும் என்று நம்புகிறேன்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து நம்முடைய முதல்வர் காலம் வரை 150-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. 10 ஆண்டுகளாக எந்தக் கல்லூரியும்

பழுது பார்க்கப்படவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதால், அரியலூர் கலைக் கல்லூரியும் எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஏதேனும் நிதிக் கடன் பெற முடியுமா என்பது அரசாங்கத்தின் முயற்சியிலே இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறைக்கு எந்தத் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது ? பொதுப்பணித் துறை இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும் என்று அரசு ஏதாவது ஆலோசனை வழங்கியுள்ளதா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த வரைபடம், கட்டுவதற்கான செயற்பாட்டில் இடையூறு இல்லாமல் நல்ல முறையில் நிறைவேறும் என்பதற்கான சான்று, இவை எல்லாம் சேர்ந்து அரசிற்குக் கிடைத்து 5–9–1989 அன்று பெறப்பட்டு, அரசாணை, 6–3–1990-இல் இப்பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பங்குத் தொகையான 2.8 இலட்சம் அளிப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நடைமுறையிலேயே, பல நேரங்களில், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் அவ்வப்போது ஏற்படுகிற சில கருத்து வேறுபாடு காரணமாக ஏற்படுகிற தாமதத்தினுடைய விளைவாக இருக்க வேண்டும். இருந்தாலும் 6—3—1990-இல் தான் இதற்கான, அரசாங்கத்தினுடைய பங்கு நிதி — யூ.ஜி.சி. யினுடைய நிதியுதவியும் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதால் பங்கு நிதி வழங்கப்பட்டு, கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கல்லூரி அமைத்தல்

* 8049 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூடலூர் தொகுதிக்கு ஒரு கலைக்கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

பழுது பார்க்கப்படவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இருப்ப தால், அரியலூர் கலைக் கல்லூரியும் எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்படிப் பட்ட காரியங்களுக்கு ஏதேனும் நிதிக் கடன் பெற முடியுமா என்பது அரசாங்கத்தின் முயற்சியிலே இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறைக்கு எந்தத் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது? பொதுப்பணித் துறை இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும் என்று அரசு ஏதாவது ஆலோசனை வழங்கி யுள்ளதா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, இந்த வரைபடம், கட்டுவதற்கான செயற்பாட்டில் இடையூறு இல்லாமல் நல்ல முறையில் நிறைவேறும் என்பதற் கான சான்று, இவை எல்லாம் சேர்ந்து அரசிற்குக் கிடைத்து 5–9–1989 அன்று பெறப்பட்டு, அரசாணை, 6–3–1990-இல் இப்பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பங்குத் தொகையான 2.8 இலட்சம் அளிப்பதற்கு ஆணை வெளியிடப் பட்டுள்ளது. இது நடைமுறையிலேயே, பல நேரங்களில், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் அவ்வப்போது ஏற்படுகிற சில கருத்து வேறுபாடு காரணமாக ஏற்படுகிற தாமதத்தினுடைய விளைவாக இருக்க வேண்டும். இருந் தாலும் 6—3—1990-இல் தான் இதற்கான, அரசாங்கத்தி னுடைய பங்கு நிதி — யூ.ஜி.சி. யினுடைய நிதியுதவியும் அவர் களுக்குக் கிடைக்கிறது என்பதால் பங்கு நிதி வழங்கப்பட்டு, கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கல்லூரி அமைத்தல்

* 8049 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கூடலூர் தொகுதிக்கு ஒரு கலைக்கல்லூரி அமைக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதியில், சுமார் 2 இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்ற இப் பெரிய தொகுதியில், இருபதுக்கும் மேற்பட்ட ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அங்கே ஒரு கல்லூரி இல்லை. இதை நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டிலாவது அது அனுமதிக்கப்படுமா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டு இருப்பதை எடுத்துச் சொன்னார். கடந்த 8 அல்லது 10 ஆண்டுகளாகவே கல்லூரிகள் துவங்குவதற்குத் தேவையான நிதியை அரசு ஒதுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு, கல்லூரிகளே துவங்குவதில்லை என்று ஒரு கொள்கை முடிவே எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கொள்கை முடிவு என்பது அரசாங்கம் அந்த வகையிலே நிதியைச் செலவிட்டால், தொடக்கப் பள்ளியிலேயிருந்து செலவிட வேண்டிய தொகை அந்த மிக, மிகப் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய பங்கு கிடைக்காமல் போய் விடுகிறது என்ற நிலைமை காரணமாக, எல்லோரும் அறிவு பெற்றவர் ஆகவேண்டும், கல்வி அறிவு பெறவேண்டும் என்ற அந்த அடிப்படை காரணமாக, இப்படி ஒரு கொள்கை ஏற்கப்பட்டிருக்கிறது. தனியார் ஒரளவிற்கு டிரஸ்ட்டை ஏற்படுத்தி, அது நம்பிக்கையுள்ள டிரஸ்ட்டாக இருந்து, அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். கே. கரீம் : தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதி — கூடலூர் என்றாலே—பல ஊர்களிலிருந்து வந்து சேர்ந்தவர்கள். அங்கே தெலுங்கு பேசக்கூடியவர்கள், கன்னடம் பேசக்கூடியவர்கள், மலையாளம் பேசக்கூடியவர்கள், தமிழ் பேசக்கூடியவர்கள், அதோடு சிலோன் ரிப்பாட்டிரியேட்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த கூடலூர் பகுதி, மிகவும் பின்தங்கியவர்கள். அதிலும் குறிப்பாக, ஆதிவாசிகள், குரும்பர், பனியர், மலைவாசிகள், மொண்டாளம் செட்டிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்தில் கூடலூர் (சிரிப்பு).

9–10 மணி

திரு. எம். கே. கரீம் : வடுகமொழி பேசக்கூடியவர்கள் அனைத்தும் நிறைந்த இடம். அதுவும் குறிப்பாக மலைப் பகுதி என்ற காரணத்தினால், வேறெங்கும் சென்று படிக்க இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு ஏதாவது ஒரு சலுகை காட்டி எப்படியாவது அவர்களுக்கு ஒரு கல்லூரி அமைத்துத் தரவேண்டும் அதோடு, மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டும் என்ற எனது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், அதேபோல, போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கலைக் கல்லூரியோ அல்லது மற்ற கல்லூரியோ அமைக்க பொதுமக்கள் எவ்வளவு நிதியை அரசாங்கத்திற்கு அளிக்க வேண்டும் எவ்வளவு இடம் அளிக்க வேண்டும் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புவதோடு எனது தொகுதியான ஆரணியிலே ரூ. 10 லட்சம் பொது மக்கள் சார்பாக தரத்தயாராக உள்ள சூழ்நிலையில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் முழு அளவுக்கு என்னிடத்திலே இல்லாவிட்டாலும் கூட 10 லட்ச ரூபாய் ஒரு கல்லூரி தொடங்குவதற்கு போதுமானதல்ல. இரண்டாவது அதை நடத்துவதற்கு ஆண்டுக்குப் பல லட்சம் ரூபாய் செலவு ஏற்படும். இவற்றிற்கான வழிவகைகளை, ஆரணி சட்டமன்ற உறுப்பினர் தேடித் தந்தால், பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லையென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப்போல, இன்றைக்கு மலைப் பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்கள் கல்வி கற்பதற்கு, தரைப்பகுதியிலே இருப்பதைப் போன்ற வசதிகள், அந்த மக்களுக்குக் குறைவாக இருக்கிற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அங்கே தனியார் டிரஸ்ட் மூலமாக கல்லூரிகள் தொடங்குவதற்கு அதாவது தரைப்

1990 மே 8]

பகுதிகளில் உள்ளது போல, கூடலூர் போன்ற பகுதிகளுக்கும் தொடங்க முன் வரமாட்டார்கள் என்பதை கவனத்திலே கொண்டு எதிர்காலத்தில் இது போன்ற மலைப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில், அரசினுடைய கொள்கையை சற்று தளர்த்தி, கூடலூர் போன்ற மலை பகுதிகளில் கல்லூரிகளைத் தொடங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலே கல்லூரிகள் இருக்கின்றன. எந்த இடத்திலேயும், அந்தந்தத் தொகுதிக்கு ஒரு கல்லூரி என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால், தொகுதிகள் மாறும் என்பது வேறு; நடைமுறையிலே ஒரு கல்லூரியை நடத்துவதில் ஆகிற செலவு எவ்வளவு இருக்கும் என்று நாம் பார்க்கிற போது, ஆயிரம் மாணவர்களுக்கு 95 ஆசிரியர்கள்—பேராசிரியர்கள் நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனுடைய மாணவர் விகிதாசார அளவு, ஒரு ஆசிரியருக்கு 10 மாணவர்கள் அல்லது 12 மாணவர்கள்தான் விகிதாசாரத்திலே வருகிறார்கள். அந்த அளவு பெரும் செலவை அரசாங்கம் தொடர்ந்து ஏற்று, அந்த வகையிலே செலவிடுவதை விட, பொறியியல், அறிவியல் ஆராய்ச்சிக்காக தேவைப்படும் வழிகளில் நிதி கிடைக்குமானால் செலவிடுவது அதிகப் பயன் தரும்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கலைக் கல்லூரி துவங்க அனுமதி வழங்காவிட்டாலும், ஆண்டு தோறும் கல்லூரிகளில் பி.காம்., பி.எஸ்ஸி., போன்ற பட்டப் படிப்புகளில் சேர அதிகமான மாணவர்கள் விரும்புகிறார்கள். அதே சமயம், பி.ஏ. போன்ற பட்டப் படிப்புகளுக்குச் சேர மாணவர்கள் விரும்புவதில்லை. ஆகையால், பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிற்கான இடத்தைக் குறைத்து பி.காம்., பி.எஸ்ஸி., போன்ற பட்டப் படிப்புகளின் இடத்தை அதிகரிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருக்கிற ஒரு இக்கட்டான நிலைமை, தொடங்கிய எதையும் நிறுத்த முடியாது; தொடங்காதது எதையும், உடனே ஆரம்பிக்க முடியாது. இருந்தாலும், படிப்படியாக சில மாற்றங்களைக் கொண்டு, இன்றைய மாணவர்கள் எந்த வகையான படிப்பில் அதிகமாக ஈடுபட விரும்புகிறார்களோ அதற்கு விகிதாசார அடிப்படையில் அதிக முக்கியத்துவம் தருவதற்கு மட்டும் முயற்சிக்கப்படும். வரலாறு, பொருளாதாரம், தத்துவம் இவைகளை அடியோடு தடுப்பது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல, தடுக்கவும் முடியாது. ஏனென்றால், இந்த ஆசிரியர்களை வீட்டுக்கு

அனுப்புவதை இந்த அரசோ மாண்புமிகு உறுப்பினர்களோ ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுவல்ல. அந்த ஆசிரியர்களும் பணியாற்ற வேண்டும். கிடைக்கக் கூடிய புதிய நிதியை, நிலைமையின் தேவைக்கேற்ப கூடுமான வரையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடலூர் அடிவாரத்தில் இருக்கிற, திரு. கோவை மோகன்.

திரு இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடமிருந்து எந்த உதவியும் எதிர்பார்க்காமல், ''டிரஸ்ட்''டின் மூலமாக, இஞ்சினியரிங் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, கலைக் கல்லூரியோ அமைப்பதற்கு யாராவது முன் வந்தால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கல்லூரிகளைத் துவக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ மேலும் அதிகமாகத் தொடங்கத் தேவையில்லை. தொடங்கினால் இப்போதுள்ள பயிற்சிபெறுகிற மாணவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமானால் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகும் என்ற கருத்து பொறியியல் துறை நிபுணர்களால், பேராசிரியர்களால் கூறப்பட்டிருக்கிறது. எனவே மிக இன்றியமையாத ஒரு நிலைமை, இந்தத் தொழிற்கல்வியைப் பொறுத்து மிகச் சிறந்த தகுதி பெறுமாறு நடத்துவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் அது பரிசீலிக்கப்படும். கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் எந்த வட்டாரத்தில் கேட்கிறார்களோ, அந்த வட்டாரத்தைப் பொறுத்து ஆராய்ந்து அணுகப்படும்—'ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் சொல்லவில்லை'— அணுகப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*2659 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆம். ஆலையின் தற்போதைய 1,750 டன் அரவைத் திறனை 2,500 டன்களுக்கு அதிகப்படுத்த மைய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டுள்ளது.

அனுப்புவதை இந்த அரசோ மாண்புமிகு உறுப்பினர்களோ ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுவல்ல. அந்த ஆசிரியர்களும் பணியாற்ற வேண்டும். கிடைக்கக் கூடிய புதிய நிதியை, நிலைமையின் தேவைக்கேற்ப கூடுமான வரையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடலூர் அடிவாரத்தில் இருக்கிற, திரு. கோவை மோகன்.

திரு இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடமிருந்து எந்த உதவியும் எதிர்பார்க்காமல், ''டிரஸ்ட்''டின் மூலமாக, இஞ்சினியரிங் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, கலைக் கல்லூரியோ அமைப்பதற்கு யாராவது முன் வந்தால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கல்லூரிகளைத் துவக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ மேலும் அதிகமாகத் தொடங்கத் தேவையில்லை. தொடங்கினால் இப்போதுள்ள பயிற்சிபெறுகிற மாணவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமானால் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகும் என்ற கருத்து பொறியியல் துறை நிபுணர்களால், பேராசிரியர்களால் கூறப்பட்டிருக்கிறது. எனவே மிக இன்றியமையாத ஒரு நிலைமை, இந்தத் தொழிற்கல்வியைப் பொறுத்து மிகச் சிறந்த தகுதி பெறுமாறு நடத்துவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் அது பரிசீலிக்கப்படும். கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் எந்த வட்டாரத்தில் கேட்கிறார்களோ, அந்த வட்டாரத்தைப் பொறுத்து ஆராய்ந்து அணுகப்படும்—'ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் சொல்லவில்லை'—அணுகப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*2659 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆம். ஆலையின் தற்போதைய 1,750 டன் அரவைத் திறனை 2,500 டன்களுக்கு அதிகப்படுத்த மைய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டுள்ளது.

1990 மே 8]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆலையினுடைய உற்பத்தித் திறனை 2,500டன் ஆக உயர்த்துவதற்கு, மத்திய அரசு 1987 ஆம் ஆண்டு உத்தரவு வழங்கியதாக அறிகிறேன். காலதாமதம் எதனால் ஏற்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இதனால் கரும்பு உற்பத்தி எவ்வளவு ஏக்கர் அதிகமாகச் செய்யமுடியும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1987-லே அனுமதி அளிக்கப்பட்டாலும் காலதாமதம் ஏன் என்று கேட்கிறார். காலதாமதம் இடையிலே ஏற்பட்டது என்பதை அவரே அறிவார் என்று உணருகின்றேன். இதற்கு ஏற்ப, விரிவாக்கத் திறனுக்குத் தேவைப்படும் கரும்பு 16,000 ஏக்கர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை விரிவாக்கத்தின் மூலமாக எத்தனை பேருக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதை அறிய விரும்புவதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே எத்தனை கரும்பு ஆலைகளை இது போன்று விரிவாக்கம் செய்வதற்கு அரசாங்கத்திடம் திட்டமிருக்கிறது என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது 1,750 டன்னுக்கு எவ்வளவு பேருக்கு வேலை கிடைக் கிறது என்பதைக் கணக்கிட்டால், 2,500 டன் என்று அதிகப் படுத்தும் போது எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் என் பதை எளிதாக உணரலாம்.

திரு. எஸ். சிவலோகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை? எந்தெந்த ஊரில் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒன்பது புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவ மத்திய அரசிடமிருந்து உரிமம் பெறப் பட்டிருக்கிறது. இதிலே ஐந்து தனியார் துறை ஆலைகள், நான்கு கூட்டுறவுத் துறை ஆலைகள். தனியார் துறையிலே, சிவகங்கை, வாசுதேவநல்லூர் இரண்டும் கடந்த ஆண்டில் அரவையைத் தொடங்கி விட்டன. திருஆரூரான், ராஜஸ்ரீ சுகர்ஸ், பெரியகுளம், இந்த ஆண்டு அரவையைத் தொடங்கி உள்ளன. கூட்டுறவுத் துறையில் சிதம்பரம், செய்யாறு, இரண்டு சர்க்கரை ஆலைகளும் இந்த ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும்.

கொல்லிமலைப் பகுதியில் புதிய தொழில்கள்.

*5814 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலைப் பகுதியில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6803 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை.

* 6364 திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியில் சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக தென்காசியைச் சுற்றியிருக்கின்ற வட்டாரத்தில் சூரியகாந்தி அதிகமாக விவசாயிகள் பயிரிட்டு இருக்கின்ற காரணத்தால், அதிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற திட்டத்தை இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற செயற்குறிப்பு தற்போது இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மே 8

கொல்லிமலைப் பகுதியில் புதிய தொழில்கள்.

*5814 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலைப் பகுதியில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6803 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை.

* 6364 திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியில் சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக தென்காசியைச் சுற்றியிருக்கின்ற வட்டாரத்தில் சூரியகாந்தி அதிகமாக விவசாயிகள் பயிரிட்டு இருக்கின்ற காரணத்தால், அதிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற திட்டத்தை இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற செயற்குறிப்பு தற்போது இல்லை.

1990 மே 8]

துணை விவசாயக் கிடங்கு

*8256 திரு. அ. பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை ஒன்றியம், நங்கவரம் பகுதியில் துணை விவசாயக் கிடங்கு திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1990-91 ஆம் ஆண்டிற்கு புதிதாக 100 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்படவிருப்பதால் நங்கவரம் பகுதியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க வாய்ப்பு உள்ளது.

மலட்டாறு

*2641 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மலட்டாற்றில் தண்ணீர் வருவது நின்றுவிட்டபடியால் அதை மராமத்து செய்து பாசனத்திற்காக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை.

9-20 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலட்டாறு சேனல் திருக்கோவிலூர் அணைக் கட்டப்பட்டதிலிருந்து பிரிந்து வரக்கூடிய 5 சேனல்களில் ஒன்று. 20, 22 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்ணை ஆற்றில் வெள்ளம் வந்த காரணத்தால், அதுவும் இதுவும் கலந்து மண்மேடாக ஆகி, அதனால் நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டித் தொகுதி, திருநாவலூர் தொகுதியிலுள்ள கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தடைப்பட்டிருக்கிறது. அதை, மறுபரிசிலனை செய்து மராமத்து செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

துணை விவசாயக் கிடங்கு

*8256 திரு. அ. பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை ஒன்றியம், நங்கவரம் பகுதியில் துணை விவசாயக் கிடங்கு திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1990-91 ஆம் ஆண்டிற்கு புதிதாக 100 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்படவிருப்பதால் நங்கவரம் பகுதியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க வாய்ப்பு உள்ளது.

மலட்டாறு

*2641 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மலட்டாற்றில் தண்ணீர் வருவது நின்றுவிட்டபடியால் அதை மராமத்து செய்து பாசனத்திற்காக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை.

9-20 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலட்டாறு சேனல் திருக்கோவிலூர் அணைக் கட்டப்பட்டதிலிருந்து பிரிந்து வரக்கூடிய 5 சேனல்களில் ஒன்று. 20, 22 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்ணை ஆற்றில் வெள்ளம் வந்த காரணத்தால், அதுவும் இதுவும் கலந்து மண்மேடாக ஆகி, அதனால் நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டித் தொகுதி, திருநாவலூர் தொகுதியிலுள்ள கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தடைப்பட்டிருக்கிறது. அதை, மறுபரிசீலனை செய்து மராமத்து செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மே 8

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணையாற்றின் குறுக்கே அணைக் கட்டப்பட்டதிலேயிருந்து, வலதுபுறத்திலே மலட்டாற்றுக் கால்வாய் வருகிறது மலட்டாறு வேறு, மலட்டாற்றுக் கால்வாய் வேறு இந்த மலட்டாற்று கால்வாயினுடைய நீளம் 12.80 கி.மீ. ஆகும். அதற்குப் பிறகு அது மலட்டாறாக மாறுகிறது. பெண்ணையாற்றிலே வெள்ளம் வருகிறபோது, தண்ணீர் அதிகமாக வந்தால் மலட்டாற்றிலே கலக்கிறது. அப்படித்தான் காலகாலமாக வந்ததன் விளைவு அது மண்மேடிட்டிருக்கிறது. ஆகையினால், தங்களுடைய கேள்வியிலே மலட்டாற்றில் மண்ணை எடுத்துப் பாசனத்துக்கு மராமத்து செய்வது என்பது இயலாது. ஏனென்றால், ஆறே மண்மேடாகிவிட்டது. புதிய ஆறு ஒன்றை உருவாக்க வேண்டும். எனவே, மலட்டாற்றுக் கால்வாயில் பாசனத்தைச் செய்ய நடவடிக்கை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். 4,174 ஏக்கர் பாசன வசதி கால்வாயிலே பெறும். ஆற்றிலே வெள்ளம் வந்தால் உண்டு.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் அரசூர் பக்கத்தில் ஒரு சின்ன கல்வர்ட் இருக்கக்கூடிய காரணத்தினால் அந்த இடத்திலேதான் மண்மேடிட்டிருக்கிறது. அந்த இடத்திலேயாவது சில இலட்சங்கள் செலவு செய்து தூர் எடுத்தால் அங்கிருந்து தண்ணீர், மழைக்காலங்களில் தேங்குவதற்கும், அதனால் சதுப்பு ஏற்படுவதற்கும் வசதியாக இருக்கும். அதன் மூலம் குறைந்தபட்சம், கரும்பூர், குறத்தி, திருத்துரையூர், சின்னப்பேட்டை, வருஞ்சிப்பாக்கம் ஆரிப்பாளையம், பூண்டி, கட்டமுத்துபாளையம், உரையூர் இப்படி 12 பஞ்சாயத்துக் கிராமங்களைச் சேர்த்து 10 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி ஏற்படும். நீண்ட நாட்களாகவே இது விவசாயிகளுடைய கோரிக்கையாக இருக்கிறது. கடந்த அரசின் காலத்தில் கூட நான் இதைக் கேட்டு ஏமாற்றப்பட்டிருக்கிறேன். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அண்மையில் கடலூரிலே நடைபெற்ற பொதுப்பணித் துறை மாநாட்டிலே ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கிறார். அதை நிறைவேற்றக் கூடிய முறையிலே அதற்கான நடவடிக்கையை துரிதமாக எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சி. கோவிந்தராஜன் அவர்களுடைய மிகப் பெரிய பிரச்சினைகளில் இது ஒன்று. ஆறு முழுவதும் மணல் அகற்ற முடியாது. அவர் குறிப்பிட்ட இடத்திலிருந்து மணல் எடுக்கலாமென்று சொல்லியிருக்கிறார். அது குறித்து என்னுடைய இலாக்கா ஆய்வு நடத்தும். அது சாத்தியக்கூறு என்றால் நிச்சமாகச் செய்யும்.

1990 மே 8]

மேம்பாலம்

* *3178* திரு. ஏ. கோதண்டம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்றத்தூர்—அனகாபுத்தூரை இணைக்கும் தரை பாலத்தை மேம்பாலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முதல் துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப் பணி மத்திய அரசு 1989–90 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பால வேலை சென்னை புறவழிச் சாலைக்காக நில ஆர்ஜிதம் மற்றும் சாலை மதிப்பீடுகள் மத்திய அரசு ஒப்புதல் பெற்று செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தரைப் பாலம் தடுத்து விட்டதனால் உறுப்பினர் வரவில்லை.

அனல் மின் நிலையம்

* *3250* திரு. ஆ. பாலையா : திரு. துரை சந்திரசேகரன்:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

மேம்பாலம்

* 3178 திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்றத்தூர்—அனகாபுத்தூரை இணைக்கும் தரை பாலத்தை மேம்பாலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முதல் துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப் பணி மத்திய அரசு 1989—90 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பால வேலை சென்னை புறவழிச் சாலைக்காக நில ஆர்ஜிதம் மற்றும் சாலை மதிப்பீடுகள் மத்திய அரசு ஒப்புதல் பெற்று செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தரைப் பாலம் தடுத்து விட்டதனால் உறுப்பினர் வரவில்லை.

அனல் மின் நிலையம்

* 3250 திரு. ஆ. பாலையா : திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் தொடங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பார்த்தே அமைச்சர் விடை சொல்லலாம். உறுப்பினர் பின்னாலே தான் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : குமரிக்கான திட்டம் பற்றி திரு. துரை சந்திரசேகரன் எவ்வாறு கேள்வி போட்டார் என்று பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அக்கறைதான்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அக்கறைதான். 'ரைட்'. தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள இராஜாக்கமங்கலம் என்ற இடத்தில் ஒரு மின் நிலையம் அமைக்க ஆய்வு செய்யப்பட்டது. கீழ்க்கண்ட காரணங்களினால் அவ்விடத்திலே அனல் மின் நிலையம் அமைக்க ஏதுவாக இல்லையென்று ஆய்வு தெரிவிக்கிறது. தேவையான நிலம் கிடைக்கவில்லை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கருத்துப்படி, இந்த அனல் மின் நிலையத்தை அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட இடம் கடற்கரையிலிருந்து 500 மீட்டருக்குள் இருக்கிறது கடற்கரையில் 500 மீட்டருக்குள் கட்டடங்கள் கட்டுவது சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாகத் தடை செய்யப்பட்டிருப்பதால் அதை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. இதன்னியில் வேறு ஏதாவது இடங்கள் கிடைத்தால் இந்த அனல் மின் நிலையத்தை அமைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-25 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் பற்றாக்குறை என்பது மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இராஜாக்கமங்கலம் பகுதியில் ஒரு அனல் மின் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லாத நிலைமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேறு பகுதியில் பொருத்தமான இடம் கிடைப்பதற்கும், வாய்ப்பு இருப்பதன் காரணத்தால் அந்த இடத்தைத் தெரிவு செய்து அமைச்சரிடம் தெரியப்படுத்தினால் கட்டாயமாக அங்கே ஒரு அனல் மின் நிலையம் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தினுடைய இலக்கணத்திற்கு உட்பட்டு அந்த இடம் இருந்தால் நிச்சயம் மின் வாரியம் அந்த மின் நிலையத்தைத் துவக்க முன்வரும்.

1990 மே 8]

பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள்.

*5616 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறை, நீர்ப்பாசனம் பிரிவிற்கு 1987–88-ல் பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறத்தல்.

*848 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி:

திரு. ஆ. நடராசன் :

திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவையில் மூடப்பட்டுள்ள எவரெஸ்ட் இன்ஜினியரிங் நம்பர் 2, நம்பர் 3, அதன் குரூப் கம்பெனிகள் ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்டிரீஸ், ராமகிருஷ்ணா மற்றும் நியூசிட்டி ஆகிய தொழிற்சாலைகளை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கக் கூடிய திருவாளர்கள் எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம் தொழில் வணிக துறையில் ஒரு சிறு தொழில் நிறுவனமாக 31—1—1977-ல் பதிவு பெற்று இருக்கின்ற ஒரு நிறுவனம் ஆகும். நிதி நெருக்கடி காரணமாக அந்த நிறுவனம் 1986 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது. இது ஒரு கூட்டு பங்குதாரர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் மூன்று துணை

1990 மே 8]

பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள்.

*5616 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறை, நீர்ப்பாசனம் பிரிவிற்கு 1987–88-ல் பாரம் தூக்கி வாங்கியதில் முறைகேடுகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறத்தல்.

*848 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி:

திரு. ஆ. நடராசன் :

திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவையில் மூடப்பட்டுள்ள எவரெஸ்ட் இன்ஜினியரிங் நம்பர் 2, நம்பர் 3, அதன் குரூப் கம்பெனிகள் ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்டிரீஸ், ராமகிருஷ்ணா மற்றும் நியூசிட்டி ஆகிய தொழிற்சாலைகளை திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கக் கூடிய திருவாளர்கள் எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம் தொழில் வணிக துறையில் ஒரு சிறு தொழில் நிறுவனமாக 31—1—1977-ல் பதிவு பெற்று இருக்கின்ற ஒரு நிறுவனம் ஆகும். நிதி நெருக்கடி காரணமாக அந்த நிறுவனம் 1986 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது. இது ஒரு கூட்டு பங்குதாரர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் மூன்று துணை

நிறுவனங்களான ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் ஆகிய மூன்று நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் மீண்டும் செயல்படுவதற்காக இந்தியத் தொழில் மறு அமைப்பு வங்கி அதாவது இன்டஸ்ட்ரியல் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பேங்க்-இன் சென்னை கிளையை அணுகி சுமார் $2\frac{1}{4}$ கோடி ரூபாய் கடன் உதவி கேட்டு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். இந்த வங்கி இந்த விண்ணப்பத்தைக் கல்கத்தாவில் உள்ள இந்த வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியது. வெகு விரைவில் கடன் தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நிர்வாகம் மீண்டும் அந்த நிறுவனத்தைத் திறப்பதற்கு வேண்டிய நிலையில் உள்ளார்கள். அதற்கிடையில் நியூ சிட்டி இன்ஜினியரிங் என்ற நிறுவனத்தை கோவையில் உள்ள 'ஏ டூ இஸ்ஸட்' என்ற வேறு ஒரு நிறுவனம் ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது.

திரு. யூ. கே. **வெள்ளிங்கிரி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் அமைந்திருக்கக்கூடிய எவரெஸ்ட் இன்ஜினியரிங் எவரெஸ்ட் நம்பர் 2, எவரெஸ்ட் நம்பர் 3, ஆட்டோ ஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ் போன்றவை அங்கே இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய குரூப் நிறுவனம். சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேலே வேலை செய்யக்கூடிய மிகப் பெரிய நிறுவனம். மிகப் பெரிய வேலைகளை எல்லாம் 'பெல்' நிறுவனத்திலே இருந்து செய்யக்கூடிய மிகப் பெரிய ஸ்தாபனம் அது. அதில் தொழில் நெருக்கடி ஏற்பட்டு கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்குப் பட்டினியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நிர்வாகம், பேங்க் உதவியோ அல்லது அரசாங்க உதவியோ கிடைத்தால் அந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த இயலும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. நான் இது குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன். அதே போல் ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்பது தனி நிறுவனம். அதை எப்படி இதிலே ஒன்றாகச் சேர்த்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் கிட்டத்தட்ட பத்து ஆண்டுக் காலமாக திறக்கப்படாமல் இருக்கிறது. இது மத்திய அமைச்சருக்குச் சொந்தமானது.

1990 மே 8]

தலைவர் அவர்களே, தயவு செய்து மணியடித்து விடாதீர்கள். இதிலே முக்கியமான 5 நிறுவனங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். தொழில் மானியத்தில் பேசுவதுபோல் பேசக்கூடாது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, அந்த ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் மத்திய அமைச்சருக்குச் சொந்தமானது. அதையும் திறப்பதற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 'லிக்விடேட்டர்' அந்தக் கம்பெனிக்குப் போட்டு இருக்கிறார்கள். எனவே அரசாங்கத்தின் உதவி கிடைத்தால், அதையும் திறக்க முறையாக முயற்சி செய்தால் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அடுத்து நியுசிட்டி நிறுவனம் பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். ஆகவே இதை எல்லாம் திறப்பதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : தலைவர் அவர்களே, எவரெஸ்ட் இன்ஜினியரிங் நிறுவனம், ஆட்டோஸ்மித், அழகர் இன்டஸ்ட்ரீஸ், ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் ஆகிய நான்கு நிறுவனங்களும் ஒரு கூட்டுப் பங்குதாரர்களின் அமைப்பாகும். இதில் மூன்று நிறுவனங்களில் மொத்தம் 330 தொழிலாளர்களும், நியுசிட்டி இன்ஜினியரிங் நிறுவனத்தில் மொத்தம் 182 தொழிலாளர்களும் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் தொழில் துறை, இன்டஸ்டிரியல் ரிகன்ஸ்ட்ரக்ஷன் பாங்க் ஆப் இந்தியாவிற்குப் பரிந்துரை செய்து, $2\frac{1}{4}$ கோடி ரூபாய் தேவை என்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். விரைவில் அந்தத் தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நியுசிட்டி இன்ஜினியரிங் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், கோவையில் இருக்கக்கூடிய 'ஏ டு இசட்'' என்ற ஒரு பெரிய நிறுவனம், இதை ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது. அவர்களும் வங்கியின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வங்கியின் உதவி கிடைத்ததற்கு பிறகு தொடர்ந்து செயல்படும். இதற்கிடையில் கோவையில் உள்ள தொழில் துறை ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தால்தான், வங்கி கடனுதவி தருவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எவரெஸ்ட் இன்ஜினியரிங் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலே ஒப்பந்தம் ஏற்பட்டும், இதுவரை அது திறக்கப் படாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்கி உடனடியாக திறக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா ? ராமகிருஷ்ணா இன்டஸ்டிரீசைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 400 தொழி லாளர்கள் நீண்டகாலமாக வேலை வாய்ப்பை இழந்து பலபேர் இறந்துவிட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : எவரெஸ்ட் இன்ஜினியரீங் நிறுவனம், அழகர் இன்டஸ்டிரீஸ், ஆட்டோ ஸ்மித், ராமகிருஷ்ணா இன்டஸ்டிரீஸ் ஆகிய இந்த நிறுவனங்கள் நிதி உதவி வேண்டி வங்கிகளை அணுகி இருக்கிறார்கள். ஆனால் நியுசிட்டி இன்ஜினியரிங் கம்பெனி இதுவரை நிதி வேண்டுமென்று எந்த நிதி நிறுவனத்திடமும் அணுகவில்லை. இருந்தாலும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இந்த நிறுவனம் மீண்டும் செயல்பட வேண்டுமென்ற நோக் கோடு வேறு நிறுவனங்களை அணுகி இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த இயலுமா என்று பரிசிலித்த நேரத்தில்தான், கோவையில் இருக்கிற இன்னொரு நிறுவனமான ‘ஏ டு இசட்’ நிறுவனம் வங்கி உதவி கிடைத்தால் இந்த நிறுவனத்தை தாங்கள் ஏற்று நடத்தலாம் என்று அவர்கள் ஆலோசனை தந்திருக்கிறார்கள். இந்த வங்கி சம்பந்தப்பட்ட தொழிலாளர் பிரச்சினை சிவில் நீதி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் தான் அந்த வழக்கு முடிந்தபின், வங்கிகள் நிதி உதவி தர இயலும் என்று தெரிவித்திருப்பதன் காரணமாக அந்த நிறுவனத்தை உடனடியாகத் திறப்பதற்கான வாய்ப்பு இப் போது இல்லை. அந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நட வடிக்கை, தொழில்துறை மூலமாக தொடர்ந்து எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற் சாலைகள் 4-ம் சேர்ந்து கூட்டு நிர்வாகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே இவைகளில் வேலை செய்த 1,000-பேரோ அல்லது 500 பேரோ அங்கே பணியாற்றிய தொழிலாளர்கள், திரு. நடராசன் அவர்கள் சொன்ன மாதிரி, ஒருவர் இறந்து விட்டார். சில பேர் இறக்கிற மாதிரி இருக்கிறார்கள். ஒரு தொழிலைத் தொடங்கும்போது பல பேர் வேலைக்குச் சேர்கிறார்கள். திடீரென்று வேலையை விட்டு அவர்களை விரட்டுவது, அல்லது தொழிற்சாலைகளை மூடுவது, அதன் காரணமாக பாதிப்பு

1990 மே 8]

ஏற்படாமல் இருப்பதற்கு, அதற்குக் காரணமாக அந்த நிறுவனம் இருந்தால் அதை உடனடியாக அரசாங்கம் எடுத்து நிர்வாகஸ்தர்களுக்குத் தண்டனை கொடுத்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் துறையின் மூலம் சான்றிதழ்கள் பெறுகிற நேரத்திலேயே, தொழில்கள் நடத்துவதற்கு ஆன சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்த பிறகு தான், சிறு தொழில்கள் தொடங்குவதற்கான அனுமதியே வழங்கப்படுகிறது. பல்வேறு காரணங்களால் அந்தத் தொழில் நலிவுறுகிறபோது, நலிவுற்ற தொழில்களை மீண்டும் புனர் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்கிறது. பல்வேறு நிதி நிறுவனங்கள் இப்படிப்பட்ட நலிவுற்ற தொழில்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் உதவியை நல்கி, தொழில் நசித்துவிடாமல் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கும் வகையில், நடவடிக்கைகளை மேற் கொள்கிறார்கள். அரசும், நிதி நிறுவனங்களும் எச்சரிக்கையாக இருந்தும் கூட தனியார் சிலர் அரசின் சலுகைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழிலைத் தொடங்குவதும், அதன் மூலம் கிடைக்கின்ற மூலதனத்தைக் கொண்டு வேறு ஒரு தொழிலுக்குத் தாவுவதும் இப்படி அவர்கள் திட்டமிடாமல் பணிகளை மேற்கொள்வதன் மூலமாகத்தான், அதன் காரணமாகத்தான், தொழில் துறையில் நலிவு ஏற்படுகிறது. இத்தகைய நலிவுகளைப் போக்குகிற வகையில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க, தொழில் துறை மூலமாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா.....

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அவையின் நடவடிக்கைகளைக் கடந்த 15 மாதங்களாகத் தாங்கள் கவனித்து வந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஒருவர் வினாக் கேட்டிருந்தால், 2 துணை வினாக்கள் அனுமதிக்கிறேன். இரண்டு பேர் கேட்டால் ஆளுக்கு ஒன்று அனுமதிக்கிறேன். 10 பேர் கேட்டாலும் ஆளுக்கு ஒன்று என்று அனுமதிக்கிறேன். இதுதான் இதுவரைக்கும் கடைபிடித்து வந்திருக்கிற நடைமுறை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு, அடுத்த வினாவுக்குப் போகிறேன்.

9-35 மணி

திரு. சோ. அழகர்சாமி : On a point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் கேட்டது தனித் தனிக் கேள்வியாக. அதை ஒன்றாகத் தாங்கள் இணைத்துவிட்டீர்கள். தனித் தனியாகக் கேட்டிருந்தும் நாங்கள் ஒவ்வொருவரும் கேட்டதையும் ஒன்றாக இணைத்ததன் காரணமாக ஒரே கேள்வி ஆகிவிட்டது. ஒரே கேள்வியில் விளக்கம் பெற முடியாது. கேள்விக்குப் பிரயோஜனமும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை 10 பேர் தனித் தனியாகக் கேட்கலாம். கேட்பதற்கு உரிமை உண்டு. உரிமை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கேள்வியைக் கேட்கிறபோது, 10 பேர் கேள்விக்கும் ஒன்றாகத்தான் விடை சொல்ல முடியுமே தவிர, தனித் தனியாக விடை சொல்ல முடியாது. அது இதுவரைக்கும் கடைப்பிடித்த நடைமுறைதான். அதை இப்போது மாற்ற முடியாது. உங்களுக்காக விதி விலக்கு என்று கொடுத்தால் பிற்காலத்தில் இதையே நான் கடைபிடிக்க வேண்டியிருக்கும். இது விதிவிலக்குதான். உங்களுக்குக் கொடுத்தால் அது விதி விலக்குதான். ஏனென்றால் இது 15 மாதங்களாக நான் கடைபிடித்து வருகின்ற முறை (குறுக்கீடு) இதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

பார்வையற்ற பட்டதாரிகள்

*1055 திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் அரசுப் பணியில் சேர சலுகை வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடல் ஊனமுற்றவர்கள் அரசு வேலை வாய்ப்புப் பெறுவதற்கு மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம், கை கால் ஊனமுற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம் வாய் பேச முடியாதவர்களுக்கு ஒரு சதவிகிதம் என்று வழங்கப்படுகிறது. இது தவிர, பார்வையற்றவர்களுக்கு வேறு எந்த தனிச்சலுகையும் இல்லை.

9–35 மணி

திரு. சோ. அழகர்சாமி : On a point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் கேட்டது தனித் தனிக் கேள்வியாக. அதை ஒன்றாகத் தாங்கள் இணைத்துவிட்டீர்கள். தனித் தனியாகக் கேட்டிருந்தும் நாங்கள் ஒவ்வொருவரும் கேட்டதையும் ஒன்றாக இணைத்ததன் காரணமாக ஒரே கேள்வி ஆகிவிட்டது. ஒரே கேள்வியில் விளக்கம் பெற முடியாது. கேள்விக்குப் பிரயோஜனமும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை 10 பேர் தனித் தனியாகக் கேட்கலாம். கேட்பதற்கு உரிமை உண்டு. உரிமை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கேள்வியைக் கேட்கிறபோது, 10 பேர் கேள்விக்கும் ஒன்றாகத்தான் விடை சொல்ல முடியுமே தவிர, தனித் தனியாக விடை சொல்ல முடியாது. அது இதுவரைக்கும் கடைப்பிடித்த நடைமுறைதான். அதை இப்போது மாற்ற முடியாது. உங்களுக்காக விதி விலக்கு என்று கொடுத்தால் பிற்காலத்தில் இதையே நான் கடைபிடிக்க வேண்டியிருக்கும். இது விதிவிலக்குதான். உங்களுக்குக் கொடுத்தால் அது விதி விலக்குதான். ஏனென்றால் இது 15 மாதங்களாக நான் கடைபிடித்து வருகின்ற முறை (குறுக்கீடு) இதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

பார்வையற்ற பட்டதாரிகள்

*1055 திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் அரசுப் பணியில் சேர சலுகை வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடல் ஊனமுற்றவர்கள் அரசு வேலை வாய்ப்புப் பெறுவதற்கு மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம், கை கால் ஊனமுற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம் வாய் பேச முடியாதவர்களுக்கு ஒரு சதவிகிதம் என்று வழங்கப் படுகிறது. இது தவிர, பார்வையற்றவர்களுக்கு வேறு எந்த தனிச்சலுகையும் இல்லை.

1990 மே 8]

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்கள் வாழ்க்கையில் ஒரு மனக் குறையோடு வாழ்ந்துக் கொண்டு, பட்டதாரி அளவிப் உயர்ந்திருக்கிறார்கள். ஒரு சதவிகிதம் குறைவாக இருப் பதால் அவர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பில் முன் உரிமை அளிக்கவும், அதே நேரத்தில் இந்த ஓராண்டுக் காலத் தில், கழக அரசில் பார்வையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள், கல்வித் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு, இப்படி ஒரு சிறப்புச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் வாய் பேச முடியாதவர்கள், காது கேளாதவர்களுக்கு இருக்கின்ற ஒரு சதவிகிதத்தையும் சேர்த்து பார்வையற்றவர்களுக்கு ஒதுக் கப்பட வேண்டுமென்று கல்வித் துறை கேட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்திற் குள் பார்வையற்றவர்களைப் பணியில் அமர்த்த இயலவில்லை யென்றால் அவர்களுக்கு மாதா மாதம் இவ்வளவு என்று உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. எஸ். எஸ். எல். சி, முடித்தவர்களுக்கு மாதம் 50 ரூபாய் என்று இருந்ததை பார்வையற்றவர்கள் மாண்புமிகு முதலமைச்சரைச் சந்தித்து விண்ணப்பம் கொடுத்த காரணத்தினால் எஸ். எஸ். எல். சி. படித்த வேலையற்றிருக்கிற பார்வையற்றவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகையும், பிளஸ் 2 முடித்து வேலை யற்றிருக்கிற பார்வையற்றவர்களுக்கு 150 ரூபாய் உதவித் தொகையும், வேலையற்றிருக்கிற பார்வையற்ற பட்டதாரி களுக்கு மாதம் 200 ரூபாயும் உதவித் தொகை வழங்கப்படு கிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்த பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய உயர் மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்ற 30-4-1990 அன்று கூட அவர்களுக்குப் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்களை அழைத்து எந்தெந்தத் துறையில் பார்வையற்றவர்களுக்கு எவ்வளவு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என்ற ஆலோசனையும் நடைபெற்றிருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் பார்வையற்றவர்களை அனைத்துத் துறைகளிலும் வேலைக்கு அமர்த்துவதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள், உடல் ஊனமுற்றவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்குப் பதிவு செய்துவிட்டு எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் பட்டியல் மட்டுந்தான் என்னிடத்தில் இருக்கிறது. 31-7-1989 அன்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலையில்லாமல் 132 பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே 106 பேர் ஆண்கள். 26 பேர் பெண்கள். அவர்களில் ஓராண்டுக்கு மேல் பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்கள் 45 வயது வரையோ அல்லது 5 வருடங்களுக்கோ வேலையற்றவர்களுக்கான நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள் உதகையிலுள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை போன்ற நிறுவனங்களில் இருட்டு அறையில் பணிபுரியும்போது பார்வையுள்ளவர்களை விட மிகச் சிறந்தமுறையில் பணிபுரிவதால் அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகளில் வேலை வாய்ப்புப் பெறுவதில் இருக்கின்ற 3 சதவிகித இட ஒதுக்கீட்டை தனியார் துறைகளிலும் பின்பற்ற வேண்டுமென்று அரசின் சார்பாக தனியார் துறைக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் மத்திய அமைச்சர் அவர்கள், த்திய அலுவலகங்களில் பார்வையற்றோருக்கு 3 சதவீதத்துக்குப் பதிலாக 4 சதவீதம் உடல் ஊன ற்றோர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து இருப்பதன் மூலம் மத்திய அரசு அலுவலகங்களிலும், மத்திய தொழில் துறைகளிலும் பார்வையற்றோர்களுக்குக் கூடுதலாக இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான வாய்ப்பு இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

9-40 மணி

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்களில் பொறியியல் துறையிலும் மருத்துவத் துறையிலும் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்களா? அப்படி இருக்கிறார்கள் என்றால், தமிழகத்திலே அவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களில் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பட்டம் பெற்றவர்களாக யாரும் தங்களைப் பதிவு செய்துகொள்ளவில்லை; பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் மட்டும் தான் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை வந்த போது அமைச்சர் அவர்கள் அந்தக் குழு அமைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது அந்தக் குழு கூடி இருக்கிறது. விரைவிலே பார்வையற்ற ஊனமுற்றவர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு அளித்து, இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப்படியான ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்ற சாதனையை அமைச்சர் அவர்கள் படைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அந்தச் சாதனையைப் படைக்க நிச்சயமாக முயற்சி எடுக்கும்.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை.

* 2259 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தற்போது 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இருக்கிறது. தற்போது 500-க்கு மேற்பட்ட வெளி நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல ஸ்ரீவைகுண்டத்தில் தாலுகா மருத்துவமனையிலே தினசரி கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட நோயாளிகள் படுக்கை வசதி இல்லாமல் வெளியிலே

1990 மே 8]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களில் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பட்டம் பெற்றவர்களாக யாரும் தங்களைப் பதிவு செய்துகொள்ளவில்லை; பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் மட்டும் தான் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை வந்த போது அமைச்சர் அவர்கள் அந்தக் குழு அமைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது அந்தக் குழு கூடி இருக்கிறது. விரைவிலே பார்வையற்ற ஊனமுற்றவர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு அளித்து, இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப்படியான ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்ற சாதனையை அமைச்சர் அவர்கள் படைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அந்தச் சாதனையைப் படைக்க நிச்சயமாக முயற்சி எடுக்கும்.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை.

* 2259 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தற்போது 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இருக்கிறது. தற்போது 500-க்கு மேற்பட்ட வெளி நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல ஸ்ரீவைகுண்டத்தில் தாலுகா மருத்துவமனையிலே தினசரி கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட நோயாளிகள் படுக்கை வசதி இல்லாமல் வெளியிலே

படுத்துக்கொண்டு சிகிச்சைப் பெறுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் தாலுகா மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்கு வழி வகுத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்திலே செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. மேலும் அதை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்கு 6 ஏக்கர் நிலமாவது தேவைப்படும். அந்த 6 ஏக்கர் நிலத்தை அங்கே இருக்கிற அந்த மருத்துவமனையில் பெறமுடியாது. வேறு இடத்துக்குத்தான் மருத்துவமனையை மாற்ற வேண்டிய சூழ் நிலை இருக்கிறது. அது குறித்து அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதப்பட்டு இருக்கிறது. 6 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்க முடியுமா என்று அவரிடம் கேட்கப்பட்டு இருக்கிறது. இதற்கிடையில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான சில கட்டிடங்களை மருத்துவ மனைக்கு மாற்றும்படி கோரிக்கை எழுப்பப்பட்டு இருக்கிறது. இவைகளை எல்லாம் கலந்தாலோசித்த பிறகு அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்காக அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் நகரப் பஞ்சாயத்திலே மண்கோட்டை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினர்கூட டெப்போ வைப்பதற்கு இடம் வாங்கி அதை அமைத்து இருக்கிறார்கள். அங்கே போதுமான இடம் இருக்கிறது. ஆகவே அரசு அந்த உரிமையாளர்களிடத்திலே நிலத்தை வாங்கி ஸ்ரீவைகுண்டம் தாலுகா மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரைச் சந்தித்து, நில உரிமையாளரையும் சந்தித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரானால் அது அரசுக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

1990 மே 8]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்துக்கு அருகில் இருந்து கொண்டிருக்கிற என்னுடைய சாத்தான்குளத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று வெகு நாட்களாக கோரிக்கை வைத்து இருக்கிறோம். அந்த மருத்துவமனை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவாவது ஆவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் மருத்துவமனையைப் பற்றிய அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் இப்படித் தனியாகக் கேள்வி கேட்கிற நிலைமையை உண்டாக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

*** 2520 திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கோட்டை தாலுகா தெற்குமேடு பஞ்சாயத்து பகுதியில் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது எடுப்பதற்கில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெற்குமேடு என்கிற கிராமம் புளியரை என்ற கிராமத்தோடு இணைந்து இருக்கிறது. ஒரே தெருவிலே ஒரு பக்கம் புளியரையும், இன்னொரு பக்கம் தெற்குமேடும் இருக்கிறது. தற்போது ஒரு பக்கம் மட்டும் பாதுகாக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தெருவிலே அடுத்த பக்கத்திலே இருக்கிற மக்களுக்கு அந்தத் தண்ணீர் வழங்கப்படவில்லை. எனவே அந்தப் பகுதியிலே சட்ட ஒழுங்குப் பிரச்சினைகூட வருவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை வேகமாகப் பரிசீலனைச் செய்து அமல்படுத்துவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்துக்கு அருகில் இருந்து கொண்டிருக்கிற என்னுடைய சாத்தான்குளத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று வெகு நாட்களாக கோரிக்கை வைத்து இருக்கிறோம். அந்த மருத்துவமனை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவாவது ஆவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் மருத்துவமனையைப் பற்றிய அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் இப்படித் தனியாகக் கேள்வி கேட்கிற நிலைமையை உண்டாக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

* 2520 **திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கோட்டை தாலுகா தெற்குமேடு பஞ்சாயத்து பகுதியில் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது எடுப்பதற்கில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெற்குமேடு என்கிற கிராமம் புளியரை என்ற கிராமத்தோடு இணைந்து இருக்கிறது. ஒரே தெருவிலே ஒரு பக்கம் புளியரையும், இன்னொரு பக்கம் தெற்குமேடும் இருக்கிறது. தற்போது ஒரு பக்கம் மட்டும் பாதுகாக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தெருவிலே அடுத்த பக்கத்திலே இருக்கிற மக்களுக்கு அந்தத் தண்ணீர் வழங்கப்படவில்லை. எனவே அந்தப் பகுதியிலே சட்ட ஒழுங்குப் பிரச்சினைகூட வருவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை வேகமாகப் பரிசீலனைச் செய்து அமல்படுத்துவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது குடிநீர் ஆதாரமே இல்லாத பகுதிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஓரளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களை அடுத்தக் கட்டமாக எடுத்துக் கொண்டு, அவற்றைச் செயற்படுத்த அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு, விரைவிலே அங்கே குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

9-45 மணி

சித்த வைத்தியக் கல்லூரி

* 5496 திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் சித்த வைத்தியக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொல்லிமலை மூலிகைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே அங்கே சித்த வைத்தியக் கல்லூரி அமைத்தால் படிப்பவர்கள் நேரடியாக மூலிகைகளைத் தெரிந்து கொண்டு, படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கே ஒரு சித்த வைத்தியக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தமிழகத்திலே 2 இடங்களிலே சித்த வைத்தியக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டையிலே ஒன்றும், பழனியிலே ஒன்றும் நடைபெற்று வருகின்றன. இருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை விரிவுபடுத்தி, அந்த மருத்துவ மனைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தத்தான் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதை அதிகப் படுத்துவதற்கான முயற்சிகளை அரசு பரிசீலிக்கும். இப்போது இந்த இரண்டு மருத்துவமனைகளையும் விரிவுப்படுத்தி, அவற்றைத் திறமையாகச் செயற்படுத்தவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது குடிநீர் ஆதாரமே இல்லாத பகுதிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஓரளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களை அடுத்தக் கட்டமாக எடுத்துக் கொண்டு, அவற்றைச் செயற்படுத்த அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு, விரைவிலே அங்கே குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

9-45 மணி

சித்த வைத்தியக் கல்லூரி

* 5496 திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் சித்த வைத்தியக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொல்லிமலை மூலிகைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே அங்கே சித்த வைத்தியக் கல்லூரி அமைத்தால் படிப்பவர்கள் நேரடியாக மூலிகைகளைத் தெரிந்து கொண்டு, படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கே ஒரு சித்த வைத்தியக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தமிழகத்திலே 2 இடங்களிலே சித்த வைத்தியக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டையிலே ஒன்றும், பழனியிலே ஒன்றும் நடைபெற்று வருகின்றன. இருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை விரிவுபடுத்தி, அந்த மருத்துவ மனைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தத்தான் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதை அதிகப் படுத்துவதற்கான முயற்சிகளை அரசு பரிசீலிக்கும். இப்போது இந்த இரண்டு மருத்துவமனைகளையும் விரிவுப்படுத்தி, அவற்றைத் திறமையாகச் செயற்படுத்தவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

1990 மே 8]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று தற்போது பழனியிலே நடந்து வருகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. எங்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்னால் ஒரு வீட்டிலே அவர்கள் ஹாஸ்டலிலே தங்கி இருக்கிறார்கள், மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தக் கல்லூரியை வேறு ஊருக்கு மாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம்கூட போன மாதத்தில் இருந்தார்கள். அங்கே பயிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் விடுதி வசதிகளை தனித் தனியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியை சென்னைக்கே கொண்டு வர வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துகொள்வாரா என்பது என்னுடைய வினா. அவர் ஒத்துக்கொள்ள மாட்டார் என்று எண்ணுகிறேன். அதற்காக அரசு நடவடிக்கை எடுத்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அறநிலையத் துறையோடு பேசி அங்கே உள்ள சத்திரத்தை விடுதியாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம். மேலும் அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கல்லூரி 1985 லே துவக்கப்பட்டு அங்கே நில ஆர்ஜிதத்திற்கு எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாத சூழ்நிலையில், இந்த ஆண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக அறநிலையத் துறையோடு பேசி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட்டில் பங்கும் அளித்தல்.

* 2026 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட்டில் பங்கும் அளிக்கும் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும்?

1990 மே 8]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று தற்போது பழனியிலே நடந்து வருகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. எங்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்னால் ஒரு வீட்டிலே அவர்கள் ஹாஸ்டலிலே தங்கி இருக்கிறார்கள், மிகவும் சிரமப்படுகிறார் கள். அந்தக் கல்லூரியை வேறு ஊருக்கு மாற்ற வேண்டு மென்று ஒரு கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம்கூட போன மாதத்தில் இருந்தார்கள். அங்கே பயிலும் ஆண்களுக்கும், பெண் களுக்கும் விடுதி வசதிகளை தனித் தனியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கை என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியை சென்னைக்கே கொண்டு வர வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துகொள்வாரா என்பது என்னுடைய வினா. அவர் ஒத்துக்கொள்ள மாட்டார் என்று எண்ணுகிறேன். அதற்காக அரசு நடவடிக்கை எடுத்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அறநிலையத் துறையோடு பேசி அங்கே உள்ள சத்திரத்தை விடுதியாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம். மேலும் அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கல்லூரி 1985 லே துவக்கப்பட்டு அங்கே நில ஆர்ஜிதத்திற்கு எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாத சூழ்நிலையில், இந்த ஆண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக அறநிலையத் துறையோடு பேசி ஏற்பாடுகளைச் செய்து கொண் டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட்டில் பங்கும் அளித்தல்.

* 2026 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட் டில் பங்கும் அளிக்கும் திட்டத்தை அரசு எப்போது நிறை வேற்றும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்பது என்பது தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். மாநில அரசு, இத்திட்டத்தை சட்ட பூர்வமாக அமுல்படுத்த தற்போது வழி வகையில்லை, ஆயினும் மத்திய அரசு இது குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வர உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

தனியார் பஸ் தொழிலாளர் சங்கக் கோரிக்கை.

* 3533 திரு. செ. நூர்முகமது :

திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்திடமிருந்து பணி பாதுகாப்பு, ஊதிய மாற்றம் மற்றும் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்து 10—2—1989 அன்று கோரிக்கை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் இது குறித்துப் பதில் சொல்லுகின்றபோது இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வரவில்லை என்ற முறையில் பதிலளித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 10—2—1989 ல் தனியார் போக்குவரத்திலே பணி புரியக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலே பணி புரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளம், சலுகைகள் எல்லாம் ஓரளவு நியாயமாகக் கிடைக்கும் நிலையில், தனியார் போக்குவரத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியில், ஒரு சலுகைகூட இல்லாமல், நிரந்தரமற்ற முறையில், கொத்தடிமைகளைவிட கேவலமான நிலையில் வாழ்ந்து

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்பது என்பது தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். மாநில அரசு, இத்திட்டத்தை சட்ட பூர்வமாக அமுல்படுத்த தற்போது வழி வகையில்லை, ஆயினும் மத்திய அரசு இது குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வர உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

தனியார் பஸ் தொழிலாளர் சங்கக் கோரிக்கை.

* *3533* திரு. செ. நூர்முகமது :

திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்திடமிருந்து பணி பாதுகாப்பு, ஊதிய மாற்றம் மற்றும் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்து 10—2—1989 அன்று கோரிக்கை மனு ஒன்று அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் இது குறித்துப் பதில் சொல்லுகின்றபோது இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வரவில்லை என்ற முறையில் பதிலளித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 10—2—1989 ல் தனியார் போக்குவரத்திலே பணி புரியக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலே பணி புரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளம், சலுகைகள் எல்லாம் ஓரளவு நியாயமாகக் கிடைக்கும் நிலையில், தனியார் போக்குவரத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலியில், ஒரு சலுகைகூட இல்லாமல், நிரந்தரமற்ற முறையில், கொத்தடிமைகளைவிட கேவலமான நிலையில் வாழ்ந்து

1990 மே 8]

கொண்டிருக்கிறார்கள். நான் உங்களைப் பார்த்து வேண்டிக் கொள்வதெல்லாம், நம்முடைய அரசு எப்போதெல்லாம் கட்டணத்தை உயர்த்துகிறதோ அப்போதெல்லாம் அவர்களும் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிக்கிறோம். அவர்கள் அதிகமான லாபத்தை ஈட்டுகிறார்கள். எனவே நம்முடைய கழகம் கொடுக்கும் சம்பளம், சலுகைகளை ஏனைய தனியார் நிறுவனங்களும் கொடுக்க முடியாதா? எனவே அதற்கு ஏதேனும் உத்தரவிட்டு, அரசு கழகங்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், சலுகைகள் தனியார் போக்குவரத்திலும் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி அரசு கராராக அதை அமல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இது போல ஒரு கடிதம் *10—2—1989* வரவில்லை என்று தெரிவித்தபோது, அவர்களுக்கு தெரிந்தளவில் கடிதம் எழுதி இருப்பதாக அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். *10—2—1989* அன்று அரசுக்கோ அல்லது தொழிலாளர் ஆணையருக்கோ தனியார் பஸ் தொழிலாளர் சங்கத்தின் சார்பாகக் கடிதம் ஏதும் வரவில்லை. ஆனால் *27—8—1988, 5—9—1988, 25—9—1988, 10—10—1988, 29—3—1989* ஆகிய நாட்களில் சங்கங்களிலிருந்து ஆணையருக்குக் கடிதம் பெறப்பட்டது. அப்படி அந்தச் சங்கங்களிலிருந்து கடிதம் பெறப்பட்டதனைக் காரணமாக வைத்து துணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் கொண்ட குழுவை அமைத்து, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் இருக்கின்ற, திருநெல்வேலியில் இருக்கின்ற 11 கம்பெனிகளிலும், தூத்துக்குடியில் இருக்கின்ற 3 பஸ் கம்பெனிகளிலும் ஆய்வு செய்யச் சொல்லப்பட்டது. அவர்கள் ஆய்வு செய்து, அங்கு தொழிற்சங்கங்களுக்கும், அங்கு பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய தொழிற்சங்கத்திற்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, குறைந்த பட்ச ஊதியமும் அவர்களுக்குத் தர வேண்டிய சீருடைகளெல்லாம், காலணியெல்லாம் வழங்கப்பட்டது என்று அறிவித்து இருக்கின்றனர். மேலும், திருநெல்வேலியில் இருக்கின்ற கணபதி மோட்டார்ஸ், கணபதி டிரான்ஸ்போர்ட் போன்ற நான்கு நிறுவனங்களில் அங்கிருந்து ஒரு மனு வரப்பெற்று அவைகளை ஆய்வு செய்யப்பட்டதில் அந்த நிறுவனம் அவர்களுக்குச் சரியான முறையில் குறைந்தபட்சக் கூலியும் மற்ற சீருடை, காலணியெல்லாம் வழங்கவில்லை என்று தெரிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாச் சட்டம், நிலை ஆணைச் சட்டம், சேவைக் கால விதிகளைப் பகிரங்கமாக மீறி வருகிறார்களே அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டனவா? ஆமெனில், எத்தனை நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பஸ் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் நமது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிச்சயமாக வருவார்கள். அப்படித் தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த பஸ் கம்பெனியிலாவது, குறிப்பிட்டு அவர்கள் இது போல அமல்படுத்தவில்லை என்று தெரிவிப்பார்களானால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே இதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு முறை தனியார் பஸ் தொழிற்சங்கம் சார்பாக மனுக்கள் தரப்பட்டு, மனு தரப்பட்ட இடங்களில் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு அங்கு யார் யார் மீறியிருக்கிறார்களோ அவர்கள் மீது அரசின் விதி எண் 36 மற்றும் 35-இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எந்தத் தனியார் பஸ் நிர்வாகத்தினராக இருந்தாலும், குறைந்தபட்ச ஊதியமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் அரசின் சார்பாகச் சட்ட விதிகளின்படி கிடைக்கக் கூடிய விதிகளின்படி கிடைக்கவில்லை என்றால் நிச்சயமாக அரசின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' பத்திரிகை

* 5808 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

'தமிழரசு' பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழரசு" பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கும் நடவடிக்கை குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தனியார் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்று கின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாச் சட்டம், நிலை ஆணைச் சட்டம், சேவைக் கால விதிகளைப் பகிரங்க மாக மீறி வருகிறார்களே அவர்கள் மீது சட்டபூர்வமான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டனவா? ஆமெனில், எத் தனை நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பஸ் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் நமது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிச்சயமாக வருவார்கள். அப்படித் தமிழ்நாட்டில் இருக் கின்ற எந்த பஸ் கம்பெனியிலாவது, குறிப்பிட்டு அவர்கள் இது போல அமல்படுத்தவில்லை என்று தெரிவிப்பார்களானால் உட னடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே இதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு முறை தனியார் பஸ் தொழிற்சங்கம் சார்பாக மனுக்கள் தரப்பட்டு, மனு தரப்பட்ட இடங்களில் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு அங்கு யார் யார் மீறியிருக்கிறார்களோ அவர்கள் மீது அரசின் விதி எண் 36 மற்றும் 35-இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எந்தத் தனியார் பஸ் நிர்வாகத்தினராக இருந்தாலும், குறைந்த பட்ச ஊதியமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் அரசின் சார்பாகச் சட்ட விதிகளின்படி கிடைக்கக் கூடிய விதிகளின்படி கிடைக்கவில்லை என்றால் நிச்சயமாக அரசின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘தமிழரசு’ பத்திரிகை

* 5808 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

‘தமிழரசு’ பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங் களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழரசு” பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங் களுக்கும் இலவசமாக வழங்கும் நடவடிக்கை குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மே 8]

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''தமிழரசு'' பத்திரிகை எத்தனை பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன? அது இலாபத்தில் ஓடுகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, * * முதல்வர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு ''தமிழரசு'' பத்திரிகை ஒரு இலட்சம் பிரதிகள் இன்றைக்கு....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவரவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுச் சொல்லி விடையோ அல்லது வினாவோ இருக்கக் கூடாது என்பது நியதி. எனவே, அந்தக் குறை சொன்ன வாக்கியத்தை அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்தப் பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது ஒரு இலட்சம் பிரதிகள் விற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும்—தமிழில் ஒரு இலட்சம் பிரதிகளும், ஆங்கிலத்தில் பத்தாயிரம் பிரதிகளும் விற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசுச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள் போன்றவர்களுக்கு 1,500 பிரதிகள் வரை இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இப்போழுது இருக்கின்ற நிதிநிலைமையில் மற்றவர்களுக்கெல்லாம் இலவசமாக வழங்குவதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழரசு' பத்திரிகை இன்றைக்குப் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நூலகங்களுக்கு வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டு, பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் வழங்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் வழங்கப்படவேண்டுமென்றுதான் அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்கள் அவ்வாறு வழங்கவில்லை என்றால் அரசின் சார்பாக அவர்களுக்கு வழங்கச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1990 மே 8

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு என்று அந்தத் தமிழரசு பத்திரிகையில் 2, 3 பக்கங்கள் ஒதுக்கி, அவற்றைப் போடுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9–55 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களை மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாப்புக் காவலர்கள்.

*6752 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாதுகாப்புக் காவலர்களாகப் பணியாளர்களை காண்ட்ராக்ட் முறையில் தொழிலகங்களுக்கு அனுப்பும் ஏஜென்சி நிறுவனங்களின் ஊழியர்களுடைய பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய நிர்ணயம் தொடர்பாகச் சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது போன்ற ஏஜென்சி நிறுவனங்களை காவல் துறையின் துணை அமைப்பாக அரசே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு கே. என். நேரு: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், தொழிற் நிறுவனங்களிலும், தனியார்களின் கீழ் பாதுகாவலர்களாக பணி புரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினையும், பணிநிலை மைகளையும் முறைப்படுத்துவதற்கும், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்பதற்கு வேண்டி தனியாகவே சட்டமொன்றை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றதும், அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

(ஆ) இல்லை. இதற்கென தனி வாரியம் ஒன்றை அமைத்து அதன் வாயிலாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பணியில் ஈடுபடக்கூடிய தனியார் நிறுவனங்களை பெரும்பாலும் காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நடத்தி வருகிறார்கள். அங்கே அந்த ஊழியர்களுக்கு எந்தவிதமான பணி பாதுகாப்போ அல்லது உத்தரவாதமான கூலியோ இல்லாத

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு என்று அந்தத் தமிழரசு பத்திரிகையில் 2, 3 பக்கங்கள் ஒதுக்கி, அவற்றைப் போடுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9–55 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களை மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாப்புக் காவலர்கள்.

*6752 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாதுகாப்புக் காவலர்களாகப் பணியாளர்களை காண்ட்ராக்ட் முறையில் தொழிலகங்களுக்கு அனுப்பும் ஏஜென்சி நிறுவனங்களின் ஊழியர்களுடைய பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய நிர்ணயம் தொடர்பாகச் சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது போன்ற ஏஜென்சி நிறுவனங்களை காவல் துறையின் துணை அமைப்பாக அரசே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு கே. என். நேரு: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், தொழிற் நிறுவனங்களிலும், தனியார்களின் கீழ் பாதுகாவலர்களாக பணி புரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினையும், பணிநிலை மைகளையும் முறைப்படுத்துவதற்கும், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்பதற்கு வேண்டி தனியாகவே சட்டமொன்றை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றதும், அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

(ஆ) இல்லை. இதற்கென தனி வாரியம் ஒன்றை அமைத்து அதன் வாயிலாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பணியில் ஈடுபடக்கூடிய தனியார் நிறுவனங்களை பெரும்பாலும் காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நடத்தி வருகிறார்கள். அங்கே அந்த ஊழியர்களுக்கு எந்தவிதமான பணி பாதுகாப்போ அல்லது உத்தரவாதமான கூலியோ இல்லாத

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8]

அவல நிலை நீடிக்கிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் பணிப் பாதுகாப்பும், ஊதிய நிலையில் முன்னேற்றமும் ஏற்படுவதற்கான இந்தச் சட்டத்தை விரைவில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கான சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மொத்தம் 52 பாதுகாப்பு நிறுவனங்களில் கிட்டத்தட்ட 61,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் மகாராஷ்டிராவில் மட்டும்தான் இவர்களுக்கு என்று தனியாக ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இதுபோன்ற கோரிக்கைகள் வந்த பிறகு, ஆணையர், துணை ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர்களை மகாராஷ்டிராவிற்கு அனுப்பி, அந்தச் சட்டத்தின் மூலம் அந்தத் தொழிலாளர்கள் நல்லமுறையில் பயன்பெறுகிறார்களா என்பதை அறிந்து வரச் செய்து, அவர்கள் சென்று நல்லமுறையில் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்து இன்றைக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக தற்கென ஒரு சட்டமுன்வடிவை இயற்றி, முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலையும் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசின் அனுமதி பெறப்பட்ட பிறகு —இந்தக் கூட்டத் தொடரிலேயே என்று சொல்ல முடியாது. மத்திய அரசு அனுமதி தந்தவுடன் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, இந்த ஏஜென்சி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 61,000 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவற்றை ஒரே அமைப்பாக ஒன்று படுத்தவும்—காவல் துறையினுடைய துணை அமைப்பு என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். இருந்தாலும் ஒரு வாரியம் என்ற அடிப்படையில் ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய முறையில், அவர்களுக்கு நிச்சயமான ஊதியமும், தேவையான ஓய்வுகாலமும் உட்பட பணி நிலைமைகள் கிடைப்பதற்கான ஏற்பாட்டை விரைவாகச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே இப்போது தான் மத்திய அரசின் இசைவு பெற்றவுடன் இவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு என்றே தனியாகவே ஒரு சட்டம் இந்த அரசின் சார்பாக அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னேன். அப்படி சட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால் நிச்சயமாக இவர்களுக்கு வழங்க வேண்டிய அத்தனை சலுகைகளும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தனமரத் திருடர்களால் கடத்தப்பட்ட அதிகாரிகள்.

*6803 திரு. கே. ரமணி:
திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், வனப்பிரதேசமான பர்கூரில் 6-8-1989-ல் சந்தன மரங்களை திருடிக்கொண்டு போகும் கும்பல் ஒன்று இரண்டு வனத்துறை அதிகாரிகளையும் வேறு இரண்டு நபர்களையும் சேர்த்து நான்கு பேர்களையும் கடத்திக்கொண்டு போயுள்ளது பற்றி அரசுக்கு புகார் கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீட்கவும், திருட்டுக் கும்பலைப் பிடிக்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். வனத்துறைக்குப் புகார் வந்தது.

(ஆ) கடத்திச் செல்லப்பட்ட நான்கு பேர்களில், இரண்டு பேர் வனத்துறை அதிகாரிகள், மற்றும் இரண்டு பேர் பொது மக்களாவர். அதில், ஒருவர் முதலிலேயே தப்பி ஓடிவந்து வனத்துறை அதிகாரிகளிடம் விவரம் தெரிவித்தார். மீதி மூன்று பேர்களும் கடத்தல்காரர்களால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் 24-8-1989 அன்று கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கொலைக்காரர்களை காட்டுக் கொள்ளையர்களை பிடிக்க காவல்துறையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சந்தன மரங்களைத் தனியார் திருடிக்கொண்டு செல்வதோடு, இன்றைக்கு சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற வன அதிகாரிகளே தேக்கு மரங்களையும், ஈட்டி மரங்களையும், சந்தன மரங்களுக்கு ஈக்குவலான மரங்களை, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ளதை, சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற மலைப்பகுதி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே இப்போது தான் மத்திய அரசின் இசைவு பெற்றவுடன் இவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு என்றே தனியாகவே ஒரு சட்டம் இந்த அரசின் சார்பாக அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னேன். அப்படி சட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால் நிச்சயமாக இவர்களுக்கு வழங்க வேண்டிய அத்தனை சலுகைகளும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தனமரத் திருடர்களால் கடத்தப்பட்ட அதிகாரிகள்.

*6803 திரு. கே. ரமணி:
திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், வனப்பிரதேசமான பர்கூரில் 6-8-1989-ல் சந்தன மரங்களை திருடிக்கொண்டு போகும் கும்பல் ஒன்று இரண்டு வனத்துறை அதிகாரிகளையும் வேறு இரண்டு நபர்களையும் சேர்த்து நான்கு பேர்களையும் கடத்திக்கொண்டு போயுள்ளது பற்றி அரசுக்கு புகார் கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீட்கவும், திருட்டுக் கும்பலைப் பிடிக்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். வனத்துறைக்குப் புகார் வந்தது.

(ஆ) கடத்திச் செல்லப்பட்ட நான்கு பேர்களில், இரண்டு பேர் வனத்துறை அதிகாரிகள், மற்றும் இரண்டு பேர் பொது மக்களாவர். அதில், ஒருவர் முதலிலேயே தப்பி ஓடிவந்து வனத்துறை அதிகாரிகளிடம் விவரம் தெரிவித்தார். மீதி மூன்று பேர்களும் கடத்தல்காரர்களால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் 24-8-1989 அன்று கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கொலைக்காரர்களை காட்டுக் கொள்ளையர்களை பிடிக்க காவல்துறையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சந்தன மரங்களைத் தனியார் திருடிக்கொண்டு செல்வதோடு, இன்றைக்கு சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற வன அதிகாரிகளே தேக்கு மரங்களையும், ஈட்டி மரங்களையும், சந்தன மரங்களுக்கு ஈக்குவலான மரங்களை, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ளதை, சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற மலைப்பகுதி

1990 மே 8]

களிலிருந்து—அதாவது சேர்மானம், சல்லபாளையம் போன்ற பகுதிகளிலிருந்து—கடத்தப்பட்ட மரங்களைக் கூட பறக்கும் படை அதிகாரிகள் பிடித்து, 3, 4 பேர்களை, கார்டு, வாட்சர் பாரஸ்டராக இருப்பவர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அதிலே தவறு செய்தவர் பாரஸ்ட் ரேஞ்சர் என்று கருதுகிறோம்.

(10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள். குற்றச்சாட்டு வேண்டாம்.

பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கூட அது வந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது தனியார்களைவிட அரசு வன இலாக்காவிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருக்கிற காரணத்தால், அவர்கள் தப்பித்திருக்கின்ற அந்த அதிகாரிகள் மீது தனிக் கவனம் செலுத்தி, மீண்டும் பரிசீலித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல வனத்துறையினுடைய சில அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஆனால் இது இன்றைக்கு நடைபெறுவதல்ல. கடந்த 15 ஆண்டுகளாக இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்று, அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அவைகளைக் களைந்து எறிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கடத்திச் சென்று கொலை செய்தவர்கள் இந்த மாயாவி, வீரப்பனுடைய கும்பலைச் சார்ந்தவர்களா, அல்லது தனியார் வேறு ஏதாவது கும்பலைச் சார்ந்தவர்களா என்று சொல்கிற துப்பு ஏதாவது இதுவரை கிடைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. தூ.க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலால் கடத்தப்படுகிறது என்றும் கொலை செய்தார்கள் என்றும் சொல்கிறார்கள். அதைப்

போல இப்போது அந்தப் பகுதியிலே பலர் அவர்களது பெயரை வைத்து மரங்களைக் கடத்திச் செல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலைச் சார்ந்தவர்கள் கடத்தியபோது, அங்கேயே மலையிலே வாழ்கின்ற மலைவாசிகளுடைய உதவியைக் கொண்டுதான் அவர்கள் கடத்திச் சென்றார்கள். ஆகவே வீரப்பனும் அவர்களுடைய நண்பர்களும் ஒரு கட்டுக்குள் கொண்டு வரப்படுகிறபோது, ஏற்கனவே அவர்களோடு ஒத்துழைத்த மலைவாசி மக்கள் அங்கே இருக்கிறார்கள். ஆகவே சிறுகச் சிறுக இந்தக் கடத்தல் தொழில் குறைந்துவருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தனக் கட்டைகளைக் கடத்துவதைத் தடுப்பதற்கு வனத்துறை அதிகாரிகளால் முடியவில்லை என்ற நிலையில், அங்கே அதிக அளவில் காவல் துறையினரை நியமனம் செய்து, கடுமையான தண்டனை வழங்குவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன். காஷ்மீர், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் எல்லாம் இருப்பதைப் போன்று வனத்துறையிலே வனக் காடுகளை வளர்ப்பதற்கும், அதைப்போல காடுகளைப் பாதுகாப்பதற்கும், எக்காலஜிகல் பட்டாலியன் என்ற ஓர் அமைப்பை இங்கே அமைக்க ஒரு கருத்து பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தனக் கட்டைகளைக் கடத்துகின்றவர்கள் எல்லாம் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வனத்துறை அதிகாரிகளைச் சுட்டு வீழ்த்துவது என்கிற நிலை நீடித்துக் கொண்டிருக்கிற காரணத்தால், வனத்துறை அதிகாரிகளுக்கு நவீனத் துப்பாக்கிகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வனத்துறை அதிகாரிகளுக்கும் துப்பாக்கிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(அ) இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டுமென்று இலங்கை அமைச்சர் பேசியுள்ளது குறித்தும் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டமும் நடவடிக்கைகளும் இருப்பதாகக் கூறப்படுவது குறித்தும்.

* திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய இசைவோடு இரண்டு முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

ஒன்று, இலங்கை அரசினுடைய தோட்டத் தொழிலாளர் துறை அமைச்சர் மாண்புமிகு ரஞ்சன் விஜயரத்னே, அண்மையில் வெளியிட்டு இருக்கக்கூடிய கருத்து, அங்கே இருக்கக்கூடிய சுமார் 1 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றும், அவர்கள் திரும்பிச் செல்லாவிட்டால், அவர்களுக்கு இலங்கையிலே வேலை வாய்ப்பு மறுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசினுடைய தலைவராக இருக்கக்கூடிய திரு. தொண்டமான் அவர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய அந்தத் தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் இந்தியாவிற்குத் திரும்பி வர விருப்பம் தெரிவிக்கவில்லை. அவர்களுடைய மூதாதையர்கள், பெற்றோர்கள் அல்லது பாட்டனார்கள் தெரிவித்திருப்பார்களே தவிர, இவர்கள் அங்கே தான் தங்க விரும்புகிறார்கள், இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு கூடிய கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தபோது மாண்புமிகு இலங்கை அமைச்சர் அவர்கள், இவர்கள் யார் இந்த இந்தியக் குடிமக்களாக இருக்கிற, இந்தியப் பிரஜைகளாக இருப்பவர்களைப் பற்றிப் பேசுவதற்கு என்று கடுமையாகக் கேட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், அதன் காரணமாக இலங்கை அரசியலிலே ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்படக் கூடும் என்று கேட்டபோது, அதைப்பற்றிக் கவலையில்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக அங்கே ஒரு கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இன்னொரு கருத்துக்கூட அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. 1983 முதல் அங்கே இலங்கைக் குடிமக்களாக இருப்பவர்கள் இந்தியாவிற்கு ஏராளமாகத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையோடு சரி செய்து, அங்கே தங்க விரும்பக்கூடிய தோட்டத் தொழிலாளர்களை அங்கே தங்க வைக்கலாம் என்ற அணுகுமுறையைக் கூட அவர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலைமை ஏற்படுவதற்கு மத்திய அரசோடு கலந்து பேசி, மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். இது ஒன்று.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 மே 8

(10-05 மணி)

இரண்டு, நேற்றைய தினம் நாடாளுமன்றத்திலேயும் எழுப் பப்பட்டிருக்கக் கூடிய ஒரு நிலை, இன்றைய பத்திரிகைச் செய்தியிலே வந்திருக்கக் கூடியது, தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகள் எல்.டி.டி. யினர் ஊடுருவி விடாமல் எச்சரிக்கையாக இருக்குமாறு மாநில அரசை மைய அரசினுடைய உள்துறை கோரியுள்ளதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இது குறித்து ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரத்திலேயே தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் மற்றும் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஆகியோருடன் உள்துறைச் செயலாளர் தொடர்பு கொண்டு பேசியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த விடு தலைப் புலிகள் தமிழ்நாட்டில் உள்ள அரசு அதிகாரிகளை, சுங்கத் துறை அதிகாரிகளை, இமிகிரேஷன் அதிகாரிகளை எல்லாம் மிரட்டுவதாகவும் கூட அங்கே நாடாளுமன்றத்திலே செய்திகள் கூறப்பட்டுள்ளன. அதை இன்னும் கொஞ்சம் மிகைப்படுத்தி தமிழகமே புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள்ளே வந்துவிட்டது என்றும், தமிழ்நாட்டில் புலிகள் நடமாட்டத்தால் பஞ்சாப் போன்ற நிலைமை உருவாகிவிடும் என்றெல்லாம் கூட நாடாளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மிகை யான குற்றச்சாட்டுகளில் சில அரசியல் உள்நோக்கம் இருக்க லாம். இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினையிலே மாநில அரசிற்கும் மைய அரசிற்கும் ஒரு வித்தியாசமான அணுகுமுறை இருப்பது போன்ற ஒரு தோற்றம் எழுந்திருக்கிறது. எனவே தமிழகத்திலே விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம், நட வடிக்கைகளைப் பற்றி இந்த அரசு எச்சரிக்கையாகவும், கண் காணிப்பாகவும் இருக்க வேண்டும்.

இதே அவையிலே மீனவர்கள் கடத்தலைப் பற்றி வந்த போது, தமிழக முதலமைச்சர் அவர்கள் புலிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் இதிலே கொஞ்சம் கண்காணிப்பாகவும், கறாராகவும் இருக்கவேண்டு மென்பதை வலியுறுத்தி அதைப்பற்றி விரிவான விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு ஒரு சிறு விளக் கத்தைத் தெரிவிக்கின்றேன்.

1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் நாள் அன்றைய நிலவரப்படி நாடற்றவர்களாகக் கருதப்பட்ட 9.75 இலட்சம் பேர் இலங்கையிலே இருந்தவர்கள், அவர்கள் இந்திய மக்களின் வழிவந்தவர்களாகையால் இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையே 31—10—1984 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இது 1965-ஆம் ஆண்டு சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்று 31—10—1984-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

5.25 இலட்சம் பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா ஒப்புக் கொண்டது. அதாவது இங்கே திருப்பி அழைத்துக்கொள்ள இந்தியா ஒப்புக்கொண்டது. பின்னர், 27—1—1974-அன்று உருவாக்கப்பட்ட பிறிதொரு ஒப்பந்தப்படி மேலும் 75,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா-இலங்கை ஏற்கனவே ஒப்புக்கொண்டன. இவ்வாறு இரண்டு ஒப்பந்தங்களின் அடிப் படையில், 6 இலட்சம் பேரை இந்தியா எடுத்துக்கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது. 6 இலட்சம் பேர் என்றால், அப்படி ஒப்பந்தம் ஆனபிறகு அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் அதையும் சேர்த்து, அதைத்தான் அவர்கள் இயற்கை உற்பத்தி யுடன் என்று இணைத்துச் சொல்கிறார்கள். அவர்களையும் சேர்த்து, 6 இலட்சம் பேரை சேர்த்து எடுத்துக்கொள்வது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையில் இலங்கையில் ஏற்பட்ட 1983-ஆம் ஆண்டு இனக் கலவரத்தையொட்டி 1986-ல் மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது மேலும் 94,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு ஒப்புக்கொண்டது. எனவே, இந்தியா எடுத்துக்கொள்ள வேண்டிய மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்திலிருந்து 5.06 இலட்சமாகக் குறைந்தது. இதுவரையில் 3.34 இலட்சம் பேர் இன்றைக்கு இந்தியாவிற்குத் திரும்பியிருக்கிறார்கள். மேலும் திரும்ப வேண்டியவர்கள் என்று இலங்கை அரசு கூறுவது 1.72 இலட்சம் பேர். அதாவது அவர்களுடைய இயற்கை அதிகரிப்போடு 1.72 இலட்சம் இருந்தாலும், பிறகு அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தால், அவர்களையும் சேர்த்து அவர்கள் இந்தியாவிற்குத் திரும்ப வேண்டுமென்ற ஒரு நிலை. இதற் கிடையே நம்முடைய உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டிய தைப்போல இலங்கை அமைச்சர் அங்குள்ள நாடற்றவர்கள் என்று கருதப்படுகின்ற ஏறத்தாழ $1\frac{3}{4}$ இலட்சம் அல்லது 2 இலட்சம் பேரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். இந்தச் சூழ் நிலையிலே இந்தியா, அதிலும் குறிப்பாக தமிழ்நாடு தான் அந்தப் பெரும் சுமையைத் தாங்கவேண்டுமென்ற நிலையில் ஏற்பதற்கு நாம் தயார் நிலையிலே இல்லை. காரணம் ஈழத் தமிழர் பிரச்சினையால் 1983 முதல் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக இருக் கிறார்கள்.

(10-10 மணி)

இது குறித்து ஏற்கனவே முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட இந்தியப் பிரதமருக்கு 22—2—1986ல் எழுதிய கடிதத்தில் திட்டவட்டமாக அதிலே கூறியிருக்கிறார். இங்கே உள்ள இலங்கை அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் அங்கிருந்து வருகின்ற தமிழர்களை ஏற்பது பற்றி யோசிக்க முடியும் என்று இந்தியப் பிரதமருக்கு ஏற்கனவே முன்னாள் முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார். அதே நிலைதான் இன்றைக்கு இந்த அரசும் எடுக்கின்ற திட்டவட்டமான நிலையாகும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 8

அப்படியே ஏற்பதாக இருந்தாலும் திடீரென்று லட்சத்திற்கு மேற்பட்டவர்களை தமிழகத்திலே குறிப்பாக, இந்தியாவிலே ஏற்றுக்கொள்வது என்பதும் அவர்களை வைத்து சமாளிப்பது, அவர்களுக்கு வாழ்வு அளிப்பது, மறுவாழ்வு தருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. சிறிது, சிறிதாகத்தான் அவர்களை நாம் ஏற்றுக்கொள்ள இயலும். இருந்தாலும் இங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் ஒரு இலட்சம் பேர் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் அதை நம்மால் யோசிப்பதற்கே இயலும். இதை மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். நம்முடைய தலைமைச் செயலாளர் நேரடியாகவே டெல்லிக்குச் சென்று இந்தக் கருத்தை அங்குள்ள செயலாளரிடத்திலே அறிவித்திருக்கிறார். அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது மனிதாபிமான அடிப்படையிலே செய்யப்பட வேண்டிய ஒன்று, எனவே ''ரிபேட்ரியாட்ஸ், ரெஃப்யூஜிஸ்'' இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. ரிபேட்ரியாட்ஸ் என்பது அங்கு குடியுரிமை இல்லாமல் இங்கே குடியுரிமை பெறவேண்டியவர்கள். ரெஃப்யூஜிஸ் (அகதிகள்) அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள். ரிபேட்ரியாட்ஸ் என்றால் வந்தவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. இங்கே குடியுரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டியவர்கள். அகதிகள் என்றால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள். இந்த வித்தியாசம் இருந்தாலும்கூட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகம் மேலும் இந்தச் சுமையைத் தாங்கத் தயாராக இல்லை என்ற கருத்து மத்திய அரசுக்கு எடுத்து விளக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து அது வலியுறுத்தப்படும். மத்திய அரசோடு பேசப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, டெல்லி பாராளுமன்றத்திலே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து நண்பர் வரதராசன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையிலே இந்த அவையில் பல நேரங்களிலே இது குறித்து பல கட்சிகளுடைய நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். ஏதோ மத்திய அரசு மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும், மாநில அரசு அதிகாரிகள், தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. போன்றவர்கள் இது விஷயத்திலே எச்சரிக்கப்பட்டு இருப்பதாகவும் அதை அவர்கள் இன்னும் கேட்கவில்லை என்றும் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகள், டெல்லியிலே ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற ஒரு பத்திரிகையில் இந்தச் செய்திகள் மிகைப்படுத்தி வேண்டுமென்றே போடப்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம் நண்பர் ரமணி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், எதையாவது ஒன்றை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு தொல்லை தருவது அல்லது ஆட்சியை சட்டம்-ஒழுங்கு,

TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

அமைதி இவைகளைக் காட்டி கவிழ்ப்பது என்கின்ற அற்ப ஆசைக்கு சில பேர் ஆட்பட்டு இப்படி எழுதியும், பேசியும் வதந்திகளைப் பரப்பியும் வருகிறார்கள். அந்த வதந்திகளை நம்பியோ, என்னவோ அல்லது வேண்டும் என்றோ எனக்குத் தெரியாது. நான் பாராளுமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை விமர்சிப்பது முறையல்ல. இருந்தாலும் சொல்லப்பட்டு இருக்கின்ற தகவல்கள் மிகைப்படுத்தி சொல்லப்பட்டவை. மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கை அல்ல, முன்னறிவிப்பு செய்வது வாடிக்கை. இது ஒன்றும் புதிதல்ல. இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடும். எனவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முன்னறிவிப்பு செய்வதும், அதற்கான பதிலை மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்புவதும் வாடிக்கையானது, இயல்பானது. அந்த வகையிலே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இங்கு நடக்கின்ற நிலைமைகளை எல்லாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறது.

அண்மையிலே கூட அங்கே நடைபெற்ற மாநாட்டிற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்ற போது, நான் இங்கே அவையிலே அறிவித்ததற்கிணங்க, அவர் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து, இங்கே கடல் எல்லை இன்னும் சரியாகக் குறிப்பிடப்படாத காரணத்தால், அதைத் தெரிந்துகொள்கின்ற நிலை, தமிழ்நாட்டு மீனவ மக்களுக்கு இல்லாத காரணத்தால், அதை அவர்களுக்கு விளக்குகின்ற வகையிலே அங்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அது மாத்திரமல்ல. தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு ''கோஸ்ட் கார்டு'' ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலே மத்திய அரசு அதற்கான நடவடிக்கையிலே ஈடுபடவில்லை. அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்பது தான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்கு இலங்கையிலே, தமிழ் ஈழத்திலே விடுதலைப் புலிகளுடைய செல்வாக்கு இருக்கலாம். கிட்டத்தட்ட அவர்களுடைய ஆட்சியே நடைபெறுவது போன்ற ஒரு நிலை. நாளைய தினம் எதிர்காலத்திலே, அவர்களுக்கும், இலங்கை அரசுக்கும் எத்தகைய சூழல் உருவாகும் என்று நாம் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகிற நேரத்தில் இங்கே ''கோஸ்ட் கார்டு'' மிக அவசியம் என்பதும் ''நாவாய்-நேவிகள்'' இங்கே நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பதும் மிக அவசியம் என்பதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

10.15 மணி

ஆனால், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் இருப்பதாகச் சொல்லப்படுவது கடைந்து எடுத்த, உண்மைக்கு மாறான ஒரு செய்தி ஆகும். பொய் என்று கூடச் சொல்ல

லாம். ஏன் என்றால், இங்கே உறுப்பினர்கள் சொன்னது ''பொய்'' என்று சொன்னால் தான் குற்றம். ஆனால் பத்திரிகைகளில் வெளிவருவது, அதைப்பற்றிப் பிரச்சாரம் செய்வது எல்லாம் கடைந்து எடுத்த பொய், இன்னும் சொல்லப் போனால் வடிகட்டிய பொய், இன்னும் சொல்லப்போனால் ஜமக்காளத்தில் வடிகட்டிய பொய் என்று தான் அதைச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதற்கு நியாயமே இல்லை. ஒரு காலத்திலே இங்கே பல முகாம்கள் இருந்தன. இன்னும் சொல்லப்போனால் இங்கே எந்த முகாம்களும் கிடையாது என்று அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த அந்தக் காலக் கட்டத்திலே தமிழ்நாட்டில் 36 முகாம்கள் இருந்தன. 36 கேம்புகள் இருந்தன. அதிலே பயிற்சி பெற்ற வர்கள், டெலோ, ஈராஸ், இ.பி.ஆர்.எல். எப்., பிளாட் போன்றவர்கள். எல்.டி.டி.இ. அல்ல. எல்.டி.டி.யினுடைய கொள்கையே அவர்கள் இந்தியாவிலே பயிற்சி பெறக்கூடாது என்பது ஆகும். எனவே, அவர்கள் இங்கே எந்த கேம்பும் நடத்தவில்லை. அவர்கள் இங்கே புழங்கிக்கொண்டு இருந்தார் கள்; சிலர் இங்கே தங்கி நடமாடிக்கொண்டு இருந்தார்கள் அன்றைக்கு இருந்த அரசோடு, இங்கே இருந்த அரசியல். கட்சித் தலைவர்களோடு எல்லாம் கூட தொடர்பு கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குக் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் ஒரே நாளில் தமிழக அரசின் சார்பிலே கூட வழங்கப்பட் டிருக்கிறது. அதை அவர்கள் ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதற்கான தகவல்கள் எல்லாம் அன்றைக்கு வெளிவந்திருக்கின்றன. இப்படி 36 கேம்புகளை இங்கே அவர்கள் நடத்தி வந்த காலத்திலே கூட இந்திரா காந்தி அவர்கள் கேம்புகளே இங்கே இல்லை என்று சொன் னார்கள்.

இன்றைக்கு நான் சொல்லுவது அந்த அடிப்படையிலே அல்ல. உண்மையிலேயே கேம்புகள் இல்லை. அப்படி ஒரிரு கேம்புகள் இருந்தாலும் அவர்கள் வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதிலே இருந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல. விடுதலைப் புலிகளே கூட அப்படி கேம்பு நடத்தினால், அது கண்டுபிடிக்கப் பட்டால் அல்லது யாராலாவது சுட்டிக்காட்டப்பட்டால், அன்றைக்கு நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். மறுநாளே அங்கே அதைப்பற்றி ஆராயச் சொல்லப்பட்டது. எதுவும் இல்லை என்ற தகவல் தான் கிடைத்தது. அப்படி ஏதாவது இருந்தால்,

உடனடியாக அடையாளம் காட்டப்பட்டால், அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல, இங்கே 20 திராவிடர் கழகத் தோழர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி அளிக்கிறார்கள் என்று கூட அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. போயும், போயும் 20 பேருக்குப் பயிற்சி அளித்து என்ன செய்வார்கள் என்று எனக்குப் புரியவில்லை. திராவிடர் கழகமோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களோ அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சியிலே நாட்டம் கொண்டவர்கள் அல்ல. அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சிக்கு அவர்கள் தங்களை ஆளாக்கிக் கொண்டவர்கள் அல்ல. அப்படி எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்க்கவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் பத்திரிகையாளர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் கூட, நாம் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாகக் கூட இந்தக் கடற்கரை பக்கத்திலே செல்லலாம். வேதாரண்யம் பகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய திரு. இராஜேந்திரன் என்னோடு வரலாம், அதேபோல் நாகப்பட்டிணம் பகுதியிலே திரு. வீரையன் அவர்கள் என்னோடு வரலாம். அல்லது சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒரு குழுவாகக் கூட என்னுடைய தலைமையிலே—என்னுடைய தலைமையை இந்தக் குழுவுக்கு ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்—அனைவரும் என்னோடு வந்தால் நாமே கூட அந்தக் கடற்கரைப் பகுதியிலே சென்று தவறு இருந்தால் அதைக் களைவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது; அல்லது பத்திரிகை நிருபர்கள் கூட ஒரு குழுவாக வந்தால் அவர்களோடு சென்று பார்வையிடக்கூட நான் தயாராக இருக்கிறேன். வேண்டும் என்றே இந்த அரசுக்கு ஒரு களங்கம் கற்பிக்க, சட்டம்-ஒழுங்கு, அமைதி இங்கே கெடுகிறது என்ற ஒரு நிலையை உருவாக்கி, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு மோதுதலை உருவாக்க சில பேர் நடத்துகின்ற முயற்சி நிச்சயமாக வெற்றி அடையாது என்பதையும் நான் இங்கே பேசிய இந்தக் கருத்துக்களே மத்திய அரசுக்கு நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களுக்கு ஏற்ற பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன். இங்கு எந்தத் தீவிரவாதங்களையும், எந்த வன்முறைகளையும் இந்த அரசு அனுமதிப்பதற்குத் தயாராக இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 8

விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் வந்து செல்வாக்கைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. காரணம் அவர்கள், இன்றைக்குச் செல்வாக்கைப் பெற்றவர்களாக தமிழ் ஈழத்திலே, கிட்டத்தட்ட தமிழ் ஈழம் கிடைக்கவில்லையே தவிர, அந்தப் பெயர் கிடைக்கவில்லையே தவிர, அவர்களுடைய ஆட்சிதான் அங்கே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தமிழ்நாட்டில் வந்து இடம் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு கொள்கை விளக்கத்தை இந்த அவைக்குத் தந்து இருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகின்றபோது மத்திய அரசு மீண்டும் மீண்டும் கேட்டும் ''Coast Guard'' என்று சொல்லக்கூடிய கடற்கரைப் பாதுகாப்புப் படையும், நேவி இந்திய இராணுவத்தில் இருக்கக்கூடிய பகுதியாகிய நாவாய் அடங்கிய படை வகுப்பும் மீண்டும் மீண்டும் மத்திய அரசிடம் கேட்டு வரவில்லை என்று அவர்கள் ஆதங்கத்தோடு சொன்னார்கள். இன்றையதினம் பாராளுமன்றத்திலே ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தளபதி கல்கத் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இந்திய இராணுவத்தை குறைத்துப் பேசியதை சுட்டிக்காட்டி மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இந்திய இராணுவத்தைச் சார்ந்த அந்த வீரர்கள் இங்கே தமிழகத்தின் பாதுகாப்புக்காக வர அஞ்சுகிறார்களோ என்கின்ற ஐயமும் எங்களுக்கு இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏதேனும் தகவல்கள், நமது மாண்புமிகு முதலமைச்சரிடம் விளக்கம் கேட்கப் பட்டிருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு கடற்படையை (Coast Guard) இன்னும் அனுப்பவில்லை என்று ஆதங்கத்தோடு சொன்னேன் என்று பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு கற்பனைச் செய்தியை இங்கே சொன்னார்கள். நான் ஆதங்கத்தோடு சொல்லவில்லை; ஆர்வத்தோடு சொன்னேன். உடனடியாக அவர்கள் அனுப்ப வேண்டுமென்ற ஒரு செய்தியைத்தான் சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். யாரோ கல்கத் தளபதி இவர்களெல்லாம் தமிழக முதலமைச்சரைப்பற்றிக் குறை கூறி, டெல்லியிலே உள்ள மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். நான் இன்றைக்கும் சொல்லுகிறேன். இந்திய இராணுவத்தை நான் குறை கூறிப் பேசவில்லை. இந்திய இராணுவத்தை வரவேற்க ஏன் செல்லவில்லை என்று கேட்டதற்குத்தான் பதில் சொன்னேனேயல்லாமல் நான் செல்லாததற்குக் காரணத்தைச் சொன்னேன். என்றைக்

கும் நான் இந்திய இராணுவத்தைக் குறை கூறிப் பேசவில்லை. ஆனால் குறை கூறுவது தவறு அல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கே, இந்திய இராணுவ நடவடிக்கைக்காக அமிர்தசரஸ் கோயிலுக்குச் சென்று வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அவர்தான் முப்படையினுடைய தலைவர். அவரே வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்ற விளக்கங்களையும் இங்கே நான் அளித்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற தோழர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அமைதிப் படையைப் பற்றிப் பேசியது, எழுதிய கட்டுரையெல்லாம் அண்மையிலே வெளியிடப்பட்டு புத்தகமாக வந்திருக்கிறது. ''மைலாய்'' என்கின்ற அந்தப் புத்தகத்திலே வந்திருக்கிறது. எவ்வளவு கொடுமைகள் அந்தப் பகுதியிலே நடைபெற்றன என்று இந்திய அமைதிப் படையைப் பற்றி ஜார்ஜ் பெர்னாண்டஸ், இன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருப்பவர், அவர் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை முதலமைச்சர் குறை கூறிய காரணத்தாலே இங்கே இராணுவத்தினர் வர அஞ்சுகிறார்களோ என்று ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். போலீஸ் மானியத்திலே போலீஸை இவ்வளவு குறை கூறினீர்களே, அதற்காகப் போலீஸ் வராமலா இருந்துவிடும்?

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தருகின்ற விளக்கத்தின்போது மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அமைதி காக்கும் படையைப் பற்றி ''மை லாய்'' என்கின்ற புத்தகத்திலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாதத்தை வளர்க்க வேண்டாம். ஏற்கெனவே சொன்ன செய்தியிலே உங்களுக்கு ஏதாவது ''Clarification'' இருந்தால் சொல்லுங்கள். இவையெல்லாம் துணைச் செய்திகள். ஒவ்வொன்றுக்கும் வாதம் வேண்டாம். (குறுக்கீடு). முதலிலேயே நீங்கள் எழுந்தீர்கள். (குறுக்கீடு) குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. முதலிலே நீங்கள் எழுந்தீர்கள். உங்களுக்கு நான் அனுமதி தருகிறேன் என்று சொன்னேன்.

திரு. பி. வி. இரர்ஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக்கட்டுரையில், கட்டுரையல்ல. அந்த 'மை லாய்' என்கின்ற தலைப்பிட்ட அந்தப் புத்தகத்தினுடைய முகப்புரையில், வியட்நாமில் அமெரிக்க இராணுவம் 'மை லாய்' என்கின்ற ஒரு கிராமத்தில் 2 ஆயிரம், 3 ஆயிரம் மக்களை, ஒரு கிராமத்தையே கூண்டோடு, குழந்தை குட்டிகள் அனைத்தையும் ஒழித்துத் தள்ளியது. அது 'மை லாய்' என்கின்ற தலைப்பில் வெல்வெட்டித்

துறையில் 72 பேர்கள் கொல்லப்பட்டதை ''My lay of Sri Lanka'' என்று போட்டு அதைப்பற்றி எழுதியிருக்கிறாரே தவிர, ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டாக அது இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குத் துணை நின்றதற்காக தம்பி இராஜேந்திரனுக்கு நன்றி.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏற்கெனவே சொன்னது போன்று ராஜிவ்காந்தி இராணுவம், வி.பி. சிங் இராணுவம் என்று பிரித்துப் பேசுவது சரியா என்பதைத்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்ட செய்திகள். வேறு செய்தி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பேசியதையே திருப்பித் திருப்பிப் பேசக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கமாக பதில் அளித்த போது எந்த முகாமாவது இருந்தால் இங்கே சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னார்கள், அது யார் நடத்துகின்ற முகாமாக இருந்தாலும். அண்மையிலே, எனக்கு குற்றாலத்திற்கு அருகே இருக்கின்ற பானதீர்த்தத்திலே ஒரு முகாம் நடப்பதாகத் தகவல் வந்ததை வைத்து நான் அங்கே இருக்கின்ற எமது அமைப்பைச் சார்ந்தவர்களைக் கேட்டபோது பாபநாசம் அருவிக்கு குளிக்கப் போகின்றவர்கள், அதைத்தாண்டி முண்டந்துறை என்ற இடத்திற்குப் புலிகளைப் பார்க்கப் போவார்கள். சாதாரணமான புலிகளைத்தான், டைகர்ஸ். அந்தப் புலிகளைப் பார்க்கவேண்டுமென்று அவர்கள் கட்டணம் செலுத்தி உள்ளே போகப் போகிறபோது நீங்கள் எந்தப் புலிகளைப் பார்க்கப் போகிறீர்கள்? 4 கால் புலிகளையா அல்லது இரண்டு கால் புலிகளையா என்று சொன்னதற்கு இணங்க அந்த ஐயம் வலுப்பட்டு பிறகு போனபோது, அது புலிகள் என்றும் தெரியவில்லை. இன்னும் ஒருபடி மேலே போய் சொன்னால், கேரளம் வழியாக ஆந்திராவிலே இருந்து வருகிற நக்ஸலைட்டுகள் என்றும் சொல்கிறார்கள். ஏனென்றால், நமது அரசாங்கத்திற்குத் துணை நிற்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள், அந்த லோயர் அணைக்கட்டு, அப்பர் அணைக்கட்டு, முண்டந்துறை மற்றும் அங்கேயிருக்கின்ற சொரிமுத்தன் கோயில் என்று சொல்லப்படுகின்ற இடங்களையெல்லாம் தாண்டி ஏறத்தாழ $3\frac{1}{2}$ கிலோ மீட்டர் தண்ணீரிலே கடந்து, பானதீர்த்தத்திலே ஒரு முகாம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த பான தீர்த்தத்திலே இருக்கிற முகாம் யாருடையது என்று தெரியாது.

உண்மையிலேயே முகாம் இருக்கிறதா, அப்படி இருக்கிறதா என்று நீங்கள் ஒற்றர்களை வைத்தோ அல்லது நமது அதிகாரிகளை வைத்தோ ஆராய்ந்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களே அதிலே ஒரு தெளிவான நிலையை எடுத்துச் சொல்ல முடியவில்லை. அவர்கள் ஒருவேளை நக்ஸலைட்டாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தோடு தான், அவர் சொல்கிறார். தயவு செய்து யாரும் தப்பாக எண்ணிக் கொள்ளக் கூடாது. ஒரு பொது அறிவோடு இதை எண்ணிப் பார்த்தால் இப்போது விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டிலோ அல்லது வேறு இடத்திலோ அடைக்கலம் புகுந்து ஒளிந்து வாழவேண்டிய அவசியம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்போது அங்கே ராஜாக்களாக இருக்கிறார்கள். எனவே, இங்கே வந்து அவர்கள் ஒளிந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பெரிய விவாதம் எல்லாம் வேண்டாம். உங்களுடைய "Point of Order" என்ன?

*திரு. ரா. சொக்கர் : ஒரு பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அளித்த விளக்கத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் விளக்கம் சொல்கிற போது ஒன்றைச் சொன்னார்கள். திருமதி இந்திரா காந்தி காலத்திலே பல தீவிரவாதிகளுக்கு இங்கே வைத்து பயிற்சி கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இது சர்வதேசப் பிரச்சினை. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் உள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினை முடிந்தால் சரி, முடியவில்லை என்றால் சர்வதேச நீதிமன்றம் வரையில் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நேரத்தில் இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதற்கு ஒரு டாக்குமென்டரி எவிடன்சாக இங்கே முதல்வர் அவர்கள் கூறியதைச் சொன்னால் இந்தியா குற்றம் சாட்டப்படும். ஆகவே இதைப் பொறுத்து ஒரு முடிவு எடுக்க முதல்வர் அவர்களிடமே நான் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பகிரங்க ரகசியமாக இருந்தது. நான் மேலும் விளக்கம் சொல்ல அவர்கள் வழி வைத்து விட்டார்கள். ''இந்தியா டுடே'' ஏடு, படங்களோடு, அந்த முகாம்களின் படங்களோடு அப்போது வெளியிட்டது. ஆனால் அதை எல்லோரும் ரகசியம் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்தச் செய்தி அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்றால் ''ரா'' அதிகாரிகளுடைய அலுவலகத்திலேயே மேப்பிலே அந்தப் படத்தைப் போட்டு மாட்டி வைத்திருந்தார்கள். அதைத்தான் 'இந்தியா டுடே' வெளியிட்டிருந்தது. இப்போதும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஏதாவது ஒரு தகராறு வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்—நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். அன்றைக்கு இலங்கைத் தமிழரிடத்தில் எப்படி ஒரு வேற்றுமையை வளர்ப்பதற்குக் காரணமாக இருந்தார்களோ, அதே ''ரா'' குழுவினர்தான் இன்றைக்கும்—இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். இது இந்தியப் பிரதமர் உணர்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டம் நந்தமங்கலம் கிராமத்தில் இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. வீரையன், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜி. பழனிச்சாமி, திரு. ரெ. பிச்சைமுத்து, திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ''தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் 5-5-1990 அன்று இரு வகுப்பினருக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பது மற்றும் அதனால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இதுகுறித்து திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. வீரையன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், ஒரத்தூரில் நந்தமங்கலம் என்ற கிராமத்தில் அரிசனத் தெருவில் 21-3-1990 அன்று ஒரு இறுதிச் சடங்கு நடந்தபோது அரிசனங்களுக்கும், அங்கே இருக்கக் கூடிய மிராசுதாரர்களுக்கும் சிறு தகராறு ஏற்பட்டது. இதுகுறித்து அரிசனங்கள் தரப்பிலே ஒரு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பகிரங்க ரகசியமாக இருந்தது. நான் மேலும் விளக்கம் சொல்ல அவர்கள் வழி வைத்து விட்டார்கள். ''இந்தியா டுடே'' ஏடு, படங்களோடு, அந்த முகாம்களின் படங்களோடு அப்போது வெளியிட்டது. ஆனால் அதை எல்லோரும் ரகசியம் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்தச் செய்தி அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்றால் ''ரா'' அதிகாரிகளுடைய அலுவலகத்திலேயே மேப்பிலே அந்தப் படத்தைப் போட்டு மாட்டி வைத்திருந்தார்கள். அதைத்தான் 'இந்தியா டுடே' வெளியிட்டிருந்தது. இப்போதும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஏதாவது ஒரு தகராறு வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்—நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். அன்றைக்கு இலங்கைத் தமிழரிடத்தில் எப்படி ஒரு வேற்றுமையை வளர்ப்பதற்குக் காரணமாக இருந்தார்களோ, அதே ''ரா'' குழுவினர் தான் இன்றைக்கும்—இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். இது இந்தியப் பிரதமர் உணர்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டம் நந்தமங்கலம் கிராமத்தில் இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. வீரையன், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜி. பழனிச்சாமி, திரு. ரெ. பிச்சைமுத்து, திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ''தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் 5-5-1990 அன்று இரு வகுப்பினருக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பது மற்றும் அதனால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இதுகுறித்து திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. வீரையன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், ஒரத்தூரில் நந்தமங்கலம் என்ற கிராமத்தில் அரிசனத் தெருவில் 21-3-1990 அன்று ஒரு இறுதிச் சடங்கு நடந்தபோது அரிசனங்களுக்கும், அங்கே இருக்கக் கூடிய மிராசுதாரர்களுக்கும் சிறு தகராறு ஏற்பட்டது. இதுகுறித்து அரிசனங்கள் தரப்பிலே ஒரு

புகார் மனு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் இதுகுறித்து மிராசுதாரர்கள் தரப்பிலே ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டது. அதன்மீது நடவடிக்கை எடுத்து விவசாயத் தொழிலாளர்கள், அரிசனங்கள் 6 பேர் கைதுசெய்யப்பட்டு ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இதுகுறித்து வந்த புகார்களின் மீது திருவையாறு வட்டாட்சியர் அவர்கள் ஒரு சமாதான கமிட்டி போட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்தார்கள். 30-4-1990-ல் ஒரத்தூர் அரிசனத் தெருவைச் சேர்ந்த ஒருவரை, அதாவது, அங்கே தபால் நிலையத்திற்கு வந்த நச்சினார்க்கினியர் என்ற ஒருவரை மிராசுதாரர்களைச் சேர்ந்த 20 பேர்கள் அரிவாளுடன் வெட்டுவதற்கு விரட்டி இருக்கிறார்கள். இது குறித்து திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது. 30—4—1990இல் அவ்வாறு கொலை செய்ய விரட்டிய அந்த நடவடிக்கை குறித்து கொடுக்கப்பட்ட அந்தப் புகார் மீது எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

10-30 மணி

இதற்கிடையில், அந்த ஒரத்தூர் கிராமத்தில் ஒரு பதட்டமான நிலை இருப்பதை அறிந்து போலீஸ் காவலும் அங்கே போடப்பட்டிருக்கிறது. இந்த நச்சினார்க்கினியன் என்பவரை வெட்ட விரட்டியதை அங்கே காவலுக்கு இருந்த போலீஸ்காரர்களும் நன்றாக அறிவார்கள். அவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மீண்டும் 2—5—1990இல் திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் இரு தரப்பாரையும் வைத்துப் பேசி ஒரு சமாதான முயற்சிக்காக வட்டாட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இதை ஏற்று. அரிசனங்களுடைய பிரதிநிதிகள் திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்துவிட்டார்கள். ஆனால், மிராசுதார்கள் தரப்பிலிருந்து யாரும் வரவில்லை. வட்டாட்சியர் ஆள் அனுப்பி மீண்டும் 5—5—1990 அன்று மதியம் சமாதானம் பேசவேண்டுமென்று இருதரப்பாரிடமும் கையெழுத்து வாங்கப்பட்டு, 5ஆம் தேதி மாலை 3 மணிக்குப் பேச்சுவார்த்தை நடப்பதாக இருந்தது. இதற்கிடையில்தான் 5ஆம் தேதி காலை 5 மணிக்கு கோவிந்தராஜன், அன்பழகன், அம்பலம், அசோகன், பன்னீர்செல்வம், ராமையன் என்ற அந்த ஊராட்சி மன்றத் தலைவர் இவர்களுடைய தலைமையில் ஏறத்தாழ 200க்கு மேற்பட்டவர்கள், ஊருக்குள் புகுந்து, கார்களிலும், வேன்களிலும் பயங்கரமான ஆயுதங்களுடன் அந்தத் தெருக்களில் நுழைந்து இருக்கிறார்கள். அப்போது அங்கே பாதுகாப்புக்கு இருந்த காவலர்கள் அங்கே செல்லக்கூடாது என்று தடுத்ததையும் மீறி, அந்தக் காவலர்களையும் அவர்கள் அச்சுறுத்திவிட்டு, அந்தத் தெருவுக்குள் புகுந்திருக்கிறார்கள்.

அது ஏறத்தாழ 20 ஆண்டுக்காலமாக எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடிய ஒரு தெருவாகும். அந்தத் தெரு மூனையில் சங்க அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்தையும் அடித்து நொறுக்கிவிட்டு தீயிட்டுக் கொளுத்திவிட்டு, கட்சிக் கொடி மரத்தையும் வெட்டிச் சாய்த்துவிட்டு, தெருவில் தூங்கிக்கொண்டிருந்தவர்களை தாக்கி, வீடு வீடாகப் புகுந்து அடித்து தாக்கியதில் 3 பெண்கள் உட்பட 24 பேர் படுகாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அந்த 24 பேரையும் தஞ்சை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதில், கலியபெருமாள் என்பவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள ஏழை ஆதி திராவிட விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் இதனால் பீதியும் பதட்டமும் ஏற்பட்டிருக்கிறது. காவலர்களின் தடையையும் மீறி மிராசுதார்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. சமாதானப் பேச்சு நடந்துவிட்டால் அவர்களைத் தாக்க முடியாது என்ற காரணத்திற்காக, காலையிலேயே இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார்கள். தற்செயலாக நடந்த தாக்குதல் அல்ல. எனவே, அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை அங்கே இருக்கிறது. சம்பந்தப்பட்ட அந்த எதிரிகள் திட்டமிட்டு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. எனவேதான், அந்தப் பகுதியில் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மிராசுதார்களிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், இவைகளால் 24 பேர் படுகாயப்படுத்தப்பட்டு, அதிலே கலியபெருமாள் என்பவர் தஞ்சை மருத்துவமனையில் கவலைக்கிடமாக இருக்கிறார். இந்த நிலைமையைப் பற்றி விவாதிப்பதற்காக, இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, திருவையாறு பகுதியில் நடந்திருக்கக்கூடிய சம்பவம்—பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் மிராசுதார்களுக்கும் அனேகமாக கூலிப் பிரச்சினையில்தான் எழுமே தவிர, இப்படிப்பட்ட பிரச்சினையில் எழுவது என்பது கிடையாது. இருந்தாலும் இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, காவல்துறைக்குக் காலத்தோடு புகார் கொடுத்தால், உடனடியாக அதைக் கூப்பிட்டு விசாரித்து அதற்கான நடவடிக்கை எடுக்காமல் சம்பவம்

நடப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக காவல் துறையே அமைந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம். அதோடு மட்டுமல்ல, பொதுவாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது, அங்கே இருக்கக்கூடிய வட்டாட்சியர்கள் அமைதிக் குழுவை அமைத்து, இரு தரப்பாளர்களையும் கூப்பிட்டுப் பேசி, அதன் மூலமாக பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அதனால், விவசாயத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் அனேகமாக எதையும் எதிர்பார்க்காமல், திட்டமிடாமல் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று ஊருக்குத் திரும்புகிறபோது, திட்டமிட்டு இப்படிப்பட்ட கலவரத்தை நடத்தி, அந்த அரிசன மக்களை அடக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட சதிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதற்காக அந்த அமைதிக் குழு ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. ஆகவே, அவர்களுக்கு, அவ்வாறு தவறு செய்பவர்கள் மீது, அந்தக் குற்றவாளிகள் மீது, உரிய நடவடிக்கை எடுத்திருந்தால், இப்படிப்பட்ட சம்பவங்கள் தடுத்திருக்கப்பட முடியும். ஆகவே, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தஞ்சை மாவட்டம் ஒரத்தூரில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் வீரையன் அவர்களும், பழனிச்சாமி அவர்களும் மிகத் தெளிவாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், அதே நேரத்தில் ஒரு மாறுபட்ட ஒரு நடவடிக்கை என்னவென்றால் ஒரு டாக்சி வருகிறது. அந்த டாக்சியிலே. . . (மணியடிக்கப்பெற்றது) அதே நிகழ்ச்சிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வர்ணனையா ?

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்ணனை ஒன்றும் கிடையாது. யதார்த்த நிலையினைச் சொல்கிறேன். அந்த டாக்சியிலே ஏறுகின்ற போது 10 பேர் ஏற முயற்சிக்கிறார்கள். ஆனால், அந்த டிரைவர், 10 பேர் ஏற முடியாது, ஒரு குறிப்பிட்ட 4, 5 அல்லது 6 பேர் ஏறுங்கள் என்று சொல்கிறார். ஆனால், அது முடியாமல் போகவே, இரு சாராருக்கும் விவகாரம் ஏற்பட்டு அந்த டிரைவரை அடித்துவிட்டார்கள். அந்த டிரைவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, அந்தக் கட்சிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து அவரை ஆதரிக்க, எதிரானவர்கள் மற்றவர்களை ஆதரிக்க, என்பன போன்ற கலவரங்களும், அவர்கள் சொன்ன நிகழ்ச்சியோடு இதனையும் சேர்த்துச் சொல்கிறேன்,

இப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனடியாகப் போலீசுக்குப் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், புகார் செய்த உடன் போலீசார் நடவடிக்கை உடனடியாக எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் நிச்சயமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது.

மாண்புமிகு உறுப்பினர் விவசாயத் தொழிலாளர் பிரச்சினை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும், காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. போன்ற ஏனைய கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அங்கே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும் இவர்களுக்கும் தான் விவகாரம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆன பிறகு ஆதி திராவிடர்கள், இந்துக்கள் என்று, இங்கே மிராசுதார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிகழ்ச்சி அப்படி அல்ல. அங்கே நடந்த நிகழ்ச்சி ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை அல்ல. ஆனால், ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒரு கட்சியின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்று வர்ணிக்கப்படுகிறது. அது அல்ல. ஆதி திராவிடர்களுக்குக் கொடுமை என்று சொன்னால், என்னுடைய உயிரையும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் வெட்டப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் மிக சீரியசாக இருக்கிறார். அந்த நிலையைப் போக்குவதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் இங்கே விவரித்தார்கள். ஆகவே, அதையே நானும் விவரிக்கத் தயாராக இல்லை. உடனடியாக மேற்கொண்டு இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க அனைத்துக் கட்சிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்த பீஸ் கமிட்டி ஒரு பெரிய அதிகாரியின் கீழ் நடத்தப்பட வேண்டும். தொடர்ந்து விவகாரம் ஏதும் இல்லாமல் அமைதியாக இருக்க ஆவன செய்வது குறித்து இந்த அவையில் விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்தினுடைய பேச்சைக் கேட்ட பிறகு, இதை உள்ளபடியே ஒத்திவைத்து விவாதம் நடத்தினால் அங்கே புகைந்து கொண்டிருப்பது எரியத் தொடங்கிவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கான சில குறிப்புகளை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தோகூர் காவல் சரகத்தில் ஒரத்தூர், நந்தமங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களும் அருகருகே உள்ளன. இரண்டு கிராமங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் ஆயிரம் குடும்பத்தினர் அங்கே உள்ளனர். ஒரத்தூரில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 1,500 குடும்பத்தினர் உள்ளனர். இருவரும் ஒருவொருக்கொருவர் தாண்டிக் கொண்டுதான் கடை களுக்கோ, வேறு இடங்களுக்கோ செல்ல வேண்டுமென்றால் செல்ல வேண்டும். கடந்த 21—3—1990 அன்று ஒரத்தூர் கிராமத்தில் வடமலை என்பவருடைய மனைவி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் மரணம் அடைந்தது தொடர்பாக இறுதிச் சடங்கிற்கு வந்த 10 பேர் டி.சி.ஓ. 2332 என்ற வாட கைக் காரில் திரும்பியபோது, காரின் உரிமையாளர் ரத்தினசாமி என்பவரின் தம்பி சுதர்சன் என்பவர் அத்தனை பேரும் காரில் ஏறியதற்காகக் கண்டித்திருக்கிறார். ஒரத்தூரைச் சேர்ந்த தர்மராஜ், நந்தி என்கிற ராஜசேகர் ஆகியோர் தாழ்த்தப்பட்ட மக்களைக் கையால் அடித்துவிட்டனர். இது தொடர்பாக, சுதர்சன் கொடுத்த புகாரின் பேரில் தோகூர் காவல் நிலைய எண் 57/90, இ.த.ச. 341 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கிற்கு வந்தவர்கள் பின்னால், வாடகைக் கார் வேண்டாம் என்று கூறிவிட்டு பூதலூர் புகைவண்டி நிலையத்திற் குச் சென்றுவிட்டார்கள். சுதர்சன் தாக்கப்பட்டதால் ஆத்திரம் அடைந்து அவரைச் சேர்ந்த மக்கள் புகைவண்டி நிலையம் சென்று அங்கே புகைவண்டிக்காகக் காத்திருந்தவர்களைக் கண்டித்திருக் கிறார்கள். அது தொடர்பாகக் காவல் நிலையத்திற்கு எந்தப் புகாரும் தரப்படவில்லை. இத்தனை குழப்பத்தோடு நச்சினார்க் கினியன், தர்மராஜன், முருகேசன், கிருஷ்ணன், குணசேகரன் ராஜசேகரன் ஆகியோர் வேணுகோபால் என்பவரை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். அது குறித்து வேணுகோபால் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 58/90, 147, 148, 323 இ.த.ச. பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்பட் டிருக்கிறது. குற்ற எண் 57/90 மற்றும் 58/90 வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகளும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய் யப்பட்டுள்ளார்கள். அமைதிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எதுவுமே செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதற்கு விளக்கமாகச் சொல்கிறேன். எதிரிகள் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். அமைதிக் கூட்டத்திற்கு ஏற் பாடு செய்யப்பட்டது. இரண்டு கிராமங்களுக்கும் போலீஸ் பாது காப்பும் போடப்பட்டிருந்தது.

10-40 மணி

இருந்தபோதிலும் இரண்டு பிரிவினரிடையே விரோத மனப் பான்மை வளர்ந்து வந்தது. 30—4—1990 அன்று இரவு 11 மணிக்கு நச்சினார்க்கினியன், காவல் நிலயத்திற்கு வந்து, தான்

தபால் அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, கலை 8
யழகன் மற்றும் 7 பேர் தன்னை விரட்டியதாகக் கொடுத்த புகார் மீது குற்ற எண் 70/90, இ.த.ச. 147, 148, 506 (1) பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, விசாரணை செய்தார். 5—5—1990 அன்று திருவையாற்றில் இரண்டு பிரிவினரையும் அழைத்துவைத்து, வட்டாட்சியர் ஒரு அமைதிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கிடையில் 5—5—1990 அன்று அதிகாலை 5 மணிக்கு ஒரத்தூரைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினர் பயங்கர ஆயுதங்களோடு ஒன்று சேர்ந்து, நந்தமங்கலம் கிராமத்திலிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தின் கீற்றுக் கொட்டகையைச் சேதப்படுத்தி, தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். நச்சினார்க்கினியன் போன்றவர்களின் குடியிருப்புகளில் புகுந்து 18 கூரை வீடுகளையும், 8 ஓட்டு வீடுகளையும் சேதப்படுத்தியதோடு, கத்தி, கம்பு, அரிவாள் முதலிய ஆயுதங்களால் காயப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களில் 12 பேர் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். 10 பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். அம்பேத்கார் மக்கள் நற்பணி மன்றம் அமைந்திருந்த ஓட்டு வீடும் சேதமடைந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் கொடிக் கம்பங்களும் சேதப்படுத்தப்பட்டன. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தவுடன் தஞ்சை காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். தஞ்சை சப்-கலெக்டரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரித்துள்ளார். மீதமுள்ள எதிரிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமத்தில் தேவையான காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை இப்போது சகஜமாக உள்ளது. மேலும், கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் இரு தரப்பிலே, ஒரு தரப்பிலே நச்சினார்க்கினியன், இன்னொரு தரப்பிலே கலையழகன், தமிழ்ப் பெயருக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால், தகராறுதான் ஓயவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4 கவன ஈர்ப்பு

(அ) சேலம் பேருந்து நிலையம் கட்டப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ''சேலம் பேருந்து நிலையம் தற்போதுள்ள இடத்தி லிருந்து மாற்றப்பட்ட அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்டப் படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சேலம் நகராட்சி மையப் பேருந்து நிலையம் நகரின் மத்தியில் 2 ஏக்கர் மனையில் அமைந்திருந்தது. இந்த பேருந்து நிலைய அமைப்பிடமும் சிறிய பரப்பும் போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்தியது. மேலும் வெளியூர், மற்றும் நகரப் பேருந்து களுக்கு போதுமானதாகவும் இல்லாமலிருந்தது. எனவே, நகர பேருந்துகளின் சேவையை ஏற்கனவே இருந்த பேருந்து நிலை யத்திலேயே தொடர்ந்து அனுமதித்துவிட்டு, அனைத்து வெளியூர் பேருந்துகளும் ஓமலூர் சாலையில், தற்போது பயன்படாமல் இருக்கும் அச்சுவான் ஏரியான 24.62 ஏக்கர் நிலப்பரப்பளவில், 15-7-1988 முதல் மாற்றி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் இரண்டும், தண்ணீர் வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் இரண் டும் உள்ளன. 22 சோடியம் ஆவி விளக்குகள் இதில் பொருத்தப் பட்டுள்ளன. 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 சின் டெக்ஸ் (Syntex) தொட்டிகள் நிறுவப்பட்டு லாரி மூலம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர பேருந்துகள் நிறுத்துமிடமும் மற்ற பகுதிகளும் மண்ணிட்டு நிரப்பப்பட்டும், சாலையிலும் பேருந்து நிற்குமிடத்திலும் தார் தளமிடப்பட்டும் உள்ளது. மேற்கூறிய அடிப்படை வசதிகள் செய்வதற்காக சேலம் நகராட்சியால் மொத்தம் ரூ. 26,76,500 செலவிடப் பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களான, அண்ணா போக்குவரத்துக் கழகம், அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் நேர அலுவல கங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் பொன்னி சிறப் பங்காடியால் சிற்றுண்டி நிலையமும், புத்தகக் கடையும், பெட்டிக் கடையும் நடத்தப்பட்டு வருகிறது.

[திரு கோ. சி. மணி] [1990 மே 8

2. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.193.00 லட்சம் மொத்த மதிப்பீட்டில் மேலும் பல அடிப்படை வசதிகளும் செய்து தர 30-9-1989-ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 691-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இப்பேருந்து நிலையத்தில் 80 வெளியூர் பேருந்துகள் நிறுத்துமிடங்களும், 12 நகரப் பேருந்துகளுக்கு உரிய நிறுத்துமிடங்களும் மேலும் கீழ்க் காணும் வசதிகளும் செய்து தரப்படும்:-

(1) உணவகங்கள் 2 எண்ணிக்கை

(2) கடைகள் 56 எண்ணிக்கை

(3) பயணச் சீட்டு நிலையங்கள் .. 4 எண்ணிக்கை

(4) நேர அலுவலகம் 1 எண்ணிக்கை

(5) தங்கு கூடங்கள் 2 எண்ணிக்கை

(6) காவல் நிலையம் 1 எண்ணிக்கை

(7) அஞ்சல் அலுவலகம் 1 எண்ணிக்கை

(8) வைப்புப்பொருள் நிலையம் .. 1 எண்ணிக்கை

(9) கழிப்பகங்கள் 5 எண்ணிக்கை

(10) சைக்கிள் நிறுத்துமிடம் 1 எண்ணிக்கை

(11) ஆட்டோ மற்றும் கார் நிறுத்துமிடம் 1 எண்ணிக்கை

மேற்காணும் பணிகளில் மதிப்பீடுகளுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட மேலாண்மைக் குழுவினரால் நிதி விடுவிக்கப்பட்டு மேற்காணும் பணிகள் துவங்கப்பட்டு 31-3-1992-க்குள் முடிக்கப்படும்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24.62 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரியின் ஒரு பகுதியில் உருவாகியுள்ள பஸ் ஸ்டாண்டில் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள புதர்களிலிருந்து பாம்புகள் வருகின்றன. அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கைப்படி 30-9-1989-ஆம் தேதியே ரூபாய் 193 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகளின் மதிப்பீடுகளுக்

கான தொழில் நுட்ப அனுமதி ஏன் 8 மாதங்களாக வழங்கப்படவில்லை? தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்ட மேலாண்மைக் குழு ஏன் 8 மாதங்களாக நிதியை விடுவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கடன் பெறுவதில் சற்று காலதாமதமான காரணத்தால், மதிப்பீடுகளும் கொஞ்சம் காலதாமதம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துரித நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இங்கிருந்து அவர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் குறிப்பிட்ட 1992 மார்ச் இறுதிக்குள் நிச்சயமாக அந்தப் பணிகள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியேறும் புதிய சாலை அமைக்க தனியாக உலக நாடுகள் வங்கி 230 இலட்சம் சாங்ஷன் செய்துள்ளது. இந்தச் சாலை ஒரு வழிச் சாலைதான். எனவே தனி நபர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், நிலத்தை ஆர்ஜிதம் செய்வதன் மூலமாக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாத வகையிலேயும், அகலமாக அமைக்கும் நோக்கத்தை அரசு மாற்றி அமைக்குமா? அந்தச் சாலை அமைக்கும் பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மதிப்பீடு கிடைத்தவுடன் துவங்கும்.

(ஆ) கண்டமங்கலம் ஒன்றியப் பகுதியில் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின் திறன் அளிக்காதது குறித்து.

திரு. ச. அழகுவேலு : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் சுமார் 30 கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட மின்சார......

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பிலே இருப்பதை படிக்க வேண்டும். நானே படிக்கட்டுமா ?

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கான தொழில் நுட்ப அனுமதி ஏன் 8 மாதங்களாக வழங்கப்பட வில்லை? தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்ட மேலாண்மைக் குழு ஏன் 8 மாதங்களாக நிதியை விடுவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கடன் பெறுவதில் சற்று காலதாமதமான காரணத்தால், மதிப் பீடுகளும் கொஞ்சம் காலதாமதம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதற் குப் பிறகு துரித நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இங்கிருந்து அவர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் குறிப்பிட்ட 1992 மார்ச் இறுதிக்குள் நிச்சயமாக அந்தப் பணிகள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியேறும் புதிய சாலை அமைக்க தனியாக உலக நாடுகள் வங்கி 230 இலட்சம் சாங்ஷன் செய் துள்ளது. இந்தச் சாலை ஒரு வழிச் சாலைதான். எனவே தனி நபர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், நிலத்தை ஆர்ஜிதம் செய்வதன் மூலமாக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாத வகையி லேயும், அகலமாக அமைக்கும் நோக்கத்தை அரசு மாற்றி அமைக்குமா? அந்தச் சாலை அமைக்கும் பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மதிப்பீடு கிடைத்தவுடன் துவங்கும்.

(ஆ) கண்டமங்கலம் ஒன்றியப் பகுதியில் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின் திறன் அளிக்காதது குறித்து.

திரு. ச. அழகுவேலு : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் சுமார் 30 கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட மின்சார......

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பிலே இருப்பதை படிக்க வேண்டும். நானே படிக்கட்டுமா ?

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''கண்டமங்கலம் ஒன்றியத்தில் 150-க்கும் மேற்பட்ட விவசாயப் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின்திறன் கொடுக்காதது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு திரு. ச. அழகுவேலு கொண்டு வருகிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கண்டமங்கலம் ஒன்றியத்தைச் சேர்ந்த, ஒப்புதல் படிவம் (அக்ரிமெண்ட்) பெறப்பட்ட சுமார் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின் சுமை வழங்க அதிக திறனுள்ள மின் மாற்றிகள் மற்றும் கூடுதல் திறனுள்ள மின்கம்பிகள் அமைக்க வேண்டியுள்ளது.

2. இந்தப் பணிகள் இந்த மாதம் (ஏப்ரல் 1990) துவங்கப்பட்டு, மாதம் 40 இணைப்புகள் வீதம், தளவாடங்கள் கிடைப்பதற்கேற்ப, திட்டமிடப்பட்டு அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் சுமார் நான்கு மாதங்களில் கூடுதல் இணைப்புகள் வழங்கப்படும்.

3. தென்னாற்காடு மாவட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டில் 1,358 விவசாய இணைப்புதாரர்களுக்கு கூடுதல் மின் சுமை வழங்கப்பட்டது.

4. கூடுதல் மின்சுமை வழங்கவேண்டுமானால் குறிப்பிட்ட மின்பாதைக்கான கம்பிகள் போதிய திறனுள்ளவையாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மின் மாற்றியில் தேவையான உபரி பளு இருக்க வேண்டும். ஆகவே கூடுதல் மின் சுமை வழங்க தொழில்நுட்ப சாத்தியக் கூறு (Technical Feasibili y) இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு திட்டமேம்பாட்டு அடிப்படையில், மின் மாற்றி மற்றும் மின் கம்பிகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கூடுதல் மின் சுமை வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இதன் பின் தளவாடங்கள் கிடைப்பதைப் பொறுத்து பணிகள் துவக்கப்பட்டு விண்ணப்பங்கள் பதிவு வரிசைப்படி இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

கூடுதல் மின்சுமை வழங்குவதற்கான மேம்பாட்டு பணிகளுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. இப்பணிகள் மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து தளவாடங்கள் கிடைப்பதற்கேற்ப துவங்கப்படுகின்றன. ஆகவே இப்பணிகளில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்க இயலாததாகும்.

1990 மே 8]

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4 மாதங்களுக்குள் விரைவாக கொடுக்கப் படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதற்கு இடையிலே அங்கே மின் திருட்டு தடுப்புக் குழுவினர் என்ற ஒரு அமைப்பு அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு மின்சாரம் திருடுகிறார்கள் என்ற முறையிலே அடிக்கடி தொல்லை கொடுத் துக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் ஆழமாகப் போய் விட்ட இந்தக் காலக்கட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தக் குழு வினர் ஏராளமாகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். ஆகவே, வாலண்டரி டிஸ்குளோஷர் என்ற அமைப்பின் கீழ் தயவுசெய்து இதைவிட அதிகமாகக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூடுதல் மின்சாரம் வழங்கவேண்டும் என்பது தான் இதிலே, கொடுக்கப்பட்டு இருக்கிற முக்கிய நோக்கம். மின்சாரத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்று தனியாக ஸ்குவாட் இருக் கிறது. அதை அது போய் கண்டு பிடிக்கிறது. அதற்கும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. திருடர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்த ஸ்குவாட் கண்டுபிடிக்கும். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின் சாரம் வழங்க வேண்டுமானால் அதிகத் திறன் உள்ள மின் மாற்றிகளும், கூடுதல் திறன் உள்ள மின் கம்பிகளும் தேவை. அதற்காக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த மாதத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு 40 இணைப்புகள் வீதம் அந்த 150 பேருக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8]

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4 மாதங்களுக்குள் விரைவாக கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதற்கு இடையிலே அங்கே மின் திருட்டு தடுப்புக் குழுவினர் என்ற ஒரு அமைப்பு அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு மின்சாரம் திருடுகிறார்கள் என்ற முறையிலே அடிக்கடி தொல்லை கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் ஆழமாகப் போய் விட்ட இந்தக் காலக்கட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தக் குழுவினர் ஏராளமாகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். ஆகவே, வாலண்டரி டிஸ்குளோஷர் என்ற அமைப்பின் கீழ் தயவுசெய்து இதைவிட அதிகமாகக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூடுதல் மின்சாரம் வழங்கவேண்டும் என்பது தான் இதிலே, கொடுக்கப்பட்டு இருக்கிற முக்கிய நோக்கம். மின்சாரத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்று தனியாக ஸ்குவாட் இருக்கிறது. அதை அது போய் கண்டு பிடிக்கிறது. அதற்கும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. திருடர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்த ஸ்குவாட் கண்டுபிடிக்கும். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின்சாரம் வழங்க வேண்டுமானால் அதிகத் திறன் உள்ள மின் மாற்றிகளும், கூடுதல் திறன் உள்ள மின் கம்பிகளும் தேவை. அதற்காக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த மாதத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு 40 இணைப்புகள் வீதம் அந்த 150 பேருக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8]

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 4 மாதங்களுக்குள் விரைவாக கொடுக்கப் படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், அதற்கு இடையிலே அங்கே மின் திருட்டு தடுப்புக் குழுவினர் என்ற ஒரு அமைப்பு அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு மின்சாரம் திருடுகிறார்கள் என்ற முறையிலே அடிக்கடி தொல்லை கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் ஆழமாகப் போய் விட்ட இந்தக் காலக்கட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தக் குழுவினர் ஏராளமாகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். ஆகவே, வாலண்டரி டிஸ்குளோஷர் என்ற அமைப்பின் கீழ் தயவுசெய்து இதைவிட அதிகமாகக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கூடுதல் மின்சாரம் வழங்கவேண்டும் என்பது தான் இதிலே, கொடுக்கப்பட்டு இருக்கிற முக்கிய நோக்கம். மின்சாரத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்று தனியாக ஸ்குவாட் இருக்கிறது. அதை அது போய் கண்டு பிடிக்கிறது. அதற்கும் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. திருடர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அந்த ஸ்குவாட் கண்டுபிடிக்கும். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் 150 விவசாய விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின்சாரம் வழங்க வேண்டுமானால் அதிகத் திறன் உள்ள மின் மாற்றிகளும், கூடுதல் திறன் உள்ள மின் கம்பிகளும் தேவை. அதற்காக சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இந்த மாதத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு 40 இணைப்புகள் வீதம் அந்த 150 பேருக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1989-90 ஆம் ஆண்டுக்கான பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:—

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1990—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:-

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:–

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி

(ஆ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

1990 மே 8]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1990.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. **அறிவிப்புகள்**—(தொடர்ச்சி.)

10-50 மணி

(ஆ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

1990 மே 8]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1990.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. **அறிவிப்புகள்**—(தொடர்ச்சி.)

10-50 மணி

(ஆ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள்—(ஆய்வு செய்தல்)

(அ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் குறிப்பாக இதுவரையில் திங்கள் ஒன்றுக்கு 250 ரூபாய் மட்டும் உதவித் தொகை வழங்கப்பட்ட தமிழறிஞர்கள், தமிழ் மொழிக் காவலர்கள் ஆகியோருக்கு 350 ரூபாய் உதவி வழங்க வேண்டுமென்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டாலும், சட்டப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற முறையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது விவாதிக்க இருப்பவர்கள் நான்கு பேர்கள். இன்று 9 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை நினைவிற்கொண்டு, அனைவரும் மிகச் சுருக்கமாகப் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. க. பொன்னுசாமி அவர்கள், 7 மணித் துளிகள்.

***பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் தொடர்பான சட்ட முன் வடிவின் மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கும், நான் கொடுத்த திருத்தத்தின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கும் அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழறிஞர்களுக்கு உதவித் தொகையாகத் திங்கள் ஒன்றுக்கு 350 ரூபாய் வழங்குவதற்கு இந்தச் சட்ட முன் வடிவு வகை செய்கிறது. அதை உயர்த்தி ரூபாய் 500 ஆகத் தர இந்த அரசு முன்வர வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை முன் மொழிந்து அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்கிறேன்.

*24—3—1990 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

இப்பொழுது வழங்கப்படுவது மிகவும் குறைவானது என்ற எண்ணத்தோடு, ஏறி வருகின்ற விலைவாசியின் அடிப்படையில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் கருத்திற்கொண்டு இதைச் சற்று உயர்த்திட அரசு முன் வர வேண்டும்.

முத்தமிழ் என்று நாம் தமிழைச் சொல்கிறோம். இயல், இசை, நாடகம் என்று மூன்று அதிலே இருப்பதாக நாம் பல முறை வெளியிலேயும் சொல்கிறோம்; அவையிலேயும் விவாதிக்கிறோம். இப்பொழுது கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்ட முன் வடிவு இயற்றமிழுக்கு மட்டும் ஆக்கம் தருவதாக அமைகிறதே தவிர, இசை, நாடகத் தமிழுக்கு எதுவும் செய்வதாக அமையவில்லை. ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற இசைக் கலைஞர்கள் மற்றும் நாடகக் கலைஞர்கள் பலர் வறுமையின் பிடியிலே சிக்கி வாழ்விழந்து வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்த அரசு அவர்களுக்கும் இந்த உதவியை நீட்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தமிழறிஞர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் எனவும், தமிழ் மொழி தொடர்பான அரசு விழாக்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி, அவர்கள் கவுரவிக்கப்பட வேண்டுமென்பதையும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேரவை மற்றும் ஆலோசனைக் குழுக்களில் தமிழறிஞர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், தமிழறிஞர்களுடைய புத்தகங்ககளை அரசே பதிப்பிக்க வழிவகை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மறைந்த கவிராஜ பண்டித ஜெகவீர பாண்டியனார் என்பவர் புலவர் குழுவிலேயிருந்தவர்; பல்வேறு புத்தகங்களை எழுதியிருக்கிறார். திருக்குறள் குமரேச வெண்பா என்ற 1,330 வெண்பாக்களை எழுதியவர். வீரபாண்டியம் என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் என்பதையும் கம்பன் கலை நிலை, இந்தியத் தாய்நிலை Virtue of India போன்ற பல்வேறு புத்தகங்களை எழுதி, அவரே அச்சிட்டு வெளியிட்டவர். இப்பொழுது அந்தப் புத்தகங்கள் கூடக் கிடைப்பதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட தமிழறிஞர்களுடைய புத்தகங்களை அரசே பதிப்பித்து அவர்களுக்கு உரிமைத் தொகையும் வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

மாவட்ட அளவில் நடைபெறுகின்ற அரசுத் துறை கைத்தறிக் கண்காட்சியில், இசை, நாடகக் கலைஞர்களுக்குப் பாரபட்சமின்றி வாய்ப்புத் தர வேண்டும். இதிலே கட்சிக் கண்ணோட்டம்

கூடாது. தமிழில்கூட அரசியல் தேவையில்லை என்ற கருத்திலே, அவர்களுக்கும் வாய்ப்புகள் தந்து, அவர்கள் கவுரவிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : நன்றி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, இங்கே தமிழறிஞர்களுக்கு 250 ரூபாயிலேயிருந்து 350 ரூபாயாக உயர்த்துவதற்காக சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை ரூபாய் 500 ஆக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே தமிழறிஞர்கள் அத்தனை பேருக்கும் இந்த வாய்ப்பு அளிக்க வேண்டும். இந்தப் பட்டியலில் எத்தனை பேர் தமிழறிஞர்களாக, தமிழகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்? இந்தத் தமிழறிஞர்களே பல்வேறு வகையான, பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் என்றாலும் அவர்களுக்கு ஏதாவது மாறுபட்டு, வேறுபட்டு அல்லது கட்சி உணர்வோடு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருக்குமானால் தமிழ் என்ற உணர்வோடு, எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும் தமிழ் என்ற உணர்வோடு, நீங்கள் ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு இந்த உதவியை வழங்க வேண்டும்.

10-55 மணி

தமிழ் ஆய்ந்த தமிழ்மகன், டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் தமிழர்களுக்கு, தமிழ் அறிஞர்களுக்கு இன்னும் பல்வேறு உதவிகளை நீங்கள் செய்ய வேண்டும். இங்கே நம்முடைய பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள். நான் கல்வி மானியக் கோரிக்கையில் பேசினேன். தமிழ் படித்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். கல்லூரியில் எம்.ஏ., தமிழ் எடுத்துக்கொள் என்று சொன்னால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். பி.ஏ., தமிழ் எடுத்துக்கொள் என்று சொன்னால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். காரணம் பி.ஏ., தமிழ், எம்.ஏ., தமிழ் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் தமிழைப் படிக்கவும், தமிழைக் கற்றுக்கொள்ளவும், தமிழ் பாண்டித்யம் பெறவும் அவர்கள் யோசிக்கிறார்கள். ஆகவே ஆங்கிலம் தான் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திற்குத்தான் பெரிய மகிமை ஏற்பட்டிருக்கிறது. அந்த மகிமையைப் போக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதே நேரத்தில் தமிழுக்கும் அந்த மகிமை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 8] [திரு. ஆர். சிங்காரம்]

தமிழகத்தில் கீழ்த்தட்டில் இருக்கின்ற மக்களை எல்லாம் மேல் தட்டிற்குக் கொண்டுவர வேண்டும். கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்கு எல்லாம் படிப்பறிவை வழங்க வேண்டும். இப்படி படிப்பறிவு பெற்று அவர்கள் தமிழ் அறிஞர்களாக வரவேண்டுமென்றால் இங்கே சில சமுதாயங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அதிலே யாதவா சமுதாயத்தை மட்டும் அறிவிக்கவில்லை என்று அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இங்கே பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். நான் யாதவா அல்ல. ஆனால் இந்தச் சமுதாயத்தில் இருப்பவர்களுக்கும், தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை ஏழை எளிய மக்களுக்கும், எல்லா ஜாதி, மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் நாங்கள் தொண்டு செய்ய கடமைப்பட்டவர்கள். அந்த அடிப்படையில் தான் சொல்கிறேன். அவர்களுக்கு படிப்பு அறிவு மிகக் கம்மி. ஏதோ இந்தப் பேரவையில் இருக்கிற தலைவர் மட்டும் தான் படித்து, தமிழ் ஆய்ந்து, இங்கே பேரவைத் தலைவராக இருக்கிறார்களே தவிர, தமிழ் நாட்டில் இருக்கிற யாதவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள்.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன், இராமநாதபுரம் பகுதியில் யாதவா மக்கள் டெண்ட் அடித்துக்கொண்டு, கொட்டகை அமைத்துக்கொண்டு, ஆடுகளைக் கொண்டு கிடை போடுகிறார்கள். எல்லா கிராமங்களிலும் இந்தச் சூழ்நிலை இருக்கிறது. அந்த கிடை போடுகிறவர்கள் சாதாரண தொழிலாளிகள். அவர்கள் வயலில் படுத்திருக்கிறபோது பாம்பு, பல்லி, பூரான் போன்றவை கடித்தால் இறந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு ரிஸ்க்கான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஆடுகள் கூட பாம்பு கடித்தால் இறந்துவிடுகின்றன. அதனாலும் மிகப் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, உழைக்கிற தொழிலாளி அந்த யாதவா சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஊர் ஊராக டெண்ட் அடித்துக்கொண்டு, போகிற தொழிலாளி, யாதவா சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், பெரும் பகுதியினர் தமிழ்நாட்டில் நான்காவது நிலையில் இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் 10,000 பேர்கள் இருக்கிறார்கள். மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் போராட்டம் கூடநடத்தினார்கள். கோரிக்கைகளை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தயவு செய்து அவர்களை நன்றாக படிக்க வைத்து, பேரவைத் தலைவரைப்போல தமிழ் படித்த அறிவாளியாக நீங்கள் ஆக்க வேண்டும்.

அடுத்து இந்த யாதவா சமுதாயத்திற்கு—எல்லா சமுதாயத்திற்கும் நீங்கள் வாய்ப்பு அளித்தீர்கள்—அமைச்சர் போஸ்ட் கொடுக்கவில்லை. ஆகவே, அமைச்சர் போஸ்ட் யாதவா சமுதாயத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும். ஏனென்றால், இந்தக்

கோரிக்கையை நான் பேசுவதற்கு ஸ்பீக்கர் அவர்களிடத்தில் 25 தடவை கேட்டேன். அவர் வாய்ப்புக் கொடுக்க மறுத்து விட்டார். காரணம் அவர்கள் யாதவா என்பதால். அவர் யாதவா சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில், தமிழ் படித்து, ஆய்ந்து, தெரிந்து, புரிந்துள்ள காரணத்தால்தான் இங்கே பேரவைத் தலைவராக இருக்கிறார். ஆகவே, யாதவா சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதால் அல்ல. எனவே, அந்தச் சமுதாயத்திற்கு இங்கே அமைச்சர் போஸ்ட் ஒன்று அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களை நன்றாக படிக்க வைத்து, திறமையுள்ளவர்களாக, வல்லவர்களாக, வாழ்க்கையில் சிறந்தவர்களாக ஆக்குவதற்கு, அவர்களை தயவுசெய்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசி இருக்கிறார்கள். அன்றைய தினம் நான் முஸ்லீம்களைக் குறித்து, அவர்களுக்கு இருக்கிற குறையை எடுத்துச் சொன்னால், தனிப்பட்ட ஜாதி அடிப்படையில், மத அடிப்படையில் பேசக்கூடாது என்று எனக்கு உபதேசம் செய்தார்களே காங்கிரஸ்காரர்கள். இன்றைக்கு அவர்கள் மட்டும் பேசலாமா, அல்லது முஸ்லீம்கள் என்றால் பேசக்கூடாது, மற்றவர்களுக்காக பேசலாம் என்பதை அவர்கள் வலியுறுத்துகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, திரு. சிங்காரம் அவர்கள் சட்டப் பேரவையில் சில நேரம் எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் எல்லாம் அவருடைய சொந்தக் கருத்துக்களாக இருக்கின்றன. அன்றுகூட சட்டப்பேரவையில் எல்லோருக்கும் ஊதிய உயர்வு கேட்டபோது, அனைத்து உறுப்பினர்களும் அவரை ஆதரித்தாலுங்கூட, காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக அது இல்லை.

11-00 மணி

இப்போதுகூட ஜாதியினுடைய அடிப்படையில் ஒருவருக்கு ஒரு பதவி கொடுக்கவேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கோட்பாடு அல்ல. ஆனால் சிங்காரம் அவர்கள் சொல்வதன் தாத்பரியம் என்னவென்றால் யாராவது அடக்கி, ஒடுக்கப்பட்டு கிடப்பார்களேயானால் அவர்கள் எல்லாம் மேலே வரவேண்டும் என்பதுதான். அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் அது சொல்லப்பட்டதே தவிர வேறல்ல. எனவே இன்னின்னாருக்கு இப்படி, இப்படி கொடுக்கவேண்டும் என்று சொல்கிற அந்த ஒரு திட்டத்தை காங்கிரஸ் கட்சி வைத்திருக்கவில்லை. 'ஜாதி மதங்களைப் பாரும்' என்று சொல்கிற அளவுக்கு

அது யாராக இருந்தாலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வர வேண்டும் என்று சொல்கிறபோது அவர்கள் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமே தவிர, அவர் பின்தங்கி இருக் கிறார், அல்லது அவர்களுக்கு தேவை என்ற வகையிலே கொடுக் கப்பட்டு அவர் ஒரு ஜாதியிலே வரக்கூடுமே தவிர, இந்த ஜாதியிலே இருக்கிறார் எனவே கொடுக்கவேண்டும் என்று சொல்கிற தத்துவம் காங்கிரஸ் கட்சியினுடைய கோட்பாட்டுக்கு உகந்தது அல்ல. அவர் நல்லெண்ணத்தோடு அதைச் சொன்னாலும் கூட அது அவருடைய மிகச் சிறந்த மனிதாபிமானத்தின் காரண மாகச் சொல்லப்பட்டதே தவிர கட்சியினுடைய கோட்பாடு அல்ல.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ஒன்றைச் சொன்னார்கள். அவருடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சில நேரங் களில் பேசுவது கட்சியினுடைய கருத்து அல்ல; அவருடைய தனிப்பட்ட கருத்து என்று சொன்னார்கள். அப்படியானால் அவர் பேசும்போது எப்போது கட்சியினுடைய கருத்தைப் பேசுகிறார். எப்போது அவருடைய சொந்தக் கருத்தைப் பேசு கிறார் என்பதைப்பற்றி நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் விளக்குவார்களா என நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு உ. ரா. வரதராசன்) : மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு 9 சட்டமுன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதன் காரணத்தால் சட்டமுன் வடிவுகளுக்குத் தொடர்பு இல்லாத செய்திகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு உ. ரா. வரதராசன்): திரு. லத்தீப் அவர்கள் அமரவேண்டும். சட்டமுன்வடிவுகளுக்குத் தொடர்பு இல்லாத செய்திகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள் கிறேன். வாதத்திற்கு வாதம் என்று தொடருவது சரியல்ல. நீங்கள் சொன்னதற்கு விளக்கம் தந்துவிட்டார்கள். எனவே தயவுசெய்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மனிதாபி மான அடிப்படையில் எல்லோருக்கும் உரிய முறையில் பிரதி நிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுகிற கருத்துக்கள் வரவேற்கக்கூடியது. இது கட்சிக் கருத்தாகவும் இருக்கலாம். தனிப்பட்ட கருத்தாகவும் இருக்கலாம் என்பதை மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் விளக்கிச்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சொன்னார்கள். நன்றி அதே அடிப்படையில்தான் எல்லோருக்கும் உரிய முறையில் பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டும். உரிய முறையில் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டியவர்களுக்குத் தான் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்று குரல் கொடுக்கிறோமேதவிர வேறல்ல. ஆனால் நான் அன்றைக்கு தனிப்பட்ட முறையிலே பேசக்கூடாது, தனிப்பட்ட ஜாதிகளுக்கோ அல்லது பிரிவுகளுக்கோ பேசக்கூடாது என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சொல்லப்பட்டது எனவே இப்போது திரு. சிங்காரம் அவர்கள் சொன்ன கருத்தையும், திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்ன கருத்தையும் ஒட்டித்தான் நானும் பேசி இருக்கிறேன். எனவே அவருடைய கருத்தும் எனக்கு ஏற்புடையதுதான். ஆனால் அவர்களுக்கு என்று ஒரு அணுகுமுறை, நமக்கென்று ஒரு அணுகுமுறை வைத்துக்கொள்ளக்கூடாது என்பதைத்தான் மீண்டும் அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கும் இப்போது எழுந்திருக்கிற வாதத்திற்கும் சம்பந்தம் இல்லை. இது மொழிக்காவலர்கள், தமிழறிஞர்கள் ஆகியோருக்கு இதுவரையில் 250 ரூபாய் தந்து வந்ததை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஊதியம் உயர்த்தப் பட்டிருக்கிற இந்த நிலையில், அதை 350 என்றாவது உயர்த்தலாம் என்ற அடிப்படையில்தான் வந்திருக்கிற திருத்தமாகும். இதனை 500 ரூபாயாக வழங்கலாம் என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். நிதிவசதியைப் பொறுத்து அது காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர்களுக்கு உதவித்தொகை உயர்த்தக் கூடிய இந்தச் சட்டத் திருத்தத்தை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

தமிழ் மொழியைத் தன்னுடைய உயிராகக் கொண்டு வரலாறு படைத்திட்ட பாவேந்தர் பாரதிதாசன்அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடக்கூடிய இந்த நேரத்தில் இந்தத் திருத்தம் தேவையானதுதான். ஆனால் இன்னும் கொஞ்சம் கூடுதலாக்க வேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன் இந்த உதவித்தொகை பெறத் தகுதி வாய்ந்தவர்கள் ஏராளமான பேர்கள் வெளியிலே இன்னும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் விரைவிலே அந்தச் சலுகை கிடைக்க அதற்காக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய குழுவை எந்தவிதமான அரசியல் கட்சி வேற்றுமை இல்லாமல் அனைவருக்கும் அளிக்கக் கூடிய முறையில் விரிவு படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ச்சியாக பல தமிழ் அறிஞர்கள் தங்களுடைய இன்னல்களைப் பற்றித் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு அறிஞர் எனக்கு தெரிவித்ததை நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்ச

ரிடம் கூட நான் கூறினேன். வறுமைவாய்ப்பட்டு மிகவும் அல்லல் படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த உதவியை விரைவுபடுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட நாடகக் கலைஞர்களுக்கும் இந்த உதவி கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். நாடகக் கலைஞர்கள், கிராமிய கலைஞர்கள் ஆகியோருக்கு ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பது தமிழ்மொழி பற்றி இத்தனை இத்தனை சிறப்புகளும்....

11-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அந்தக் கருத்தைப் பேசினார்கள். அம்மையாரும் பேசுகிறார்கள். நலிந்த கலைஞர்கள் 2,467 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற தொகை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. மாதம் 250 ரூபாய் நலிந்த கலைஞர்களுக்கு 2,467 பேருக்கு ஏறத்தாழ 2,500 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் அரசியல் கட்சி கண்ணோட்டமில்லாமல் வழங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். மொழிக்காவலர்களாகவோ அல்லது எல்லைப் பாதுகாப்புக் காவலர்களாகவோ ஏதேனும் ஒரு வகையில் மொழி காக்க, மொழி உரிமைபண்பாடு காக்கத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிறது என்பது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. இந்த அவையிலே உள்ளவர்களுக்குத் தெரியும்.

திருமதி பாப்பா உமாநாத் : ஆகவே, படிப்பறிவு இல்லாத கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு நாடக கலை மூலமாக நல்லக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அது மட்டுமல்ல. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டக் காலத்தில் கூட, நாடகத்துறை மூலமாக தமிழ் பற்றோடு தேசிய பற்றையும், எழுச்சியையும் ஊட்டிவந்திருக்கிறார்கள். ஆகவே, கிராமிய கலையும் நாடகக் கலையும் இன்றைக்கு அநேகமாக நசிந்து விடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் இன்னும் கூடுதலாக நாடகக் கலைஞர்களுக்கு ஒய்வூதியத்தை விஸ்தரித்து அவர்களுடைய வாழ்க்கையை மட்டுமல்ல இந்த கலையையும் முன்னுக்கு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் ராஜமாணிக்கம் போன்றவர்கள் முன்பெல்லாம் கூட தங்களுடைய நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அநேகமாக அது போய்விட்டது என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல இன்றைக்கு நெல்லை மாவட்டத்தில் இருந்து கூட வில்லுப்பாட்டு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய கார்க்கி என்பவர், உதவிக் கரம் நீட்டி இன்றைக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆகவே, கிராமியக் கலைகள் செம்மையாக

வளர உதவ வேண்டுகிறேன். நாதஸ்வரத்தைப் பொறுத்தவரையிலும் எனக்கு எழுதியிருக்கக் கூடிய ஒரு கோரிக்கையில், நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் இந்த ஒய்வூதியத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். பொதுவாக திருமணத்திலே நாதஸ்வரத்தினுடைய சிறப்பை நாம் அறிவோம். கல்யாணியையும், தோடியையும் வாசித்துக் கொண்டிருந்தவர்கள், இன்றைக்கு அவர்களுக்கு பசிக்கிறது என்று சொல்லக்கூடிய முறையில் முகாரியை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களையும் இந்த ஒய்வூதியத்தில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல இது மாதிரி இயல் இசை நாடகம் என்ற முறையில் தமிழ் வளர்ப்புக்கு உதவி செய்து வரக்கூடிய அனைத்துக் கலைஞர்களுக்கும் அதிகமான முறையிலே இந்த ஒய்வூதியத்தை விஸ்தரித்து நல்ல முறையிலே அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த ஒய்வூதியத்தை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக நல்ல நோக்கத்தோடு அவர்கள் அதிகப்படுத்தினாலும் கூட, எங்கள் கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இங்கே சொன்னதைப் போல தமிழ் அறிஞர்கள் ஒய்வூதியமாக பெறுகின்ற நேரத்தில், ஒய்வூதியமென்று வருகிறதென்றாலேயே அவர்களுக்கு வேறு வசதிகள் அதிகமாக இல்லையென்றுதான் பொருள். எனவே, இந்த விலைவாசி நேரத்தில், 500 ரூபாய் என்பது கூட குறைந்தபட்சம்தான். அதுவும் நல்ல தமிழ் பற்றுள்ள அரசு இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அந்த 500 ரூபாயாவது கொடுப்பதற்கு அரசே இன்றைக்கு அந்த திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றுமேயானால், நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம். எங்கள் கட்சியினுடைய சார்பிலே நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்வோம். இப்பொழுது இந்த அறிஞர் பெருமக்களுடைய பட்டியல் என்று சொல்வது, துறைகள் தோறும் அதிகரிக்கப்பட வேண்டும் அல்லது துறைகள் தோறும் விஸ்தரிக்கப் படவேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதை போலவே வில்லுப்பாட்டுக் கலை என்று சொல்லுகின்ற அளவுக்குக் கூட, அது கிராமப்புற கலையை வளர்ப்பதற்கும், இந்த ஒய்வூதியம் உற்சாகம் கொடுப்பதாக அமைய வேண்டும். பெரியபெரிய அறிஞர்கள் சிலர் யாரிடமும் தகுதிச் சான்றிதழ் வாங்க முடியாத அளவிற்கு பல இடங்களில் விடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே அமைச்சர் பெருமகனாருடைய கவனத்திற்குக் கொண்டு வருவேன்.

1990 மே 8] [திரு. குமரி அனந்தன்]

11-10 மணி

ராமதாஸ் போன்ற மிகப் பெரிய அறிஞர்கள் எல்லாம் இங்கே தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட, கண்ணகிக் கோட்டத்தைப் பற்றிப் பேசுகின்றபோது காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து கால்நடையாகச் சென்று அந்த வேங்கை மரத்தின் கீழே நின்று அந்த கண்ணகி நின்ற கோலத்தை நாம் சிலப்பதிகாரத்திலே காணுவது போலவே நடந்து சென்று அந்தப் பாதை வழியாக அவள் எங்குதான் சென்றிருப்பாள் என்றுபார்த்து வந்து, அதற்குப் பிறகு அந்த கண்ணகிச் சிலையில் இருக்கின்ற உடைந்து கிடந்த அந்தத் தலைப் பகுதியை எடுத்து, அது இமயச் சாரலிலிருந்து எடுக்கப்பட்டது தான் என்று சிலையைச் செய்வதற்கு வழி வகுத்துக் கொடுத்த கோவிந்தராஜன்கூட இன்று மிக ஏழ்மையான நிலையிலே தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே இவ்வளவு பேரறிஞர்கள் எல்லாம் இப்படிப்பட்ட நிலையில் சற்றுத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இது அவர்களாகவே நமக்கு மனு செய்தால்தான் கொடுக்கமுடியும் என்ற நிலை போக, நம்மிலே சிலர் அக்கறை உடையவர்கள், ஆர்வம் உடையவர்கள்கூட அவர்களுக்குச் சற்று உதவிகரமாக இருக்கவேண்டுமென்பது என்னைப் போன்றவர்களுடைய எண்ணம்.

சாதாரணமாக இப்போது சான்றிதழ் கேட்பது யார்? இவர்கள் எல்லாம் தமிழ் அறிஞர்கள் என்று சான்றிதழ் கொடுப்பது யார்? அந்தச் சான்றிதழ்களை யாரிடமிருந்து பெற்றால் போதுமானதாக இருக்கும் என்பதையும் அமைச்சரவர்கள் பதிலுரையிலே விளக்கமாகத் தெரிவிப்பார்களேயானால் அப்படிப்பட்ட ஆட்கள், இந்தத் துன்பத்திலே தோய்ந்து கொண்டிருந்தவர்களுக்கு நல்ல உதவி செய்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது தமிழக அரசின் சார்பிலே ஏதாவது நூல்கள் வெளியிடப்பட்டது என்று சொன்னால், நல்ல கவிதை நூல்கள் இலக்கிய நூல்கள் வெளியிடப்பட்டது என்றால், இந்தப் பட்டியலில் இருக்கின்ற தமிழறிஞர்களுக்கு இலவசமாக நாம் அதை விநியோகிக்கலாம். உதாரணமாகச் சொல்லப்போனால் நேற்று முன் தினம் நடந்த பாரதிதாசன் சிலைத் திறப்பு விழா, அந்த நூற்றாண்டுத் தொடக்க விழாவின்போது நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தலைமையிலே நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். பாரதிதாசனுடைய நூல்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்டு, மலிவு விலையிலே கொண்டுவரப்படும் என்று சொன்னார். தேசியமயமாக்கப்பட்டாலே எல்லோரும் அந்த நூல்களை பதிப்பித்துக் கொள்ளலாம் என்றுதான் பொருள். இருந்தாலும்கூட, அரசு ஒரு பதிப்பை நிச்சயமாக வெளியே கொண்டுவரவேண்டும்.

அப்படி கொண்டுவரப்படுகின்ற அந்த நல்ல பதிவில் ஒவ்வொரு பிரதியையும், அதிலே கொண்டுவந்திருக்கின்ற அத்தனை கல்வித் தொகுப்பிலும் இப்படிப்பட்ட பேரறிஞர்களுக்கு அனுப்புவதின் மூலம் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.

அதைப்போலவே வேறு வெளியீடுகளை எல்லாம் கொண்டு வருகின்ற நேரத்தில் நாம் அதனை அவர்களுக்குக் கொடுக்க லாம். ஏனென்று சொன்னால் அறிஞர் பெருமக்களை இப்போது நாம் தேடித்தான் எடுக்கவேண்டுமென்ற காலத்திலே விளம்பரமும் அதிகமாக விளம்பரம் கிடைக்கப் பெறாதவர்கள் மங்கியிருப்பது போல் தோன்றுகிறது.

உதாரணத்திற்கு இப்போது நான் அந்த வாய்பைப் பயன் படுத்திக் கொண்டு பேராசிரியர் அவர்களுக்குச் சொல்கிறேன். சுவாமி சகஜானந்தா உட்பட டாக்டர் அம்பேத்கார் உட்பட, பாரதிதாசனார் உட்பட, முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்கள் உட்பட பல்வேறு பேர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடு கின்ற நேரத்தில், தொ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களுடைய தமையனார் பாவலர் கிருஷ்ணசாமி அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் இப்போது வருகிறது. நூற்றாண்டு தொடங்கவில்லை. நடந்து கொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், நம்மிலே பல பேர் அவர்களை நினைக்காமல் விட்டுவிட்ட காரணத்தால் சொல்கிறேன். முதன் முதலாக லண்டன் சென்று நாடகத்தை நடத்தி, தேச பக்தியை வளர்த்தவர் அவர். கதர் என்று சொல் கின்ற ஒரு நாடகத்தை நடத்தியவர். மனிதாபிமானம் மிக்க நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னவர். நாடகத் தந்தை என்று போற்றுகின்ற சம்பந்த முதலியாரே மிகப் பெருமையாக போற்றியவர் கிருஷ்ணசாமி பாவலர் அவர்கள், அவர்கள் தான் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடத்தையும் தமிழ்த் தொண் டையும் சேர்த்து நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தப் பள்ளிக்கூடம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே பாதி நாட்கள் இப்போது சென்றுவிட்டது. நான் தயவு செய்து இந்த நேரத்திலே உங்களை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவருடைய நூற்றாண்டை நாம் கொண்டாடுகின்ற அளவிற்கு ஏதாவது சில விழாக்களை யாவது வைத்து, அந்தப் பெருமகனாரை நினைவுபடுத்துகின்ற அளவிற்கு அந்தப் பட்டியலில் இதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் கிருஷ்ணசாமி பாவலர் அவர்கள் தொ. பொ. மீனாட்சிசுந்தர னார் அவர்களுடைய தமையனார் என்பதை உங்களுக்கு நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

இந்த ஒய்வூதியம் கொடுப்பதுகூட அப்படிப்பட்டவர்கள் எங்கெங்கேயோ பெரும் அறிஞர்கள் இப்போது, எழுந்து நடமாட முடியாத நிலையில் இருப்பார்கள். அவர்களை நாம் எப்படியாவது உற்சாகப்படுத்துகின்ற வகையில் அங்கங்கே இருக்கின்ற தமிழ்ப் பேராசிரியர்களும், சட்டமன்ற உறுப்பினர்

களும்கூட தகுதிச் சான்றிதழ் கொடுத்தால் போதும் என்ற அறிவிப்பை நீங்கள் வெளியீடுவீர்களானால், அவர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். அவர்கள் தேடிச் சென்று பெறுவதைவிட நாங்கள், எங்களைப் போன்றவர்கள் நாடிச் சென்று நீங்கள் இப்படி தகுதிப் பெற்றவர்கள் என்று சொல்லக்கூடிய அளவில் நீங்கள் பரிசீலியுங்கள். அதன்பிறகு கூட நீங்கள் பரிசீலிக்கலாம். ஆனால் எங்களுக்கு அதிலே ஒரு முன்னுரிமை எங்களுக்கு என்றால் எனக்கு மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதைப்போலவே தமிழ்த்துறைத் தலைவர்களாக இருக்கின்ற எல்லோருக்கும் நீங்கள் அந்தத் தகுதிச் சான்றிதழ் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பினை உரிமையினை கொடுக்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது இந்தக் கல்வெட்டுகள், ஆராய்ச்சிகள் போன்றவைகள் எல்லாம் செய்து கொண்டிருக்கின்ற பெருமக்களிலே சிலர்—அது ஒய்வூதியம் மட்டுமல்ல, அவர்களுக்கு ஆய்வூதியம் தேவைப்படுகிறது என்று நான் எண்ணுகின்றேன். இந்த வயதான காலத்திலே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போகின்ற நேரத்தில், ஆய்விற்காகப் போகின்ற நேரத்தில், இந்தப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்தவர்களாக இருந்தால் அவர்கள் அதற்காக ஆங்காங்கே போக்குவரத்து செலவுகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு சில கல்வெட்டுகளை இந்த நேரத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த கோவில்களிலே என்ன என்ன கிடைக்கிறது என்று பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வறுமை ஒரு பக்கம் இருக்கிறது. ஆனாலும் நாம் தமிழன் என்ற பெருமை ஒரு பக்கம் இருக்கிறது, இது கிடைத்தற்கரிய அருமை என்று சொல்லுகின்ற காரணத்தாலே கல்வெட்டைத் தேடிப் போக வேண்டும் என்ற உந்துதல் ஒரு பக்கம் இருக்கிறது. ஆனால் வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தால் இது ஒய்வு ஊதியத்திற்கு உகந்தது தான், ஆனால் அது எல்லை கடந்து சற்றுப் போனால் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரவேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

11-15 மணி

தமிழ் கலைகள் சார்ந்த வகையில் அறிய நூல்களை பதிப்பிக்கின்றவர்கள் இப்போது இருக்கிறார்கள். பதிப்பிக்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த பதிப்பிக்கின்றவர்களுக்கும் இந்த ஒய்வு ஊதியம், பதிப்பிக்கின்றவர்கள் அந்த விண்ணப்பத்தை அவர்களுக்கு தேவைக்காக அல்ல, பெருமைக்காக நாம் கொடுப்பது போல், பதிப்பிக்கின்றவர்கள் யாராவது கொஞ்சம் வசதி குறைவாக இருந்தால் என்று சொன்னால் அவர்களுக்கும் அந்த ஒய்வு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாநாடுகள் நடக்கின்றபோது எல்லாம் அவர்கள் அழைக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமான கோரிக்கை. பஸ், ரயிலில் அவர்கள் பயணம் செய்வதற்கு உரிய இலவச ஏற்பாடுகள் இருக்குமானால் அது அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

இன்னும் சிலர் நவீன கருவிகளைக் கூட தமிழ்ப்படுத்துவதற்கு முயல்கிறார்கள். இந்த செயலகத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அம்மையாருடைய தந்தையார் இந்த தந்திகளை தமிழில் அனுப்புவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு பெரும்பகுதி வெற்றி பெற்றிருக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு ஊதியம் வழங்குவதற்குரிய வாய்ப்பு இருக்குமானால் அவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு பணிபுரிவார்கள். இரண்டாவது, ஓய்வு ஊதியம் பெறுகின்றவர்களுடைய துணைவியாருக்கு அந்த ஓய்வு ஊதியம் பெறுகின்றவர்கள் மறைந்த பிறகு கூட அந்த துணைவியாருக்கு அது தொடர்ந்து கொடுக்கப்படுமானால் அது அந்தக் குடும்பத்திற்கு உதவியாக இருக்குமே என்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 9 சட்டமுன்வடிவுகள் மற்றும் அரசினுடைய பணிகள் நிறைவேற வேண்டி உள்ள காரணத்தால் அந்த தமிழ் ஆய்ந்த தமிழ் புலவர்களுக்கு நாம் நல்ல வாழ்வைக் கொடுக்கின்ற இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்து நாங்கள் சொல்லுகின்ற கருத்தையும் சேர்த்துக் கொண்டால் மிகுந்த மரியாதைக்குரியதாகவும் பாராட்டுக்குரியதாகவும் அமையும் என்று சொல்லி அமைகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் சற்று இந்தத் திருத்த மசோதாவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் அவர்களுடைய உள்ளக்கிடக்கை இந்த அரசால் வரவேற்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் அறிஞர்கள், மிகச் சிறந்த நூல் இயற்றியவர்கள், பெரும் புலவர்கள், யாராக இருந்தாலும் அவர்களுடைய நிலை உதவி பெறவேண்டியதாக இருக்கிறது என்று அரசுக்கு தெரிய வருமானால், சான்றிதழ் கூடத் தேவையில்லை, அவர்களே ஒரு கடிதம் எழுதுவார்களானால்—கையெழுத்துப் போட முடியும் என்று நம்புகிறேன்—அவர்கள் யார் எழுதினாலும் அதை இந்த அரசில் அமைச்சர், முதலமைச்சர் ஆகிய நாங்களே கவனிப்போம் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கவனிக்கின்ற ஒரு பழக்கம் இந்த அரசுக்கு உண்டு. ஞானகிரி நாடார் என்ற ஒரு பெரியவர் தமிழ்மொழியில் உள்ள வேர்ச் சொற்கள்தான் கிரேக்க மொழியில், லத்தீன் மொழியில், மேல்நாட்டு மொழிகளில் எல்லாம் 2,500 ஆண்டுக்கு முன்னரே சென்று, பழக்கத்தில் அவர்தம் பேச்சில் பதிந்து அந்த மொழியிலே இடம் பெற்றிருக்கிறது என்று ஆய்வு நூல்கள் சிலவற்றைச் சிறு சிறு நூல்களாக இருந்தாலும் ஆழமான ஆய்வுக் கருத்துக்கள் உள்ள அந்த நூல்களை இயற்றியவர். அவர்கள் இடர்ப்பாட்டிலே இருக்கிறார்கள், தொடர்ந்து ஆய்வு நடத்த முடியவில்லை, உதவி செய்யவேண்டும் என்று அவர்கள் சார்பில் ஒரு அலுவலர் வந்து கேட்ட காரணத்தால் கடந்த 4 திங்களுக்கு மேலாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு நிதி உதவி வழங்கி, சட்டமன்ற விடுதியில் ஒரு அறை வழங்கவேண்டும் என்று சபாநாயகர் மூலமாகக்கேட்டு வழங்கப்பெற்று, அவர்களால் முடிந்த அளவுக்கு அந்த ஆய்வுப் பணியை மேற் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மனநிறைவோடு தங்களுடைய ஆய்வைத் தொடர்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இசைக் கலைஞர்களும், நாடகக் கலைஞர்களும் யாராக இருந்தாலும் இயல் இசை நாடக மன்றம் அவர்களுடைய பெயர்ப்பட்டியலைத் தேர்ந்து அவர்களுக்கு மாதாமாதம் உதவித் தொகை வழங்குகிற அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நான் முன்னர் சொன்னது போல் ஏறத்தாழ 2,500 பேருக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அது மட்டும் அல்லாமல், அவர்களிலே மிகுந்த சிறப்பு வாய்ந்தவர்களுக்கு, கலைமாமணி என்ற விருது தந்தும் இந்த அரசு பாராட்டுகின்றது. ஆண்டுதோறும் அந்த விருது வழங்கப் படுகிறது. வேறு தக்க முறையில் அவர்களுக்கு உதவ வேண்டிய ஒரு நிலைமை ஏற்படுமானால், அரசுக்குத் தெரியவருமானால் முடிந்த அளவுக்கு முயற்சிக்கப்படும். இங்கே நாம் கொண்டு வந்து இருக்கிற இந்தத் திருத்த மசோதாவில் 350 ரூபாய் என்று இருப்பது—250 ரூபாயை 350 ரூபாயாக உயர்த்துவது—இந்த ஒரு வகையில் உள்ளவர்களுக்கு உயர்த்துவது இதற்கு முன்னர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொகைக்கு ஈடாக இது வழங்கப்படவேண்டும் என்ற முறையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை மட்டும் தனியாக உயர்த்துகிறபோது வேறு சில வகையில் உதவித் தொகை வழங்குகிறவர்களுக்கும் உயர்த்தவேண்டிய நிலைமை ஏற்படுமானால் அந்த எண்ணிக்கை மிக பெரியதாக ஆகுகிறபோது உடனடியாக நிதி வழங்கக்கூடிய நிலைமை இருக்காது. இன்னும் ஒன்று, இன்னும் கூட சிலபேருக்கு உதவித் தொகை வழங்கவேண்டிய விண்ணப்பங்கள் தொடர்ந்து பரி சீலிக்கப்படுகிற கட்டத்திலே இருக்கின்றன. அவர்களுக்கும் விரைவாக வழங்குவதற்கு முயற்சிக்கப்படும்.

11-20 மணி

எனவே பொதுவான குறிக்கோளில் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும்கூட, இந்தச் சட்டத்தில் அந்தத் திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், நிதித்துறை பரிசீலிக்கவேண்டியிருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தை இந்த அளவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற வகையில், கலைஞர்களுக்கு, மொழி அறிஞர்களுக்கு, மொழிக்காவலர்களுக்கு இன்னும் இதுபோன்று சிறந்த முறையில் நாட்டுக்குத் தொண்டாற்றியவர்களுக்கு எந்தவகையில் சிறப்பு செய்ய முடியுமோ அல்லது உதவி செய்ய முடியுமோ அந்த வகையில் உதவ இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைப் பொதுவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கருத்து மறுக்க முடியாத ஒன்று என்றாலும் நிதிநிலையினுடைய நிலையைக் கருதி 150 ரூபாய் இன்னும் அதிகப்படுத்தினால் அவர்களுக்கு 500 ரூபாய் கிடைக்கும். ஏனென்றால் எம்.எல்.ஏ.-க்கள் ஒய்வூதியம் வேறு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு வசதிகள் வழங்கப்பட்டு இருக்கிற நேரத்தில் இந்த மொழி காத்தவர்களுக்கு தருகிற சலுகைகளையும் நாம் தொடர்ந்து தரவேண்டும். இந்த அடிப்படையிலே பார்த்தால், மொழி காத்த வீரர்களுக்கு வீடு ஒதுக்கப்படுகிறது என்று வீட்டுவசதி வாரியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அதை முழுமையாக பயன்படுத்திக்கொள்கிற நிலைமை வருவதில்லை. எனவே, ஆங்காங்கே அவர்கள் வசிப்பதற்கான வீடு ஒதுக்கீடு அவர்களுக்கு தரப்படுகிற நிலைமையையும் அதைவிட மிகப்பெரிய மனக்குறை இன்றைக்கு இருப்பது இந்த ஒய்வூதியம் பெறுவதற்காக அவர்கள் விண்ணப்பித்து, அவர்கள் விண்ணப்பங்கள் நீண்டநாள் பரிசீலனையிலே இருக்கின்றன. ஆண்டுக்கணக்கிலே பரிசீலனையிலே இருக்கின்றன. அதைத் தவிர்த்து உடனடியாக அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளை மட்டும் மேற்கொண்டால் நிச்சயமாக நம் தமிழ்காத்த வீரர்களுக்கும், எல்லைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கும் தமிழ்வீரர்கள் அனைவருக்கும் நாம் செய்த சிறந்தசேவையாக இருக்கும். எனவே மாண்புமிகு முன்னவர் அவர்கள் இப்போது 500 ரூபாய் என்று ஆக்கமுடியாவிட்டாலும், விரைவில் நிதித்துறையோடு கலந்து 500 ரூபாய் ஆக்குவதற்கும், விண்ணப்பித்துள்ள அத்தனை பேருக்கும் விரைந்து, உடனடியாகக் கிடைக்கின்ற வகையில் வழிவகையைச் செய்யவேண்டுமென்றும், வீடு ஒதுக்கீட்டில் அவர்கள் கவனிக்கப்படவேண்டுமென்றும் நான் வற்புறுத்தி முன்னவர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 8]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்கள் 10,704 பேருக்கு மாதம் 350 ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த 350 ரூபாய்க்கு இதையும் கொண்டுவருவதற்குத்தான் இந்தத்திருத்தம். எனவே இதை உயர்த்துகிறபோது அவர்களுக்கும் உயர்த்த. வேண்டுமென்று கேட்டால், பெரிய அளவில் நிதிப் பொறுப்பு ஏற்படும். அதைக்கவனித்து, முடியுமானால் ஏற்றுக்கொள்ளப் படும். இல்லையானால் தற்போது உள்ள 250-ஐ 350 ஆக உயர்த்தி வழங்குவதைக்கூட உடனடியாக செய்ய வேண்டுமென்ற கருத்திருந்தாலும் கடந்த 4 மாதகாலமாக முயற்சித்தாலும் சட்ட மன்றத்திலே நிறைவேற்றுகிற வாய்ப்பு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது

வீடு ஒதுக்குவதில், பல்வேறு விதமான வகைகளில் வீடு ஒதுக்க நேரிடுகிற காரணத்தால் அதிலே விகிதாச்சார அளவிற்குத் தான் இப்படிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட முடியும். தவிர உள்ளபடியே சட்டமன்ற உறுப்பினர்களுக்கேகூட, அவ்வளவு பேருக்கும் வீடு ஒதுக்குவதாக இருந்தால் உடனடியாக முடியாது. முடியாது என்பதை நான் உண்மை நிலவரம் என் பதற்காகச் சொல்கிறேன், எனவே இவைகளெல்லாம் அந்தந்த நிலையில் தனித்தனியாகத்தான் பரிசீலிக்கப்பட முடியும். எனவே, இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. உ. ரா. வரதராசன்): பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 9/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ.ரா. வரதராசன் :) பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

Prof. K. PONNUSAMY *:* Mr. Speaker Sir, I move the following amendment standing in my name *:*

1. "in Clause 2, in sub clause (a), *for* the expression 'Three hundred and fifty rupees per mensem' *substitute* the expression 'Five hundred rupees per mensem,'.

2. "In Clause 2, in sub-clause (b), *for* the expression 'Three hundred and fifty rupees per mensem' *substitute* the expression 'Five hundred rupees per mensem'.

The amendment was duly seconded

Thiru R. SINGARAM: Mr. Speaker Sir, I move the following amendment standing in my name:

1. "In Clause 2, in sub-clause (a), *for* the expression three hundred and fifty rupees per mensem' *substitute* the expression 'five hundred rupees per mensem.'

2. "In clause 2, in sub-clause (b), *for* the expression 'three hundred and fifty rupees per mensem' *substitute* the expression five hundred rupees per mensem."

The amendment was duly seconded

திரு. ஆர். சிங்காரம், பேராசியர் க. பொன்னுசாமி ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.9/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

1990 மே 8]

11-25 மணி

(ஆ) விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு 1990.

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 16/1990 *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். ''

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. உ. ரா. வரதராசன்) : இந்த விற்பனை வரிச் சட்டத்தையொட்டி சட்டமுன்வடிவு' எண்கள் 15/90, 14/90. 24/90 ஆகிய மூன்று சட்டமுன் வடிவுகள் மீதும்கூட விவாதம் நடைபெறும். இறுதியில் மற்ற மூன்று சட்ட முன் வடிவுகளும் விவாதம் இன்றி வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்கிற அறிவிப்போடு விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்களை அழைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விற்பனை வரியை உயர்த்துவதற்காகவும் பல்வேறு இனங்களுக்கு புதியதாக விற் பனை வரியைப் போடுவதற்காகவும் இந்தச் சட்டம் முன்வடிவு களை அறிமுகம் செய்திருக்கிறீர்கள். விற்பனை வரியைப் பொருத்தவரையில் நம்முடைய அரசுக்கு மிக அதிகமான அளவிலே வருவாய் வரக்கூடிய அளவிலே இருந்துகொண்டு வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விற்பனை வரியானது எந்தக் காலத்தில் போடப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தினுடைய முதலமைச்சராக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் அன்றைய காலக் கட்டத்தில் மதுவிலக்கை அவர்கள் அமல்படுத்திய காரணத்தால் அரசுக்கு மாற்று வழியிலே வருமானம் வர வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த விற்பனை வரியை அவர்கள் அறிமுகம் செய்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் விற்பனை வரியும் இருந்து கொண்டு வருகிறது. அதே நேரத்தில் மதுவிலக்கை ரத்து செய்து அதன் மூலமாகவும் அரசுக்கு வருமானம் வந்துக்கொண்டிருக் கிறது. சென்ற ஆண்டு வரையில் விற்பனை வரியின் மூலமாக

* *19—4—1990ஆம்* நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அர சிதழில் வெளியிடப்பெற்றது.

1,500 கோடி ரூபாய் அளவிலே வருமானம் வந்தது. இந்த ஆண்டு 1989–90ஆம் ஆண்டு சுமார் 1,750 கோடி ரூபாய் அளவிலே வருமானம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மதுவிலக்கை நாம் கொண்டு வந்தால் இதை நாம் நியாயப்படுத்த முடியாத நிலைமையிலே இருந்துகொண்டு வருகிறோம் என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரியிலே மேல் வரி சர்சார்ஜ் என்ற முறையிலே நாம் வசூல் செய்கிறோம். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அவர்களுடைய நிதிநிலையைச் சீர்செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக அதை நாம் அமுல்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆனால் இதுவரையில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். பல்வேறு நகராட்சிகளுக்கு சர்சார்ஜ் என வசூல் செய்து அவைகளை சரியான முறையில் வழங்கவில்லை. சில நகராட்சிகளுக்கு சுத்தமான முறையிலே அந்த வரி வழங்கப்படவில்லை என்று தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வரியை மேலும் அதிகப்படுத்தி மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் மற்றும் உள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் அவைகளுடைய நிதிநிலைகளைச் சீர்செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக வழங்குகின்றோம் என்று சொல்லி இன்றைக்கு உயர்த்தியிருக்கிறார்களே, இது தேவைதானா? ஏற்கனவே 1,750 கோடி ரூபாய் அளவிலே வருமானம் வருகிறது. புதியதாக 400 கோடி ரூபாய் அளவிலே வருமானம் வருவதற்கு மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வரியை உயர்த்துவது தேவைதானா, இதை அறவே ரத்து செய்து, இந்த மேல் வரியை தேவையில்லை என்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் மற்றொன்று. அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்லி கூடுதல் விற்பனை வரியை நாம் இன்றைக்குப் போட்டுக் கொண்டு வருகின்றோம். இந்தக் கூடுதல் விற்பனை வரி 1970 ஆம் ஆண்டே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அன்றையதினம் 10 இலட்சத்திற்கு மேற்பட்டு யாராவது வியாபாரத்தை செய்திருந்தால் அவர்களிடம் வரியை. வசூல் செய்வதற்காக அதை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு 20 ஆண்டுகள் கடந்து இருக்கின்றன. இதே 10 இலட்சம் ரூபாயைத்தான் நாம் குறைந்த அளவாக வைத்திருக்கிறோம். இந்த 10 இலட்சம் ரூபாய் என்பதை மாற்றியமைத்து 40 இலட்சம் ரூபாய் அல்லது 25 இலட்சம் ரூபாயாவது குறைந்த அளவு இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. ஒவ்வொரு பொருளினுடைய விலையும்.... (குறுக்கீடு).

1990 மே 8]

11.30 மணி

திரு. எம். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே' நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15 இலட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வரி என்று சொல்லியிருக்கிறார்கள். 15 இலட்சமாக மாற்றியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : 15 இலட்சம் ரூபாய் உயர்த்த பட்டது ஓட்டல்களுக்கு மட்டும். இவர் பேசிக்கொண்டிருப்பது சர்சார்ஜ் பற்றி. 15 இலட்சம் என்பது இதற்குத்தானா என் பதை தெரிவிப்பார்களா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சேல்ஸ் டாக்சைப் பொறுத்தவரை யில் 10 இலட்சத்திற்குமேல் வியாபாரம் செய்பவர்கள், அதாவது ரூ. 10 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை வியாபாரம் செய் பவர்களுக்கு ஒன்றேகால் சதவீதமும், 40 இலட்சத்திற்கு மேல் 1 கோடி ரூபாய் வரை இருப்பவர்களுக்கு 1–1/2 சதவீதம் என்றும், அதற்கு மேல் உள்ளவர்களுக்கு அதிக விற்பனை வரியும் என்று இன்றைக்கு நாம் திருத்தத்தைத் தாக்கல் செய்திருக்கிறோம். ஆனால் குறைந்தபட்ச தொகையான ரூ. 10 இலட்சம் என்பதை குறைந்தபட்சம் ரூ. 25 இலட்சமென்று உயர்த்தவேண்டுமென்பது நியாயமானது. 1970ல் 10 இலட்சம் என்று வைத்தோம். 1990லும் 10 இலட்சம் என்று சொல்வது நியாயத்திற்கு ஏற்ற வகையில் இல்லை என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இதேபோல, அடிஷனல் சேல்ஸ்டாக்சும், சர்சார்ஜ் என்று போடுவதையும் விட, எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே வரியாகப் போடலாம். எந்தப் பெயரில் எந்த வகையில் நாம் வரிபோட்டாலும் அதைக் கட்டப் போகிறவர்கள் பொதுமக்கள் தான். ஆனால் விவாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம், இது பொதுமக்கள் மீது சுமத்தப்படுகின்ற வரியில்லை, இந்த சர்சார்ஜை, அடிஷனல் சேல்ஸ் டாக்சை வியாபாரிகள்தான் கட்டு கிறார்கள். மக்கள் கட்டவில்லை என்று சொல்லலாம். ஆனால் எந்த வியாபாரியும் தங்களுடைய சொந்த பாக்கெட்டிலிருந்து அதைக் கட்டவில்லை. மக்களிடம் வாங்கித்தான் கட்டுகிறார் கள். போடுகிற எந்த வரியும் பொதுமக்களைத்தான் பாதிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குப் பொதுமக்கள் நேரடியாக கட்டுவது இல்லையென்பது நடைமுறையில் இல்லை யென்றாலும், உண்மையில் அவர்கள் தான் மறைமுகமாகக் கட்டுகிறார்கள். 15 ரூபாய்க்கு அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் போடு வதென்றால், அந்தப் பொருளின் விலை ரூ. 15.25 பைசாதான் ஆகும். ஆனால் 16 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்றுவிடுகிறார்கள். எப்படியும் பின்னால் கட்ட வேண்டியிருக்கிறது. அதை

முதலிலேயே மக்களிடம் வசூல் செய்துவிடலாம் என்று பொது மக்களிடம் வசூல் செய்துவிடுகிறார்கள். இந்த வகையில்தான் வரிகள் பொதுமக்கள் மீது சுமத்தப்படுகிறது, என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெள்ளி நகைகளைப் பொறுத்தவரையில், 4 சதவிகிதம் வரி கட்ட வேண்டுமென்று நாம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஏழை மக்களுடைய ஆபரணம் என்பது வெள்ளியில்தான் இருக்கிறது. அதிலும் பெண்களைப் பொறுத்தவரையில், கொலுசுகள், சிறிய மங்கல மான பொருட்கள் போன்றவைகளை வெள்ளியில்தான் அணி கிறார்கள். அந்தப் பொருட்கள் மீது 4 சதவீகித வரி போட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் சாதாரணக் குடும்பத் துப் பெண்களை இது மிகவும் பாதிக்கும். தங்க நகைகளை அணியமுடியாத பெண்கள், வெள்ளியையாவது அணியலாம் என்று அணிகிறார்கள். அதற்கும் வரி போட்டால் மிகவும் பாதிக்கப் படும். வெள்ளிப் பாத்திரங்கள், வெள்ளியினால் செய்த ஆடம் பரப் பொருட்கள் என்ற பொருட்களுக்கு வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் மங்கலச் சின்னங்களாக அணிகின்ற, மங்கள நிகழ்ச்சிகளுக்கு உபயோகிக்கும் வெள்ளிப் பொருட் களுக்கு வரி போடுவதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு சாப்ட் டிரிங்ஸ்களைப் பொறுத்தவரையில், பாக்கெட்டில் அடைத்து விற்கும் பொருட் களுக்கு வரி போட்டிருக்கிறீர்கள். அத்தகைய பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் சாப்ட் டிரிங்ஸ்கள் உடல் நலத்திற்கு ஏற்றவைதானா, என்று உண்மையிலேயே எண்ணிப் பார்க்க வேண்டும். ரொம்ப நாள் அதை அடைத்து வைத்திருப்பதால், அதில் கெமிக்கல் மாற்றம் ஏற்பட்டு, புழு, பூச்சிகள் அந்த சாப்ட் டிரிங்ஸ்களில் உண்டாகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பொருட்கள் விற்பதையே தடை செய்ய வேண்டும். அந்த சாப்ட் டிரிங்ஸ்களை தடை செய்கிற அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பொருட்களுக்கு வரி யைப் போடுவதால், அதை விற்பதற்கு சட்டபூர்வமான அந்தஸ்து வந்துவிடுகிறது. நாமே அந்த அதிகாரத்தை வழங்கியவர்களாக ஆகிவிடுகிறோம். ஆகவே, அதை தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயிகளுக்கு வரி உயர்வு செய்திருக்கிறோம். ஏற் கெனவே தமிழகத்தில்தான் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப் படுகிற விலை குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். மேலும் மேலும் அவர்கள் மீது வரி உயர்வை சுமத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த வரித் திருத்தத்தைப்

1990 மே 8] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

பரிசீலனை செய்ய வேண்டும். இன்றைக்கு மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதி வழங்கத்தான் இந்த வசூல் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவை சரியான முறையில் வழங்கப்படாமல் அரசின் கஜானாவில்தான் இருக்கின்றன. அந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அவைகள் சரியான முறையில் வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். எந்த அளவிற்கு வசூல் செய்திருக்கிறீர்கள் ? எந்த அளவுக்கு அவைகள் உள்ளாட்சி மன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன? என்கிற விவரத்தையும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

11-35 மணி

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரியில் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு திருத்தங்களுக்கு சட்ட வடிவம் கொடுக்கும் வகையில் இங்கே 4 சட்டத் திருத்தங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாக மாற்றம் செய்திருப்பதை உண்மையில் வரவேற்கிறேன். இதன்மூலம் வியாபாரிகள் பயன்பெற இருக்கிறார்கள். அதைப் போல, தமிழ்நாடு விற்பனை வரி மேல் வரி திருத்தச் சட்டத்தில், குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த வரி மாறுதல்கள் என்பது நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிடப்பட்டிருந்ததுபோல, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்று இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரத்தை கூட்டுகிற வகையில் இன்றைக்கு சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதாவது சென்னை மாநகராட்சிக்கு 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகவும், மதுரை, கோவை மற்றும் தனி நிலை நகராட்சிகளுக்கு 10 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகவும் மற்ற நகராட்சிகள், நகரியங்கள், பேரூராட்சிகளுக்கு எல்லாம் 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகவும், மற்ற ஊராட்சிகளுக்கு எல்லாம் 8 சதவிகிதமாகவும் இங்கே மாற்றங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே, குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, உள்ளாட்சித் துறையினுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, கட்டுகிற மேல் வரியின் மூலமாகக் கிட்டுகிற தொகையில் 20 சதவிகிதம் இந்த அமைப்புகளுக்கு மானியமாக,

சென்னை நீங்கலாக மற்ற நகரங்களுக்கு அல்லது பேரூராட்சி களுக்கு அல்லது நகராட்சிகளுக்கு 20 சதவிகிதம் மக்கள் தொகை அடிப்படையில் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசை நான் கேட்டுக்கொள்வ தெல்லாம், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதே பார்வையில் உள்ளாட்சித் துறையினுடைய நிதிநிலை ஆதாரத்தையும் பெருக்கும் நோக்கத்தில் மாறுதல்களை செய்வதை கருத்தில் கொண்டு, 20 சதவிகிதம் மாறுதலை சற்று கூடுதலாக ஆக்க வேண்டும். சென்னைக்கு 50 சதவிகிதம் என்று இருப்பதை போல அந்த அளவுக்கு இல்லையென்றாலும் கூட, மற்ற நகரங்களுக்கு, பெரும் நகரங்களுக்கு, பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு எல்லாம் அந்த 20 சதவிகிதத்திலிருந்து சற்று கூடுதலாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப் போதுதான் இந்த நோக்கம் நல்லமுறையிலே நிறைவேறும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். அதுபோல, இன்றைக்கு பொது விற்பனை வரியின் கீழ் பல்வேறு தொழில்களுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருக் கிறது. குறிப்பாக, ஒப்பந்த அடிப்படையில் செயல்படக்கூடிய சில தொழில்கள் தமிழகத்தில் இருக்கின்றன. குறிப்பாக, சலவை செய்யும் தொழில், சாயத் தொழில், அச்சுத் தொழில், தையல் தொழில், பஞ்ச் பிரசிங் தொழில் போன்றவை ஒப்பந்த அடிப்படையில் செயல்படும் தொழில்கள் ஆகும். ஆகவே, இந்தத் தொழில்கள்மீது விற்பனை அடிப்படையில் வரி விதிப்பது பொருந்தாது. ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து பொருள் களைப் பெற்று அவர்கள் செலவு செய்து உரிய வேலையை முடித்து திருப்பிக் கொடுக்கிறார்கள். ஆகவே. அதற்குக் கிடைக்கின்ற கூலியிலிருந்து கட்டிட வாடகை மற்றும் இதர தேவைகளுக்கு பயன்படுத்தி செலவு செய்கிறார்கள். ஆகவே விற்பனை அடிப்படையில் இது வராது என்று அவர்கள் வாதாடு கிறார்கள். அப்படி இருந்தும்கூட, 1986-லே, ஏற்கெனவே இருந்த அரசு, இந்த ஒப்பந்தத் தொழில் மீது வரி விதிக்க ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதை எதிர்த்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உச்சநீதிமன்றத்திற்கு எல்லாம் சென்று, கடைசியில் உச்சநீதி மன்றம் அரசியல் சாசன சட்ட திருத்துக்களின்படி இந்தத் தொழில்களின் மீது வரி விதிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கிறது என்று தீர்ப்பளித்த நிலையில், ஒப்பந்த அடிப்படையில் செயல்படும் தொழில்கள் பின் பாக்கியை கணக்கிட்டு, வரி பாக்கியை செலுத்தவேண்டுமென்று, 1986-ஆம் ஆண்டில் கொண்டு வந்த அந்த வரி சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டு மென்று அரசின் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சில லட்சம் ரூபாய், பல ஆயிரம் ரூபாய் மூலதனம் செய்யும் தொழில்களுக்கு 1986 ஆம் ஆண்டிலிருந்து, பின் பாக்கி யோடு அந்த வரியை கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

அவர்கள் வரியாக செலுத்த வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, அவர்கள் கூலி அடிப்படையில் பொருள்களை வாங்கி, திருப்பி கொடுத்துவிட்டார்கள். அப்போதே கணக்கும் முடித்த பிறகு இன்றைக்கு பழைய பாக்கியை கட்ட வேண்டுமென்றால் யாரிடத்தில் துணியை வாங்கி சலவை செய்திருக்கிறார்களோ அவர்களிடத்திலிருந்து இந்தத் தொகையை வரியாக வாங்கியாக வேண்டிய நிலையில், அதை அவர்கள் இன்றைக்கு பெற முடியாத நிலையில், பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி கட்டவேண்டிய நிலைமை வந்தால் நிச்சயமாக அந்தத் தொழிலை நடத்த முடியாத ஒரு நிலை உருவாகும். ஆகவே, அரசு இதை கவனத்தில் கொண்டு, அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி அதற்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க முடியவில்லை என்றாலும், வருகிற காலங்களிலே வரி வசூலிப்பது என்ற நிலையை உருவாக்க வேண்டும். பின் பாக்கி கணக்கிட்டு வசூலிப்பது என்பதை அரசு ரத்து செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

11-40 மணி

இன்றைக்கு சிறு தொழிலாக இருக்கக்கூடிய தொழில் பனியன் தொழில். நேற்றையதினம் நம்முடைய முதலமைச்சரவர்கள் பல வரிச் சலுகைகளை அளிக்கும்போது நான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் பட்டியலிலே பனியன் தொழிலும் வருமென்று ஆவலோடு எதிர் பார்த்தேன். ஆனால், அது வரவில்லை. ஆகவே, மீண்டும் இங்கே முதலமைச்சரவர்கள் இல்லை என்றாலும், ஆட்சி மன்றச் செயலாளர், மற்ற அமைச்சர்கள் இருக்கிற காரணத்தாலே, வலியுறுத்திச் சொல்வது, இன்றைக்கு பனியன் தொழில் பல மாநிலங்களில் இருக்கிறது. கல்கத்தாவிலே, கான்பூரிலே, லூதியானாவிலே, பல்வேறு மாநிலங் களில் இருக்கிறது. தமிழகத்திலே திருப்பூரை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் எல் லாம் பனியனுக்கு விற்பனை வரி இல்லை. நம்முடைய மாநிலத் திலே மட்டும் 5 சதவிகிதமாக இருந்து, கவர்னர் ஆட்சியிலே அது 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உள் நாட்டிலே எல்லோரும் ஒரே இடத்திலே வியாபாரம் செய்கின்ற நேரத்தில், மற்ற மாநிலங்களோடு, போட்டி போட முடியாத அளவுக்கு பல நெருக்கடிகள் அந்தத் தொழிலுக்கு உருவாக்கி யிருக்கிற காரணத்தாலே, அந்த பனியன்மீது விதிக்கப்பட்டிருக் கிற விற்பனை வரியை முழுமையாக நீக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்ல. இது அரசுக்கு மிகக் குறைந்த வரு வாயைத்தான் தருகிறது. அந்த வருவாயைக் கூட்டுவதற் வதற்கு சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அமைப்புகள் ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றன. பனியன்

உற்பத்தி செய்யத் தேவையான நூலின்மீது வரி விதிக்கப்படுமானால்—3 சதவிகிதத்தைவிட குறைவாகக்கூட விதிக்கலாம். — அரசுக்கு இதைவிட கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு பனியனாகத் தயாரித்து வெளியே அனுப்புவதற்குத்தான் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. ஆனால் பெரும் பகுதி பனியன் துணியாக வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு, அந்த மாநிலங்களில் பனியனாகத் தயாரித்து, மார்க்கெட்டில் விற்பனைக்கு வரும்போது, அவற்றுக்கு விற்பனை வரி கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற காரணத்தாலே, பனியன்மீது விதிக்கப்பட்டுள்ள அந்த விற்பனை வரியை அரசு நீக்க வேண்டும். வருவாய் தேவை என்று கருதினால் பனியனுக்காக மட்டும் தயாரிக்கப்படும் நூலுக்கு அந்த வரியை மாறுதல் செய்து, மற்ற மாநிலங்களோடு நம்முடைய மாநிலமும் போட்டியிட்டு, தொழில் வளர்வதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும். ஏராளமான அன்னிய செலாவணியை உருவாக்கித் தரும் அந்த பனியன் தொழிலுக்கு உள்நாட்டு மார்க்கெட்டிலும் நம்முடைய தமிழகம் சரியான முறையில் போட்டியிட்டு வியாபாரம் செய்து, அதன் மூலம் அந்தத் தொழில் வளர, விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். வாய்ப்பு இருந்தால் முதல்வர் அவர்களோடு கலந்து, இப்போது அதை நீங்கள் தெரிவிப்பது நல்லது. அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை என்றாலும், அடுத்து வருங் காலத்தில் அதை ரத்து செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல. இன்றைக்கு இந்த விற்பனை வரியை வசூலிக்க வரக்கூடிய அதிகாரிகளுடைய தொல்லை என்பது உண்மையிலேயே மிகப் பெரிய அளவுக்கு இருக்கிறது. நான் பல்வேறு உதாரணங்களை, ஆதாரத்தோடுகூட சொல்ல முடியும். அந்த நிறுவனங்களின் நலன் கருதி, அந்தப் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. தேவையானால் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும், அமைச்சரவர்களிடத்திலும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஏராளமான தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு, அந்தத் தொல்லைகளைத் தாங்க முடியாமல், திருப்பூரிலே ஒரு அதிகாரியை ஒரு நிறுவனத்தினுடைய உரிமையாளர் அரிவாளால் வெட்டக்கூடிய அளவுக்கு அவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நியாயம் என்று நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் அந்தத் தொழிலிலே மட்டுமல்ல. பல சிறு தொழில்களும் அந்தத் தொல்லைகளுக்கு ஆளாகும் நிலை இருக்கிறது. ஆகவே இதை எல்லாம் அரசு கவனத்திலே கொண்டு, இந்த வரியை முறையாக வசூலிக்க வேண்டும். தவறு செய்கிறவர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கட்டும். நான் வேண்டாமென்று

சொல்லவில்லை. தவறான முறையில் அவர்கள் வேறு விதத்திற்கு அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அரசு இதில் கவனமாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு பல முனை வரியை ஒரு முனை வரியாக ஆக்கியிருக்கிறார்கள். குறிப்பாக பேப்பர் கவர் தயாரிக்கும் தொழிலைப் பொறுத்தவரையில் 5 சதவிகிதமாக இருந்த விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்பட்டதால் 8 சதவிகிதமாக ஆகியிருக்கிறது. பேப்பர் கவர் என்பது உங்களுக்குத் தெரியும். கொஞ்சம் பசை போட்டு கவராக மடிக்கப் படுகிறது. வேறு எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் பேப்பருக்கு 5 சதவிகிதம் என்றும், கவராக மடித்து வைக்கப் பட்டால், அதற்கு 8 சதவிகிதம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது மிகச் சாதாரணமாக, சிறு வீடுகளிலேகூட தயாரிக்கப் படுகிறது. எனவே இதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சோப்புக்கு 8 சதவிகித வரி போடப்பட்டிருக்கிறது. இப்படி 8 சதவிகிதமாகப் போடப்பட்டிருக்கும் வரியின் காரணமாக சாதாரண சிறு சிறு சோப்பு தயாரிக்கும் தொழில்கள் பாதிப்புக்கு ஆளாகும். டாட்டா போன்று இருக்கக்கூடிய பெரிய சோப்பு கம்பெனிகள் வேண்டுமானால் அதில் பயனடையலாம். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், தோலைப் பொறுத்தவரையில், தொழிலின் தன்மை அடிப்படையில் வரியைக் குறைத்ததுபோல், சிறு தொழிலில் தயாரிக்கும் சோப்புக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது சற்றுக் குறைக்கப்பட வேண்டும்; 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவோ அல்லது 3 சதவீதமாகவோ குறைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

11-45 மணி

திரு. பி. எச். பாண்டியன்: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி மசோதாவில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன். விற்பனை வரியை சாதாரணமாகக் கட்டக்கூடியவர்கள் சிறு வியாபாரிகள். அவர்கள் தான் ஒழுங்காகவும், அதிகமாகவும் கட்டிக்கொண்டு அரசாங்கத்தின் வருவாயை உயர்த்திக்கொண்டு இருக்கிறார்கள். நாள் தோறும் டி.சி.டி.ஓ. ஆனாலும், ஏ.சி.டி.ஓ. ஆனாலும் அவர்களுடைய டர்ன் ஓவரைப் பார்த்து அவர்களுடைய கணக்கை பார்த்து, திடீரென்று அவர்களுடைய கணக்குகளை எல்லாம்

எடுக்க வேண்டும் என்று கேட்கக்கூடிய ஒரு பாணி தான் இலாகா வின் பாணியாக இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். குறிப்பாக நான் ஒரு முறை கோவில்பட்டி நகருக்குச் சென்ற போது அங்கே உள்ள வியாபாரிகள் எல்லாம் வந்து சொன்னார்கள். திடீர் திடீர் என்று டி.சி.டி.ஓ., ஏ.சி.டி.ஓ. வந்து கணக்குகளை எடுங்கள் என்று சொல்கிறார்கள்; எங்களுக்கு அதிகத் தொல்லை கொடுக்கிறார்கள். என்று சொன்னார்கள். அதிக அளவுக்கு விற்பனை வரி செலுத்தக்கூடியவர்களை எல்லாம் விட்டுவிடுகிறார்கள் என்று குறைபட்டுக்கொண்டார்கள். நான் அன்றைக்கு அவர்களுக்குச் சொன்னேன், சாதாரண சாமானிய மக்கள் வரியை இன்றைக்குக் கட்டுகின்ற காரணத்தினால் தான் உங்களைத் தேடி வருகின்றார்கள். நீங்களும் வரியை ஒழுங்காக கட்டுகின்ற காரணத்தினால் தான் உங்களிடம் இருந்து வரியை பெற்று அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதற்கு வருகின்றார்கள் என்று சொன்னேன். காரணம் சென்ற ஆண்டு பொது விவாதத்தில் நான் ஒரு குறைபாட்டையும் இங்கே சொன்னேன்.

ஒரு பெரிய வியாபாரி வேறு மாநிலத்திலிருந்து ‘பல்சஸ்ஸை’ தமிழகத்திற்குக் கொண்டுவந்து பினாமிதாரர்கள் பேரில், ‘ஃபிக்ஷிசியஸ் பெர்சன்ஸ்’ பேரில் அவர்கள் வரி கட்டாமல் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு ஏய்த்து இருக்கிறார்கள் என்பதைச் சொன்னேன். இது சிங்கிள் பாய்ன்ட்டினால் ஏற்பட்டது. மல்ட்டி பாய்ன்ட்டை இன்றைக்கு நாம் எடுத்து இருக்கின்றோம். அதனால் அரசாங்கத்துக்கு பெரிய பெரிய வியாபாரிகளிடமிருந்து இழப்பீடு தான் ஏற்படப்போகிறது. ஏதாவது இன்னொரு பாய்ன்ட் அதிகமாக இருக்குமேயானால், ஒருசெக்இருக்கும்.இன்றைக்கு வருமான வரியைக் கட்டத் தவறியவர்கள் சில நேரங்களில் மறையும்போது எஸ்டேட் டியூட்டி கட்டும் கட்டாயம் வந்து விடுகிறது. அது தான் இரண்டு பாய்ன்ட். வருமானம் சேரும்போது சில பேர் ஏய்ப்பார்கள் ; ஆனால் மறையும்போது சட்டத்திலிருந்து தப்ப முடியாத அளவுக்கு எஸ்டேட் டியூட்டி குறுக்கே நின்று, அரசாங்கத்துக்கு வரவேண்டிய வருமானத்தை வாங்கிக் கொடுத்து விடுகிறது. அதுபோலத்தான் ஒரு முனை வரி அரசாங்கத்துக்கு இழப்பீட்டை உண்டாக்கும் என்ற கருத்தை நான் இங்கே சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். ஒரு முனை வரியினால் தான் இதுபோன்ற பினாமி நிறுவனங்கள் உருவாகக் கூடும். ஒரு முனை வரியினால் தான் அரசாங்கத்துக்கு அந்த நிறுவனமே இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நிலைமை உருவாகிவிடும். வெளி மாநிலத்திலிருந்து சில பொருள்களைக் கொண்டு வரக்கூடியவர்கள் கூட ஒருமுனை வரியினால் தப்பிக்கக் கூடிய ஒரு கட்டாயம் உருவாகும். ஆகவே இன்னும் ஒரு முனையாவது இருந்து ஆகவேண்டும்; ஒன்று ஆரம்பம்; இன்னொன்று முடிவு. அதுபோல் இரண்டு முனை

ஓரளவுக்கு இருக்குமானால்—மல்ட்டி பாய்ன்ட் வேண்டுமானால் குறைத்துக் கொள்ளலாம்—இரண்டு முனைகளில் வரியை விதித்தால் தான் அரசாங்கம் ஏமாறாமல், ஏமாற்றப்படாமல் அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்கும் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னும் பல்வேறு நிறுவனங்களின் மூலமாக அரசாங்கத்துக்கு வரவேண்டிய விற்பனை வரி 1950- ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை சிந்திக்கப்படாமல் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஒரு அரசியல் சட்டக் குறிப்பை நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேரவை செயலாளருடைய கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். "Entry 54—Taxes on the sale or purchase of goods other than newspapers subject to the provisions of Entry 92–A of List I. பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க நாட்டு மக்கள் எல்லாம் பத்திரிகைகளின் மூலமாக அரசியல் நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்கு பத்திரிகைச் சுதந்திரம் வழங்கி இருக்கிறோம். அரசியல் சட்டத்திலும் பாதுகாப்பைக் கொடுத்து இருக்கின்றோம். Freedom of speech; freedom of expression.

11-50 மணி

இன்றைக்கு நம்முடைய பத்திரிகைகளெல்லாம் நியூஸ் பேப்பராக முழுமையாக இருக்கிறதா? விளம்பரம் ஒரு பகுதி வருகிறது. விளம்பரத்திற்கு வரி எங்கே கொடுக்கிறார்கள்? அரசாங்கம் எவ்வளவு விளம்பரம் கொடுக்கிறது, அதற்கு வரி கிடைக்கிறதா? நியூஸ் பேப்பர் என்றால் செய்தியைத் தவிர வேறு ஒன்றுமே இருக்கக் கூடாது. அதுதான் நியூஸ் பேப்பர். அதற்குத் தான் அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் பத்து பக்கம் விளம்பரம்; அந்த விளம்பரத்தினால் கிடைக்கக்கூடிய இலாபத்தில் அரசாங்கத்திற்கு விற்பனை வரி கிடைக்கிறதா? ஏன் நாம் இதுவரை இதைச் சிந்திக்கவில்லை என்றால், உடனே பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கின்றோம் என்று சொல்வார்கள்.

ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை வேறு. News Paper — Views paper இரண்டாக இருக்கிறது. மக்களுடைய எண்ணத்தை mould செய்வது. மக்களை இந்தத் திசையில் அழைத்துச் செல்வது. இதையும் சில பத்திரிகைகள் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கின்றன. நான் இதை உணர்ந்த காரணத்தால் இங்கே சொல்லுகின்றேன். நியூஸ் பேப்பர் வேறு. வாரப் பத்திரிகைளுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா அரசியல் சட்டத்தில். கிடையாது. அப்படியே பிரித்துப் பார்ப்போமேயானால், வாரப் பத்திரிகைகளின் வருமானத்தில் விற்பனை வரி உங்களுக்கு வந்து சேர்கிறதா? வரியை கேட்கின்றோமா? வரியை எப்படி வாங்குவது? அதற்கு வழி

உண்டு. எப்படி எக்சைஸ் டூட்டியை அந்தத் தொழிற்சாலையிலே அதிகாரி இருந்து எக்சைஸ் டூட்டியைச் சேகரித்து அரசாங்கத்திற்குக் கொடுக்கிறாரோ அதுபோலவே விற்பனை வரி அதிகாரி இதுபோன்ற வியாபார நோக்கத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பத்திரிகைகளின் விற்பனையிலிருந்து வரியை வாங்கி அரசாங்கத்தின் வருவாயைக் கூட்டலாம். இது ஒரு வழி.

நான் யோசித்துப் பார்த்தேன். சென்ற ஆண்டே எண்ணினேன். கொஞ்ச காலம் பார்த்துக் கொள்ளலாம் என்று பார்த்துக் கொண்டிருந்த காரணத்தினால் இன்றைக்குத் தோன்றியது. காரணம் இதுவும் வியாபாரம்தான். வியாபார நோக்கத்தோடு நடைபெறக் கூடிய அந்தத் துறையை—பெரிய பத்திரிகை அதாவது Press Barons அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, இந்தப் பிரிவைச் சுட்டிக்காட்டி நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐம்பதாவது ஆண்டு பத்திரிகைகள் அதிகம் கிடையாது. இன்றைக்கு யார் நினைத்தாலும் ஆரம்பிக்கலாம். ஒரு Declaration தான். போய் C. M. M. Court-இலே நாளை காலையிலே பத்து ரூபாய் கட்டியாயிற்று என்றால் யாரோ ஒருவர் பத்திரிகையை ஆரம்பிக்கலாம். ஆகவே, விளம்பரத்தைப் பிரியுங்கள். Advertisement-இலே வரக்கூடிய அந்த இலாபத்தில் ஏன் விற்பனையாகக் கருதி, அரசாங்கம் வருமானத்தைப் பெருக்கக் கூடாது என்ற வேண்டுகோளை நான் இங்கே உங்கள் முன்னால் வைக்கின்றேன். ஆகவே, இப்படி ஒவ்வொரு துறையிலும் அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருமானம் நின்று கொண்டு இருக்கிறது. புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வந்து, புதிய புதிய விகிதாச்சாரத்தைப் போடுவதனால் அரசாங்கத்தின் வருவாயை உயர்த்த முடியாது. அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் நிறுத்தப்பட்டிருக்கிற அந்தக் காலக் கட்டத்தில் அரசாங்கம் அந்த வருவாயைப் பெற வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற வாரம் உயர்நீதி மன்றம், வெளி மாநில லாட்டரிச் சீட்டுக்கு தடை விதித்தது செல்லும் என்ற ஒரு தீர்ப்பை வழங்கியது. லாட்டரிச் சீட்டினால் நமக்குக் கிடைக்க வேண்டிய விற்பனை வரி வருமானம் 400 கோடி ரூபாய். அந்த 400 கோடி ரூபாயை வசூலித்த பிறகல்லவா நாம் வேறு சட்டத்தைக்கொண்டு வர வேண்டும்? அங்கே 400 கோடி ரூபாயை விட்டு விட்டு புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வந்து பாமர மக்களைக் கசக்குவது தவறாகும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

இன்று காலையில் கூட நம்முடைய போக்குவரத்து அமைச்சரவர்கள் ஒரு மசோதாவைத் தாக்கல் செய்தார்கள். வேனில் ஒரு சீட்டுக்கு ஐம்பது ரூபாய் வரி. வேனை ஓட்டுவது யார்?

வேனை வாங்குவது யார்? சாதாரண டிரைவராக இருந்த ஒருவர் வேனை வங்கியின் மூலமாக, கடன் மூலமாக வாங்குகின்றார்; ஓட்டுகின்றார். இந்த 50 ரூபாய்—ஒரு சீட்டுக்கு வரியைப் போட்டால் அவன் யார் தலையில் அந்த வரியை வைப்பான். அந்த வேனில் ஏறக்கூடிய ஏழை எளிய மக்கள்—அவர்கள் தலைமீது அந்த வரி சுமத்தப்படும். ஆகவே, நான் இங்கே தெரிவித்துக் கொள்வதெல்லாம், அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாயை, ஈட்ட வேண்டிய வேகத்தில் நீங்கள் ஈட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், கமர்சியல் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் என்று பிரித்து. வியாபார நோக்கோடு எது எல்லாம் நடைபெறுகிறதோ, அதற்கெல்லாம் வரி விதிக்கப்பட வேண்டும். வியாபாரம், விற்பனை, எதையெல்லாம் விற்பனை செய்கிறார்களோ, எந்த விற்பனையின் மூலமாக மக்களிடமிருந்து அதிகப் பணத்தைப் பெறுகிறார்களோ, அந்தத் துறைக்கு வரியை விதியுங்கள். எனவே கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய எண்ணம் வேண்டும். நெஞ்சுரம் வேண்டும். அடுத்தமுறை அந்த மக்களைச் சந்தித்தால் குறைபாட்டைச் சொல்வார்களே என்ற பயம் இருக்கக்கூடாது. காரணம், வரியை விதிக்கும்போது ஒரு சாரார் பாதிக்கப்படலாம். ஆனால் அந்த சாராரிடமிருந்து வரியைப் பெற்றுதான் சாதாரண மக்களுக்கு நம்மால் நன்மை செய்ய முடியும்.

11-55 மணி

சாதாரண மனிதனுக்கு வரியை விதிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் வேகமாக எடுக்க வேண்டும். காரணம், கிராம மக்களை அடக்குவதற்கு, நாம் இன்றைக்கு போலீஸ் சிறப்பு காவல் படையை பயன்படுத்துகிறோம். எதற்கு, ஐ.ஆர்.டி.பி. கடன் பெற முடியாத மக்கள், என்.ஆர்.இ.பி. மூலமாக கிராமங்களில் தொழிலை எடுக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், இன்னும் சொல்லப் போனால் ஓய்வூதியத்தை ஒரு வயதான பெரியவரோ, தாயோ பெற வேண்டுமானால், ஆர்.டி.ஓ. சொல்கிறார்—வேகன்சி இல்லை—அதாவது யாரும் சாகவில்லை. 35 ரூபாய் ஓய்வூதியம் பெறுவதற்கு வேகன்சி வேண்டும் ஒருவர் சாக வேண்டும். (குறுக்கீடு) மாற்றியாகிவிட்டது என்று சொல்லிவிட்டார். நானும் திருத்திக் கொண்டேன். அந்த அளவிற்கு ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்கு கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்கவில்லை. ஆனால், அரசாங்கத்தின் மூலமாக தொழிலை வளர்த்து, மக்களின் மூலமாகவே லாபத்தைச் சம்பாதித்து, அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்த தவறிபவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுங்கள்.

திரு. அ. மலர்மன்னன்: தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர், பி. எச். பாண்டியன் அவர்கள், வருவாய் எந்தெந்த துறையில் வருகிறதோ அதற்கெல்லாம் சேல்ஸ் டாக்ஸ் போட வேண்டுமென்று சொல்கிறார்.

அப்படியானால், அவர் செய்கிற வழக்கறிஞர் தொழிலில் கூட நிறைய வருவாய் வருகிறது. அதற்கு சேல்ஸ் டாக்ஸ் போட லாமா? அதை ஒப்புக்கொள்கிறார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் Income Tax Assessee.

திரு. பி. எச். பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, அதற்கு வேறு வரி இருக்கிறது. இன்னொன்றையும் சொல் கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக் கிறார்கள். நான் என்னுடைய சபாநாயகர் பொறுப்பு முடிந்த வுடன், வக்கீலாக மீண்டும் பதிவு செய்தவுடன், நம்முடைய மாநகராட்சி தன் அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். புரபஷனல் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று நான் வலிய கேட்டேன். இன்னும் எனக்கு வரவில்லை. வரி கேட்க வில்லை. இப்படி எத்தனை பேர்? எதற்காக சொல்கிறேன் என்றால், வரியை எங்கெங்கே இருந்து கூட்ட வேண்டுமோ, யாரிடமிருந்து வாங்க வேண்டுமோ, செலக்ட் பண்ண வேண்டும். இந்த ஜனங்கள் கிட்டே வரியே வாங்கக் கூடாது— ஏனென்றால் ஏழை. ஜனங்கள், இந்த செக்ஷன், வசதியுள்ளவர்கள், எனவே, வாங்க வேண்டுமென்று நாம் பிரிக்க வேண்டும். நாம் சட்டத்தை போட்டு விட்டால், அதிகாரிகள் சட்டத்தை எடுத்துக் கொண்டு முதலில் ஏழைகளிடம்தான் செல்வார்கள். அவர் களுக்குதான் பாதுகாப்பு கிடையாது. பணக்காரர்கள் உடனே தடையுத்தரவு வாங்குவார்கள். இன்னும் சொல்லப் போனால்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்களே முன் னுதாரணமாக அந்த Professional Tax—ஐ அனுப்பி இருக்கலாமே.

திரு. பி. எச். பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு? அதற்கான பாரம் எல்லாம் இருக்கிறது. அண்ணா நகர் டிவிஷனிலிருந்து அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. நான் இதை எதற்காக சொல்கிறேன் என்றால், வரியை அவரவர்கள் பொறுப்போடு கட்டுவது கிடை யாது. டிமாண்ட் நோட்டீஸ் எல்லோருக்கும் வர வேண்டும். ஒவ்வொரு துறையைப் பற்றியும் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே, நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இன்றைக்கு வருமான வரி ரெய்ட் எப்படி பண்ணுகிறார்கள்? யாரை எல்லாம் கூட்டிக் கொண்டு போகிறார்கள்? எப்படி ரெய்ட் பண்ணி, இருப் பதை எல்லாம் எடுக்கிறார்கள்? சேல்ஸ் டாக்சில் நாம் எவ்வளவு வேகம் காட்டுகிறோம்? கோடிக் கணக்கில் அரசாங்கத்திற்கு வர வேண்டிய பணத்தை பெற நாம் வேகமாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம் வாக்கு போய்விடுமோ, அடுத்த முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்காமல் போய் விடு வார்களோ என்ற சந்தேகம் இருக்கிற காரணத்தால், நாம் அதிகமாக நடவடிக்கை எடுக்க முடிவதில்லை.

1990 மே 8] [திரு. பி. எச். பாண்டியன்]

12-00 மணி

ஒன்றைச் சொல்கிறேன். வேகமாக நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் ஒருநாளும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். இதை நான் அனுபவபூர்வமாக பார்த்திருக்கிறேன். சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவில்லை என்றால் நிச்சயமாக வாக்களிக்க மாட்டார்கள். மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்கிறது, வரியை வாங்குகிறார்களா என்று. மீண்டும் மீண்டும் ஏழை மக்களின் மீது வரியை விதிப்பது உண்மை யிலேயே பாவமான செயலாகும். அவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. அந்த ஏழை எளிய மக்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் நாம் எல்லோரும் இங்கே இருக்கிறோம். இந்த அரசே ஏழையின் அரசுதான். கோட்டையை பார்க்காத ஏழைகள்தான் இன்றைக்கு வரியைக் கட்டிக் கொண்டிருக்கிறார் கள். வாக்குச் சாவடிக்குச் சென்ற ஏழைகள் தான் இன்றைக்கு வரியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வாக்குச் சாவடிக்கே போகாதவர்கள்தான் இன்றைக்கு வரியை ஏய்த்துக் கொண் டிருக்கிறார்கள். அரசாங்கத்திடம் தொடர்பு இல்லாதவர்கள் தான் வரியை ஏய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் இங்கே தெரிவித்துக் கொள்வது எல்லாம், ஏழை எளிய மக்கள் மீது வரியை விதிக்காதீர்கள். காரணம் அவர்கள் அந்தப் பொருட்களை வாங்கும்போது மறைமுகமாக இன்றைக்கு வரியைச் செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அந்த மக்க ளைப் பாதுகாக்க வேண்டும். இந்த ஒரு முனை வரியை—இன் னும் ஒரு முனைப்புச் செய்யுங்கள்—ஏய்ப்பைத் தடுக்கலாம் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நம்முடைய முன்னாள் சட்டப்பேரவையி னுடைய தலைவர் பாண்டியன் அவர்கள் பேசுகிறபோது, லாட்டரி சீட்டு விற்பனை மூலமாக 400 கோடி ரூபாய் பாக்கி நிலுவையில் இருப்பதாகவும், அதை வசூலித்துவிட்டுத்தானே சட்டத்தைக் கொண்டுவந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைச் சற்று விளக்கமாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : வெளி மாநில லாட்டரி சீட்டுக் களை தமிழகத்தில் விற்றுக்கொண்டு இருப்பவர்கள், தமிழக அரசு விதித்த அந்த விற்பனை வரியைத் தடுக்க வேண்டும் என்ற, நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டமாக நீதிமன்றத்தில் ஒரு தடை உத்தரவை வாங்கி னார்கள். இவ்வளவு காலம் கட்டவில்லை, ஒரு காலமும் கட்ட வில்லை, அதாவது அரியர்ஸ்ஸைக் கூட கட்டவில்லை. அதனால் தான் 400 கோடி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : 400 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு விற்பனை ஆகிறதா? (குறுக்கீடு) எத்தனை ஆண்டுகளிலே?

திரு. பி எச். பாண்டியன்: அவர்கள் எந்த ஆண்டு தடை உத்தரவை வாங்கினார்களோ, அதற்கு முன்பிருந்து, இன்றைக்கு வரையிலே, கட்டவில்லை. ஆனால், பத்திரிக்கையிலே பார்க்கிறோம், என்ன, 10 இலட்சம், 1 கோடி பரிசு என்று. ஆனால், வரி எங்கே, அரசாங்கத்திற்கு வரவில்லை.

Thiru. M. ABDUL LATHEEF: The hon. Member Thiru Malarmannan has asked a question whether the Advocates are prepared to pay the sales-tax. He should understand that an Advocate only renders service. He does not sell his services. He renders only service and he gets only a fee and not a price. Commercial taxes are levied only on prices and not on fees.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய லத்தீப் அவர்கள் ஒரு விளக்கத்தை அளித்தார்கள். ஓர்க்ஸ் கான்ட்ராக்ட்டுக்கு வாங்குகிற மாதிரி வாங்கலாம் அல்லவா? அதுகூட வாங்கலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர்க்ஸ் கான்ட்ராக்ட் என்று வாங்க முடியாது. காரணம் இப்போது மலர்மன்னனிடம் இருந்து ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு சொத்து விவகாரம் ஒரு வக்கீலிடம் போகுமானால், இல்லை 10 இலட்சம் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஜெயித்தால் 5 இலட்சம் என்று பேச முடியாது. சட்ட விதிகள் எவ்வளவு அனுமதிக்கிறதோ, அதைத்தான் வாங்க முடியும். ஆகவே, இந்த ஓர்க்ஸ் கான்ட்ராக்ட் இதிலே கிடையாது. இப்படி கான்ட்ராக்ட் இருந்திருந்தால், எவ்வளவோ சம்பாதித்து இருக்கலாம். சில பேர்களுக்குத்தான் இதிலே இலாபம் கிடைக்கும். இந்த போபால் வழக்கு இருக்கிறதே, அதில் மக்களுக்கு 300 ரூபாய், 200 ரூபாய் கூடப் போய்ச் சேரவில்லை, போபால் காஸ் விபத்திலே இறந்தவர்களுக்கு. ஆனால், அரசாங்க வக்கீலின் செலவு 1 கோடி ரூபாய், பீஸ்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) புயலையொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து.

திரு. இளம்வழுதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வரலாற்றிலேயே சுட்டெரிக்கும் கொடுமையான கத்திரியிலே இதைப்போன்ற அடைமழை எப்போதும் பெய்தது கிடையாது. கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்

1990 மே 8] [திரு. இளம்வழுதி]

போதுதான் இந்த அற்புதம் நடந்து கொண்டிருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்து இருக்கிறார்கள். ''மன்னவன் வந்தானடி, மாமழை பெய்ததடி'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதைப்போல, எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் மாட்சியைக் கண்டு, வானமே மனமுவந்து, சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே, பூமியைக் குளிரவைத்துக் கொண்டு இருக்கிறது. இந்த மகிழ்ச்சியான சூழ்நிலையிலே குடிநீர் வாரியத்தினுடைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள், குளிருக்கு இதமாக உறுப்பினர்களுக்கு எல்லாம் சூடாக காபி வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்தப் புயல் கரையைக் கடக்கும் என்று அறிவிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, கடலூரிலிருந்து, ஓங்கோலுக்கு இடையே இப்போது மதியத்திற்குள்ளே கரையைக் கடக்கும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்திருக்கிறதா ? தமிழகம் முழுவதும், அதுவும் குறிப்பாக வட மாவட்டங்களிலேயிருந்து அரசுக்கு வந்திருக்கிற செய்திகள் என்ன?

திரு. சோ. அழகர்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாட்களாக நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இந்தப் புயல் வேகமும், அதுமட்டுமல்லாமல் பெய்கிற மழையைப் பார்த்தாலே, ரோடு பூராவும் தண்ணீராக இருக்கிறது. ஆகவே, இந்த நகரத்திலே நமக்கு வேண்டியவர்கள் எல்லாம் ஆங்காங்கே வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குடிசைகளுக்கு ஏதாவது சேதங்கள் ஏற்பட்டு இருக்கின்றதா ? குடியிருப்பவர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கிறதா ? இது விஷயமாக ஏதாவது ஒரு அமைச்சர் அறிவித்தால் ஆறுதலாக இருக்கும். இது விஷயமாக சம்பந்தப்பட்ட அமைச்சர், அல்லது பொதுப்பணித்துறை அமைச்சரோ, அல்லது மற்ற அமைச்சரோ, என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று சொன்னால் எங்களுக்கு எல்லாம் ஆதரவாக இருக்கும்.

12-05 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் தொடர்ந்து புயலைக் குறித்த செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அரசு முன்னெச்சரிக்கையாக எல்லாவித நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆங்காங்கே மீட்புப் படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். இராணுவத்தைக் கூட உஷார் நிலையில் வைத்திருக்கிறோம். எந்தச் சூழ்நிலையிலேயும் மக்களை புயல் பாதிக்க விடாமல் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்திருக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கின்றவர்களை எல்லாம் அந்த இடத்திலேயிருந்து பாதுகாப்பான இடத்திலே தங்கவைக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடல் அரிப்பு ஏற்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்காக பொதுப்பணித்துறையினர் கடலோரப் பகுதியில் ரோந்து வந்து கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சிப் பள்ளிகளை எல்லாம் தயார் நிலையில் வைத்திருக்கிறோம். உணவுப் பொட்டலங்கள், கிருஷ்ணாயில், அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு, மேற்கொண்டிருக்கிறது. இவ்வளவையும் மீறி ஏதாவது எக்கச்சக்கமாக வருமானால் உடனடியான உயிர் மீட்புப் பணிகளுக்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சில நேரங்களில் காலரா போன்றவைகள் எல்லாம் திடீரென்று பரவும். அவைகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், எல்லாவித நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசு புயலைச் சமாளிக்க தயாராக இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எழுந்த காரணத்தால் நான் இதைக் கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நன்றாக மழை பெய்திருக்கிறது. சென்னை நகருக்கு இன்றைக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாளையிலிருந்து நாள் தோறும் தண்ணீர் வழங்குவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறதா, தண்ணீர் நிறைந்து இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : சென்னைக்குக் குடிநீர் வழங்குவது சென்னையிலே பொழிகின்ற மழையைப் பொறுத்ததல்ல. அது புழலேரி, சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகளிலே, கேட்ச்மென்ட் ஏரியாவில், அங்குதான் நிறையப் பொழியவேண்டும். சென்னையிலே மழை பெய்வது அதிகமாகத் தெரியும். தார் ரோடுகளில் வேகமாக ஓடுவதுபோல் தெரியும். ஆகையால் அந்தப் பகுதிகளிலே பொழிகின்ற மழையை வைத்துத்தான் அவற்றை அரசு நிர்ணயிக்கும்.

1990 மே 8]

*திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் புயலைக் குறித்த சில விளக்கங்களைக் கொடுத்தார்கள். நான் ஒன்றை அவரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்கே புயல் கரையைக் கடக்கக் கூடும் என்ற ஒரு ஆபத்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு, நேற்று அலுவலகங்கள் அனைத்திற்கும் அரை நாள் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு வாடிக்கையாகப் பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள் அத்தனையும் நடைபெறுகின்ற நிலையில் விடுமுறை விடாமல் இருக்கின்ற நிலையிலே, சில கல்லூரிகளில் இன்றைக்கும் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இன்றைக்கு எல்லா அலுவலகங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். இப்போது புயலினுடைய நிலை நெருங்கி வந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. எங்களுக்கு எல்லாம் தேவையான பாதுகாப்பை அவர் செய்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், இப்போது அலுவலகங்கள் மற்ற நிலையங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஏதாவது வழி செய்து அவர்களை உடனடியாக வீட்டிற்கு அனுப்பி பாதுகாப்பு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி ஏற்பாடு ஏதாவது செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : புயல் நேற்றே கடந்திருக்க வேண்டும். அது நேற்று திரு. இராதா இல்லை என்ற காரணத்தினாலோ, இன்றைக்கு வரட்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறது. எவ்வளவுதான் அறிவியல் வளர்ந்திருந்தாலும், இயற்கையைக் கட்டுப்படுத்தி, இந்த நேரத்தில் இது நடக்கும், நடக்கலாம் என்று சொல்கிறோமே தவிர, இத்தனை மணிக்கு நடக்கும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இன்றைக்கு புயல் வீசுமானால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இராதா அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அவர்களுக்கும் தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும், மேற்கொண்டிருக்கிறது, அதற்கான நடைமுறை ஒரு பகுதியிலே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : இப்போது இருக்கின்ற பிரச்சினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடத்திலிருந்து இப்போது கேட்ச்மென்ட் ஏரியாவில் என்ன இம்ப்ரூவ்மென்ட் ஏற்பட்டிருக்கிறது. அங்கே நீர்ப்பிடிப்பு ஏரிகளிலே ஏதாவது அதிகமான தண்ணீர் வரத்து ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுகுறித்த விவரமான அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளிக்க இருக்கிறார்கள்.

12-10 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : நாங்கள் சென்னையைச் சார்ந்தவர்கள். சென்னையிலே இருக்கின்ற உறுப்பினர்கள். இதைப் பற்றி அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்கள். அதனால்தான் அதைக் கேட்கிறோம். ஏனென்றால் நல்ல அக்கினி நட்சத்திரத்திலே, சித்திரை மாதத்திலே பெய்கின்ற மழை செல்வ மழை என்று சொல்வார்கள். இப்பொழுது செல்வ மழை பெய்திருக்கிறது. எனவே, எவ்வளவு தண்ணீர் அதிகமாக வந்திருக்கிறது. நம்முடைய தாகம் தீருமா? சென்னை நகர மக்களுடைய தாகம் தீருமா? ஒவ்வொரு நாளும் நீர் வருமா என்று ஆவலாக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாளுக்கு முன்புதான் இந்த அவையிலே மழையைப் பற்றி வாதங்களெல்லாம் நடைபெற்றன. யானைக்குத் திருமணம் செய்துவைத்தால் மழை வருமா. அதே போல் தண்ணீரிலே நின்று தவம் செய்தால் மழை வருமா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் கலைஞரும் ஏற்றுக்கொண்டு கலைஞருடைய தூதுவின் மூலமாகவோ என்னவோ தெரியவில்லை, எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு, அக்கினி நட்சத்திரத்திலே மழை பெய்யாத அளவு இப்பொழுது மழை அக்கினி நட்சத்திரத்திலே பெய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேள்வி கேட்டதைப் போல், நம்முடைய நகரத்திற்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், சென்னை நகரத்திற்கு ரெட்ஹில்ஸ், சோழவரம், பூண்டி ஆகிய பகுதிகளிலுள்ள ஏரிகளிலிருந்துதான் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த பகுதியிலே மழை பெய்திருக்கிறது. 73.55 எம்.எம்-க்கு ரெட்ஹில்ஸிலும், சோழவரத்தில் 56 எம்.எம். மழையளவும், பூண்டியிலே 40 எம்.எம். இப்பொழுது காலை 8 மணியளவிலே பொழிந்திருக்கின்றது. ஆனால், சோழவரம், பூண்டி இரண்டு ஏரிகளிலுமே தண்ணீர் வரத்து கம்மியாக இருக்கிறது. தண்ணீர் வரவில்லை. நேற்றிரவு வரை வரவில்லை. நேற்றிரவுக்குப் பிறகு இப்பொழுது வந்து கொண்டிருப்பதாக, இப்பொழுது சற்றுமுன் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, அங்கே வருகின்ற நீரின் அளவைப்பொறுத்தே, அவர் கேட்டதைப் போல, சென்னைக்குக் குடிநீர் அளவை உயர்த்த முடியுமா என்பதையெல்லாம் சொல்ல முடியும். அதேபோல, நீர்ப் பிடிப்பு ''ஏரியாக்கள்'' ஆன திருவள்ளூரிலே 800 எம்.எம்.-க்கு மழை பெய்திருக்கிறது. திருத்தணி பகுதியிலும் 18 எம்.எம்.-க்கு மழை பெய்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலேயும் மழை பெய்திருக்கின்ற காரணத்தினால் இன்று நீர் வரத்து அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, இந்த நீர் வரத்தை உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்கின்ற வகையிலே,

சென்னையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட கொண்டாடுகின்ற வகையிலே அனைவருக்கும் தேநீர் வழங்கினால் நன்றாக இருக்கும். இருந்தாலும் இந்தத் துறையின் சார்பிலே அனைவருக்கும் காப்பி வழங்கப்படும் என்பதை மட்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காப்பி கொடுப்பதெல்லாம் ஒரு பக்கத்திலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் கேட்டதற்கு இணையாகச் சொல்லட்டும். ஆனால், இன்று அடித்த புயலிலே எங்காவது உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதுண்டா ? மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கென்று ''ஹெலிகாப்டர்கள்'', ஒருவேளை அவர்களுக்கு ஆபத்து வந்தது என்றால் ''ஹெலிகாப்டர்கள்'' தயாராக வைக்கப்பட்டிருக்கிறதா என்பன போன்றவை எல்லாம் (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதுவரையில் புயல் இன்னும் வீசவில்லை. அதனுடைய அறிகுறிதான் ஆங்காங்கே தென்படுகிறது. இதுவரையிலும் அரசுக்கு உயிர்ச் சேதம் பற்றிய குறிப்பு வரவில்லை. திடீரென்று மீனவர்கள் காணாமல் போய்விட்டால் ''ஹெலிகாப்டர்கள்'' தேவைப்படும் என்றால், ''ஹெலிகாப்டர்களும்'' தயாராகவே இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே ஒன்றும் விவாதம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுங்கள். அவர்கள் விவரமான அறிக்கை அளிக்க இருக்கிறார்கள்.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—(தொடர்ச்சி).

(அ) விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990—(தொடர்ச்சி.)

***திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி தொடர்பாக இன்று முடிவு செய்யப்படுகின்ற இந்த நேரத்திலே இத்தனை ஆண்டுக்காலமாக ''மல்டி பாயிண்டாக'' இருந்த பல பொருள்களுக்கு, ''சிங்கிள் பாயிண்டாக'' அறிவித்திருக்கின்ற இந்த அரசினுடைய மிக்க தைரியமான முயற்சியை நான் வரவேற்கிறேன். 20, 25 ஆண்டுக் காலமாக ''மல்டி பாயிண்டுக்கு'' பதிலாக ''சிங்கிள் பாயிண்ட்டேக்ஸ்'' வேண்டுமென்று வணிகர்களும், பலரும் கேட்டபோது, அதிகாரிகள் எல்லாம் இருந்து, அரசுகளை பயமுறுத்தி வந்தார்கள். இதனால் வருமானம் குறைந்து விடுமோ என்று பயமுறுத்தி

[திரு. ரா. சொக்கர்] [1990 மே 8

வந்தார்கள். ஆனால், அந்த பயத்தையெல்லாம் பொருட்படுத்தாது இன்று ''சிங்கிள் பாயிண்டு'' வரி விதிப்பு முறையை அறிமுகப்படுத்த இருக்கின்ற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய அறுவை சிகிச்சையையே செய்திருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும். ஆனால், அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ''போஸ்ட் ஆப்பரேட்டிவ் கேர்''......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

திரு. ரா. சொக்கர் : அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ''போஸ்ட் ஆப்பரேட்டிவ் கேர்'' எந்த அளவுக்கு முக்கியமாக கருதப்படுகிறதோ அந்த அளவுக்கு ''மல்டி பாயிண்டு''–ஐ''சிங்கிள் பாயிண்டாக'' ஆக்கியதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை, உன்னிப்பாகக் கவனித்து இந்த அரசு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

12–15 மணி.

இந்த அரசு அதன் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஒவன் சேக்ஸ்ஸுக்கு இந்த அறிவிப்பு செய்யப்பட்ட இரண்டாவது நாளிலே 8 சதவீதமாக ஆக உயர்த்தப்பட்ட அந்த வரியானது 2 சதவீதமாக குறைத்து முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அது போன்று தான் பல பொருள்களுக்கு இன்று மறு மதிப்பீடு செய்து வரிக் குறைப்பு அறிவிக்கப்பட்டு வருகின்றது. இன்றும் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது என்று அறியும் பொழுது மகிழ்ச்சியடைகிறோம். நேற்றுகூட பிளாஸ்டிக் பொருள்களுக்கு வரியைக் குறைத்து அறிவிப்பு செய்தபோது ப்ளாஸ்டிக்கினுடைய ரா மெட்டீரியலுக்கு—மூலப் பொருளுக்கு 3 சதவீதமாக ஃபார்ம் செவன்டீன் கொடுத்து வாங்கக்கூடிய முறையை அறிமுகப்படுத்தி ஆனால் அந்த மூலப் பொருட்களை வைத்து உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய பொருள்களுக்கு 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைத்ததாக அறிவித்தீர்கள். மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் 3 சதவீதமாக குறைத்து அறிவிப்பு செய்ததை வணிகர்கள் முழு மனதோடு வரவேற்கிறார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறார்கள். இருந்த போதிலும் முடிவு செய்யப்பட்ட பொருள்களுக்கு, உற்பத்திப் பொருள்களுக்கு 6 சதவீதமாக குறைப்பு செய்திருப்பது காணாது என்ற கோரிக்கையை மறுபடியும் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ப்ளாஸ்டிக் பொருள்கள் என்று மொத்தமாக எடுத்துப் பார்க்கும்பொழுது ப்ளாஸ்டிக் பைகள் பேக்கேஜிங் மெட்டீரியல் என்ற ஒரு பிரிவாகவும், பக்கெட் அல்லது குடங்கள் போன்ற பொருள்களை இன்னொரு பிரிவாகவும் பிரித்து அந்த அணுகு முறையை வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேக்கேஜிங் மெட்டீரியலைப் பொறுத்தவரையில்

உற்பத்தியாளர்களிடமிருந்து உடனே உபயோகிப்பவர்களுக்குச் சென்றுவிடுகிறது. ஆகவே பழைய முறையில் மல்டி பாயின்ட்டில் இருந்தாலும் கூட அது ஒரு முனையில்தான் ப்ராக்டிகலாக வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. ஆகவே அந்த ப்ளாஸ்டிக் பேக்கேஜிங் மெட்டீரியலுக்காவது, பாலிதீன் பைகளுக்காவது கண்டிப்பாக மீண்டும் பரிசீலனை செய்து அந்த வரி விதிப்பை குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சர்சார்ஜ் இப்போது உயர்த்தப்பட்டு இருந்தாலும் அந்த உயர்வை எதிர்த்து என்னைப் பொறுத்தவரையில் பேச முடியாது. ஏனென்றால் அந்த உயர்வு செய்திருப்பது—உயர்த்தப்பட்ட பணம் அனைத்தும் நகராட்சிகளுக்கு வரும் என்ற ஒரு நல்ல அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதை உயர்த்த வேண்டாம் என்று சொன்னால் கண்டிப்பாக ''நகராட்சிக்கு நீ பணம் கேட்க மாட்டாயா,'' என்று கூட முதல்வர் அவர்கள் கேட்டு விடுவார்கள். ஆகவே உயர்த்தப்பட்ட சதவிகிதம் நகராட்சிக்கு வரும் என்ற காரணத்தினால் அதை ஒரு புறம் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்த சர்சார்ஜானது 1971 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டதாகும். அவர் அறிமுகம் செய்யும்போது இந்த சர்சார்ஜிலிருந்து வரும் பணம் அத்தனையும் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் என்றுதான் அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் ஏனோ இதுகாலம் வரையில் அந்தப் பணத்தில் ஒரு பகுதி கூட நகராட்சிக்கு வராமல் இருந்தது. ஆனால் இந்தத் தடவை 20 சதவீதம் நகராட்சிக்கு வரும் என்று அறிவிப்பு செய்திருப்பதை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதிலும், 20 சதவீதம் வரி விதிப்பு நகராட்சிகளுக்கு கொடுப்பது காணாது. இன்னமும் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்றோம்.

அதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் 20 சதவீதம் நகராட்சிக்கு வருவதை எப்படி வழங்கப் போகிறீர்கள்? இங்கே மாநில அரசுக்கு வந்து அதை வழங்குவதாக இருந்தால் காலதாமதம் ஏற்படும். எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸை சினிமா தியேட்டரில் வசூல் செய்வதை அந்தந்தப் பகுதியில் உள்ள கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் அந்தந்த நகராட்சிகளுக்கு அந்தந்த மாதங்களிலேயே வழங்கி விடுகிறார்கள். அதே முறையில் சர்சார்ஜிலிருந்து கிடைக்கக் கூடிய 20 சதவீத வருமானத்தை நகராட்சிகளுக்கு வழங்கும் போது மக்கள் தொகையின் அடிப்படையிலேயே வழங்கும் பொழுது அந்தந்த நகராட்சிகளுக்கு அந்தந்த கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் அந்தந்த மாதங்களிலே வழங்கவேண்டும் என்ற ஒரு உத்தரவை நீங்கள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. ரா. சொக்கர்] [1990 மே 8

அடுத்தபடியாக மிக முக்கியமாக அடிஷனல் டாக்ஸ் அதாவது டர்ன்-ஓவர் டாக்ஸ். இதைப் பொறுத்தவரையில் ஒரு டிரகோனியன் ஆக்ட் என்றே சொல்ல முடியும். அந்த அளவிற்கு மிகவும் ஒரு கடுமையான வரியாக கருதப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் இந்த வரியையும் நீங்கள் முற்றிலுமாக எடுத்துவிடுங்கள் என்று சொன்னால் நடைமுறையில் அது சாத்தியம் அல்ல. ஏனென்றால் இந்த அடிஷனல் டாக்ஸ் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானமாக வருகிறது. 200 கோடி ரூபாய் வருமானத்தை உடனே விட்டு விடுங்கள் என்று நாங்கள் சொன்னாலும் நிச்சயமாக நடைமுறையில் அது முடியாது. இருந்த போதிலும் இந்த வரி அறிமுகம் செய்யப்பட்ட போதே ஒரு சின்ன தவறு ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஸ்லாப் சிஸ்டத்தில் இந்த வரியை நீங்கள் அமல் செய்திருக்கிறீர்கள். 10 இலட்சம் வரையிலும் விதி விலக்கு. 10 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரை 1 1/4 சதவீதம். 40 இலட்சத்திலிருந்து 1 கோடி வரையிலும் 1 1/2 சதவீதம். 1 கோடியிலிருந்து 5 கோடி வரை அது 2 சதவீதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இந்த கணக்கின்படி பார்த்தால் 99,99,000-க்கு உற்பத்தி செய்த ஒருவர் ஒரு பொருளை விற்பனை செய்தால், ஒன்றரை சதவீதமாக அவர் ஒன்றரை இலட்சம் ரூபாய்

12–20 மணி.

அடிஷனல் டாக்ஸ் கட்டவேண்டும். ஆனால் அவருடைய உற்பத்தியை ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்தி, 99 இலட்சத்து 99 ஆயிரத்திலிருந்து 1 கோடியை எட்டுவாரேயானால், அவர் இரண்டு சதவிகிதம் வரி விதிப்புக்குட்படுகிறார். அந்த இரண்டு சதவிகிதம் வரி விதிப்பானது ஒரு ரூபாயிலிருந்து வந்து விடுகிறது. ஆக, ஒரு ஆயிரம் ரூபாய்க்கு உற்பத்தியை அதிகமாக செய்யக் கூடிய ஒருவர் 50,000 ரூபாய் விற்பனை வரி அதிகமாகச் செலுத்த வேண்டிய ஒரு வினோதமான ஒரு நிலைமை இருக்கின்றது. இதுகாலம் வரையில், ஏன் இந்த உண்மை அரசிற்கு கொண்டுவரப்படவில்லை, அரசினுடைய கவனத்திற்கு ஏன் கொண்டுவரப்படவில்லை என்பது புதுமையாக இருக்கிறது. ஒருவேளை சொல்பவர்கள் சரியாகச் சொல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது சொல்பவர்கள் சரியாகச் சொன்னாலும், கேட்பவர்கள் கேட்கக்கூடிய மனநிலையிலே இல்லாமல் இருந்திருக்கலாம், என்ற காரணத்தினால் இந்த முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தயவு செய்து, வருமானவரி விதிக்கப்படும்போது, எப்படி 22,000-ரூபாய் வரையிலும் விதிவிலக்கு, 22,000-லிருந்து 30.000 வரும் வரையிலும் அந்த 8,000 ரூபாய்க்குத்தான் 30 சதவிகிதம் என்ற அடிப்படையிலே, நீங்கள் அந்த வரி விதிப்பைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

விற்பனை வரியைப் பொறுத்தவரையிலும், முழுமையாகக் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தவேண்டும். ஏனென்றால், 1,759 கோடி ரூபாயை அரசாங்கத்திற்கு வருமானமாக ஈட்டித் தரு

1990 மே 8] [திரு. ரா. சொக்கர்]

இன்ற இந்தத் துறையில் எந்த அளவிற்கு முழுமையாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். துரதிர்ஷ்டவசமாக, விற்பனை வரி மானியத் தின்போது இங்கே பேசிய ஒரு உறுப்பினர் கூட இந்த விற்பனை வரியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. வரியைக் குறைப் பதற்காகவோ, கூட்டுவதற்காகவோ நான் சொல்லவில்லை. 1,759 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு துறையைப் பற்றி இந்த சட்டமன்றத்திலே ஒரு வரி கூடப் பேசப்பட வில்லை என்றால் இந்தத் துறை முற்றிலுமாக மக்கள் பிரதிநிதி களால் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருது கிறேன்.

சாராய விற்பனையிலிருந்து எவ்வளவு தூரம் ஏமாற்றுதல் நடக்கிறது, இந்தத் துறையிலிருந்து எவ்வளவு வருமானத்தை உயர்த்துகிறோம் என்றெல்லாம் பேசக்கூடிய நாம், 120 கோடி யிலிருந்து 300 கோடியாக உயர்த்துவதை—180 கோடி ரூபாய் உயர்வு, மகிழ்ச்சிதான். ஆனால் இந்த விற்பனை வரித் துறை யைச் செம்மையாகக் கவனித்தால் நிச்சயமாக இரண்டாயிரம் கோடி ரூபாய், வரி விகிதத்தை உயர்த்தாமலே நாம் எடுக்க முடியும். கம்ப்யூட்டர் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தி, ஏ.பி.சி. அனாலிசிஸ் என்ற ஒரு முறையை அறிமுகப்படுத்துங்கள். மூன்றே மாதங்களில் வியக்கத்தகுந்த முடிவுகளை நாம் காண முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, விவசாயப் பொருட்களிலிருந்து வரக்கூடிய விற்பனை வரி வருவாய் மிக, மிகக் குறைவான அளவாகவே இருக்கிறது. ஆகவே, சோதனை அடிப்படையில் வணிகர்கள் சொல்கின்ற ஆலோசனைப்படி ஏதாவது ஒன்றிரண்டு பொருட் களில் மிக, மிகக் குறைந்த விற்பனை வரி விகிதத்தை அறிமுகப் படுத்தி, அதனால் எதிர்பார்க்கக்கூடிய பலன்கள் இருக்கின்ற னவா என்பதை ஆராய்ந்து படிப்படியாக—விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை—விற்பனை வரியை படிப்படியாக சீராய்வு செய்யவேண்டும், அதன் மூலமாக வணிகர்களுக்குப் பாதகம் இருக்கக்கூடாது. பொதுமக்களுக்குப் பாதகம் இருக்கக்கூடாது. அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும், வருமானத்தை உயர்த்தி, விருதுநகருக்கும், எங்கள் தொகுதிக்கும் அதிகப் பணத்தைக் கொடுக்கவேண்டும் என்ற குறிப்போடு என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி சம்பந்தமாக ஒன் றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல முன்வருகிறேன். ஏற் கெனவே தொடர்ந்து இந்த மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் ஒரு முனை விற்பனை வரியாகக் கொண்டுவரப்படவேண்டும் என்று சொன்ன நீண்ட நாள் கோரிக்கையை இப்போது நிறை வேற்றியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1990 மே 8

அதே நேரத்தில், நான் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும் போதே ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னேன். அதிலே முக்கியமான ஒன்று. ரெடிமேட் என்று சொல்லக்கூடிய துணி களுக்கு—கையினால் தைக்கப்பட்ட, ரெடிமேட் நீங்கலாக உள்ள துணிகளுக்கு வரிவிலக்கு என்று சொல்லப்பட்டது. பல மிகப் பெரிய ஜவுளிக் கடைகளுக்கு அனைத்துக்குமே இப்போது வரி கிடையாது. ஏனென்றால், அவர்களெல்லாம், எக்சைஸ் டியூட்டி யாக, மில் துணிகளாக இருந்தாலும், கைத்தறித் துணியாக இருந்தாலும் அதற்கு வரி கிடையாது. சாதாரணமாக, ஏழை மக்கள், சாதாரண மக்கள் எல்லாம் ரெடிமேடில் தான் துணி வாங்குவது வழக்கமாக இருந்துகொண்டு வருகிறது. அந்த ரெடிமேட் துணிகளை விற்கக்கூடிய சிறு, சிறு கடைகளுக் கெல்லாம், இப்போது 8 சதவிகிதமாக இருந்ததை 5 சதவிகித மாக ஆக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ரெடிமேடிலே விற் பனை வரி விலக்கு என்று சொல்லும்போது நானெல்லாம் இது சேர்ந்துதான் என்று நினைத்தேன். இப்போது பல்வேறு இடங் களிலேயிருந்து எனக்கு வரக்கூடிய கடிதங்களிலே, அந்த ரெடி மேட்களுக்கு விற்பனை வரி விலக்கு—கையினால் செய்யப்பட்ட துணி, கையினால் தைக்கப்பட்ட துணிகளுக்குத் தான் வரி விலக்கே தவிர, ரெடிமேடிற்கு வரி விலக்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரெடிமேட் என்று சொன்னால், இன்றைக்கு துணிகள் தைக்கப்பட்டவுடனே ரெடிமேடாக ஆகிவிடுகின்றன. தைக்கப்பட்ட துணிகளைத்தான் பெரும்பகுதி மக்கள், சாதாரண ஆட்கள், உழைக்கக்கூடிய மக்கள், துணியை வாங்கித் தைப்பதற்குப் பதிலாக, ரெடிமேடை வாங்குகிறார்கள்.

12–25 மணி

ஆகவே இந்த வரி என்று சொல்லும்போது 20 ரூபாய்க்கு வாங்கினால் ஒரு ரூபாய் அதிகமாக வரி என்று சொல்லக்கூடிய முறையில் அதனுடைய விலை ஒரு ரூபாய் உயர்ந்து விடுகிறது. ஆகவே, ஒவ்வொருவருக்கும் இந்த சாதாரண மக்கள் மீது விழக்கூடிய இந்த வரியை நீக்கவேண்டும் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய பல்வேறு உறுப்பினர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த வரியை விட இந்த வரியை விதிக்கக்கூடிய அதிகாரிகளுடைய தொல்லைகள் சாதாரண வியாபாரிகளுக்கு மிக்க தொந்தரவை ஏற்படுத்துகிறது. பெரிய வியாபாரிகளைப் பற்றி கவலையில்லை. ஏன் என்றால் அவர்கள் அப்படியே அந்த வரியை பில்லில் போட்டு வசூல் செய்துகொண்டுவிடுகிறார்கள். அதை முழுமையாக கட்டுகிறார்களா என்று சொன்னால் அது சந்தேகம் தான். அதிலும் வரியைப் போடாமல் கூட வரிகளை வாங்குகிறார்கள். ஆகவே சாதாரண வியாபாரிகள் இதனால் மிகப் பெரிய தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். இப்போது

1990 மே 8] [திரு. சோ. அழகர்சாமி]

நீங்கி இருக்கிறது. ஒரு முனை வரி என்று சொல்லக்கூடிய காலத்திலே பல்வேறு தொல்லைக்கு ஆளாகவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, நான் கேட்டுக் கொள்ளுவது இந்த ரெடிமேடு துணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது நியாய மாக ஏழை எளிய மக்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, இந்தக் கருத்தை மட்டும் வற்புறுத்தி அமைகிறேன், வணக்கம்.

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத் திருத்தத்திற்கான சட்ட முன்வடிவுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக் களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் விற் பனை வரி அமைப்பில் 1-4-1990-லிருந்து மாற்றங்கள் செய்ய கீழ்க்கண்ட அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளை சட்டபூர்வமாக்குவதற்காகத் தான் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பலமுனை வரி ஏற்பாடு அறவே நீக்கப்பட்டு . தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருள்கள் அனைத்தும் இனி ஒரு முனையில் 8 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படும். அனைத் துப் பொருட்களையும் ஒரு முனை வரிக்கு மாற்றும் போது இதுவரை பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்களின் தயாரிப் பாளர்களுக்கு கிடைக்கும் மூலப் பொருட்களின் கொள்முதலின் மீதான வரி சலுகை தொடர்வதற்கு வகை செய்யப்படும். தங்கம், வெள்ளியினால் ஆன அணிகலன்கள் மற்றும் பொருட்கள், ஏலக்காய் ஆகியவற்றிற்கும் ஒரு முனை வரி விகிதம் மாற்றி அமைக்கப்படும். புதிதாக விற்பனைக்கு வர இருக்கும் நாட்டு மலிவு விலை மதுவின் மீது ஒரு முனை வரி 25 சதவீதம் விதிக்கப் படும். ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சம் மற்றும் அதற்கும் கீழே உள்ள மொத்த விற்பனை அளவுக்கு சில நியந்தனைக்கு உட்பட்டு முடிவுற்றதாக கருதப்படும் வரி விதிப்பு முறை 'டீம்டு அசெஸ் மெண்டு' கடைப்பிடிக்கப்படும்.

புதிய சிறிய தொழிலை ஊக்குவிக்கும் முறையில் கொண்டு வரப்பட்ட வரி ஒத்திவைப்பு திட்டத்தை தாமதம் இன்றி வழங்கு வதற்கு மாவட்ட அளவிலுள்ள வணிக வரி அலுவலர்களுக்கு ஒத்திவைப்பு ஆணைகளை பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப் படும். மேற்கண்ட அறிவிப்புகளை 1-4-1990 முதல் நடைமுறைப்படுத்த 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் சில அடிப்படை மாற்றங்களை செய்ய வேண்டி இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை அறிவீர்கள்.

[திரு. எல். கணேசன்] [1990 மே 8

உள்ளாட்சி அமைப்புகளில் நிதிநிலையை சமாளிக்க வழி வகைகளைச் செய்வது அவசர அவசியம் என்று ஏற்று 1990 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தற்போது உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளில் விற்பனை வரியின் மேல் விதிக்கப் படும் மேல் வரியை ஓரளவு உயர்த்தி மேல் வரியின் வருவாயில் ஒரு பகுதியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியமாக வழங்குவது எனவும்; மேல் வரியை கீழ்க்கண்டவாறு உயர்த்தவும் அறிவிக்கப்பட்டது. மதுரை மற்றும் கோவை நகராட்சி எல்லைக்குள்ளும் சிறப்புநிலை நக ராட்சிகள் எல்லைகளுக்குள்ளும் மேல் வரி 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துதல்; ஏனைய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்ற நகரியங்களின் எல்லைக்குள் மேல் வரி 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்துதல்; ஊராட்சிகள் மாற்றம் இல்லை. 8 சதவீதம் அப்படியே தொடரும்.

12–30 மணி

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் தற்போது 10 சதவீதம் மேல் வரி விதிக்கப்படுகிறது. இது 15 சதவீதமாக உயர்த்தவும் மேல் வரியின் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயில் சென்னை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கிய 32.5 சத வீதத்தை இனி 50 விழுக்காடாக உயர்த்துவது என்று அறிவிக்கப் பட்டது. மேற்கண்ட அறிவிப்புகளை 1–4–1990 முதல் நடை முறைப்படுத்த 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத் திருத்தம் வேண்டி இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் திருத்தங்களைப் பற்றி உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். பெரும்பாலும் மனந்திறந்து மாண்பு மிகு முதல்வர் அவர்களைப் பாராட்டினார்கள். பல ஆண்டு களாக வணிகர்களும் பொது மக்களும் திரும்பத் திரும்ப கோரி வந்த ஒருமுனை விற்பனை வரியை முதல்வர் அவர்கள் அறிவித்ததற்காக ஏறத்தாழ அனைவருமே கட்சி மாறுபாடின்றி பாராட்டி பேசியிருக்கிறார்கள். அதைப் போலவே வரி உயர்ந்து இருக்கிறது என்றாலும் அதனுடைய பங்குத் தொகை நகராட் சிக்கு அதிகம் அளிக்கப்படுகிற காரணத்தால் அதையும் வர வேற்றுப் பேசியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சில ஆலோசனைகளை, ஆய்வுரைகளை நம் முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். அவை களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்போதும்போல நிச்சயமாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் பெண்கள் அணியும் வெள்ளி நகைகளுக்கு வரி விலக்கு, வரி விலக்கு என் றார்கள். பெண்கள் அணிகின்ற அணிகலன்களுக்கு வரிவிலக்கு இப்போதே இருக்கிறது. பெண்கள் அணியும் மெட்டி, கொலுசு ஆகியவற்றிற்கு இப்போதே வரி விலக்கு இருக்கிறது. இவை தவிர மற்றைய வெள்ளிப் பொருள்களுக்கு வரி இருக்கிறதே தவிர, பெண்கள் அணிகிற அணிகலன்களுக்கு வரி விலக்கு இப்போதும் இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

அதைப்போலவே, உள்ளாட்சிக்கு உரிய பங்கு தரப்படுவதில் சில குறைபாடுகள் அல்லது நிலுவைகள் இருப்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவித்து இருக்கிறார்கள் அதிலும் நிலுவை இருக்குமானால் இனிமேல் இல்லாமல் விரைவாக, அவர்களுக்குரிய பங்கு நிச்சயமாக கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.பி. எச். பாண்டியன் அவர்கள் ஒன்றை வற்புறுத்திச் சொன்னார்கள். வெளி மாநிலங்களிலேயிருந்து தமிழ்நாட்டிலே விற்கப்படுகிற லாட்டரி சீட்டுகளுக்கான அந்த விற்பனை வரி பெறப்படவில்லை, அதைப் பெற்று இருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அவர்கள் சட்டம் பயின்றவர்கள்; சட்டப் பேரவைத் தலைவராக இருந் தவர்கள்; இப்போதும் வழக்குரைஞராக பணியாற்றுகிறவர்கள். உண்மைதான். இதிலே ஏற்பட்ட சிக்கல், வெளி மாநிலங் களிலேயிருந்து வந்து விற்பனையாகின்றவைகள் மீது விற்பனை வரியை தமிழ்நாடு அரசு விதித்தது. ஆனால் பல்வேறு சட்டப் பிரச்சினைகளை எழுப்பி அந்த வியாபாரிகள் உயர்நீதி மன்றத் திலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அந்த ஸ்டே அப்படியே இருக்கிறது. அந்த ஸ்டே வெக்கேட் ஆகி நிச்சயமாக நமக்குச் சாதகமாக வழக்கில் தீர்ப்பு வரும். அப்படி வருகிறபோது பாண்டியன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், நிச்சயமாக அந்தப் பழைய வரிகள், பாக்கி இருப்பது நிச்சயமாக வசூலிக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு செய்து கொடுப்பார் கள். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு-2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :

''பிரிவு 2 இன் உட்பிரிவு (i) -ல் 'நூற்றுக்குப் பதினைந்து விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு பன்னிரெண்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பெற வேண்டும்.''

''பிரிவு 2-ன் உட்பிரிவு (ii)-ல் 'நூற்றுக்கு பன்னிரெண்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு பத்து விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப்பெற வேண்டும்.''

''பிரிவு 2-ன் உட்பிரிவு (iii)-ல் 'நூற்றுக்கு பத்து விழுக்காடு என்ற சொற்றொடர்களுக்கு பதிலாக 'நூற்றுக்கு ஐந்து விழுக் காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பெற வேண்டும்''.

''பிரிவு 2-ன் உட்பிரிவு (iv) -ல் 'நூற்றுக்கு எட்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு ஐந்து விழுக் காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப்பெறவேண்டும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 16/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

12-35 மணி

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* 19-4-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : 400 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு விற்பனை ஆகிறதா? (குறுக்கீடு) எத்தனை ஆண்டுகளிலே?

திரு. பி எச். பாண்டியன்: அவர்கள் எந்த ஆண்டு தடை உத்தரவை வாங்கினார்களோ, அதற்கு முன்பிருந்து, இன்றைக்கு வரையிலே, கட்டவில்லை. ஆனால், பத்திரிக்கையிலே பார்க்கிறோம், என்ன, 10 இலட்சம், 1 கோடி பரிசு என்று. ஆனால், வரி எங்கே, அரசாங்கத்திற்கு வரவில்லை.

Thiru. M. ABDUL LATHEEF: The hon. Member Thiru Malarmannan has asked a question whether the Advocates are prepared to pay the sales-tax. He should understand that an Advocate only renders service. He does not sell his services. He renders only service and he gets only a fee and not a price. Commercial taxes are levied only on prices and not on fees.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய லத்தீப் அவர்கள் ஒரு விளக்கத்தை அளித்தார்கள். ஓர்க்ஸ் கான்ட்ராக்ட்டுக்கு வாங்குகிற மாதிரி வாங்கலாம் அல்லவா? அதுகூட வாங்கலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர்க்ஸ் கான்ட்ராக்ட் என்று வாங்க முடியாது. காரணம் இப்போது மலர்மன்னனிடம் இருந்து ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு சொத்து விவகாரம் ஒரு வக்கீலிடம் போகுமானால், இல்லை 10 இலட்சம் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஜெயித்தால் 5 இலட்சம் என்று பேச முடியாது. சட்ட விதிகள் எவ்வளவு அனுமதிக்கிறதோ, அதைத்தான் வாங்க முடியும். ஆகவே, இந்த ஒர்க்ஸ் கான்ட்ராக்ட் இதிலே கிடையாது. இப்படி கான்ட்ராக்ட் இருந்திருந்தால், எவ்வளவோ சம்பாதித்து இருக்கலாம். சில பேர்களுக்குத்தான் இதிலே இலாபம் கிடைக்கும். இந்த போபால் வழக்கு இருக்கிறதே, அதில் மக்களுக்கு 300 ரூபாய், 200 ரூபாய் கூடப் போய்ச் சேரவில்லை, போபால் காஸ் விபத்திலே இறந்தவர்களுக்கு. ஆனால், அரசாங்க வக்கீலின் செலவு 1 கோடி ரூபாய், பீஸ்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) புயலையொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து.

திரு. இளம்வழுதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வரலாற்றிலேயே சுட்டெரிக்கும் கொடுமையான கத்திரியிலே இதைப்போன்ற அடைமழை எப்போதும் பெய்தது கிடையாது. கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்

போதுதான் இந்த அற்புதம் நடந்து கொண்டிருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்து இருக்கிறார்கள். ''மன்னவன் வந்தானடி, மாமழை பெய்ததடி'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதைப்போல, எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் மாட்சியைக் கண்டு, வானமே மனமுவந்து, சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே, பூமியைக் குளிரவைத்துக் கொண்டு இருக்கிறது. இந்த மகிழ்ச்சியான சூழ்நிலையிலே குடிநீர் வாரியத்தினுடைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள், குளிருக்கு இதமாக உறுப்பினர்களுக்கு எல்லாம் சூடாக காபி வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்தப் புயல் கரையைக் கடக்கும் என்று அறிவிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, கடலூரிலிருந்து, ஓங்கோலுக்கு இடையே இப்போது மதியத்திற்குள்ளே கரையைக் கடக்கும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்திருக்கிறதா? தமிழகம் முழுவதும், அதுவும் குறிப்பாக வட மாவட்டங்களிலேயிருந்து அரசுக்கு வந்திருக்கிற செய்திகள் என்ன?

திரு. சோ. அழகர்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாட்களாக நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இந்தப் புயல் வேகமும், அதுமட்டுமல்லாமல் பெய்கிற மழையைப் பார்த்தாலே, ரோடு பூராவும் தண்ணீராக இருக்கிறது. ஆகவே, இந்த நகரத்திலே நமக்கு வேண்டியவர்கள் எல்லாம் ஆங்காங்கே வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குடிசைகளுக்கு ஏதாவது சேதங்கள் ஏற்பட்டு இருக்கின்றதா ? குடியிருப்பவர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கிறதா ? இது விஷயமாக ஏதாவது ஒரு அமைச்சர் அறிவித்தால் ஆறுதலாக இருக்கும். இது விஷயமாக சம்பந்தப்பட்ட அமைச்சர், அல்லது பொதுப்பணித்துறை அமைச்சரோ, அல்லது மற்ற அமைச்சரோ, என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று சொன்னால் எங்களுக்கு எல்லாம் ஆதரவாக இருக்கும்.

12-05 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் தொடர்ந்து புயலைக் குறித்த செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அரசு முன்னெச்சரிக்கையாக எல்லாவித நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆங்காங்கே மீட்புப் படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். இராணுவத்தைக் கூட உஷார் நிலையில் வைத்திருக்கிறோம். எந்தச் சூழ்நிலையிலேயும் மக்களை புயல் பாதிக்க விடாமல் மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்திருக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கின்றவர்களை எல்லாம் அந்த இடத்திலேயிருந்து பாதுகாப்பான இடத்திலே தங்கவைக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடல் அரிப்பு ஏற்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்காக பொதுப்பணித்துறையினர் கடலோரப் பகுதியில் ரோந்து வந்து கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சிப் பள்ளிகளை எல்லாம் தயார் நிலையில் வைத்திருக்கிறோம். உணவுப் பொட்டலங்கள், கிருஷ்ணாயில், அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு, மேற்கொண்டிருக்கிறது. இவ்வளவையும் மீறி ஏதாவது எக்கச்சக்கமாக வருமானால் உடனடியான உயிர் மீட்புப் பணிகளுக்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சில நேரங்களில் காலரா போன்றவைகள் எல்லாம் திடீரென்று பரவும். அவைகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், எல்லாவித நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசு புயலைச் சமாளிக்க தயாராக இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எழுந்த காரணத்தால் நான் இதைக் கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நன்றாக மழை பெய்திருக்கிறது. சென்னை நகருக்கு இன்றைக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாளையிலிருந்து நாள் தோறும் தண்ணீர் வழங்குவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறதா, தண்ணீர் நிறைந்து இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : சென்னைக்குக் குடிநீர் வழங்குவது சென்னையிலே பொழிகின்ற மழையைப் பொறுத்ததல்ல. அது புழலேரி, சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகளிலே, கேட்ச்மென்ட் ஏரியாவில், அங்குதான் நிறையப் பொழியவேண்டும். சென்னையிலே மழை பெய்வது அதிகமாகத் தெரியும். தார் ரோடுகளில் வேகமாக ஓடுவதுபோல் தெரியும். ஆகையால் அந்தப் பகுதிகளிலே பொழிகின்ற மழையை வைத்துத்தான் அவற்றை அரசு நிர்ணயிக்கும்.

1990 மே 8]

*திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் புயலைக் குறித்த சில விளக்கங் களைக் கொடுத்தார்கள். நான் ஒன்றை அவரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்கே புயல் கரையைக் கடக்கக் கூடும் என்ற ஒரு ஆபத்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு, நேற்று அலுவலகங்கள் அனைத்திற்கும் அரை நாள் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு வாடிக்கையாகப் பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள் அத்தனையும் நடை பெறுகின்ற நிலையில் விடுமுறை விடாமல் இருக்கின்ற நிலையிலே, சில கல்லூரிகளில் இன்றைக்கும் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இன்றைக்கு எல்லா அலுவலகங்களும் செயல்பட்டுக்கொண்டிருக் கின்றன. மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக் கொள்கி றேன். இப்போது புயலினுடைய நிலை நெருங்கி வந்து கொண் டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. எங்களுக்கு எல் லாம் தேவையான பாதுகாப்பை அவர் செய்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், இப்போது அலுவலகங்கள் மற்ற நிலையங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஏதாவது வழி செய்து அவர்களை உடனடியாக வீட்டிற்கு அனுப்பி பாதுகாப்பு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி ஏற்பாடு ஏதாவது செய் வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : புயல் நேற்றே கடந் திருக்க வேண்டும். அது நேற்று திரு. இராதா இல்லை என்ற கார ணத்தினாலோ, இன்றைக்கு வரட்டும் என்று காத்துக்கொண் டிருக்கிறது. எவ்வளவுதான் அறிவியல் வளர்ந்திருந்தாலும், இயற்கையைக் கட்டுப்படுத்தி, இந்த நேரத்தில் இது நடக்கும், நடக்கலாம் என்று சொல்கிறோமே தவிர, இத்தனை மணிக்கு நடக்கும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இன்றைக்கு புயல் வீசுமானால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இராதா அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அவர்களுக்கும் தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும், மேற்கொண்டிருக்கிறது, அதற்கான நடைமுறை ஒரு பகுதியிலே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : இப்போது இருக்கின்ற பிரச் சினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடத் திலிருந்து இப்போது கேட்ச்மென்ட் ஏரியாவில் என்ன இம்ப் ரூவ்மென்ட் ஏற்பட்டிருக்கிறது. அங்கே நீர்ப்பிடிப்பு ஏரிகளிலே ஏதாவது அதிகமான தண்ணீர் வரத்து ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுகுறித்த விவரமான அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளிக்க இருக்கிறார்கள்.

12-10 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : நாங்கள் சென்னையைச் சார்ந்தவர்கள். சென்னையிலே இருக்கின்ற உறுப்பினர்கள். இதைப் பற்றி அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்கள். அதனால்தான் அதைக் கேட்கிறோம். ஏனென்றால் நல்ல அக்கினி நட்சத்திரத்திலே, சித்திரை மாதத்திலே பெய்கின்ற மழை செல்வ மழை என்று சொல்வார்கள். இப்பொழுது செல்வ மழை பெய்திருக்கிறது. எனவே, எவ்வளவு தண்ணீர் அதிகமாக வந்திருக்கிறது. நம்முடைய தாகம் தீருமா? சென்னை நகர மக்களுடைய தாகம் தீருமா? ஒவ்வொரு நாளும் நீர் வருமா என்று ஆவலாக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாளுக்கு முன்புதான் இந்த அவையிலே மழையைப் பற்றி வாதங்களெல்லாம் நடைபெற்றன. யானைக்குத் திருமணம் செய்துவைத்தால் மழை வருமா. அதே போல் தண்ணீரிலே நின்று தவம் செய்தால் மழை வருமா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் கலைஞரும் ஏற்றுக்கொண்டு கலைஞருடைய தூதுவின் மூலமாகவோ என்னவோ தெரியவில்லை, எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு, அக்கினி நட்சத்திரத்திலே மழை பெய்யாத அளவு இப்பொழுது மழை அக்கினி நட்சத்திரத்திலே பெய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேள்வி கேட்டதைப் போல், நம்முடைய நகரத்திற்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், சென்னை நகரத்திற்கு ரெட்ஹில்ஸ், சோழவரம், பூண்டி ஆகிய பகுதிகளிலுள்ள ஏரிகளிலிருந்துதான் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த பகுதியிலே மழை பெய்திருக்கிறது. 73.55 எம்.எம்–க்கு ரெட்ஹில்ஸிலும், சோழவரத்தில் 56 எம்.எம். மழையளவும், பூண்டியிலே 40 எம்.எம். இப்பொழுது காலை 8 மணியளவிலே பொழிந்திருக்கின்றது. ஆனால், சோழவரம், பூண்டி இரண்டு ஏரிகளிலுமே தண்ணீர் வரத்து கம்மியாக இருக்கிறது. தண்ணீர் வரவில்லை. நேற்றிரவு வரை வரவில்லை. நேற்றிரவுக்குப் பிறகு இப்பொழுது வந்து கொண்டிருப்பதாக, இப்பொழுது சற்றுமுன் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, அங்கே வருகின்ற நீரின் அளவைப்பொறுத்தே, அவர் கேட்டதைப் போல, சென்னைக்குக் குடிநீர் அளவை உயர்த்த முடியுமா என்பதையெல்லாம் சொல்ல முடியும். அதேபோல, நீர்ப் பிடிப்பு ''ஏரியாக்கள்'' ஆன திருவள்ளூரிலே 800 எம்.எம்.-க்கு மழை பெய்திருக்கிறது. திருத்தணி பகுதியிலும் 18 எம்.எம்.-க்கு மழை பெய்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலேயும் மழை பெய்திருக்கின்ற காரணத்தினால் இன்று நீர் வரத்து அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, இந்த நீர் வரத்தை உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்கின்ற வகையிலே,

1990 மே 8] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

சென்னையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட கொண்டாடுகின்ற வகையிலே அனைவருக்கும் தேநீர் வழங்கி னால் நன்றாக இருக்கும். இருந்தாலும் இந்தத் துறையின் சார் பிலே அனைவருக்கும் காப்பி வழங்கப்படும் என்பதை மட்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காப்பி கொடுப்பதெல்லாம் ஒரு பக்கத்திலே, மாண்புமிகு உறுப் பினர் திரு. இளம்வழுதி அவர்கள் கேட்டதற்கு இணையாகச் சொல்லட்டும். ஆனால், இன்று அடித்த புயலிலே எங்காவது உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதுண்டா ? மீனவர்களைக் கண்டுபிடிப் பதற்கென்று ''ஹெலிகாப்டர்கள்'', ஒருவேளை அவர்களுக்கு ஆபத்து வந்தது என்றால் ''ஹெலிகாப்டர்கள்'' தயாராக வைக்கப்பட்டிருக்கிறதா என்பன போன்றவை எல்லாம் (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது வரையில் புயல் இன்னும் வீசவில்லை. அதனுடைய அறிகுறி தான் ஆங்காங்கே தென்படுகிறது. இதுவரையிலும் அரசுக்கு உயிர்ச் சேதம் பற்றிய குறிப்பு வரவில்லை. திடீரென்று மீன வர்கள் காணாமல் போய்விட்டால் ''ஹெலிகாப்டர்கள்'' தேவைப் படும் என்றால், ''ஹெலிகாப்டர்களும்'' தயாராகவே இருக்கின் றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே ஒன்றும் விவாதம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுங்கள். அவர்கள் விவரமான அறிக்கை அளிக்க இருக்கிறார்கள்.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—(தொடர்ச்சி).

(அ) விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன்வடிவு, 1990— (தொடர்ச்சி.)

***திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி தொடர்பாக இன்று முடிவு செய்யப் படுகின்ற இந்த நேரத்திலே இத்தனை ஆண்டுக்காலமாக ''மல்டி பாயிண்டாக'' இருந்த பல பொருள்களுக்கு, ''சிங்கிள் பாயிண்டாக'' அறிவித்திருக்கின்ற இந்த அரசினுடைய மிக்க தைரியமான முயற்சியை நான் வரவேற்கிறேன். 20, 25 ஆண்டுக் காலமாக ''மல்டி பாயிண்டுக்கு'' பதிலாக ''சிங்கிள் பாயிண்ட் டேக்ஸ்'' வேண்டுமென்று வணிகர்களும், பலரும் கேட்டபோது, அதிகாரிகள் எல்லாம் இருந்து, அரசுகளை பயமுறுத்தி வந்தார் கள். இதனால் வருமானம் குறைந்து விடுமோ என்று பயமுறுத்தி

வந்தார்கள். ஆனால், அந்த பயத்தையெல்லாம் பொருட்படுத் தாது இன்று ''சிங்கிள் பாயிண்டு'' வரி விதிப்பு முறையை அறி முகப்படுத்த இருக்கின்ற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய அறுவை சிகிச்சையையே செய்திருக்கிறார் கள் என்று என்னால் சொல்ல முடியும். ஆனால், அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ''போஸ்ட் ஆப்பரேட்டிவ் கேர்''......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

திரு. ரா. சொக்கர் : அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ''போஸ்ட் ஆப்பரேட்டிவ் கேர்'' எந்த அளவுக்கு முக்கியமாக கருதப்படுகிறதோ அந்த அளவுக்கு ''மல்டி பாயிண்டு''–ஐ''சிங்கிள் பாயிண்டாக'' ஆக்கியதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை, உன்னிப்பாகக் கவனித்து இந்த அரசு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

12–15 மணி.

இந்த அரசு அதன் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஓவன் சேக்ஸ்ஸுக்கு இந்த அறிவிப்பு செய்யப்பட்ட இரண்டாவது நாளிலே 8 சத வீதமாக ஆக உயர்த்தப்பட்ட அந்த வரியானது 2 சதவீதமாக குறைத்து முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அது போன்று தான் பல பொருள்களுக்கு இன்று மறு மதிப்பீடு செய்து வரிக் குறைப்பு அறிவிக்கப்பட்டு வருகின்றது. இன்றும் தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது என்று அறியும் பொழுது மகிழ்ச்சி யடைகிறோம். நேற்றுகூட பிளாஸ்டிக் பொருள்களுக்கு வரியைக் குறைத்து அறிவிப்பு செய்தபோது ப்ளாஸ்டிக்கினுடைய ரா மெட்டீரியலுக்கு—மூலப் பொருளுக்கு 3 சதவீதமாக ஃபார்ம் செவன்டீன் கொடுத்து வாங்கக்கூடிய முறையை அறிமுகப் படுத்தி ஆனால் அந்த மூலப் பொருட்களை வைத்து உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய பொருள்களுக்கு 8 சதவீதத் திலிருந்து 6 சதவீதமாக குறைத்ததாக அறிவித்தீர்கள். மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் 3 சதவீதமாக குறைத்து அறிவிப்பு செய்ததை வணிகர்கள் முழு மனதோடு வரவேற் கிறார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறார்கள். இருந்த போதிலும் முடிவு செய்யப்பட்ட பொருள்களுக்கு, உற்பத்திப் பொருள்களுக்கு 6 சதவீதமாக குறைப்பு செய்திருப்பது காணாது என்ற கோரிக்கையை மறுபடியும் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ப்ளாஸ்டிக் பொருள்கள் என்று மொத்தமாக எடுத்துப் பார்க்கும்பொழுது ப்ளாஸ்டிக் பைகள் பேக்கேஜிங் மெட்டீரியல் என்ற ஒரு பிரிவாகவும், பக்கெட் அல்லது குடங்கள் போன்ற பொருள்களை இன்னொரு பிரிவாகவும் பிரித்து அந்த அணுகு முறையை வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். பேக்கேஜிங் மெட்டீரியலைப் பொறுத்தவரையில்

1990 மே 8] [திரு. ரா. சொக்கர்]

உற்பத்தியாளர்களிடமிருந்து உடனே உபயோகிப்பவர்களுக்குச் சென்றுவிடுகிறது. ஆகவே பழைய முறையில் மல்டி பாயின்ட்டில் இருந்தாலும் கூட அது ஒரு முனையில்தான் ப்ராக்டிகலாக வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. ஆகவே அந்த ப்ளாஸ்டிக் பேக்கேஜிங் மெட்டீரியலுக்காவது, பாலிதீன் பைகளுக்காவது கண்டிப்பாக மீண்டும் பரிசீலனை செய்து அந்த வரி விதிப்பை குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சர்சார்ஜ் இப்போது உயர்த்தப்பட்டு இருந்தாலும் அந்த உயர்வை எதிர்த்து என்னைப் பொறுத்தவரையில் பேச முடியாது. ஏனென்றால் அந்த உயர்வு செய்திருப்பது—உயர்த்தப்பட்ட பணம் அனைத்தும் நகராட்சிகளுக்கு வரும் என்ற ஒரு நல்ல அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதை உயர்த்த வேண்டாம் என்று சொன்னால் கண்டிப்பாக ''நகராட்சிக்கு நீ பணம் கேட்க மாட்டாயா,'' என்று கூட முதல்வர் அவர்கள் கேட்டு விடுவார்கள். ஆகவே உயர்த்தப்பட்ட சதவிகிதம் நகராட்சிக்கு வரும் என்ற காரணத்தினால் அதை ஒரு புறம் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்த சர்சார்ஜானது 1971 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டதாகும். அவர் அறிமுகம் செய்யும்போது இந்த சர்சார்ஜிலிருந்து வரும் பணம் அத்தனையும் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் என்றுதான் அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் ஏனோ இதுகாலம் வரையில் அந்தப் பணத்தில் ஒரு பகுதி கூட நகராட்சிக்கு வராமல் இருந்தது. ஆனால் இந்தத் தடவை 20 சதவீதம் நகராட்சிக்கு வரும் என்று அறிவிப்பு செய்திருப்பதை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதிலும், 20 சதவீதம் வரி விதிப்பு நகராட்சிகளுக்கு கொடுப்பது காணாது. இன்னமும் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்றோம்.

அதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் 20 சதவீதம் நகராட்சிக்கு வருவதை எப்படி வழங்கப் போகிறீர்கள்? இங்கே மாநில அரசுக்கு வந்து அதை வழங்குவதாக இருந்தால் காலதாமதம் ஏற்படும். எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸை சினிமா தியேட்டரில் வசூல் செய்வதை அந்தந்தப் பகுதியில் உள்ள கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் அந்தந்த நகராட்சிகளுக்கு அந்தந்த மாதங்களிலேயே வழங்கி விடுகிறார்கள். அதே முறையில் சர்சார்ஜிலிருந்து கிடைக்கக் கூடிய 20 சதவீத வருமானத்தை நகராட்சிகளுக்கு வழங்கும் போது மக்கள் தொகையின் அடிப்படையிலேயே வழங்கும் பொழுது அந்தந்த நகராட்சிகளுக்கு அந்தந்த கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் அந்தந்த மாதங்களிலே வழங்கவேண்டும் என்ற ஒரு உத்தரவை நீங்கள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. சொக்கர்] [1990 மே 8

அடுத்தபடியாக மிக முக்கியமாக அடிஷனல் டாக்ஸ் அதாவது டர்ன்-ஓவர் டாக்ஸ். இதைப் பொறுத்தவரையில் ஒரு டிரகோனியன் ஆக்ட் என்றே சொல்ல முடியும். அந்த அளவிற்கு மிகவும் ஒரு கடுமையான வரியாக கருதப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் இந்த வரியையும் நீங்கள் முற்றிலுமாக எடுத்துவிடுங்கள் என்று சொன்னால் நடைமுறையில் அது சாத்தியம் அல்ல. ஏனென்றால் இந்த அடிஷனல் டாக்ஸ் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானமாக வருகிறது. 200 கோடி ரூபாய் வருமானத்தை உடனே விட்டு விடுங்கள் என்று நாங்கள் சொன்னாலும் நிச்சயமாக நடைமுறையில் அது முடியாது. இருந்த போதிலும் இந்த வரி அறிமுகம் செய்யப்பட்ட போதே ஒரு சின்ன தவறு ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஸ்லாப் சிஸ்டத்தில் இந்த வரியை நீங்கள் அமல் செய்திருக்கிறீர்கள். 10 இலட்சம் வரையிலும் விதி விலக்கு. 10 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரை 1 1/4 சதவீதம். 40 இலட்சத்திலிருந்து 1 கோடி வரையிலும் 1 1/2 சதவீதம். 1 கோடியிலிருந்து 5 கோடி வரை அது 2 சதவீதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இந்த கணக்கின்படி பார்த்தால் 99,99,000-க்கு உற்பத்தி செய்த ஒருவர் ஒரு பொருளை விற்பனை செய்தால், ஒன்றரை சதவீதமாக அவர் ஒன்றரை இலட்சம் ரூபாய்

12-20 மணி.

அடிஷனல் டாக்ஸ் கட்டவேண்டும். ஆனால் அவருடைய உற்பத்தியை ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்தி, 99 இலட்சத்து 99 ஆயிரத்திலிருந்து 1 கோடியை எட்டுவாரேயானால், அவர் இரண்டு சதவிகிதம் வரி விதிப்புக்குட்படுகிறார். அந்த இரண்டு சதவிகிதம் வரி விதிப்பானது ஒரு ரூபாயிலிருந்து வந்து விடுகிறது. ஆக, ஒரு ஆயிரம் ரூபாய்க்கு உற்பத்தியை அதிகமாக செய்யக்கூடிய ஒருவர் 50,000 ரூபாய் விற்பனை வரி அதிகமாகச் செலுத்த வேண்டிய ஒரு வினோதமான ஒரு நிலைமை இருக்கின்றது. இதுகாலம் வரையில், ஏன் இந்த உண்மை அரசிற்கு கொண்டுவரப்படவில்லை, அரசினுடைய கவனத்திற்கு ஏன் கொண்டுவரப்படவில்லை என்பது புதுமையாக இருக்கிறது. ஒருவேளை சொல்பவர்கள் சரியாகச் சொல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது சொல்பவர்கள் சரியாகச் சொன்னாலும், கேட்பவர்கள் கேட்கக்கூடிய மனநிலையிலே இல்லாமல் இருந்திருக்கலாம், என்ற காரணத்தினால் இந்த முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தயவு செய்து, வருமானவரி விதிக்கப்படும்போது, எப்படி 22,000-ரூபாய் வரையிலும் விதிவிலக்கு, 22,000-லிருந்து 30,000 வரும் வரையிலும் அந்த 8,000 ரூபாய்க்குத்தான் 30 சதவிகிதம் என்ற அடிப்படையிலே, நீங்கள் அந்த வரி விதிப்பைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

விற்பனை வரியைப் பொறுத்தவரையிலும், முழுமையாகக் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தவேண்டும். ஏனென்றால், 1,759 கோடி ரூபாயை அரசாங்கத்திற்கு வருமானமாக ஈட்டித் தரு

1990 மே 8] [திரு. ரா. சொக்கர்]

இன்ற இந்தத் துறையில் எந்த அளவிற்கு முழுமையாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். துரதிர்ஷ்டவசமாக, விற்பனை வரி மானியத்தின்போது இங்கே பேசிய ஒரு உறுப்பினர் கூட இந்த விற்பனை வரியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. வரியைக் குறைப்பதற்காகவோ, கூட்டுவதற்காகவோ நான் சொல்லவில்லை. 1,759 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு துறையைப் பற்றி இந்த சட்டமன்றத்திலே ஒரு வரி கூடப் பேசப்படவில்லை என்றால் இந்தத் துறை முற்றிலுமாக மக்கள் பிரதிநிதிகளால் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

சாராய விற்பனையிலிருந்து எவ்வளவு தூரம் ஏமாற்றுதல் நடக்கிறது, இந்தத் துறையிலிருந்து எவ்வளவு வருமானத்தை உயர்த்துகிறோம் என்றெல்லாம் பேசக்கூடிய நாம், 120 கோடியிலிருந்து 300 கோடியாக உயர்த்துவதை—180 கோடி ரூபாய் உயர்வு, மகிழ்ச்சிதான். ஆனால் இந்த விற்பனை வரித் துறையைச் செம்மையாகக் கவனித்தால் நிச்சயமாக இரண்டாயிரம் கோடி ரூபாய், வரி விகிதத்தை உயர்த்தாமலே நாம் எடுக்க முடியும். கம்ப்யூட்டர் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தி, ஏ.பி.சி. அனாலிசிஸ் என்ற ஒரு முறையை அறிமுகப்படுத்துங்கள். மூன்றே மாதங்களில் வியக்கத்தகுந்த முடிவுகளை நாம் காண முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, விவசாயப் பொருட்களிலிருந்து வரக்கூடிய விற்பனை வரி வருவாய் மிக, மிகக் குறைவான அளவாகவே இருக்கிறது. ஆகவே, சோதனை அடிப்படையில் வணிகர்கள் சொல்கின்ற ஆலோசனைப்படி ஏதாவது ஒன்றிரண்டு பொருட்களில் மிக, மிகக் குறைந்த விற்பனை வரி விகிதத்தை அறிமுகப்படுத்தி, அதனால் எதிர்பார்க்கக்கூடிய பலன்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து படிப்படியாக—விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை—விற்பனை வரியை படிப்படியாக சீராய்வு செய்யவேண்டும், அதன் மூலமாக வணிகர்களுக்குப் பாதகம் இருக்கக்கூடாது. பொதுமக்களுக்குப் பாதகம் இருக்கக்கூடாது. அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும், வருமானத்தை உயர்த்தி, விருதுநகருக்கும், எங்கள் தொகுதிக்கும் அதிகப் பணத்தைக் கொடுக்கவேண்டும் என்ற குறிப்போடு என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல முன்வருகிறேன். ஏற்கெனவே தொடர்ந்து இந்த மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்கள் ஒரு முனை விற்பனை வரியாகக் கொண்டுவரப்படவேண்டும் என்று சொன்ன நீண்ட நாள் கோரிக்கையை இப்போது நிறைவேற்றியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1990 மே 8

அதே நேரத்தில், நான் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும் போதே ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னேன். அதிலே முக்கியமான ஒன்று. ரெடிமேட் என்று சொல்லக்கூடிய துணி களுக்கு—கையினால் தைக்கப்பட்ட, ரெடிமேட் நீங்கலாக உள்ள துணிகளுக்கு வரிவிலக்கு என்று சொல்லப்பட்டது. பல மிகப் பெரிய ஜவுளிக் கடைகளுக்கு அனைத்துக்குமே இப்போது வரி கிடையாது. ஏனென்றால், அவர்களெல்லாம், எக்சைஸ் டியூட்டி யாக, மில் துணிகளாக இருந்தாலும், கைத்தறித் துணியாக இருந்தாலும் அதற்கு வரி கிடையாது. சாதாரணமாக, ஏழை மக்கள், சாதாரண மக்கள் எல்லாம் ரெடிமேடில் தான் துணி வாங்குவது வழக்கமாக இருந்துகொண்டு வருகிறது. அந்த ரெடிமேட் துணிகளை விற்கக்கூடிய சிறு, சிறு கடைகளுக் கெல்லாம், இப்போது 8 சதவிகிதமாக இருந்ததை 5 சதவிகித மாக ஆக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ரெடிமேடிலே விற் பனை வரி விலக்கு என்று சொல்லும்போது நானெல்லாம் இது சேர்ந்துதான் என்று நினைத்தேன். இப்போது பல்வேறு இடங் களிலேயிருந்து எனக்கு வரக்கூடிய கடிதங்களிலே, அந்த ரெடி மேட்களுக்கு விற்பனை வரி விலக்கு—கையினால் செய்யப்பட்ட துணி, கையினால் தைக்கப்பட்ட துணிகளுக்குத் தான் வரி விலக்கே தவிர, ரெடிமேடிற்கு வரி விலக்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரெடிமேட் என்று சொன்னால், இன்றைக்கு துணிகள் தைக்கப்பட்டவுடனே ரெடிமேடாக ஆகிவிடுகின்றன. தைக்கப்பட்ட துணிகளைத்தான் பெரும்பகுதி மக்கள், சாதாரண ஆட்கள், உழைக்கக்கூடிய மக்கள், துணியை வாங்கித் தைப்பதற்குப் பதிலாக, ரெடிமேடை வாங்குகிறார்கள்.

12–25 மணி

ஆகவே இந்த வரி என்று சொல்லும்போது 20 ரூபாய்க்கு வாங்கினால் ஒரு ரூபாய் அதிகமாக வரி என்று சொல்லக்கூடிய முறையில் அதனுடைய விலை ஒரு ரூபாய் உயர்ந்து விடுகிறது. ஆகவே, ஒவ்வொருவருக்கும் இந்த சாதாரண மக்கள் மீது விழக்கூடிய இந்த வரியை நீக்கவேண்டும் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய பல்வேறு உறுப்பினர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இந்த வரியை விட இந்த வரியை விதிக்கக்கூடிய அதிகாரிகளுடைய தொல்லைகள் சாதாரண வியாபாரிகளுக்கு மிக்க தொந்தரவை ஏற்படுத்துகிறது. பெரிய வியாபாரிகளைப் பற்றி கவலையில்லை. ஏன் என்றால் அவர்கள் அப்படியே அந்த வரியை பில்லில் போட்டு வசூல் செய்துகொண்டுவிடுகிறார்கள். அதை முழுமையாக கட்டுகிறார்களா என்று சொன்னால் அது சந்தேகம் தான். அதிலும் வரியைப் போடாமல் கூட வரிகளை வாங்குகிறார்கள். ஆகவே சாதாரண வியாபாரிகள் இதனால் மிகப் பெரிய தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். இப்போது

1990 மே 8] [திரு. சோ. அழகர்சாமி]

நீங்கி இருக்கிறது. ஒரு முனை வரி என்று சொல்லக்கூடிய காலத்திலே பல்வேறு தொல்லைக்கு ஆளாகவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, நான் கேட்டுக் கொள்ளுவது இந்த ரெடிமேடு துணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது நியாய மாக ஏழை எளிய மக்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, இந்தக் கருத்தை மட்டும் வற்புறுத்தி அமைகிறேன், வணக்கம்.

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத் திருத்தத்திற்கான சட்ட முன்வடிவுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக் களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் விற் பனை வரி அமைப்பில் 1-4-1990-லிருந்து மாற்றங்கள் செய்ய கீழ்க்கண்ட அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளை சட்டபூர்வமாக்குவதற்காகத் தான் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பலமுனை வரி ஏற்பாடு அறவே நீக்கப்பட்டு . தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருள்கள் அனைத்தும் இனி ஒரு முனையில் 8 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படும். அனைத் துப் பொருட்களையும் ஒரு முனை வரிக்கு மாற்றும் போது இதுவரை பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்களின் தயாரிப் பாளர்களுக்கு கிடைக்கும் மூலப் பொருட்களின் கொள்முதலின் மீதான வரி சலுகை தொடர்வதற்கு வகை செய்யப்படும். தங்கம், வெள்ளியினால் ஆன அணிகலன்கள் மற்றும் பொருட்கள், ஏலக்காய் ஆகியவற்றிற்கும் ஒரு முனை வரி விகிதம் மாற்றி அமைக்கப்படும். புதிதாக விற்பனைக்கு வர இருக்கும் நாட்டு மலிவு விலை மதுவின் மீது ஒரு முனை வரி 25 சதவீதம் விதிக்கப் படும். ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சம் மற்றும் அதற்கும் கீழே உள்ள மொத்த விற்பனை அளவுக்கு சில நியந்தனைக்கு உட்பட்டு முடிவுற்றதாக கருதப்படும் வரி விதிப்பு முறை 'டீம்டு அசெஸ் மெண்டு' கடைப்பிடிக்கப்படும்.

புதிய சிறிய தொழிலை ஊக்குவிக்கும் முறையில் கொண்டு வரப்பட்ட வரி ஒத்திவைப்பு திட்டத்தை தாமதம் இன்றி வழங்கு வதற்கு மாவட்ட அளவிலுள்ள வணிக வரி அலுவலர்களுக்கு ஒத்திவைப்பு ஆணைகளை பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப் படும். மேற்கண்ட அறிவிப்புகளை 1-4-1990 முதல் நடைமுறைப்படுத்த 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் சில அடிப்படை மாற்றங்களை செய்ய வேண்டி இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை அறிவீர்கள்.

உள்ளாட்சி அமைப்புகளில் நிதிநிலையை சமாளிக்க வழி வகைகளைச் செய்வது அவசர அவசியம் என்று ஏற்று 1990 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தற்போது உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளில் விற்பனை வரியின் மேல் விதிக்கப் படும் மேல் வரியை ஓரளவு உயர்த்தி மேல் வரியின் வருவாயில் ஒரு பகுதியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியமாக வழங்குவது எனவும்; மேல் வரியை கீழ்க்கண்டவாறு உயர்த்தவும் அறிவிக்கப்பட்டது. மதுரை மற்றும் கோவை நகராட்சி எல்லைக்குள்ளும் சிறப்புநிலை நக ராட்சிகள் எல்லைகளுக்குள்ளும் மேல் வரி 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துதல்; ஏனைய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்ற நகரியங்களின் எல்லைக்குள் மேல் வரி 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்துதல்; ஊராட்சிகள் மாற்றம் இல்லை. 8 சதவீதம் அப்படியே தொடரும்.

12-30 மணி

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் தற்போது 10 சதவீதம் மேல் வரி விதிக்கப்படுகிறது. இது 15 சதவீதமாக உயர்த்தவும் மேல் வரியின் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயில் சென்னை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கிய 32.5 சத வீதத்தை இனி 50 விழுக்காடாக உயர்த்துவது என்று அறிவிக்கப் பட்டது. மேற்கண்ட அறிவிப்புகளை 1-4-1990 முதல் நடை முறைப்படுத்த 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத் திருத்தம் வேண்டி இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் திருத்தங்களைப் பற்றி உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். பெரும்பாலும் மனந்திறந்து மாண்பு மிகு முதல்வர் அவர்களைப் பாராட்டினார்கள். பல ஆண்டு களாக வணிகர்களும் பொது மக்களும் திரும்பத் திரும்ப கோரி வந்த ஒருமுனை விற்பனை வரியை முதல்வர் அவர்கள் அறிவித்ததற்காக ஏறத்தாழ அனைவருமே கட்சி மாறுபாடின்றி பாராட்டி பேசியிருக்கிறார்கள். அதைப் போலவே வரி உயர்ந்து இருக்கிறது என்றாலும் அதனுடைய பங்குத் தொகை நகராட் சிக்கு அதிகம் அளிக்கப்படுகிற காரணத்தால் அதையும் வர வேற்றுப் பேசியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சில ஆலோசனைகளை, ஆய்வுரைகளை நம் முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். அவை களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்போதும்போல நிச்சயமாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் பெண்கள் அணியும் வெள்ளி நகைகளுக்கு வரி விலக்கு, வரி விலக்கு என் றார்கள். பெண்கள் அணிகின்ற அணிகலன்களுக்கு வரிவிலக்கு இப்போதே இருக்கிறது. பெண்கள் அணியும் மெட்டி, கொலுசு ஆகியவற்றிற்கு இப்போதே வரி விலக்கு இருக்கிறது. இவை தவிர மற்றைய வெள்ளிப் பொருள்களுக்கு வரி இருக்கிறதே தவிர, பெண்கள் அணிகிற அணிகலன்களுக்கு வரி விலக்கு இப்போதும் இருக்கிறது.

அதைப்போலவே, உள்ளாட்சிக்கு உரிய பங்கு தரப்படுவதில் சில குறைபாடுகள் அல்லது நிலுவைகள் இருப்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவித்து இருக்கிறார்கள் அதிலும் நிலுவை இருக்குமானால் இனிமேல் இல்லாமல் விரைவாக, அவர்களுக்குரிய பங்கு நிச்சயமாக கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.பி. எச். பாண்டியன் அவர்கள் ஒன்றை வற்புறுத்திச் சொன்னார்கள். வெளி மாநிலங்களிலேயிருந்து தமிழ்நாட்டிலே விற்கப்படுகிற லாட்டரி சீட்டுகளுக்கான அந்த விற்பனை வரி பெறப்படவில்லை, அதைப் பெற்று இருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அவர்கள் சட்டம் பயின்றவர்கள்; சட்டப் பேரவைத் தலைவராக இருந்தவர்கள்; இப்போதும் வழக்குரைஞராக பணியாற்றுகிறவர்கள். உண்மைதான். இதிலே ஏற்பட்ட சிக்கல், வெளி மாநிலங்களிலேயிருந்து வந்து விற்பனையாகின்றவைகள் மீது விற்பனை வரியை தமிழ்நாடு அரசு விதித்தது. ஆனால் பல்வேறு சட்டப் பிரச்சினைகளை எழுப்பி அந்த வியாபாரிகள் உயர்நீதி மன்றத்திலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அந்த ஸ்டே அப்படியே இருக்கிறது. அந்த ஸ்டே வெக்கேட் ஆகி நிச்சயமாக நமக்குச் சாதகமாக வழக்கில் தீர்ப்பு வரும். அப்படி வருகிறபோது பாண்டியன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், நிச்சயமாக அந்தப் பழைய வரிகள், பாக்கி இருப்பது நிச்சயமாக வசூலிக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு செய்து கொடுப்பார்கள். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு-2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.
''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :

"பிரிவு 2 இன் உட்பிரிவு (i) -ல் 'நூற்றுக்குப் பதினைந்து விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு பன்னிரெண்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பெற வேண்டும்."

"பிரிவு 2-ன் உட்பிரிவு (ii)-ல் 'நூற்றுக்கு பன்னிரெண்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு பத்து விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப்பெற வேண்டும்."

"பிரிவு 2-ன் உட்பிரிவு (iii)-ல் 'நூற்றுக்கு பத்து விழுக்காடு என்ற சொற்றொடர்களுக்கு பதிலாக 'நூற்றுக்கு ஐந்து விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப் பெற வேண்டும்".

"பிரிவு 2-ன் உட்பிரிவு (iv) -ல் 'நூற்றுக்கு எட்டு விழுக்காடு' என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக 'நூற்றுக்கு ஐந்து விழுக்காடு' என்ற சொற்றொடர்கள் சேர்க்கப்பெறவேண்டும்."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 16/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

12-35 மணி

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* 19-4-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(உ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

*5–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

1990 மே 8]

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) புயலையொட்டி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைககள் குறித்து —(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையினைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் குறித்த ஒரு குறிப்பு. நேற்று தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருந்த புயல் காற்று, இன்று ஆந்திரா மாநிலத்தின் கடற்கரையை நோக்கி நகர்ந்து கொண் டிருக்கிறது. அநேகமாக, இன்று இரவு ஆந்திர மாநிலம், மசூலிப்பட்டினம் அருகே, அது கரையைக் கடக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் சென்னை, செங்கை-அண்ணா, தென்னாற்காடு மாவட்டங்களில் பலத்த மழை பெய்துள்ளது. மற்ற மாவட்டங்களில் மழை அந்த அளவு அதிகம் இல்லை. சென்னை நகரில் பலத்த மழையினால் பாதிக் கப்பட்ட சுமார் இரண்டாயிரம் பேர்கள் பாதுகாப்பான இடங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். சுமார் 75 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. சாலைப் போக்குவரத்து, சில இடங்களில், மரங்கள் விழுந்ததால், பாதிக் கப்பட்டுள்ளன. அவை அப்புறப்படுத்தப்படுகின்றன. சென்னை நகரில், இன்று காலை வரையுள்ள 24 மணி நேரத்தில், நுங்கம் பாக்கத்தில் 147 மில்லி மீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 126 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. புழல் ஏரி, சோழவரம் பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. செங்கை-அண்ணா மாவட்டத் தில் சைதை, திருப்பெரும்புதூர், திருவள்ளூர், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் முறையே 90, 82, 80, 140 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. சுமார் 11 ஆயிரம் பேருக்கு உணவுப் பொட்டலங்கள் அந்தப் பகுதிகளிலே வழங்கப்பட்டுள்ளன. சைதாப்பேட்டை, பொன்னேரி தாலுகாக்களில், தாழ்வான பகுதிகளிலிருந்து மக்கள் நேற்று பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த மாவட்டத்தில் ஒருவர் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார். தென்னாற்காடு மாவட் டத்தில், பாதிக்கப்பட்ட சுமார் மூவாயிரம் மக்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. அங்கே மழை விட்டு, விட்டுப் பெய்து கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங் களில் மழை இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமேஸ்வரம் துறைமுகத்திலே உள்ள இரண்டு தூண்கள் இடிந்து விழுந்ததில், 8 பேர் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். புயல் அபாயம் நீங்கியதுபோல் தோன்றி னாலும் கூட, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12-40 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் புயல் பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடையிலே வேறு செய்திகள் வேண்டாம். அறிக்கையிலேயே எல்லாம் சொல்லப்பட்டு விட்டது.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உகம்சந்த் அவர்கள் நேற்றே புயலுக்காக ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இன்றைக்குக் காலையிலும் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புயல் நன்றாக அடிக்கட்டுமே என்று பார்த்தேன்.

திரு. எஸ். ஆர். இராதா: அடிக்கட்டும். ஆனால் அவர் தொகுதியில் அடித்து பல ஊர்கள் பாதிக்கப்பட்டு மீனவர்கள் வலைகளை எல்லாம் இழந்துவிட்டார்கள் என்ற நிலையை அவர் எடுத்துச் சொல்கிறார். ஆகவே அரசு நடவடிக்கை எடுத்தால் போதும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. போதும். (சிரிப்பு).

சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிப் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

*3–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 16/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

12-35 மணி

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* 19-4-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 16/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

12-35 மணி

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* 19-4-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(உ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

*5–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(உ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

*5–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

12-40 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் புயல் பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இடையிலே வேறு செய்திகள் வேண்டாம். அறிக்கையிலேயே எல்லாம் சொல்லப்பட்டுவிட்டது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உகம்சந்த் அவர்கள் நேற்றே புயலுக்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இன்றைக்குக் காலையிலும் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புயல் நன்றாக அடிக்கட்டுமே என்று பார்த்தேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அடிக்கட்டும். ஆனால் அவர் தொகுதியில் அடித்து பல ஊர்கள் பாதிக்கப்பட்டு மீனவர்கள் வலைகளை எல்லாம் இழந்துவிட்டார்கள் என்ற நிலையை அவர் எடுத்துச் சொல்கிறார். ஆகவே அரசு நடவடிக்கை எடுத்தால் போதும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. போதும். (சிரிப்பு).

சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிப் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

*3–5–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

1990 மே 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுபவர்கள் 5 பேர். ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிற நேரம் 5 மணித் துளிகள்.

*திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிய சட்டத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கறிஞர் நல நிதியில் ஒருவர் சேர்க்கப்படுவதற்குமுன் அவர் எத்தனை வருடம் தொழில் செய்திருந்தாலும் அந்த வருடம் முழுவதும் கணக்கிடப்பட வேண்டும். பிரிவு 16-ல் ஒன்றாம் விளக்கத்தில் குறிப்பிட்டது போல் அதில் சேர்க்கப்படுவதற்கு முந்தைய ஆண்டுகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நான்காண்டுகளும் ஒரு தொழில் நடத்திய ஆண்டாகக் கணக்கிடப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல. உறுப்பினராகச் சேர்வதற்கு முன்பு எத்தனை ஆண்டுகள் தொழில் நடத்தி இருந்தாலும் அத்தனை ஆண்டுகளும் முழுவதுமாகக் கணக்கிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

வழக்கறிஞர்கள் நல நிதியில் மெம்பராக ஆனதற்குப் பிறகு வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று கணக்கிட்டு வழங்குவதைவிட குறைந்தபட்சம் ஐந்து வருடத்திற்குத் தொழில் செய்திருந்தால் அவர்கள் நல நிதியின் அதிகபட்சத் தொகையையும் பெறத் தகுதி பெற்றவர்கள் ஆகிறார்கள் என்று அறிவிக்க வேண்டும். மேலும் வழக்கறிஞர் தொழிலிலிருந்து ஒருவர் விடுபடுகிறேன் என்று பார் கவுன்சிலுக்குத் தெரியப்படுத்திவிட்டால் அவருக்கு அந்த நல நிதி முழுவதும் வழங்கப்பட வேண்டும். வழக்கறிஞர்களிடத்திலிருந்து வழக்கறிஞர் நல நிதி என்பதற்காகப் பெறப்படக்கூடிய தொகையை உயர்த்தி அதிகமாக அவர்களிடத்திலேயிருந்து பெற்று அதற்கு இணையான தொகையை அரசு செலுத்தி, இந்தத் தொகையை மிக அதிகமாக உயர்த்தி குறைந்தபட்சம் 50,000 ரூபாய் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

12-45 மணி

வழக்கறிஞர் தொழிலில் குறிப்பாக 5 சதவிகிதம் பேர்கள் தான் நல்ல வருமானம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். தமிழகம் முழுவதும் பல வழக்கறிஞர்கள் கஷ்டப்படுகிறார்கள். கடந்த சில வாரங்களுக்கு முன்பு வந்த ஒரு பத்திரிகை செய்தியில், வக்கீல்களின் கஷ்டங்களைப் போட்டிருந்தார்கள். ஒட்டிய கன்னங்களும் ஒடுக்கு விழுந்த கண்களுமாக ஒரு வழக்கறிஞரின் படத்தை வரைந்திருந்தார்கள். அப்படிப்பட்ட நிலையில்தான் தமிழகத்தில் பல வழக்கறிஞர்கள் தொழிலில் பின்தங்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், அரசு எடுத்த சில நடவடிக்கைகள்தான் என்று கருதுகிறேன். உதாரணமாக,

மதுவிலக்கு வழக்குகளில், கடந்த ஆண்டுகளில் நாம் சட்டத் திருத்தங்கள் செய்கிறபோது, எந்த ஒரு ஆபீசரும் இதை விசாரிக்கலாம் என்ற வார்த்தையைச் சேர்த்ததால் யார் வேண்டுமானாலும் இதை விசாரணை செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. நீதித் துறையிலிருந்து அந்த அதிகாரத்தை எடுத்து நிர்வாகத் துறைக்குக் கொடுத்திருக்கிறார்கள். கோர்ட்டில் சென்று முடிக்கவேண்டிய வழக்குகளை எல்லாம் தனிப்பட்ட அதிகாரிகள், அதாவது ரெவின்யூ அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் விசாரிக்கிறார்கள். அவர்களிடம் இதை விட்டுவிட்டார்கள். அதனால் வழக்கறிஞர்கள் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு, நலிவடைந்திருக்கிறார்கள். சில வழக்குகளில் வழக்கறிஞர்கள் ஆஜராக வேண்டியதில்லை என்ற நிலையை உருவாக்கி விட்டார்கள். அந்த நிலைமையை மாற்றி எல்லா நிலையிலும் வழக்கறிஞர்கள் ஆஜராவதற்கு வழிவகை செய்ய வேண்டும். வழக்கறிஞர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய குமாஸ்தாக்களுக்கு ஒரு வரைமுறை கொடுத்து அவர்களுக்கும் ஒரு நல நிதியை நீங்கள் உருவாக்கி அவர்களுடைய வாழ்க்கையும் வளம்பெறும் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். நேரமில்லாததால், இந்த திருத்தத்தைப்பற்றிப் பேசும்போது, இந்த நல நிதியில் வழக்கறிஞர்களுக்கு மேலும் பல உதவியைச் செய்வீர்கள் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம் ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவு மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் பல வழக்கறிஞர்கள் சங்கங்கள் இருக்கின்றன. மேற்கண்ட சங்கங்களில் உறுப்பினர்கள் அல்லாத வழக்குரைஞர்களும் உள்ளனர். அவர்களுடைய நலத்தையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தில் 40-க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் வழக்கறிஞர்களாக இருக்கின்றோம். இவர்கள் மக்களுக்காக இங்கே சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் இங்கு பணிபுரியும் காலத்தை நீதிமன்றங்களில் பணி புரிந்த காலமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரிசை எண் 5 விளக்கக்குறிப்பு 1இல், முதன்மைச் சட்டத்தின் 16-ஆவது செக்ஷனில் ஒவ்வொரு 4 வருடங்கள் பிராக்டீஸ் செய்வதற்கு என்று இருப்பதற்குப் பதிலாக, 2 வருடங்கள் பிராக்டீஸ் செய்தால், ஒரு வருடம் ஸ்டாண்டிங் பிராக்டீஸ் என்றும், அவ்வாறு 2 வருடத்திற்கு மேல் பிராக்டீஸ் செய்தவர்களுக்கு 3 மாதம் ஸ்டாண்டிங் பிராக்டீஸ் என்பதற்குப் பதிலாக 6 மாதங்கள் ஸ்டாண்டிங் பிராக்டீஸ் என்றும் கூடுதலாக கணக்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 8] [திரு. எச். எம். ராஜு]

வழக்குரைஞர்கள் கூடவே தங்கள் ஆயுள் காலம் முழுவதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வழக்கறிஞர்கள் குமாஸ்தாக்களுக்கும் ஒரு நல நிதி திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரிசை எண் 5, விளக்கக் குறிப்பு 2-இல் ரூ. 1,000 என்பதற்குப் பதிலாக ரூ.5,000 என்று சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுகிறேன். நமது மாநிலத்தில் பதிவு செய்யாமல் வேறு மாநிலங்களில் பதிவுசெய்து, நமது மாநிலத்தில் பிராக்டீஸ் செய்யும் வழக்குரைஞர்களுக்கும் இந்த நலத் திட்டம் பயன்படும் வகையில், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதன் முதலில் வழக்குரைஞராகப் பணிபுரிய வரும் இளம் வழக்குரைஞர்களுக்கு அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக டைப்ரைட்டர்கள், சட்டப் புத்தகங்கள், நாற்காலி, மேசை, பெஞ்சுகள் போன்றவை வாங்குவதற்கு வட்டியில்லாத நீண்டநாள் கடன் தொகை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, தற்போது வக்காலத்தில் அதன் மேல் ஒட்டப்படும் கோர்ட் பீசில் 1 வக்காலத்திற்கு 50 பைசா வீதம் இந்தத் திட்டத்திற்குச் சேர்க்கலாம். இப்போது ரூ. 1.50 பைசா வில்லைகள் ஒட்டுகிறோம். அதில் 50 பைசா சேர்த்தால் நிறைய பணம் கிடைக்கும். அதைப் போல பிளையிண்ட் மேல் ஒட்டப்படும் கோர்ட் பீஸ் தொகையில் 1 சதவீதம் இந்தத் திட்டத்திற்குச் சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரள மாநிலம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இந்தத் திட்டத்திற்கு கான்ட்டிரிபியூஷன் செய்ததைப் போல, தமிழக அரசும் கணிசமான தொகையை இதற்காக வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிராக்டீஸ் அதிகமில்லாத ஜூனியர் வழக்கறிஞர்களுக்கு முதல் இரண்டு வருடங்களுக்காவது மாதம் ரூ. 500 வீதம் கொடுத்து உதவ வழிவகை செய்ய வேண்டுகிறேன். தரகர்களுடைய ஆதிக்கம் மிகவும் அதிக அளவில் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. அதனால், ஜூனியர் வழக்குரைஞர்களின் பிராக்டீஸ் மிகவும் பாதிப்படைகிறது. எப்படியாவது தரகர்களின் ஆதிக்கம் கடும் நடவடிக்கைகள் மூலமாவது தடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12—50 மணி

வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள ஜூனியர் வழக்கறிஞர்களும் இப்பொழுது இருக்கிறார்கள். வேறு வேலை வாய்ப்பு இல்லாமல், இன்றைக்கும் அவர்கள் நொந்திருக்கும் சூழ்நிலை. அம்மாதிரி வழக்கறிஞர்களுக்கு இந்த நல்ல திட்டம் செயல்பட அவர்களுக்குத் தகுந்த சலுகைகள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையை ஓரளவுக்காவது குறைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களுக்கு, சொந்தமாக வீடு கட்டுவதற்குக் குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடன் உதவி செய்து அவர்களுக்கு வழிவகை செய்ய வேண்டுகிறேன்.

நீதிமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் நீதிபதிகளில் 90 சத வீதத்தை பார் அசோசியேஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சந்தர்ப்பம், சூழ்நிலை காரணமாக இந்தப் பிராக்டீஸை நிறுத்தினாலும் அந்த வழக்கறிஞர்களுக்குக் குறைந்த அளவாக, ரூ. 10,000 உதவ வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

ஊனம் ஏற்படும் வகையில் விபத்துக்குள்ளாகும் வழக்கறிஞர்களுக்குக் குறைந்தது ரூ. 25,000 இந்த நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் அளித்தத் தலைவருக்கும் நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன், ஜெய் ஹிந்த்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, வழக்குரைஞர்கள் ஒரு காலத்தில் நல்ல நிலைமையில் இருந்து, நாட்டு விடுதலைக்கு பாடுபட்டு—காந்தி, நேரு போன்றவர்கள் எல்லாம் வழக்குரைஞர்களாக இருந்தவர்கள். ஆனால், இன்றைக்கு வழக்குரைஞர்களுடைய பொருளாதார நிலை மிக மிகப் பின்தங்கியிருக்கிற காரணத்தால், இப்படி ஒரு நிதியம் ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாகியிருக்கிறது என்பதை நான் இன்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதனாலேதான், வறுமையில் வாடும் வழக்குரைஞர்கள் என்று ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகள் கூட இன்றைக்கு வழக்குரைஞர்களுடைய வறுமை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. கலைஞருடைய அரசு வந்தும் வழக்குரைஞர்களுக்கு ஏதும் செய்யாதது போல் சில பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. கலைஞருடைய அரசு வந்ததற்குப் பிறகு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் பட்டதாரிகள் 20 பேர்களுக்கு ரூ. 500, அவர்கள் பயிற்சி பெறுகின்ற நேரத்தில் பயிற்சித் தொகையாகக் கொடுத்து, பயிற்சி அளிக்கின்ற சீனியர் வழக்குரைஞர்களுக்கு ரூ. 5,000 தருகின்ற திட்டத்தை அரசு கொண்டு வந்ததற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். அதைப் போல, எல்லா ஜூனியர் வழககுரைஞர்களுக்கும் இரண்டு ஆண்டுக்காலம் வரை மாதம் ரூ. 500 தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கோர்ட்டுகளைப் பொறுத்த வரையில், இன்றைக்கு உசிலம் பட்டியில் முனிசீப் கோர்ட்டுகள் நடைபெறவேண்டுமென்று மக்கள் எல்லாம் வலியுறுத்துகிறார்கள். அதை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், செக்ஷன் 16 மற்றும் அதற்குப் பின்னாலே ஷெட்யூல் ஒன்றும் தந்திருக்கிறார்கள். இந்த இரண்டின் அடிப்படையில் தான் 30 ஆண்டுக் காலம் வழக்குரைஞர்களாகப் பணியாற்றினால், ரூ. 30,000, ஓராண்டுக்காலம் என்றால் ரூ. 1,000 என்ற அளவில் ஸ்லாப் சிஸ்டம் என்ற முறையிலே அது இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், இன்றைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் இறந்து விட்டால் என்ன உதவி என்று கலைஞருடைய அரசிலே நாம் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஓர் உறுப்பினர், பதவியிலே இருக்கும்போது இறந்து போனால் ரூ. 50,000 அவர் குடும்பத்தினர் பெறுவர் என்று சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவதற்காக அவை முன்னவர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதைப் போல அரசு ஊழியர்கள், அவர்கள் சாதாரண கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும், இறந்து போனால், ரூ. 40,000 அவர்கள் குடும்பத்தினருக்கு உதவித் தொகை தருகிறோம். ஆனால், 30 ஆண்டுக் காலம் அரசு வழக்குரைஞராகப் பணியாற்றினாலும் அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 30,000தான் என்பது சரியல்ல. எனவே, ஒரு வழக்குரைஞர் எத்தனை ஆண்டுக் காலம் பணியாற்றினாலும் ''இர்ரெஸ்பெக்டிவ் ஆப் ஹிஸ் ஸ்டான்டிங் இன் தி பார்'', அவர் இறந்து போனால் அவருடைய குடும்பத்திற்குக் குறைந்த பட்சம், ரூ. 50,000ஆவது தருவதற்கு இந்தச் சட்ட முன்வடிவைத் திருத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், இன்றைக்கு வழக்குரைஞர் தொழில் எந்த நேரத்திலேயும் பரபரப்புக்கும், டென்ஷனுக்கும் ஆளாகின்ற ஒரு தொழில். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் அடிக்கடி நீதி மன்றத்திலே வாதாட வேண்டியிருக்கிறது. 1/2 மணி நேரம் வாதாட வேண்டுமென்றால் 5 மணி நேரம் தயார் செய்ய வேண்டிய நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட வழக்குரைஞர் தொழிலுக்குப் பாதுகாப்பு தருகின்ற அளவில் இந்தச் சட்ட முன் வடிவைத் திருத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல், இந்த நிதியத்தில் ஒருவர் உறுப்பினராக இருந்தால், 4 ஆண்டுக்காலம் வழக்குரைஞராகப் பணியாற்றினால் இந்த நிதியத்தைப் பொறுத்த வரையில் ஓராண்டுக் காலம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக, என்னைப்

பொறுத்த வரையில், நான் 27 ஆண்டுக் காலம் வழக்குரைஞராகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறேன். நான் 1987ஆவது ஆண்டு இந்த நிதியத்தில் சேர்ந்தால், 27 ஆண்டுக் காலத்திற்குக் கிட்டத்தட்ட 6 ஆண்டுதான் என்று கணக்கிடப்படுகிறது. அது சரியல்ல. ஏனென்றால், சீனியர் வழக்குரைஞர்கள், தொழிலிலிருந்து ஓய்வு பெறுகின்ற நிலையில் இருக்கிறார்கள். இறக்கின்ற தருவாயில் சில வழக்குரைஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பார் கவுன்சிலில் என்றைக்குத் தன்னை வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டார்களோ அந்த ஆண்டு முழுவதுமே நிதி ஆண்டாகக் கணக்கிடப்பட வேண்டுமென்ற அளவில் இந்தச் சட்ட முன்வடிவை திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிதியைப் பொறுத்த வரையில், நீதித் துறையில் அதிகப்படியான வருமானத்தைத் தருவது இந்தத் துறை. சிவில் கோர்ட்டு வழக்குகளை எடுத்துக் கொண்டால், $7\frac{1}{2}$ சதவீதம் கோர்ட் பீஃஸ். அதை அரசாங்கம் வசூலிக்கிறது. அதைப் போல் கிரிமினல் கோர்ட்டுகளை எடுத்துக் கொண்டால், ஃபைன்கள் மூலமாக, அபராதம் மூலமாக, ஏராளமான தொகை வருகிறது.

12-55 மணி

சென்ற ஆண்டு ''புரொகிபிஷன் ஆக்ட்''ன் மூலமாக 2 கோடி ரூபாய் அபராதம் வந்ததாக நாம் அறிகிறோம். இதை எல்லாம் பார்க்கிறபோது வழக்குரைஞர்களின் ஊதியத்தை இந்த ''அட்வோகேட்ஸ் ஆக்ட்'' திருத்தத்தின் மூலமாக 10 சதவீதம் என்றிருப்பதை மாற்றியமைக்க வேண்டும். இந்தச் சட்டம் சுமார் 30 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் போடப்பட்டது. இதைத் திருத்தி 15 சதவீதம் வழக்குரைஞர்களுக்கு ஊதியம் தருகின்ற அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ''பார் கவுன்சில்'', அதைப்போல ''பார் அசோசியேஷன்'' எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பார் கவுன்சிலையும் பார் அசோசியேஷன் பிரதிநிதிகளையும் கூட்டி, ஒரு முத்தரப்பு மாநாடு கூட்டி, வழக்குரைஞர்களுக்கு இருக்கின்ற இன்னல்களை ஆராய்ந்து நல்ல, ''காம்ப்ரிகென்சிவ் ஆக்ட்'' ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னும் ஒரே ஒரு முக்கியமான பிரச்சினையை தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் ஒரு மாவட்ட நீதிபதி இருக்கிறார் என்றால், அவர் 10 ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்றால் கூட அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது; அதற்காக பொதுப் பணித் துறையைச் சார்ந்துதான் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு சிறு வசதி கூட அவரால் செய்ய முடியவில்லை.

அதற்கு ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு மாவட்ட நீதிபதியை எங்களுடைய சங்கத்திற்கு அழைத்தோம். அவரிடம் வழக்குரைஞர் சங்கத்திற்கு ஒரு ''ஃபேன்'' வேண்டுமென்று கேட்டபோது அவர் வேடிக்கையாக I have got powers to hang a man but not a fan என்று பரிதாபகரமாச் சொன்னார். அந்த அளவுக்கு அவருடைய நிலைமை இருக்கிறது. ஆகவே, நீதிமன்றங்களுக்கு ஒரு ''கன்சாலிடேட்டட் ஃபண்டு'' ஏற்படுத்தி, அது அவருடைய ''டிஸ்கிரின்''ல் இருக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை தீர ஆராய்ந்து, வழக்குரைஞர்களின் வருமானத்தைக் கூட்டி, குறைந்தபட்சம் 50,000 ரூபாயாவது வழக்குரைஞர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்குத் தரவேண்டுமென்ற அளவில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. கெ. நூர் முகமது : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர் நகல் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தின் பேரில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதேச் சட்டம் சட்ட முன்வடிவாக 1987இல் இதே அவையில் விவாதிக்கப்பட்டபோது எங்களுடைய கட்சியின் சார்பில் பேசிய தோழர் ஹேமச்சந்திரன் அவர்கள் இந்த அமைப்பில் உறுப்பினராகச் சேருகின்றவர்களுக்கு முந்தைய ஆண்டுகளையும் கணக்கிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார்கள். ஆனால், அன்றைய தினம் ஏற்கப்படாவிட்டாலும் கூட இந்த அரசு அந்த முந்தைய பணிக் காலத்தையும் கணக்கிலே எடுத்துக் கொள்ளுகின்ற வகையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் கூறியதைப் போல இன்றைக்கு சீனியர் வழக்குரைஞர் பலருக்கு இதனால் கிடைக்கின்ற பலன்கள் என்பது மிகக் குறைவாகத்தான் இருக்கும். குறிப்பாக 50 ஆண்டுக் காலம் வழக்குரைஞராகப் பணியாற்றியவர்கள்—40 ஆண்டுக் காலம் உறுப்பினராக ஆவதற்கு முன்னால் அவர்கள் பணியாற்றி இருந்தால் 4 ஆண்டுக் காலத்திற்கு ஓராண்டுக் காலம் என்று கணக்கிடும் போது 10 ஆண்டுகள் அவர்களுக்கு வருகிறது. ஆகையால், மேலும், 5 ஆண்டுக்காலம் பணியாற்றி அவர்கள் இறக்க நேரிட்டாலோ அல்லது தங்களுடைய பணியை நிறுத்த நேரிட்டாலோ மொத்தம் 15 ஆண்டுக் காலம் என்று கணக்கிடப்பட்டு, மொத்தத்திலே 15,000 ரூபாய் தான் அவர்களுக்குக் கிடைக்கும். ஆகவே, இந்தத் திட்டம் சீனியர் வழக்குரைஞர்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் இருப்பதால், அவர்கள் பணி செய்த ஒவ்வோராண்டு சர்வீசையும் ஒவ்வோராண்டு என்று கணக்கிடுவதே பொருத்தமாக இருக்கும்.

அதைப்போன்று 5 ஆண்டுக் காலத்திற்குள் மரணம் அடைந்தால் அவர்களுக்குக் கிடைக்கின்ற தொகை என்பது மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் 10,000 ரூபாய் என்று நிர்ணயிப்பதும் அவர்கள் ஓராண்டுக் காலத்திலே மரணமடைந்தால் கூட 5,000 ரூபாய் கிடைக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, இந்தப் பிரச்சனையைப் பற்றிப் பேசும்போது வேறு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஜூனியர் வழக்குரைஞர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. சீனியர்களுடைய கண்காணிப்பில் பணியாற்றக்கூடிய அந்த ஜூனியர் வழக்குரைஞர்கள் சாதாரண செலவுகளுக்குக்கூட வழியில்லாத நிலையில் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பணிக்கு வருகிறபோது, தங்களுடைய உடைக்காக அல்லது வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்காக தைக்கப்பட்ட கோட்டுகளுக்கும் கவுன்களுக்கும் கொடுத்த செலவைக் கூட, ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றும் போதும் கூட திரும்பப் பெற முடியாத அளவுக்கு மிகவும் கேவலமான நிலையிலே வாழ்கிறார்கள். அவர்கள் கறுப்பு அங்கி போட்டதாலோ என்னவோ தெரியவில்லை, அவர்களுடைய வாழ்க்கை சோகம் ததும்பியதாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த ஜூனியர் வழக்குரைஞர்கள் 5 ஆண்டுக் காலத்திற்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே வழக்கு மன்றத்திலே அதிகமான வழக்குகளைப் பெற்று ஓரளவு நிலையான ஒரு நிலைமையை அடைவது வரையிலே, ''ஹானரேரியம்'' என்ற வகையில் தந்து, அவர்களுக்கு ஏதாவது ஒரு ஊதியத்தை இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் வாயிலாகக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் ஒப்புதலுடன் அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது; உறுப்பினருக்கு ஒரு மணித்துளி தான்.

13-00 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல இன்றைக்கு இந்த வழக்கறிஞர்களிடம் குமாஸ்தாவாக பணிபுரிபவர்களுக்கு, அன்றைக்குக்கூட இதுபற்றி கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு வழக்கறிஞர்களுடைய வாழ்க்கையில் மட்டுமல்லாமல் அவர்களுடைய குமாஸ்தாக்களுடைய வாழ்விலும் அக்கறைக்கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அவர்களுக்கும் இதுபோன்றே ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையிலும் எதிர்காலத்திலே நிரந்தரமற்ற தன்மை இல்ல

மல் இருக்கும் வகையில், ஓய்வுபெறுகின்றபோது அல்லது இறந்துவிடுகின்றபோது அப்படிப்பட்ட குடும்பத்திற்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி அவர்கள் பயன்பெறும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் மசோதாவில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகின்றேன். இந்த மசோதாவிலே, உறுப்பினராக பதிவு செய்துகொண்டதிலிருந்து ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நான் இங்கே அரசுக்குத் தெரிவிப்பது எல்லாம், அட்வகேட்ஸ் ஆக்ட், 1961-ல் மத்திய அரசால் நிறைவேற்றப் பட்டு வந்தது. 1961இல் இருந்து "ரெட்ராஸ்பெக்டிவ் ஆபரேஷன் என்ற அந்த விதியை போட்டு, இந்த வெல்போர் பண்ட் ஆக்ட் 1987, let it have retrospective operation from 1961. A Criminal
1 enactment can have only prospective operation and it cannot have retrospective effect. But, it is not so in the case of a civil enactment. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1961-ல் இருந்து இந்தச் சட்டத்தின் நன்மைகள் வழக்கறிஞர்களுக்குக் கிடைக்குமாறு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, ஒரு ரூபாய் என்று வக்காலத்துக்குக் கட்டுவதை 2 ரூபாய் என்று போட்டு, சுமார் ஒரு இலட்சம் ரூபாயாவது வழக்கறிஞர்கள் மறையும்போது கொடுக்குமாறு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து இந்தத் தொழிலில் மட்டும் நாள்தோறும் படிக்க வேண்டும். கஷ்டப்பட்டு படிக்க வேண்டும். அதுமாத்திரமல்ல. விளம்பரம் இல்லாத தொழில். ஒரு சின்ன போர்டு தான் மாட்ட வேண்டும். பத்திரிகையில் விளம்பரமும் கொடுக்க முடியாது. விளம்பரம் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை விளம்பரம் மூலம் இந்தத் தொழிலில் வழக்கறிஞர்கள் வருவதில்லை என்பது நண்பருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரம் ஆனவர்கள் என்பது வேறு. சாதாரணமாக எந்தத் துறையிலாவது விளம்பரம் ஆகிவிட்டால் சில நேரங்களில் திறமை குறைந்துவிட்டால்கூட வசதியும், வாய்ப்பும் அதிகமாகக் கிடைக்கும். ஆனால் இந்தத் தொழிலில் அப்படி

அல்ல. எத்தனை வழக்குகளில் வெற்றி பெறுகிறார்கள். எப்படி வாதாடுகிறார்கள். எப்படி நீதிபதிகள் மதிக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டுதான் மக்கள் வழக்கறிஞர்களை நியமிக்கிறார்கள்.

மற்றொன்று, இந்த நேரத்தில் நான் அரசாங்கத்திற்கு நினைவுபடுத்துவது என்னவென்றால் ஏழையெளியவர்களின் சார்பில்தான் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு காலையிலேயே சென்று வாதாடுகிறார்கள். ஏழையெளிய மக்களுடைய உரிமைகளை காப்பாற்றுவதும் நம்முடைய வழக்கறிஞர்கள் தான். ஒரு நாள் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் தமிழகத்திலுள்ள அத்தனை பேர்களுடைய உரிமைகளும் மிக பாதிக்கப்படுகிறது. உரிமை இயல் நீதிமன்றத்தில் உரிமையை நிலைநாட்டுவது நம்முடைய வழக்கறிஞர்கள்தான். ஏன் நம்முடைய உச்ச நீதிமன்றத்தில் இன்றைக்கு தமிழ் நாட்டிலிருந்து எத்தனை பேர் தமிழக மக்களுடைய உரிமையை நிலைநாட்ட முடிகிறது. அதாவது பண்டமென்டல் ரைட்ஸை. காரணம், அங்கே செல்ல வேண்டுமென்றால் கொஞ்சம் கடினமாக இருக்கிறது. அங்கே அதிகமாக செலவாகிறது. அங்கே வழக்கறிஞர்களை நியமிக்கவேண்டுமென்று சொன்னால்கூட நம்முடைய பாமர மக்கள் அங்கேபோய் வழக்குகளை நடத்த முடியவில்லை. அமர்த்தவும் முடியாது. ஆகவே, இந்த நேரத்தில் நான் அரசாங்கத்திற்கு சொல்வதெல்லாம், உச்சநீதிமன்றத்தில்கூட தமிழக மக்களின் சார்பில், ஏழைகளின் சார்பில், அரசாங்கத்தின் சார்பில் எங்களுக்கு அந்த உரிமையை நிலைநாட்டி தாருங்கள் என்று சட்ட அமைச்சகத்திற்கு யாராவது ஏழையெளிய மக்கள் கேட்டால், அவர்களுக்கு உதவுவதற்காக தயவுசெய்து அங்கே ஒரு வழக்கறிஞர்கள் பேனலை வையுங்கள். அங்கே அரசாங்கத்தின் சார்பில், அரசாங்கத்தின் செலவில், தமிழக ஏழையெளிய மக்களுக்காக அதை அங்கே வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முதலில் வைக்க ஆசைப்படுகிறேன். காரணம், உரிமை எல்லோருக்கும் தேவைபடுகிறது. ஆனால் எல்லோராலும் அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்ட முடியவில்லை. பணக்காரர்கள் தங்களுடைய உரிமை பறிபோனால் உடனே உச்ச நீதிமன்றத்திற்கு செல்கிறார்கள். எனவே தான், ஏழையெளியவர்கள் உரிமை நிலைநாட்டப்படுவதற்கு அரசாங்கம் அங்கே ஒரு வழக்கறிஞர்கள் பேனலை அமைக்க வேண்டும். தமிழக வழக்கறிஞர்கள் அங்கே 30 பேர் இருக்கிறார்கள். ஜூனியர்களும் இருக்கிறார்கள். ஜூனியர் வழக்கறிஞர்கள்கூட தங்களுடைய நிலையினைகூட, தகுதியைகூட அப்போது கூட்ட ஒரு வாய்ப்பு ஏற்படும். அங்கீகாரமும் கிடைக்கும்.

13-05 மணி

சட்டத் துறையைப் பொறுத்தவறையில் இன்றைக்கு சமுதாயத்தில் முழுமையான அங்கீகாரம் எல்லோருக்கும் கிடைக்கவில்லை.

காரணம் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்குத் தான் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் இந்தத் தொழிலுக்கு ஓரிரு சமுதாயத்தைத் தவிர வேறு யாரும் வந்ததில்லை. அவர்கள்தான் சட்ட அறிவைப் பெற முடியும் என்ற நிலை மாறி, இன்றைக்கு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வந்திருக்கிறார்கள். அமைச்சரவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்வது, பிற்பட்ட சமுதாயத்தில் இருந்து வருகிற வழக்கறிஞர்களுடைய சட்ட அறிவைப் பெருக்க இந்த நிதியைத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.) இன்றைக்கு உச்ச நீதி மன்றத்தில்கூட வழக்கறிஞர்களுக்கு வீடு கட்ட கூட்டுறவு சொசைட்டி வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் மாவட்ட அளவிலும், சென்னை நகர அளவிலும் ஒரு கூட்டுறவு சொசைட்டி வழக்கறிஞர்களுக்கு நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்கறிஞராக இருந்தவர்கள். அதைச் செய்து தர வேண்டும். ஒரு சொசைட்டியை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லவேண்டும். சென்னை பார் அசோசியேஷன்-க்கு புத்தகம் வாங்க, 125-வது ஆண்டு விழாவில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். அரசின் சார்பில் சுமார் 40,000.க்கு விளம்பரம் வழங்கியிருக்கிறார்கள். இது அவைக் குறிப்பில் வர வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். நான் கொடுத்த வேண்டுகோளை ஏற்று, முதலமைச்சரவர்கள் வழங்கியிருக்கிறார்கள். வழக்கறிஞர்களை வளருங்கள். பாதுகாருங்கள், ஒரு இலட்சம் ரூபாய் வழங்குங்கள் என்று சட்ட அமைச்சருக்கு ஆலோசனை தெரிவித்து, அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்த வரையில் நான் ஒரு திருத்தத்தை சபைக்கு அளித்திருக்கிறேன். அதை நான் படிக்கின்றேன்.

பிரிவு 5, உட் பிரிவு (5).க்கு பதிலாக கீழ்கண்டவற்றை உட்பிரிவு (5) ஆக சேர்க்கப் பெற வேண்டும்:

''(5) நிதியத்திற்கு தனக்கு சேர்க்கை அனுமதி வழங்கப்பட்ட நிதியத்தின் உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து, அவரால் பெயர் குறிக்கப்பட்டவருக்கோ அல்லது நேர்விற்கேற்ப, அவருடைய சட்ட முறையான வழிமுறையருக்கோ (வாரிசுக்கோ) ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்கப்படுதல் வேண்டும்.'' எனது திருத்தத்தை இந்தச் சபையானது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

ஏற்கெனவே நான் இது குறித்த மானியத்தில் பேசியிருப்பதாலும், மற்ற உறுப்பினர்கள் பேசி இருப்பதன் காரணமாகவும் இந்தக் கருத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

13-10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவையின் முன்னால் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத் திருத்த முன்வடிவின்மீது பொதுவாக எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய வரவேற்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்த முன்வடிவினை வரவேற்றுப் பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் ஏற்கெனவே 1987-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அட்வகேட் வெல்பேர் பண்ட் ஆக்ட்—ஆக்ட் 49/87 என்று ஏற்கெனவே அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் சில குறைகளை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று பார் கவுன்சில் மூலமாக நமக்குக் கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுதான் இப்போது நிறைவேற்றப்பட இருக்கிறது. 1987ஆம் ஆண்டு சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக செக்ஷன் 2 (பி), 2(சி) ஆகிய பிரரிவுகளுக்கும், செக்ஷன் 9 (2) (சி), செக்ஷன் 13 (1)(ஏ), (1) (பி), 13(2), 13(3), 13(4) ஆகிய பிரிவுகளுக்கும் செக்ஷன் 16(1), (3), (4) (5), (6) ஆகிய பிரிவுகளுக்கும் திருத்தங்கள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது பொதுவாக இந்த வெல்பேர் பண்ட் மூலமாக வருகிற தொகை போதுமானதாக அமையவில்லை என்ற குறைபாட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வெல்பேர் பண்டுக்கு பணம் வருவது, வெல்பேர் பண்ட் ஸ்டாம்ப் என்று ஒரு ஸ்டாம்ப் அச்சடிக்கப்பட்டு, அது அரசின் மூலமாக பாருக்கு வந்து, விநியோகிக்கப்படுகிறது. பார் கவுன்சில், பார் அசோசியேஷன்களுக்கு அந்த ஸ்டாம்புகளை விநியோகித்து, வக்காலத்து நாமாவிலோ, மெமோ ஆஃப் அப்பியரன்ஸிலோ ஒட்டப்பட்ட பிறகு அதில் வரக்கூடிய வருமானத்தைப் பெற்று ஒரு டிரஸ்ட்டி கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்த டிரஸ்ட்டி கமிட்டி மூலமாகத்தான் இந்தத் தொகையைப் பெறுகிறார்கள். எனவே இந்த வெல்பேர் பண்டை பெறுவதற்கு பார் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்துதான் கணக்கு எடுக்கப்படுகிறது. பதிவு செய்கிற நாள் அதற்குப் பின்னாலோ முன்னாலோ என்று வரும்போதுதான் இந்த கால்குலேஷன் எல்லாம் வருகிறது. பதிவு செய்த நாளுக்கு முன்னால் 4 ஆண்டுகள் என்பதை ஒராண்டு என்று கணக்கிட்டு, அதற்கு மேல் இருக்கின்ற அந்த சர்வீஸ் அடிப்படையில் ஒரு கணக்கு

1990 மே 8] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

எழுதப்பட்டு, அட்மிஷன் ஆன பிறகு ஒரு கணக்கு குறிப்பிடப் பட்டபிறகுதான் அந்த உதவி செய்கிறார்கள். அதை ஓராண்டுக்கு ஆயிரம் ரூபாய் என்றும் 30 ஆண்டுகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் என்றும் கணக்கிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்களால் இங்கே பொதுவாக இந்தத் தொகை மிகவும் குறைவானது என்று பேசப்பட்டது, நானும் ஒப்புக்கொள்கிறேன். The power to make the rules—The Bar Council may with the previous approval of the Government by notification, make rules for the purpose of carrying into effect the provisions of this Act. பார் கவுன்சில் மூலமாக கோரிக்கை வருமேயானால், 50 ஆயிரம் என்ன, இலட்ச ரூபாய் கூடக் கொடுக்கலாம். அந்த 30 ஆண்டுகளுக்கும், நம்முடைய ஏ.எல்.எஸ். சொன்னது போல, அவருக்கு சர்வீஸ் 27 ஆண்டுகள் ஆகிறது; எனக்குக் கிட்டத்தட்ட 36 ஆண்டுகள் ஆகிறது. நாளைக்கு வீட்டுக்குச் சென்றால் ஒன்றும் கிடையாது. எனவே தான் 50 ஆயிரம் என்ன, இலட்ச ரூபாய் வரை கூடக் கொடுக்கலாம். எனவே அந்த குறைந்தபட்சத் தொகை 5 ஆயிரம் என்றும், அதிகபட்சத் தொகை 1 இலட்சம் ரூபாய் என்றும் வைத்து பார் கவுன்சில் மூலமாக அந்தக் கோரிக்கை வருமானால் நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கோரிக்கையை திரு. ராஜு அவர்கள் சொன்னார்கள். நம்முடைய சட்டமன்றத்திலே கிட்டத்தட்ட 35 அல்லது 40 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்கறிஞர்களுக்கு சர்வீஸ் கண்டினியூ ஆகும். நாம் வக்கீல்களாகப் பணியாற்ற வில்லை என்று எழுதிக் கொடுத்தால்தான் அந்த சர்வீஸ் கட் ஆகுமே தவிர, இல்லாவிட்டால் ஆகாது. திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இங்கே வந்து எம். எல். ஏ.வாக இருந்து கொண்டு இந்த பேட்டாவையும் வாங்கிக்கொள்ளலாம். சம்பளமும் வாங்கிக்கொள்ளலாம். அதே நேரத்தில் அங்கே போய் கூட வக்கீல் ஃபீஸ் வாங்கிக்கொள்ளலாம். எந்தத் தகறாரும் கிடையாது. எனவே தான் அதில் சர்வீஸ் கட் ஆகும் அடிப்படை இல்லை.

திரு. பி. எச். பாண்டியன் : அரசாங்கம் நிறைவேற்றுகிற ஒவ்வொரு சட்டத்திலும் அரசாங்கத்திடம் அப்பீல் போடலாம் என்று ஒரு விதி இருக்கிறது. அதை நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் எல்லோர் முன்னாலேயும் ஆஜராகலாம். அதிலும் நிறைய ஃபீஸ் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது கூட சிலர் ஆஜர் ஆகி ஃபீஸ் வாங்குகிறார்கள். முதலில் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். இப்போது எப்படி என்று தெரியவில்லை. எம்.எல்.ஏ. கூட இதற்கு வரலாம். எம்.எல்.ஏ. என்ற முறையில் மட்டுமல்ல, வக்கீல் என்ற முறையில்

ஆஜராகி தாக்கல் செய்கிறார்கள். எனவே அவைகளை எல்லாம் கவனித்துத் தான் இவைகள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. முக்கியமாக இந்த சட்டத் திருத்தத்திலே முக்கியமான பிரச்சினை ஒன்றும் இல்லை. பார் கவுன்சிலின் சில கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அந்த கோரிக்கை அடிப்படையில்தான் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம். இன்னும் திருத்தங்கள் தேவை என்று சொன்னால் அதுவும் குறிப்பாக இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற தொகையைப் பொறுத்தவரையிலே திருத்தம் தேவை என்று சொன்னால், பார் கவுன்சில் மூலமாக கோரிக்கை வருமானால் நிச்சயமாக அரசாங்கம் அதை எடுத்துக் கொண்டு, தகுந்த திருத்தத்தைச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நோக்கம் அந்தத் தொழிலில் ஈடுபட்டு, அந்தத் தொழிலிலிருந்து விடுபடும்நேரம் வரையிலே Cessation of practice அல்லது discontinuation of practice என்று வருகிற நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து இருக்கிறோம். உறுப்பினர் திரு. நூர்முகமது என்று கருதுகிறேன், மற்றவர்களும் சொன்னார்கள், வக்கீல் குமாஸ்தாவுக்குக் கூட சட்டம் தேவை என்று சொன்னார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. கேரளா மாநிலத்திலே வக்கீல் குமாஸ்தாக்களுக்கு என்று ஒரு சட்டம் இருப்பதாக நான் அறிகிறேன். அவைகளைப் பரிசீலித்து வக்கில் குமாஸ்தாக்களுக்கும் தேவையான நல நிதியை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

13-15 மணி

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் த்லைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'' பிரிவு 5, உட்பிரிவு (5)-க்கு பதிலாக கீழ்க்கண்டவற்றை உட்பிரிவு (5)-ஆக சேர்க்க வேண்டும் :

'(5) நிதியத்திற்கு தனக்கு சேர்க்கை அனுமதி வழங்கப் பட்ட நிதியத்தின் உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து, அவரால் பெயர் குறிக்கப்பட்டவருக்கோ அல்லது நேர்விற்கேற்ப, அவருடைய சட்ட முறையான வழிமுறையருக்கோ (வாரிசுக்கோ) ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்கப்படுதல் வேண்டும்'.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் வலியுறுத்தப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, வழக்கறிஞர்களுக்கு 50,000 ரூபாய் அவர்கள் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் உறுப்பினராகச் சேர்ந்தவுடனேயே, இறக்கின்ற நேரத்தில் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வழங்கப் படுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அதுபோன்று ஒரு கருத்து Bar Council மூலமாக வருமானால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

[1990 மே 8

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 5 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவைச் சட்ட முன்வடிவு எண். 18/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மூலம், ஏற்கனவே சென்னையிலேயும், பல்வேறு மாநகரங்களிலேயும் சாலைகள், பூங்காக்கள், மைதானங்கள், பேருந்து நிலையங்கள், அதேபோல கல்விக் கூடங்கள் போன்று இருக்கக்கூடிய பொது நிறுவனங்களுக்கெல்லாம் உயிரோடு இருப்பவர்கள் பெயரை வைக்கக் கூடாது என்று ஏதோ ஒரு காரணத்தினால் அல்லது அரசியல் காரணத்தினாலேயோ என்னவோ தெரியவில்லை, ஏற்கனவே ஒரு சட்டம் இருந்திருக்கின்றது. அந்தச் சட்டத்தினை இன்றைக்கு மாற்றுகின்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவை மொழிந்திருக்கிறார்கள்.

*26—4—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 5 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவைச் சட்ட முன்வடிவு எண். 18/1990)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மூலம், ஏற்கனவே சென்னையிலேயும், பல்வேறு மாநகரங்களிலேயும் சாலைகள், பூங்காக்கள், மைதானங்கள், பேருந்து நிலையங்கள், அதேபோல கல்விக் கூடங்கள் போன்று இருக்கக்கூடிய பொது நிறுவனங்களுக்கெல்லாம் உயிரோடு இருப்பவர்கள் பெயரை வைக்கக் கூடாது என்று ஏதோ ஒரு காரணத்தினால் அல்லது அரசியல் காரணத்தினாலேயோ என்னவோ தெரியவில்லை, ஏற்கனவே ஒரு சட்டம் இருந்திருக்கின்றது. அந்தச் சட்டத்தினை இன்றைக்கு மாற்றுகின்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவை மொழிந்திருக்கிறார்கள்.

*26—4—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

[திரு. யூ. கே. வெள்ளியங்கிரி]

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்வதெல்லாம் உயிரோடு இருப்பவர்கள் நாட்டு மக்களுக்காகப் பல நல்ல காரியங்களைச் செவ்வனே செய்து முடிக்கின்ற அத்தனை அரசியல்வாதிகளானாலும், அறிஞர் பெருமக்களானாலும், பல நல்ல உள்ளம் படைத்தவர்கள் இந்த நாட்டிலே இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுடைய பெயர்களை சாலைகளானாலும், பூங்காக்களானாலும், அரசுக் கட்டிடங்களானாலும், பள்ளிக்கூடங்களானாலும் அந்தப் பெயரை வைப்பதில் நிச்சயமாக எங்களுக்கு கருத்து வித்தியாசம் கிடையாது; வைக்கப் படலாம்.

ஆனால், ஏற்கனவே இருக்கின்ற பெயரை மாற்றுகின்ற முயற்சியிலே நாம் ஈடுபடாமல், அதன் மூலமாக வேறொரு பிரச்சினை இப்பொழுது சமீபத்திலே உருவானதைப்போல இல்லாமல், இனிமேல் உருவாகக்கூடிய அப்படிப்பட்ட இடங்களிலே உயிரோடு இருக்கிற தலைவர்களின் பெயர்களை வைக்கலாம் என்பதையும், அதே நேரத்தில், அப்படி வைக்கக் கூடிய நேரத்தில் நாம் ஏதோ ஒருதலைப்பட்சமாக நடந்துகொண்டோம் என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்காமல், இன்றைக்குத் தமிழகத்துல் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளிலே பணியாற்றக் கூடிய எந்தத் தகுதி மட்டமாக இருந்தாலும்கூட, அது ஒரு பொதுவான கண்ணோட்டத்தோடு, பாரபட்சம் இல்லாமல், நாம் அப்படிப்பட்ட பெயர்களைத் தலைநகரமானாலும், மாநகரங்களானாலும், எந்த இடங்களானாலும்—ஏற்கனவே இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்—பாகுபாடு இல்லாமல் செய்திருக்கிறார்கள். மே தின நினைவுச் சின்னம் வேண்டுமென்று கேட்டவுடனே எந்தவிதமான தயக்கமும் இன்றி அதை உடனடியாகத் திறந்திருக்கிறார்கள்.

13-20 மணி

நேற்றைய தினம் திரு. ரமணி அவர்கள் அதற்காக நன்றி சொன்னார்கள். அதைப் போல, எந்த மூலை முடுக்கானாலும், யார் என்று பார்க்காமல், பாகுபாடு இல்லாமல், இந்த சட்டத் திருத்தத்தின் மூலமாக, எதிர் காலத்தில் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த சட்டத்தைக் கொண்டுவரலாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு நா. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப் பட்டிருக்கும் 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தத்தை மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. நா. இராமகிருஷ்ணன்]

முறையில் வரவேற்கிறேன். 1979 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் 266 ஆம் பிரிவில் உள்நோக்கத்தோடு சேர்க்கப்பட்ட உட்பிரிவு ஒன்றானது 'நெகட்டிவ் ஆட்டிடியூட்' கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சியில், காங்கிரஸ் ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், எந்த ஆட்சியிலும் தோன்றாத விந்தையான திருத்தமாகும். மாநகராட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட கட்டடங்கள், சாலைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களுக்கு உயிருடன் உள்ள ஒருவரின் பெயரை சூட்டுவதைத் தடை செய்யும் 266 உட்பிரிவு (1) பாசிச நோக்கில் வகுக்கப்பட்டது. தகுதிநிலை எதுவாக இருப்பினும், அதாவது பிறந்த பொன்னாட்டிற்கு உயிர் நீத்த தியாகியாக இருப்பினும், எந்தப் பதவியை வகிப்பவர் ஆயினும், இந்த நாட்டின் முதல் குடிமகனாக இருந்தாலும் கூட, அவர்களுக்குக் கூட விலக்கு அளிக்காமல் இருப்பதால் இந்தச் சட்டத்தை பாசிச தன்மை உடையது என்று கூறுகிறேன். ஒருவிதமான குழந்தை கோபத்துடன் நுழைந்த இந்தச் சட்டம் எப்போதோ திருத்தப்பட்டு இருக்க வேண்டும். ரஷ்ய புரட்சிக்கு வித்திட்ட தலைவரைப் போற்றும் வகையில் லெனின்கிரேட், அமெரிக்காவை உயர்த்திய தலைவர் பெயரில் வாஷிங்டன் என்று நகரங்களுக்கு பெயர் சூட்டி போற்றும் மனப்பாங்கு உலகம் எல்லாம் இருக்கும் பொதுவான ஒன்றாகும்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை" என்று நம்முடைய ஔவைப்பிராட்டியார் கூறி இருக்கிறார். ஆகவே, இருக்கும் நல்லாரை தான் சொன்னார். இருந்த நல்லாரை சொல்லவில்லை. நல்லவர்களை, வல்லவர்களை, சாதனையாளர்களை இருக்கும்போதுதான் போற்றி பாராட்ட வேண்டும். 'தம் மகனை சான்றோன்' என்று ஒரு தாய் எப்போது கேட்பது? இருக்கும் போதா அல்லது இறந்த பின்பா? தமிழ்த்தாய் தலைமகனாம் எங்கள் தலைவரை கட்டடங்களும், சாலைகளும், சாலை ஓரச்சிலைகளும் பெருமைப்படுத்தத் தேவையில்லை. அவசர அவசரமாக அவர் பெயரை கட்டடங்களிலிருந்து அகற்றினாலும், மக்கள் உள்ளங்களிலிருந்து அகற்ற எந்தச் சட்டத்தால் முடிந்தது?

எந்தத் தலைவன் பெயரை வைத்து அரசியல் கட்சி தொடங்கினார்களோ, அந்தத் தலைவரின் அன்புத் துணைவியார் பெயரில் அமைக்கப்பட்டிருந்த அரசினர் கலைக்கல்லூரி பெயரை நீக்கினார்கள். ஆனால் ஆலந்தூரில் முரண்பட்ட நிலை. போஸ்துமஸ் அவார்ட்—இறந்த பின் சிறப்பு என்பது எப்போதோ ஒருமுறை வழங்கப்பட வேண்டியது. அதையே சட்ட வடிவமாக நடைமுறைப்படுத்தினால் சரித்திரம் படித்தவர்கள் சிரிக்கமாட்டார்களா? இருக்கிறபோது ஒருவருக்கு பெருமை செய்யாமல், இறந்தபின் பெருமை செய்வது ஒப்பாரிக்குச் சமம் என்றால் மிகையாகாது.

1990 மே 8] [திரு. நா. இரமகிருஷ்ணன்]

ஆகவே, தலைவர் அவர்களே, அரசியல் தலைவர்கள் மட்டு மல்லாமல், மொழிக்காவலர்கள், கல்வியாளர்கள், சிந்தனை யாளர்கள், வல்லுநர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர் களை நாட்டின் வளரும் தலைமுறையினருக்கு அறிமுகம் செய்ய, அடையாளம் காட்ட வரும் இந்தத் திருத்தத்தை வரவேற்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்று, சுருக்கமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லி அமர் கிறேன். பொதுவாக, நாட்டிற்கு, மொழிக்கு, இனத்திற்கு, மனித சமுதாயத்திற்கு மகத்தான சேவையாற்றி இருப்பவர்கள் நினைவு கூரப்பட வேண்டும், சமுதாயம் அவர்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நாம் பொது இடங்களுக்கு, பொது நிறுவனங்களுக்கு அந்த பெரியோர்களுடைய பெயர்களைச் சூட்டுகிறோம்.

13-25 மணி

யாரோ இறந்துவிட்டார்கள் என்பதற்காக அனுதாப அடிப் படையிலே சூட்டுகின்றது என்பது முறையல்ல. அவர்கள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களுடைய சேவைகள் சமுதாயத்தால் பாராட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால் இறந்துவிட்ட பிறகு, நினைவுகூர்கிறோம் என்று சொல்வதை விட, வாழும்போதே, அவர்களுடைய சேவையைப் போற்றிடும் வகையிலே வாழுகின்ற அந்தப் பெரியார்கள் அறியத்தக்க வகை யில், நாடு நம்முடைய சேவையைப் பாராட்டுகிறது என்று அவர் களும் அறிந்திடும் வகையில், நாட்டுக்கு நல்ல சேவைகளைச் செய்த பெரியார்களுக்கு நாம் அவர்களுடைய பெயர்களைச் சூட்டி, நம்முடைய நன்றியை அவர்கள் வாழும்போதே தெரிவிப் பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி அவர்கள், உயிரோடு இருக்கக்கூடியவர்களுடைய பெயர்களை வைத்துவிட்டு, அதற்குப் பிறகு, ஏதோ ஒரு காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அந்தப் பெயரை மாற்றுவது என்பது ஏற்புடையது அல்ல என்று ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் அதை நான் மிகவும் வரவேற்கிறேன். கடந்த காலத்தில், நாட் டுக்கு மட்டுமல்ல, மொழிக்கு, இனத்திற்கு, நம்முடைய இனமான உணர்வுக்கு எல்லாம் மகத்தான சேவைகளைச் செய்த நம்முடைய —நான் வெளிப்படையாகவே சொல்கிறேன் — தமிழக முதல்வர் தமிழ் இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரைக்கூட மாற்றியிருக்கிறார்கள் என்பது நாட்டுமக்களால் ஏற்கப்படாத ஒன்றாகும். அவசரகோலத்தில், அவர்களுடைய காலத்தில் உருவாக்கப்பட்ட டாக்டர் கலைஞர் அவர்களாலே உருவாக்கப்பட்ட ஒரு பெரும் கட்டிடத்திற்கு அவர்களு

டைய பெயரை எடுத்துவிட்டு, நம்முடைய எண்ணங்களிலும், உள்ளங்களிலும் இடம் பெற்றிருக்கிற இன்னொரு பெரியாருடைய பெயரைச் சூட்டியது, அது அந்தப் பெரியாருக்கே நீதி செய்ததாக நாட்டு மக்கள் கருதிடவில்லை. அது அவருக்குக் காட்டிய மரியாதை என்றுகூட ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்னும் சொல்லப் போனால், இன்றைக்கு மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாயாருடைய பெயரிலே 'சத்தியா' போக்குவரத்துக் கழகம்' என்று போக்குவரத்துக் கழகத்திற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆண்டுகொண்டிருந்தபோது அந்தப் பெயரை வைத்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அந்தப் பெயரிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. அதைத்தான் உறுப்பினர் வெள்ளிங்கிரி அவர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்களுடைய தாயார் அஞ்சுகம் அம்மையார் அவர்களுடைய பெயரிலே ஒரு விவசாயப் பொருளுக்கு பெயரை வைத்திருந்தார்கள், அஞ்சுகம் என்ற பெயரை. (குறுக்கீடு) பச்சைப் பயிர், அஞ்சுகம் பச்சைப் பயிர், அதைக் கூட மாற்றிவிட்டதாக நான் கேள்விப்படுகிறேன். எந்த அளவிற்கு அது உண்மை என்று தெரியவில்லை. அஞ்சுகம் அம்மையார் அவர்கள் எல்லோருக்கும் தாய் போன்றவர்கள், எப்படி சத்தியா அம்மையார் அவர்கள் எல்லோருக்கும் தாய் போன்றவர்களோ அப்படித்தான் அஞ்சுகம் அம்மையார் அவர்களும் நம் அனைவராலும் தாய் என்று பாராட்டப்படக்கூடியவர்கள். எனவே, அப்பேற்பட்ட பெயர்களைக்கூட ஏன் மாற்றினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து இந்த நிலைகள் நீடிக்கக் கூடாது என்பதற்காக, இந்தச் சட்டத்தினுடைய நோக்கமே தொண்டு பாராட்டப்பட வேண்டும் என்பதுதான் இதனுடைய நோக்கம். பெரியவர்களுடைய பெயர்களை வைப்பதும், அந்த தொண்டு பாராட்டப்படவேண்டும் என்பதற்காகத்தான், அது தான் நோக்கமே தவிர, வாழுகின்ற வரையிலும் பாராட்டமாட்டோம், அவர்களுடைய பெயரைச் சொல்லமாட்டோம், ஏதாவது ஒரு நினைவுச் சின்னம் ஏற்பட வேண்டுமென்றால், அவர்கள் உலகத்தைவிட்டுப் போனால்தான் அனுதாபம் கிடைக்கும் என்ற நிலை இருக்குமானால், அது ஏற்புடையதல்ல. நான் வாழ்கிறேன், வாழும்போதே, என்னைப் பாராட்டுகிறார்கள் என்று எனக்குத் தெரிந்தால், எனக்கும் கூட கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த மகிழ்ச்சியையாவது தரக்கூடாதா? அது, செத்துப் போனால்தான் உன் பெயரை வைப்போம் என்று சொல்வது அது அவ்வளவு மனிதாபிமானம் உள்ள நாகரீகமான பண்புடைய செயல் அல்ல என்ற அடிப்படையில் இந்த நல்ல சட்டத்தை இந்த அரசுகொண்டுவந்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அதோடு என்னுடைய சார்பாக ஒரு வேண்டுகோளை அரசுக்கு வைத்துக்கொள்ள விரும்புவது, பெரியாருடைய தளபதியாகவும், டாக்டர் கலைஞர், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தோழராகவும் நம்முடைய காயிதே மில்லத் அவர்களுடைய தொண்டராகவும் விளங்கி, சுயமரியாதை இயக்கத்திற்கு, திராவிடர் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உற்ற தோழராக இருந்த, சமுதாயத்திலே தளபதி என்று பாராட்டப்பட்ட, பெரியார் அவர்களாலே சர்வ அதிகாரியாக நியமிக்கப்பட்ட, நம்முடைய மறைந்த பெரும் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் மனமுவந்து ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எந்தச் சமுதாயத்தையும் சேர்ந்தவர் அல்ல. சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட, இனமான உணர்வுகளை பெரியாருடைய வழியிலே நின்று, காயிதே மில்லத் அவர்களைப் பின்பற்றி நம்முடைய நாட்டுக்கு அணி சேர்த்தவர்கள். எனவே அவர்களுடைய நினைவு இருக்கவேண்டும் என்பதற்காக திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்படுத்த வேண்டும். அவர்கள் கலைஞர் அவர்களுடைய தோழர். எனக்கு அவர் பெரியவர். அவர் எனக்கு அண்ணன் என்ற முறையிலே, பெரிய தலைவராக இருந்தவர்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்களோடு பணியாற்றியவர். பாவேந்தர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி, சி.பி.சி. போன்றவர்களோடு இருந்து, இனமான உணர்வை நாட்டிலே உருவாக்கி, மிகப் பெரும் சேவையைச் செய்தவர். பாடுபட்டவர், எனவே அதையும் செய்யவேண்டும் என்று கேட்டு, இது நல்ல சட்டம், நியாயத்தின்பாற்பட்டசட்டம், பண்பை ஏற்றுக்கொள்கிற சட்டம், உண்மையை உணர்த்துகிற சட்டம் என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தை நான் முழு மனதோடு ஆதரித்து அமர்கிறேன்.

13.30 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தம், எந்தப் பதவி வகிப்பவராக இருப்பினும், அவருடைய தகுநிலை எதுவாக இருப்பினும் என்று சொல்லுகின்ற அந்தச் சொற்றொடர் இதிலே வருகின்றது. நகராட்சியிலே இருக்கின்றவர்கள் தங்களுடைய பெயர்களை வைத்துக்கொள்கின்ற சூழ்நிலை எல்லாம் உருவாகி விடக் கூடாது என்கின்ற அளவிலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் கவுன்சிலர்கள் அவரவர்களுடைய இருக்கின்ற பகுதிக்கும் தலைவர் மொத்த நடு இடமான பகுதிக்கும் தங்களுடைய பெயர்களை வைத்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை எல்லாம் உருவாகிவிடக் கூடாது என்ற ஒரு சின்ன முன்னெச்சரிக்கைதான். ஏனென்று சொன்னால், வாழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே சிலருடைய பெயர் வைக்கப்படவேண்டுமா,

வேண்டாமா என்பது விவாதத்திற்குரியதாக இருந்தாலும்கூட சில விதிவிலக்குகள் எப்போதும் இருக்கின்றன. மறைந்ததற்குப் பிறகு ஒருவருடைய பெயரை நாம் வைப்பதற்குக் காரணம், அவர் உயிரோடு இருக்கின்றபோது அவர் உலவி வருகின்ற நேரத்தில் எல்லாம் அவருடைய புகழ் நாட்டு மக்களிடையே நிலவி வருகிறது. அதில் ஐயமில்லை. அவர்கள் சாதுர்யமானவர்களாக சாந்தாளர்களாக இருக்கின்ற காரணத்தாலே அவர்களுடைய செயல் முறைகளே ஒவ்வொரு நாளும் அவர்களுடைய புகழை பரப்பிக் கொண்டிருக்கின்றன. அந்தச் செயல்முறைகள் தடைப்பட்டு, அவர்களைப் பற்றிய சிந்தனை மட்டுமே வருகின்றபோது, அவருடைய புகழ் உலகத்தில் நிற்கவேண்டுமென்ற வகையில் அவருக்கு சிலை, அவருக்கு பூங்கா என்றெல்லாம் வருகிறது. ஆனாலும், அதற்கும் விதிவிலக்கு உண்டு. இப்போது பெருந்தலைவர் காமராஜருடைய சிலையை இங்கே மாநகராட்சியிலே வைத்தார்கள். இங்கே மரியாதைக்குரிய முதல்வர் அவர்களுடைய பெயரிலே கே. கே. நகர் என்று வந்தது. இவைகள் எல்லாம் ஒரு கட்சிக் கூட்டிற்குள் இருந்தாலும், கூட்டையும் தாண்டி மக்கள் நலத்தை நாடுகின்றவர்களாக வருகின்றபோது அவைகள் எல்லாம் விதிவிலக்கிற்கு பொருத்தமாக அமைகிறது. அப்படி பொருத்தம் இல்லாத வகையில் வந்துவிடக்கூடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை வேண்டுமென்று நான் சொல்கிறேன். ஆனால் சில இடங்களிலே பெயரை மாற்றுகின்றபோது இருப்பதை மாற்றுவதற்குப் பதிலாக புதியதாக ஒன்றைக் கொண்டுவந்தால் ஒருவருடைய பெயரும் வருகிறது. புதியதாக ஒன்றும் வருகிறது. அப்படி வரவேண்டும்.

தாராசுரம் என்று சொல்கின்ற இடத்தை நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், சுந்தரமுடையான் வாய்க்கால் என்ற வாய்க்கால் வருகிறது. அது சோழமன்னன் இலங்கையை வெற்றி கொண்டதற்குப் பிறகுதான், அதன் நினைவாக ஒரு வாய்க்காலை வெட்டியிருக்கிறான். ஆக வெற்றி கொண்டதற்கு நினைவாக நமக்கு ஒரு வாய்க்காலும் கிடைத்திருக்கிறது. இப்படி ஒவ்வொன்றுமாக வந்துகொண்டிருந்தால் நமக்கு நல்லதாக அமையும். இப்போது சில இடங்களில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், சான்றாக எந்த இடத்திலே வரலாறு ஊமையாகின்றதோ, அந்த இடத்திலே பெயர்கள் வரலாறு ஆகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே பெயர்கள் சில நேரங்களிலே மாற்றப்படக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அந்தப் பெயர்களை மாற்றாமல், அந்தப் பெயர்கள் சரித்திரத்தில் புகழ் உடையதாக இருந்தால், மாற்றிவிடாமல் தற்போது இருக்கின்ற சூழ்நிலைக்கு தகுந்தவாறு ஒருவருடைய பெயரைச் சூட்டி பழைய பெயர் மாறிவிடாமல் இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். ஏனென்றால் கலைஞர் அவர்கள் முதலிலே ஆட்சிப் பொறுப்பில் வந்தபிறகுதான் தமிழ்நாட்டில் சான்றோர்கள் எங்கெங்கே தோன்றினார்களோ, அங்கேயெல்லாம் நெடுகல் நடவேண்டுமென்று முடிவிற்கு வந்தார்கள், அந்த ஊரினுடைய

பெயர்கள் அப்படியே காப்பாற்றப்பட்ட காரணத்தாலே வரலாறு எழுதுவதற்கு நமக்கு வாய்ப்பாக இருந்தது. அவைகளை எல்லாம் கவனத்திலே வைத்துக்கொண்டு செயல்படவேண்டுமென்பது தான்.

ஆனால் சீரணி அரங்கு என்று வருகின்றபோது ஒரு நல்ல பணியினைச் செய்திருக்கிறார்கள். உடனேயே கூட்டம் போட்டால் திடீரென்று மேடை தேவைப்படுவதிலே அந்தச் சீரணி அரங்கு என்று இருக்கிறது. அந்தச் சீரணி அரங்கு உருவாகி யிருக்கிறது. ஆனால் அதனுடைய பழையபெயர் அது எல்லாமாகச் சேர்ந்திருக்கின்ற பெயர் திலகர் கட்டம். அந்தத் திலகர் கட்டம் என்று பெயர் சூட்டியது சுப்பிரமணிய சிவா அவர்கள். ஆக அவ்வளவு பெரியவரால் அங்கே பெயர் சூட்டப்பட்டு, அவ்வளவு பெரியவருடைய பெயர்கூட, இன்று திலகர் கட்டம் என்று மாறி சீரணி கட்டியவர்கள் கூட சீரணி அரங்கு என்றுதான் சொல்ல வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. திலகர் கட்ட சீரணி அரங்கு என்று சொல்லப்பட்டிருக்குமானால், நமக்கு அது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும், ஆனாலும் ஒரு பெயர் வருகின்றபோது இன்னொரு பெயர் வராத முறையில், அந்தப் பெயர் மாறாத அளவிற்கு அது புகழ்பெற்ற பெயராக இருந்தால் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதைப் போலவே சாதாரணமான சூழ்நிலையிலே ஒருவருடைய பெயரைச் சூட்டக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். ஏனென்றால் மறைந்ததற்குப் பிறகு ஒருவருடைய பெயரைச் சூட்டுவது என்பது ஒரு நல்ல மரபு. இருந்தாலும் விதிவிலக்குகளும் இருக்கின்ற காரணத்தால் என்னுடைய கருத்தைச் சொல்லியமைகின்றேன்.

13.35 மணி

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் இங்கே தெரிவித்தாகவேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக பெயர் சூட்டுகிற நிலை வருகிற நேரத்தில் உயிரோடு இருக்கிறவர்கள் பெயரை சூட்டி கௌரவிக்க வேண்டுமென்ற நிலைமை, எல்லா நிலையிலும் ஏற்றுக் கொள்ள முடியுமாவென்றால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் சில நேரங்களில் சிலருடைய அதிகாரம் இருக்கிற நேரங்களில் அவர்கள் தங்கள் பெயரை விளம்பரப் படுத்திக் கொள்வதற்கு இது வாய்ப்பாக அமைந்துவிடுமோ என்ற அச்சத்தின்காரணமாக மறைந்ததற்குப்பின்னால் அவர்களுடைய பெயர் சூட்டப்படவேண்டும் என்பதும், அதுதான் அரசுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்கிற வகையில் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதிலே

இந்தச் சட்டத்திருத்தம் வருகிற நேரத்திலேகூட அரசியல் காரணங்களினால் இது கொண்டு வரப்படுகிறது என்று சொன்ன நேரத்தில் அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். யாரையும் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்லது யாருடைய பெயரையும் மறைக்க வேண்டுமென்ற நிலையோடு செய்யவில்லை. இது ஒரு பாதுகாப்பான திருத்தமாக இருக்க வேண்டுமென்ற வகையில் மறைந்ததற்குப் பின்னால் நாம் யாருடைய புகழையும் பெருமையையும் நாம் நிலைநாட்டுவதிலே நாம் நிச்சயமாகப் பின் வாங்கமாட்டோமென்ற கருத்துப்பட அன்றைக்கு சொன்னார்கள்.

அதேபோல அவர்கள் இன்னொரு கருத்தையும் வற்புறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பிறந்த நாள் கொண்டாடுகிற காரியங்களைக்கூட அவர்கள் ஆரம்பத்திலிருந்து பிறந்த நாள் கொண்டாடுவதையே ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி, பிறந்த நாட்களைக் கொண்டாடுவதை அனுமதிக்கவில்லை. நான் அப்படி அவர் சொன்ன நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவை மட்டும்தான் கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்த, அவர்கள் திரும்ப திரும்ப அதைச் சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய, கருத்தைப் பலபேர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், இன்றைக்கு அரசியலிலே வளர்ந்திருக்கிற நிலையில், அவர்களுடைய பிறந்த நாளை அவர்களே கொண்டாடுகிற அளவுக்கு அவர்களே சுவர் ஒட்டிகளை அச்சடித்து ஒட்டுகிற காலங்கள் கூட வந்துவிட்டது. ஆனாலும் இதற்கு ஒரு விதிவிலக்கு வேண்டாமா என்று கேட்ட நேரத்திலே தான் அன்னை தெரசா அவர்களுடைய பெயர் வைக்கின்ற, நேரத்திலே அவர்கள் சொன்னார்கள். சில பேருக்கு விதிவிலக்கு கொடுத்துதான் ஆகவேண்டுமென்ற வகையில் அன்னை தெரசாவினுடைய பெயரை வைக்கிறோம், அவர்கள் உயிரோடு இருக்கிற நேரத்திலே அவருடைய சேவையை பாராட்டுகிறோம் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதேபோல் மோகனரங்கம் அவர்களுடைய பெயர் சூட்டப்படுகிற நேரத்தில் அவர் கோட்டைக்கு வந்து உத்திரவு போடவேண்டிய நேரம் வந்த நேரத்தில் அவர்கள் அந்த சட்டத்திருத்தத்தை வைத்து, உயிரோடு இருக்கிறவர்கள் பெயரை வைக்கக்கூடாது என்பதனாலேயே அந்தத் திருத்தத்தை வைத்து ஏற்க முடியாது என்று சொல்லி அவர்கள் அதை அன்றைக்கு நிறுத்தி வைத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் கூட்டத்திலே 'அனவுன்ஸ்' பண்ணியதே மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். தான். அவர்தான் மோகனரங்கம் பெயரை 'அனவுன்ஸ்' பண்ணினார். அப்புறம் ஏன் கையெழுத்துப் போட மாட்டேன் என்று சொன்னார் தெரியவில்லை.

1990 மே 8]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்தான் அன்றைக்கு அறிவிக்கச் சொல்லி அறிவித்தார். ஆனால் சட்டதிருத்தம் இருக்கின்ற நிலையைச் சுட்டிக்காட்டி அவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் அதைமுடியாது என்று மறுத்தார்கள். ஆனால் இன்றைக்கு....

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அறிவித்தவரே முதல்வர் என்று சொல்கிறார்கள். அறிவிக்கிறபோதே முதல்வர் சொல்லியிருக்கிறார், இப்படி சட்டதிருத்தம் இருக்கிறது, எனவே இது வைக்க முடியாது என்று. அங்கே அறிவித்துவிட்டு, இங்கே வந்து மறுபடியும் சட்டம் இருக்கிறது என்று முதல்வர் சொல்வானேன். இந்த முரண்பாடு ஏன் என்பதுதான் விளக்கவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : அறிவிக்கிற நேரத்தில், அறிவிக்கச் சொன்னவர்கள் அன்றைக்கு மேடையிலே அறிவிக்கச் சொன்னார்கள், மேடையிலே அதைக் கேட்டுவிட்டு அறிவிக்கச் சொன்னார். அன்றைக்கு அவர் பேசவில்லை. ஆனால் இங்கே கோட்டைக்கு வந்த நேரத்திலே அவர்கள் அந்தப் பெயரை அவர்களுடைய........(குறுக்கீடு)....

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராதா அவர்கள் அடிக்கடி இங்கேயிருந்து போனார் போனார் என்று சொல்கிறார். அந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் என்னுடைய மரியாதைக்குரியவர். அவர் எடுக்கிற முடிவுகளுக்கு அவரே சொல்லியிருக்கிறார், பச்சை குத்தும் போதும் சரி, பெயர் மாற்றும்போதும் சரி, நான் எந்தமுடிவை எடுத்தாலும் அதற்கு காரணம் எனக்கே தெரியாது. அதுதான் எம்.ஜி.ஆர். 'பார்முலா' என்று சினிமாவிலே சொல்வார்கள். ஆனால் இந்த முடிவு கடைசியிலே 100 நாள் ஓடும். அதைப் போல அரசியலிலே நான் முடிவுகளை எடுத்திருக்கிறேன் என்றும் நம் எல்லோரையும் வைத்தே சொன்னார். ஆனால் அதைப் போய் நீங்கள் வீணாக விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லை.

13-40 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் இப்படிச் சொல்வது சரியல்ல. ஆனால், இப்படிச் சொல்வது நம்மை நாமே தாழ்த்திக்கொள்வதுதான். 22 ஆண்டுக் காலம் எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர் தான். நீங்கள் அவர் பிரிந்துவிட்டார் என்ற காரணத்தாலே இன்றைக்கு நீங்கள் இருக்கின்ற இடத்திலே இருந்து பேச வேண்டும் என்பதினாலே எதையும் பேசிவிடக் கூடாது. ஆனால் அது அல்ல. அவர் எந்தக் கருத்தைச் சொன்னாலும்.....

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் தனிப்பட்ட முறையிலே சொல்லக் கூடாது. அவர்களுக்கு இருக்கின்ற நிர்பந்தம், நெருக்கடி நாடறிந்த ஒன்று. எனக்கு அந்த மாதிரி நிர்பந்தம், நெருக்கடி எதுவும் கிடையாது. நாங்கள் பின்வரிசையிலே உட்கார்ந்து இருக்கிறோமே தவிர நீங்கள் பாவம் அன்றாடம் பேரவைக்கு அங்கேயிருந்து சிரமப் பட்டு வந்து இங்கே கையெழுத்து போட்டு தினமும் வெளிநடப்பு செய்ய வேண்டிய ஒரு நிர்பந்தம் உங்களுக்கு வெளியேயிருந்து வருகிறது. அது எல்லோருக்கும் தெரியும். எங்களுக்கு அது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதத்தை விட்டுத் திசை திரும்பிப் போகக் கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு சீனிவாசன் இந்தக் கருத்துக்களைச் சொல்லக் கூடாது என்று நான் நினைத்தேன். ஆனால் அவர் இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டார். அவருக்கு ஏதோ நெருக்கடி காரணத்தினாலே எம்.ஜி.ஆர். மாறிவிட்டதைப் போல் ஏதோ இவருக்கு நெருக்கடியே இல்லாமல் வாழ்ந்துகொண்டு இருப்பதைப்போல் அவர் சொல்கிறார். நான் அவருக்கு உள்ள படியே சொல்கிறேன். நிச்சயமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நெருக்கடியிலே மாறவில்லை என்பது நான் அல்ல, இன்றைக்கு நாடு ஏற்றுக்கொண்டு இருக்கின்ற ஒன்று. ஆனால் இன்றைக்கு சீனிவாசன் இங்கே எவ்வளவு பெரிய மாற்றத்திற்கு ஆளானார் என்பதும் இரண்டாவது சட்டசபையை நடத்தியவர் என்பதும் பின்னாலே இதே சட்டமன்றத்தை விட்டு அவர் வெளியிலே போய். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பேக்ட்ஸ் அண்டு ஃபிகர்ஸ் அதிலே போய் பேசுவது நல்லது. இங்கே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு பழைய கதை எல்லாம் பேசி மறுபடியும் அவரவர்கள் பழைய கதையைப் பேச ஆரம் பிப்பது நன்றாக இருக்காது. நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. விவாதத்தை முடித்து வைப்பது நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நான் அதனால் தான் இந்த விவாதம் வேண்டாம் என்று நினைத்தேன். என்றாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்ட தால் நான் அதை விவாதப் பொருளாக ஆக்கவில்லை. என்றாலும் இந்தச் சட்டத் திருத்தத்தாலே எதிர்காலத்தில் சில ஆபத்துக்கள் ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திருத்தம் வருகின்ற நேரத்திலே நான் இன்னொன்றையும் சொல்கிறேன். இன்றைக்கு பல்வேறு நகராட்சிகளிலே பல்வேறு ஊராட்சிகளிலே எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் வைக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

1990 மே 8] [திரு எஸ். ஆர். இராதா]

ஆனால் அந்தத் தீர்மானங்கள் எதற்கும் இதுவரையிலே அனுமதி தரப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு, குறை இருக்கிறது. அதை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். அதே போல இன்னொன்றையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன் மோகனரங்கம் அவர்கள் மறைவுக்கு நான் சென்ற நேரத்திலே இரண்டு நாளுக்கு முன்பாகத்தான் அவருடைய விவாதம் இங்கே நடைபெற்றது. மறைந்தவர்களுடைய பெயர் வைக்க வேண்டுமா என்ற விவாதம் வந்த நேரத்திலே உயிரோடு இருந்தால் பெயர் வைக்க முடியாது என்று சொல்லி இங்கே முன்னவர் அவர்கள் அந்தக் கருத்தை தெரிவித்தார்கள். ஆனால் திடீரென்று இரண்டு நாளிலே அவர் இறந்து விட்டார். அன்றைக்கு அவருடைய நினைவு கூறுகின்ற அந்த நேரத்திலே கூட 4, 5 நண்பர்கள் குறிப்பிட்டுக் கூறினார்கள். மோகனரங்கம் அவர்கள் மறைந்துவிட்டார்கள். மறைந்த மோகனரங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீண்ட நாள் பணியாற்றியவர். அவர் அந்த நகராட்சியில் தி.மு.க. தலைவராக இருந்தவர் என்ற முறையில் அவர் பெயர் வைக்கப்படவேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தினார்கள். எனவே தயவு செய்து அரசு இதை ஒரு பாதுகாப்பாகக் கருதி இந்த சட்டத் திருத்தத்தை கொஞ்சம் மாற்றி இந்தத் திருத்தம் தேவையில்லாத ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தை பொருத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துக்களை மைய மாக வைத்து இந்த சட்ட திருத்தத்தை வரவேற்கிறோம், ஆனால் தவறுதலாக அது போய் விடக் கூடாது என்று அறிவுரைகளை காங்கிரஸ்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் மற்றும் இங்கே பேசிய மாண்புமிகு முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது இதை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு எந்த உள்நோக்கதோடும் இந்தச் சட்டத்தை நாங்கள் ஏற்கனவே 1977-க்கு முன்னால் இருந்த நிலையை மாற்றவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் எந்த உள்நோக்கமும் இல்லாமல் இருந்திருக்குமானால் 1977-ல் கொண்டு வந்த அந்த திருத்தச் சட்டம் இது வரையில் யாருடைய பெயர்கள் எதற்கு வைத்திருந்தாலும் கூட அது எந்தப் புகாரும் இல்லாமல் இதுவரை இருக்கின்ற காரணத்தால் இதற்கு மேல் வைக்கப்படுகின்ற பெயர்கள் தான் அப்படிப்பட்ட பொருள் அடங்கும் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பார்களேயானால் உள்ளபடியே உள்நோக்கம் இல்லை என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியும். ஆனாலும் உள்நோக்கம் இருக்கிறதோ இல்லையோ அவர்கள் இப்போது வாதாடுகிறார்

கள். 1987 ஆம் வருடமே 25—9—1987–லேயே இந்தச் சட்டத் திருத்தம் இருக்கிறபோதே உயிருள்ளவர்களுக்கு இப்படிப்பட்ட நகராட்சி, ஊராட்சி, கூட்டுறவு ஸ்தாபனங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களுக்கு பெயர் வைக்கக்கூடாது என்று சட்டத்திருத்தம் இருக்கிற போதே சட்டம் இருக்கிறபோதே 25—9—1987 அன்று ஒரு ஆணையையும் அந்த அரசாங்கம் அனுப்பாது பிறப்பித்திருக்கிறது. உயிருடன் இருந்தாலும் வைக்கலாம் என்ற ஒரு சட்டத்தையும், ஒரு ஆணையையும் அரசு பிறப்பித்திருக்கிறது. நாங்கள் இதை இப்போது திடீரென்று கொண்டு வரவில்லை. அப்படிப் போட்ட ஆணை, சட்டம் இருக்கிறபோது, சட்டத்திற்கு முரண்பாடாக, எதற்காகச் சட்டம் திருத்தப்பட்டதோ, அந்தத் திருத்தச் சட்டத்திற்கு முரண்பாடாக ஒரு அரசாணை இருப்பது சரியல்ல, அதை சட்டரீதியாக ஆக்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் புதிய திருத்தத்தை நாங்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

13 45 மணி

அதோடுகூட, ஆலந்தூர் நகராட்சி, மோகனரங்கம் பெயர் வைக்கவேண்டும் என்று இருந்ததை பிறகு மாற்றிக் கொண்டார்கள். யார் சொன்னார்கள், எங்கே சொன்னார்கள் என்பதைப் பற்றி நான் உள்ளே புகவில்லை. ஆரம்பத்திலும், 1977-க்கு முன்னாலேயும் சரி, இந்தச் சட்டம் திருத்தப்பட்டதற்குப் பின்னாலேயும் சரி, இன்றைக்கும் சரி, இந்தத் திருத்தம் வந்ததற்குப் பிறகும் சரி, யாருடைய பெயரை, தகுதிவாய்ந்தவர்களுடைய பெயரை வைப்பதற்கு, மக்கள் மன்றம், எந்த மன்றத்தில் பெயர் வைக்கவேண்டுமோ, அந்தப் பொது சொத்துக்கு எது பொறுப்பான மன்றமோ, அவைகள்மூலம் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகுதான் அரசு ஆணை பெற்று வைக்கவேண்டும் என்று இப்போது இந்தத் திருத்தத்திலும் நாம் கொண்டு வருகிறோம்.

ஏற்கெனவே, ஓரளவு அப்படித்தான் கையாளப்பட்டதாக நான் கருதுகிறேன். ஆனால் ஆலந்தூர் நகராட்சி மன்றம், மோகனரங்கம், அவர்களுடைய பெயரை வைக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றவில்லை. காரணம், கொஞ்ச காலத்திற்கு முன்னால், பத்திரிகையில் ஒரு செய்தி, நண்பர், எதிர்க்கட்சித் தலைவருடைய கட்சியைச் சார்ந்த தலைவர் ஒருவர் பேசி அது பத்திரிகையிலே வந்து, உடனடியாக நான் ஆலந்தூர் நகராட்சிக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதைப் பற்றி நான் கேட்டேன்.

1990 மே 8] [திரு. கோ. சி. மணி]

அதுவரையில் அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை அந்த நகராட்சி மன்றம் இயற்றவில்லை. அந்த நகராட்சி மன்றத்தின் ஆணையர் இந்த அரசிற்கு அதைப்பற்றித் தெரிவிக்கவில்லை. அதற்குள்ளே நான் புக விரும்பவில்லை. காரணம், அவரும் மறைந்துவிட்டார். அந்த நிகழ்ச்சியை நாம் மறந்து விடுவோம். ஆனாலும், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு நகராட்சி மன்றத்தில் ஒருவர் இருந்தால், அவர் தன்னுடைய ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு ஒரு ஊராட்சி மன்ற உறுப்பினரோ, ஒரு நகராட்சி மன்ற உறுப்பினரோ தீர்மானத்தை நிறைவேற்றி அவருடைய பெயரை வைத்துவிடலாம். அது வைக்கக்கூடாது என்பதைப்போல, அவர் இங்கே குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், ஒரு ஊராட்சி மன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட, அவர் நாட்டிற்காக, தேசத்திற்காக, அல்லது அந்த ஊருக்காக, அந்த அடித்தளத்து மக்களுக்காக, சமுதாயத்திற்காக நல்ல தொண்டு புரிபவராக இருந்து அல்லது நம்முடைய தாய்மொழி தமிழுக்குத் தொண்டு புரிந்து, ஆற்றல் படைத்தவராக இருந்தால், அவர் பெரிய பதவியில் இருந்தாலும், சிறிய பொறுப்பாக இருந்தாலும் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும், ஒன்றியத் தலைவராக இருந்தாலும், உறுப்பினராக இருந்தாலும்கூட தகுதி இருந்தால் வைக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி வந்தாலும்கூட, அரசாங்கம் பரிசீலித்து, இந்த இடத்திற்கு அவருடைய பெயர் வைப்பது பொருத்தம்தானா என்ற பரிசீலனைக்குப் பிறகு, ஆணை பிறப்பித்த பிறகுதான் அந்த மன்றம் அந்தப் பெயரை வைக்கலாம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

எனவேதான், இந்த 1977 இல் திருத்தப்பட்ட சட்டத்திற்கு, அதற்குப் பிறகு, 1987 இல் அரசாணை பிறப்பித்ததையொட்டி, இந்த ஆணையைச் செயல்தக்கதாக இருக்கிறது என்ற உணர்வோடு, அந்தச் சட்டத்திற்கு நாங்கள் இங்கே திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

அதோடுகூட, பொதுச் சொத்துக்களுக்கு உயிரோடு இருப்பவர்களுடைய பெயரைச் சூட்டலாம் என்று அரசாணை பிறப்பித்தபோதிலும், உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் சம்பந்தமாக திருத்தப்படாததினால் திருத்தம் கொண்டு வந்து, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டப் பிரிவு 228-ஐயும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப் பிரிவு 189, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டப் பிரிவு 266 மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டப் பிரிவு 266 ஆகியவற்றிற்கு, இந்த ஆண்டு 1990-ஆம் ஆண்டு நகராட்சி சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டமுன்வடிவை

[திரு. கோ. சி. மணி] [1990 மே 8

உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு' உயிரோடு உள்ளவர்களுடைய பெயரைச் சூட்ட வகை செய்ய இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விழைகிறேன்.

13–50

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே இணைப்பதற்காக ஒன்று. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், நகராட்சி மன்றங்களில் நகராட்சித் தலைவர்கள், மற்றவர்கள் தங்களுடைய பெயர்களை வைத்து விடக்கூடும். அதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கின்ற அறிவுரை போன்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சி எப்படி நடந்து கொண்டது, நடந்து கொள்ளும், எத்தகைய அரசியல் நாகரிகம் இந்த ஆட்சிக்கு உரிய ஒன்றாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட. 1969-க்கு முன்பு திருவள்ளூர் நகராட்சி மன்றம் காங்கிரஸ் கட்சியின் கையிலே இருந்தது. அப்போது அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தார்கள். நகராட்சி மன்றம் காங்கிரஸ் கட்சியின் கையில் இருந்தபோது நகராட்சி மன்றத்திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்திற்கு நகராட்சி மன்றத் தலைவர் ஆளவந்தார். இப்போது அவர் உயிரோடு இருக்கிறார். அவருக்குக் கூடத் தெரியும் என்றே நம்புகிறேன். ''ஆளவந்தார் நகராட்சி மன்றக் கட்டிடம்'' என்ற பெயர் வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் மறைந்துவிட்ட பிறகு நான் இந்தப் பொறுப்புக்கு வந்தேன். அதற்குப் பிறகு நகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது அனைவருக்கும் தெரியும். அந்த நகராட்சி மன்றத் தேர்தலில் திருவள்ளூர் நகராட்சி மன்றம் பெரும்பான்மையான திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கழகம் அங்கே வெற்றி பெற்றது. கழகம் வெற்றிபெற்று நகராட்சி மன்றத் தலைவராக கழகத்தைச் சேர்ந்தவர் வந்தபிறகு, அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். என்ன தீர்மானம் என்றால் ஆளவந்தார் என்ற காங்கிரஸ்காரருடைய, நகராட்சி மன்றத் தலைவருடைய பெயரை மாற்றிவிட்டு ''அறிஞர் அண்ணா நகராட்சி மன்றக் கட்டிடம்'' என்று பெயர் வைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அந்தக் கோப்பு என்னிடத்தில் கையெழுத்துக்கு வந்தது. அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக நாவலர் அவர்கள் இருக்கிறார்கள். நான் அந்தக் கோப்பில் என்ன கருத்தைக் குறிப்பிட்டேன் என்றால், அண்ணா அவர்களுடைய பெயரை எத்தனையோ நகராட்சி மன்றக் கட்டிடங்களுக்கு வைக்க முடியும். எனவே, ஏற்கெனவே இருக்கின்ற ஒரு பெயரை மாற்றத் தேவையில்லை. ஆளவந்தார் என்ற பெயரே நீடிக்கட்டும் என்று கட்சி சார்பற்ற

முறையில், ஒரு நகராட்சி மன்றத் தலைவருக்கு, அந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில், சூட்டப்பட்ட பெயரை மாற்றக்கூடாது என்று ஆணையிட்ட அரசு, இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—5—1990 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

180. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை, *1989–90.*

181. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை, *1989–90.*

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

180. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1989–90.

181. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1989–90.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS